உ
சிவமயம்

# சிவத்தமிழ் இன்பம்

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
## 60ஆம் ஆண்டு நிறைவு

# மணிவிழா மலர்



வெளியீடு :
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
மணிவிழாச் சபை
துர்க்காபுரம், தெல்லிப்பழை
07-01-1985

உ
சிவமயம்

# சிவத்தமிழ் இன்பம்

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
## 60ஆம் ஆண்டு நிறைவு

# மணி விழா மலர்

வெளியீடு :
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்**
மணிவிழாச் சபையினர்

இரத்தாட்சி ஆண்டு மார்கழி மாதம் 24ஆம் நாள்

**7 - 1 - 1985**

உ

சிவமயம்

தெல்லிப்பழை — துர்க்காபுரம்

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி

உ
சிவமயம்

# சிவத்தமிழ் இன்பம்

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

## 60ஆம் ஆண்டு நிறைவு

## மணி விழா மலர்

வெளியீடு :

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
மணிவிழாச் சபை

துர்க்காபுரம், தெல்லிப்பழை,
இலங்கை

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்
இலங்கை

பதிப்புரிமை உரியது

விலை : ரூபா 30/-

# SIVA TAMIL INPAM

## DIAMOND JUBILEE

## FELICITATION VOLUME OF THANGAMMAH APPAKUTTY

*Published by*:

**THE DIAMOND JUBILEE SABAI**
THURKAPURAM
TELLIPPALAI,
SRI LANKA.

*Printers :*
THIRUMAKAL PRESS,
CHUNNAKAM.

*All Rights Reserved*

Price: Rs. 30/-

சிவமயம்

துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# மணி விழாச் சபை

தலைவர்:

திரு. வே. ந. சிவராசா.
பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

உப தலைவர்:

திரு. வி. தர்மலிங்கம்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மானிப்பாய்.

திரு. இ. நம. சிவப்பிரகாசம்
சட்டத்தரணி, இந்துசாதனப் பத்திராதிபர்.

இணைச் செயலாளர்:

திரு. ச. விநாயகரத்தினம்
ஆசிரியர், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

திரு. மா. இராசலிங்கம்
இளைப்பாறிய அதிபர், மட்டுவில், சாவகச்சேரி.

பொருளாளர்:

திரு. க. தணிகாசலம்
இணைச்செயலாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை.

## உறுப்பினர்

திரு. சு. சிவவாகீசர்
திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை
திரு. பொன். சுந்தரலிங்கம்
திரு. அ. சண்முகநாதன்
திரு. க. க. சுப்பிரமணியம்
திருமதி வசந்தா வைத்தியநாதன்
திரு. அ. பஞ்சாட்சரம்
திரு. செ. குகதாசன்
திரு. ஆ. மகேந்திரன்
திரு. சு. ஏழூர்நாயகம்
திரு. ந. சிவபாலகணேசன்
திரு. மு. சபாரத்தினம்
திரு. க. சி. குலரத்தினம்
திரு. த. சண்முகசுந்தரம்
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி

# தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

மணிவிழாச் சபை

# மலர் வெளியீட்டுக் குழு

திரு. த. சண்முகசுந்தரம் (தலைவர்)

திரு. மு. கந்தையா

திரு. க. நாகலிங்கம்

திருமதி மகாதேவி பத்மநாதன்

திரு. மு. சபாரத்தினம்

திரு. கா. சிவபாலன்

திரு. ச. விநாயகரத்தினம் (செயலாளர்)

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | வெளியீட்டுரை | ... ... vi |
| 2. | ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் | ... ... viii |
| 3. | சிவத்தமிழ்ச் செல்வியின் வாழ்க்கைக் குறிப்பு (ஆங்கிலம்) | ... ... xxxiii |
| 4. | அணிந்துரை | ... ... xl |

## பகுதி I

| | | |
|---|---|---|
| 1. | சொற்பொழிவுச் சுருக்கம் | ... ... 1 |
| 2. | தலைமையுரைகள் | ... ... 16 |
| 3. | கட்டுரைகள் | ... ... 27 |
| 4. | சைவ நற்சிந்தனைகள் | ... ... 72 |
| 5. | இலக்கியக் கட்டுரைகள் | .... ... 76 |

## பகுதி II

| | | |
|---|---|---|
| 1. | வாழ்த்து மடல்கள் | ... ... 85 |
| 2. | வாழ்த்துரைகள் | ... ... 113 |
| 3. | மணிமலர் மாலை | ... ... 135 |

உ
சிவமயம்



துர்க்கா துரந்தரி
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

உ
சிவமயம்

# படையல்

காலத்தால் வரையறுக்க முடியாத மிகத் தொன்மை வாய்ந்தவை தமிழ் இனமும் இந்து மதமுமாம். பல தாக்குதற் கிடையிலும் எதிர் நீச்சலாடி இவ்விரண்டும் வளமும் வளர்ச்சியும் பெறுவதற்குக் காரணம் காலத்திற்குக் காலம் தோன்றிப் புத்துணர்வும் புதுப் பொலிவும் ஊட்டும் பெருமக்களேயாவர். இவர்கள் வரிசையில் வைத்தெண்ணத் தக்கவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாவர். கடந்த 30 ஆண்டுகாலமாக சிவசமயத்திற்கும் செந்தமிழ் அன்னைக்கும் இவராற்றிய சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் மிகப் பல. இவை அழிந்தொழிந்து சிதையாமற் பேணிப் பாதுகாத்தல் எம் தலையாய கடமையாகும். எமக்குக் கிடைத்தனவற்றை ஒன்றுதிரட்டி அம்மையாரின் மணிவிழா நாளில் 'சிவத்தமிழ் இன்பம்' என்னும் பெயர்கொண்ட இம்மணிவிழா மலரில் வெளியிடுகின்றோம். இம்மலர் கற்பவர்க்கு ஒரு கற்பகதரு. சிந்திப்பவர்க்கு ஒரு சிந்தாமணி. வாடாமலராய் அறிவுத் தேன்பிலிற்றும் இம்மலரைச் செந்தமிழ் அன்னையின் மலர்ச் சிலம்படிகளில் முக்கனிச் சாற்றிற் பாலும் நெய்யும் தேனுங் கலந்த நறுமணங் கமழும் இன்பப் படையலாகப் படைத்து மனம் நிறைவெய்துகின்றோம்.

வணக்கம்

**மலர்க் குழுவினர்**
**மணிவிழாச் சபை**

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை,
*7-1-1985.*

உ

சிவமயம்

# வெளியீட்டுரை

சிவசமயத்திற்கும் செந்தமிழ் அன்னைக்கும் அயராது அரும்பணியாற்றி வருபவர் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் என்பதைத் தமிழ் கூறும் நல்லுல கிற்கு நன்கு தெரியும். அம்மையாருக்கு 7-1-1985 இல் 60ஆம் ஆண்டு நிறைவுபெறுகின் றது. கடந்த முப்பதாண்டுக்காலம் அவராற்றிய அரிய சேவையைப் பாராட்டி மணிவிழா எடுப்பதென அதற்கென நியமிக்கப்பட்ட விசேட சபையினரால் தீர்மானிக்கப்பட்டது. உண்மையில் இவ் விழா சிவசமயத்துக்கும், செந்தமிழ் அன்னைக்கும் எடுக்கும் ஒரு பெரு விழா என்றே நாம் கருதுகின்றோம்.

10-9-1974இல் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் உயர்திரு. வி. என். சிவராசா அவர்களைத் தலைவராகக்கொண்ட இம் மணிவிழாச்சபை பயன்தரத்தக்க விசேட செயலாக 3 நூல்கள் வெளியிடப்படல் வேண்டுமெனத் தீர்மானித்தது. அதற்கிணங்க 'சிவத்தமிழ்ச் செல்வம்' என்ற பெயரில் அம்மையாரின் வாழ்க்கைவளமும், 'சிவத்தமிழ் இன்பம்' என்ற பெயரில் மணிவிழா மலரும், 'சிவத்தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்' என்ற பெயரில் ஒரு சைவ நூல் ஆராய்ச்சியும் வெளியிட விழைந்தனர்.

'சிவத்தமிழ் இன்பம்' என்ற இம்மலர் இரு பகுதிகளாக வெளியிடப்படுகின்றது. பகுதி ஒன்றில் அம்மையாரின் கடந்தகாலச் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும்; பகுதி இரண் டில் அம்மையாருக்குக் கடந்தகாலம் வழங்கிய வாழ்த்துமடல்களும், வாழ்த்துரைகளும் இடம்பெறுகின்றன. மேலும் இம்மலருக்கென இவ்வாண்டு வழங்கிய நல்லாசிகளும், நல் வாழ்த்துக்களும் இடம்பெறுகின்றன. இம்மலர் வருங்காலத்தில் சிவத்தமிழ் ஆய்வுசெய்ப வர்களுக்குப் பெருந்துணைபுரியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அம்மையாரின் சொற்பொழிவுகளையும், கட்டுரைகளையும் அவ்வப்பொழுது வெளிவந்த நாளிதழ்கள், சிறப்பு மலர்கள், ஆண்டு மலர்கள், அச்சில் வெளிவராத கையெழுத்துப் பிரதிகள் என்பவற்றிலிருந்து தொகுத்தளித்த திரு. க. நாகலிங்கம், திருமதி மகாதேவி பத்மநாதன் என்பவர்களின் ஒத்துழைப்பைப் பாராட்டி நன்றி கூறவும் கடமைப்பட்டுள் ளோம்.

ஈழத்திலும், தமிழகத்திலும் சைவமும் தமிழும் ஒளி பெறச் செய்யும் சைவாதீனங் களின் பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய விசேட நல்லாசிகள் எம்மை மகிழ்விக்கின்றன. அவர்களின் திருவடிகளுக்கு எம் வணக்கம் உரித்தாகும்.

இம்மலருக்கென ஈழத்திலும், தமிழகத்திலும். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய தமிழ் நிலங்களிலிருந்தும் நல்வாழ்த்துக்கள் அனுப்பிய மகான்கள், குருமகாசந்நிதானங்கள், சமயஞானிகள், பேரறிஞர்கள், மெய்யன்பர்கள், ஆதீனகர்த்தாக்கள், ஆதீனக் குருக்கள் மார் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

மேலும் அரசியல் அமைச்சர்கள், மன்றத் தலைவர்கள், ஆதரவாளர்கள் என்பவர்களும் நல்லுரைகள் வழங்கி இம்மலரைச் சிறப்பித்துள்ளனர். இவர்களுக்கும் எமது நன்றி.

அம்மையாரைப்பற்றி அயல்மொழியினரும் உணர்ந்து உய்ய அவரின் இயல்புகளை ஆங்கிலமொழியில் அழகுற வடித்துத்தந்த மல்லாகம் பிரபல வழக்கறிஞரும் 'இந்துசாதன'ப் பத்திராதிபரும் ஆகிய சிவத்திரு நம. சிவப்பிரகாசம் அவர்களுக்கும் எமது நன்றி.

இம்மலர் வெளிவர மலர்க்குழுவினரை அயராது ஊக்குவித்த தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானச் செயலரும் எமது மணிவிழாச்சபைப் பொருளாளருமாகிய உயர்திரு க. தணிகாசலம் அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இம்மலர் உருவாக ஆலோசனை கூறி வழிப்படுத்திய முன்னைநாள் மகாஜனக் கல்லூரி அதிபரும், மலர்க்குழு உறுப்பினருமான திரு த. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். அவருக்கும் எமது நன்றி.

இம்மலரில் அடங்கியுள்ள அத்தனை விடயங்களையும் எழுத்து, சொல், பொருள், பிழை நேராவண்ணம் திருத்தியுதவிய சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை அதிபர் திரு. மு. சபாரத்தினம் அவர்களுக்கும், திருமகள் அழுத்தக முகாமி திரு. செ. சின்னத்துரை அவர்களுக்கும் எம் நன்றி.

இம்மலரை அழகுற அமைத்துத் தந்த திருமகள் அழுத்தக உரிமையாளர் சட்டத்தரணி திரு. S. K. பொன்னம்பலம் அவர்களுக்கும் அவரின் பணியாளருக்கும் எம் நன்றி.

சிவசமயமும், தமிழன்னையும் அமர்ந்துறையும் இம்மணிமலர் வெளிவரத் திருவருள் புரிந்த ஸ்ரீ துர்க்கா தேவியின் அருளும் செந்தமிழ் அன்னையின் திருவருள் உள்ளமும் காரணம் என்பதைப் பணிவன்புடன் கூறிக்கொண்டு தமிழ்கூறும் நல்லுலகம் இம்மலரைப் பொன்மலராகத் தங்கள் இல்லங்களில் வைத்துப் போற்றுவார்கள் என நம்புகின்றோம்.

வணக்கம்

மணிவிழாச் சபை
துர்க்காபுரம்
தெல்லிப்பழை
*7-1-1985*

ச. விநாயகரத்தினம்
மா. இராசலிங்கம்
இணைச்செயலாளர்

உ

மாவை ஆதீனகர்த்தா, பிரதம சிவாசார்யர்

## மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

ஆதியிலிருந்தே பாரதத்திற்கும் ஈழத்திற்கும் தொடர்புகள் அனேகம் இருந்தமையை இதிகாச புராணங்களிலிருந்து அறிய முடிகிறது. இமாலயப் பிரதேசங்களிலிருந்து ஈழத்திற்கும், இங்கிருந்து அங்கும் தல யாத்திரைகள், தீர்த்த யாத்திரைகள் என்றெல்லாம் சைவர்கள் மாத்திரமன்றிப் பிறமதச் சார்புள்ளவர்களும் வந்து போனமைக்குச் சான்றுகள் பலவுள. இதனால் சமயவாழ்வு உலகியல் வாழ்விற் சிறப்பிடம் பெற்றது. அரசியல், பொருளியல் முதலான கஷ்டமான இன்பமற்ற வாழ்வியல்களைக் கைதுறந்து, சமயம் கூறும் புராண வரலாறுகட்குத் தலைமையிடம் தந்து, அவற்றினைப் பயின்று அதன்படி பயிற்சி கொண்டு, அனுஷ்டித்து வாழ்வினைச் சீராக்கியதால், சைவ உலகொன்று இமயத்திலிருந்து ஈழம்வரை பரந்து விளங்கியது. சமயஞானிகள் வட இமயத்தினின்றும் தென் குமரிவரை வந்து ஈழம்வரை வருவதும், ஈழத்தவர் வடதிசைவரை சென்று இமயம் வரை போவதும், இதனால் ஏற்பட்ட நிகழ்வுகளால் மக்கள் பலதரப்பட்ட சமய சிந்தனைகளைக் கற்கவும், ஆராயவும், பயிலவும் ஏதுவானது. வைதீக சமயங்களான சைவ வைஷ்ணவங்களேயன்றி, சமண புத்த சமயங்களும் தழைத்து ஓங்கியபோது எங்கும் எதுவித வேறுபாடின்றிச் சமய அனுஷ்டானங்கள் நாடு முழுவதும் பரவி நின்றன. எண்ணிறந்த சமய நோக்குடைய புராணங்கள் பெருகின. விண்ணுலகும் மண்ணுலகும் புராண உலகில் சமய வாழ்வு நடத்தின. விண்ணுலகினர் மண்ணுலகிலும், மண்ணுலகினர் விண்ணுலகிலும் கலந்து உறவாடினர். முனிவர்களும், தேவர்களும், விஞ்சையர்களும், ஏனையோரும் பண்பமைந்த மக்களாகக் கலந்து வாழ்ந்தனர். புராணங்கள் காட்டிய பௌராணிக சமய வாழ்வில் சிவன், திருமால், பிரமன், இந்திரன், முருகன் முதலிய தேவர்கள்—இவர்கள் தேவுலகராயினும்—நமது பூலோகத்திலும் ஆங்காங்கு இடம்கொண்டு வாழ்ந்த வரலாறுகள் பலவுண்டு. சிவன் கயிலையிலும், திருமால் சமுத்திரத்திலும், பிரம்மா தாமரை மலரிலும், இந்திரன் கீழ்த்திசையிலும், முருகன் சரவணப் பொய்கையிலும் வாழ்ந்துள்ளனர். சிவனை நினைந்து வரம் பெறுவதற்காகத் தவமிருந்த வரலாறுகள் பலவுண்டு. புராணங்களும் இதிகாசங்களும் இவற்றினை விரிவாகப் பேசுகின்றன. பல்வேறு மொழிகளிற் பற்பல புராணங்கள் இருப்பினும், தமக்கு வேண்டுமென்றதைத் தத்தம் மொழிகளிற் சமயிகள் மொழிபெயர்த்துமுள்ளனர். இதனால் முனிவர்களும், தேவர்களைப்போல் சிவன் முதலாய தேவர்கள் வாழுமிடங்களுக்கு வந்து வழிபட்டுள்ளனர். நாடாளும் வேந்தர்களும் தேவாதி தேவர்களோடு முனிவர்களையும் இருடிகளையும் முறையாக வழிபட்டு வரம் பெற்றுமுள்ளனர். இவை காலப்போக்கில் நித்திய கடமையாகவும் அமைந்ததனால் பௌராணிக் உலகோடு மக்களும் உண்மைச் சமயிகளாக வாழக் காலமும் நேரமும் இடமளித்தது.

பெரிய புராணத்தை உலகிற்கு ஈந்த சேக்கிழார் சுவாமிகளும் கந்தபுராணத்தை எமக்கெல்லாம் இனிமையாக அறிந்துகொள்ள உதவிய கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகளும் ஆதியிலிருந்தபடி சைவ உலகிற்கு ஆற்றிய தொண்டுகள் உண்மையில் ஜீவசக்தி கொண்டிருந்தன. இவர்களாற் புத்துணர்ச்சி கொண்ட சைவர்கள் எழுச்சியான சமயத் தொண்டுகளைப் புரிந்து அமைதியான பண்புள்ள சமுதாயத்தை உருவாக்கினர். இறைவனிடம் இரண்டறக் கலந்துகொள்ளப் பெரும் வாய்ப்பினைத் தரும் ஆலயங்களை ஆதாரமாகக் கொண்டு சமய குரவர்கள் முத்தியடைந்த வரலாறுகளை அறிந்த சமயிகள், புராண இதிகாசங்களை ஐயந்திரிபறக் கற்கவும், கற்றபடி ஒழுகவும் முனைந்ததால் காலஞ் செல்லச்

செல்லச் சமய குரவர்களுக்குப் பதிலாக சமயப்பிரசாரகர்கள் பலர் தோன்றினர். இந்த வகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பதிப்பித்த பெரிய புராணத்தையும், கந்த புராணத்தையும் ஐயந்திரிபறக் கற்று, ஆராய்ந்து அதிலுள்ளவற்றினை மக்களுக்குப் போதிக்கவும் செய்ததனால், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் ஆதியாம் பழமையான திருத்தலங்களோடு வேறும் அனேக தலங்கள் மீண்டும் ஜீவசக்தி கொண்டன. இதனைத் தொடர்ந்து வெகு அண்மையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது தொண்டுகளைப் போன்று உண்மையான திருச்சேவைகளைச் செய்பவர்கள்தான் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். கல்வியில் பாண்டித்தியமும், நாவில் வாக்குச் சாதுர்யமும், மனதில் இறைவனது தியானமும், செயலில் புண்ணிய தருமங்களும் சமயிகளை இறைவன்பால் இணைக்க ஆற்றுப்படுத்தும் தர்மச் செயல்களும் ஆகியவற்றை இப் புண்ணியவதி கொண்டு, இவற்றினை முறையாக நெறிப்படுத்தும் நோக்கமாக எவருக்குமே தெரியாமல் அழிந்துகொண்டிருந்த அருமையான தெல்லிப்பழை துர்க்கையம்பாள் ஆலயத்தைத் தெரிவுசெய்து, அதனது தொன்மை, வரலாற்றுப் பெருமை இத்யாதிகளைக் கருத்திற் கொண்டு இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து சைவ உலகிற்கு ஆற்றவேண்டிய தொண்டுகளனைத்தையும் இங்கு நடாப்பித்து வருவதைச் சான்றோரும் அறிவர். சாதாரண மக்களாலேயோ அல்லது கோடீஸ்வரர்களாலேயோ ஆற்றமுடியாத சிவசம்பந்தமான தொண்டுகளைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, துர்க்கையம்பாள் ஆலயத்தை முதன்மையாகக் கொண்டு, ஆற்றிவருவதை யாவரும் அறிவர். இத்தகைய சிவபுண்ணிய கைங்கரியத்திற்குப் பூர்வபுண்ணிய பலனும் இறைவனது திருவருளும், மெய்யடியார்களது ஆசியும் வேண்டும். சன்மானம் எதுவுமின்றிச் சைவ உலகெலாம் நடாத்திய சமய சொற்பொழிவுகளாலும், இடைவிடாத வழிபாடு, தரிசனங்கள், எண்திசை யாத்திரிரைகளாலும், இறைவனருளைப் பெற்று, தானதருமங்களை யாற்றி, பூர்வகன்ம புண்ணியங்களையும், ஆலயங்களைச் செப்பனிட்டு அடியார் பெருமக்களது நல்லாசிகளையும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றதனால், சேக்கிழார், கச்சியப்ப சிவாச்சாரியர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்றோரது வரிசையில் ஓரிடம் பெற்றுவிட்டார் என்றே நாம் கூறமுடியும்.

இந்நூற்றாண்டிலே சைவசமய விழிப்புணர்ச்சிக்கும் சமயிகளை முறையான வழியில் அழைத்துச்சென்று இறைவன்பால் ஈர்க்கத்தக்க ஆற்றுப்படுத்தல்களையும் இப் புண்ணியவதி எவ்வளவோ கஷ்டதுன்பங்களுக்கிடையே துணிந்து நடாப்பித்து வருவதால், இன்று சமய மறுமலர்ச்சியை நாம் காண்கின்றோம். மண்ணுலகினரையும் விண்ணுலகினரையும் ஆதியில் எப்படி இணைத்தனரோ, இருஷிகள், ஞானிகள், துறவிகள் எப்படி மக்களுடன் கலந்துறவாடினரோ அதேபோல இன்றைய மண்ணுலகினரை விண்ணவரோடு இரண்டறக் கலக்கக்கூடியதான பௌராணிக உலகை தங்கம்மா அப்பாக்குட்டி உருவாக்கியுள்ளார். சமய சமரசங்களுக்கோர் தாயாகவும் காணப்படுகிறார். துர்க்கை வழிபாடு பெரிய புராணத்திற் சிறப்பான தனித்துவம் பெறக்கூடியதான வகையிற் காணப்படாதிருந்தபோதும் இன்னும் வேறு சிலர் சிவமே முழுமுதற் கடவுள், வேறு தெய்வங்கள் வேண்டியதில்லை என்றதோர் கருத்தை நிலைநாட்டும் வகையில் சங்கங்கள், சமாஜங்கள் மூலம் பணிபுரியும் போதும், துர்க்கையம்பாள் கோவிலை முதன்மையாக வைத்து சிவதொண்டுகளுக்குப் புராணங்கள் கூறுவதிலும் பார்க்க மேன்மையான வேறும் பல தர்மங்களையும் சேர்த்து இயற்றலாம் என்பதனைச் சைவசித்தாந்த மகாநாட்டை நடாத்தியும், வேறும் பல செய்கைகளாலும் துணிந்து நிரூபித்துள்ளார். துணிச்சலுடன் சிவதொண்டுகளை முறையாகவும், தெய்வீகமாகவும் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து மெய்யுணர்வில் வாழ்ந்து வரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு எல்லாம் வல்ல கலியுக வரதன் மாவைக் கந்தசுவாமியார் நிறைந்த திருவருட் செல்வங்களை வழங்கி இரட்சித்தருள வேண்டுமென்று நாம் தினமும் பிரார்த்திப்பது போல சைவ உலகும் பிரார்த்திக்க வேண்டுவது அவசியம்.

**சுபமஸ்து**

மாவை ஆதீனம்
தெல்லிப்பழை

துர்க்காதேவி துணை

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதம குருக்கள்

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் வழங்கிய**

# ஆசியுரை

''ஓம் காத்யா யன்யை வித் மஹே
கன்யா குமார்யை தீ மஹி
தன்னோ துர்கா ப்ரசோத யாத்''

''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து''

''தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே''

சைவம் சாலப் பெரியது. சைவ நெறி சான்ற அடியார்கள் ஞாலத்தில் பெரியார்கள். அந்த வகையில் சைவ சமயத்தைப் புதுப் பொலிவு பெறச் செய்தவர்கள் சைவ சமய நாயன்மார்கள். அவர்களை நமக்குத் தந்தவர்கள் அன்னை வடிவங்களான மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்கால் அம்மையார், அன்னை சாரதாபாய், மீராபாய் முதலியவர்களைப் போற்றி, மேற்கோள் காட்டிச் சிவப்பணியில் திளைத்து, எம்மை எல்லாம் சிந்திக்க வைக்கும் வகையில் அருந்தொண்டாற்றி வரும் சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு அறுபது ஆண்டு நிறைவு எய்துகிறது. இவ் மணிவிழாக்காணும் பேறு பெற்ற இந்த ஈழநாட்டின் பெருமை, சைவத்தின் பெருமை, தமிழின் பெருமை, எங்களின் பெருமை எனலாம்.

''பேசும் பொருளுக் கிலக்கணமாம் பேச்சிறந்த மாசில்
மணிவார்த்தை பேசிப் பிறப்பறுத்தேன்'' என்றார் மணிவாசகர்

அம்மையார் அவர்களின் பணி நாவலர் பெருமான் வழியிற் செயற்படுபவையாகும். இவர்கள் சைவத்துக்கும், தமிழுக்கும் அரும் பெரும் சேவையாற்றித் தம்மை இத் தூய வாழ்வுக்கே முழுமையாக அர்ப்பணித்துத் தவச்சீலியாக வாழ்கின்றார்கள். அம்மையார் அவர்கள் சமயப் பேச்சுக்களில் எல்லாம் பத்திச் சுவை செறியும் வண்ணம், பெரியபுராணம், திருவாசகம் என்பனவற்றில் மேற்கோள் காட்டி உள்ளங்களைக் கவர்ந்து கொண்டவர். இத்தகைய தொண்டுகளை எல்லாம் செய்துவரும் அம்மையார் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி, எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயுள்ள அன்னை ஸ்ரீ துர்க்காதேவியை வணங்கி என் ஆசியைக் கூறுகின்றேன்.

வணக்கம்

சுப மஸ்து லோகா சுகினோபவந்து

துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

உ
சிவமயம்

காஞ்சீபுரம் ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய ஆதீன

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியவர்கள் வழங்கிய

# வாழ்த்து

உலகத்திற்குச் சாந்தியையும் சாத்வீகத்தையும் அளித்து இன்னல்களை அகற்றத் துணைபுரிவது இறை வழிபாடேயாகும். சிவ வழிபாடு நெடுங்காலமாகவே பாரதநாட்டில் மட்டுமன்றித் தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றிலும் மக்கள் வாழ்வில் இருந்துவந்துள்ளது என்பதை வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அந்தவகையில் ஸ்ரீலங்காவிலும் சைவநெறி சிவ வழிபாடு தொன்றுதொட்டே சிறப்பாக இருந்துவருகின்றது. ஆறுமுகநாவலர் போன்ற சமயச் சான்றோர்கள் ஸ்ரீலங்காவில் சைவத் தொண்டில் ஈடுபட்டுப் பெருந் தொண்டாற்றியிருக்கிறார்கள். அந்த வழியில் அந்த நாட்டில் சைவத்திற்கும் தமிழுக்கும் சேவைசெய்து வாழ்ந்துவரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மணிவிழா நடக்க இருப்பது கேட்டுச் சந்தோஷமடைகின்றோம்.

அவர்கள் சிவத்தொண்டில் மேன்மேலும் ஈடுபட்டுச் சிறப்பாகப் பணி புரிந்து சீருடன் வாழ ஆசீர்வதிக்கின்றோம்..

**நாராயணஸ்மிருதி**

காஞ்சீபுரம் — *631, 502*
*3-9-84*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை ஆதீன குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# வாழ்த்துரை

மக்கள் சமய சாத்திர உண்மைகளையறிந்து வாழ்வாங்கு வாழ்ந்து சிறப் பெய்த, சைவ நன்மகளிர் பண்டுதொட்டு ஆற்றிவரும் அருந் தொண்டுகளைச் சமயவுலகு நன்கறியும். இவ்வகையில் இக்காலத்திற் சிறந்து விழங்குபவர் தெல்லிப் பழை சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையா ரவர்கள்.

அம்மையார் பழுத்த தமிழ்ப் புலமையும், சித்தாந்த சாத்திரப் பேருண்மை களைத் தெளிவாய்க் கற்றறிந் தொழுகும் நல்வாழ்வுமுடையவர்கள். கேட்போர் மனங்கொளத் தமது சொல்வன்மையால் இவர்கள் நம் செந்தமிழ் மொழிக்கும் சமய வளர்ச்சிக்கும் நெடுங்காலமாகச் செய்துகொண்டுவரும் அளப்பெருந்தொண் டுகள் பாராட்டுவதற்கும் போற்றுதற்கும் உரியன. திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கப்பெருமான் திருக்கோயிலில் நமது ஆதீனச்சார்பில் 19–1–79இல் நிகழ் வுற்ற திருமுறைக் கருத்தரங்கில் இவர்கள் பங்குகொண்டு ஆற்றிய சொற்பொழிவு மிகச் சிறிப்புடையதாக அமைந்து விளங்கியமையை அறிவோம்.

மக்கள் நல்லொழுக்கமுடையவர்களாக வாழ்வதற்கும், வாழ்வின் குறிக்கோ ளான பேரின்பப் பெரும்பேற்றை அடைவதற்கும் வேண்டுவனவாய நற்றொண்டு களை யாற்றிவரும் அம்மையார் மணிவிழா கொள்ள இருப்பதும், விழாவில் பாராட்டுமலர் அன்பர்கள் முயற்சியால் வெளிவரவுள்ளதும் மகிழ்ச்சிக்குரியன,

சிவத் தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் தாம் மேற்கொண்டொழுகும் நற்றொண்டுகள் சிறக்க நீடிய நல்வாழ்வு பெறவும், விழா சிறப்பாக நடந்தேறவும், விழா மலர் செம்மை நலம் பயக்கவும் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

உ

குருபாதம்

திருக்கைலாய பரம்பரைத் தருமையாதீன
26ஆவது குரு மகா சந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கிய

# வாழ்த்துரை

இலங்கை வாழ் தமிழறிஞர்கள் சைவசமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் ஆற்றிவரும் தொண்டுகள் அளவிடற்கரியன. அவ்வரிசையில் இடம் பெறுபவர் நமது அன்பர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். எழுத்திலும் பேச்சிலும் சிறந்த சமய நுண் பொருள்களை உலகிற்கு வழங்கி சமயநெறி நின்று வாழ்ந்துவரும் இவ்வன்பரின் மணிவிழாவை இலங்கை மக்கள் சிறப்புறக் கொண்டாடுவதறிந்து மகிழ்கிறோம்.

விழா சிறப்புற நிகழவும், விழாமலர் நல்ல பல கருத்துக்களைத் தாங்கி வெளிவரவும், மணிவிழாக் கொள்ளும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எல்லா நலங்களுடன் நீடுவாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தருமபுரம்,
மயிலாடுதுறை, 609001
28-8-84.

சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடம்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
## முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

இலங்கைத் திருநாட்டில், தெல்லிப்பழையில் உறைந்து, ஈடிணையற்ற, எண்ணற்ற திருவருட் பணிகளை இயல்பினுல் ஆற்றிவருகின்ற சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அறுபான் அகவை நிறைவெய்தியமை தொடர்பான மணிவிழா சிறப்புற நிகழவுள்ளமையும், விழா சம்பந்தமாகச் சிறப்பு மலரொன்று வெளியிடப் பெறுவதுமறிந்து மகிழ்கின்றோம்.

திவ்வியம் பழுத்த சைவ நீதிக்கும், தெய்வத் தமிழ் மொழிக்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ள தமிழ் மங்கையர் பலரை வரலாறு நமக்குக் காட்டும். அத்தொடரில் செல்வியும் இடம்பெறுகின்றார். பத்திமை உணர்விற் சிறப்புடையவர்; பரந்த தமிழ்ப்புலமை கொண்டவர் எனும் சொற்கள் மிகையல்ல. இதுகாறும் இவர் ஆற்றியுள்ள பணிகள் பாராட்டிற்குரியன. இனியும் அவர் தமிழ்ச் சைவப் பணியில் தலைநின்று சீரிய பணிகளையாற்றிச் செழித்தோங்கவும், விழா இனிதே நிறைவுபெறவும், மலர் செல்வியின் தொண்டு நலம் பாராட்டுவதாக அமைந்து மிளிரவும் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்

திருப்பனந்தாள்—612054
(தஞ்சைமாவட்டம்)
17-8-1984.

சிவ சிவ

உ

சிவமயம்

## தவத்திரு குன்றக்குடி அடிகளார் வழங்கிய

# வாழ்த்துரை

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மணிவிழா நிகழும் செய்தி மகிழ்வைத் தருகிறது. சகோதரி அவர்கள் இனிய சொற்பொழிவாளர்; செந்தமிழ்ப் பொழிவினர். இவர்தம் திருவாசகச் சொற்பொழிவுகள் கேட்போரை மெய்ப்பாடுறச் செய்யும். திருமுறைகளில் தோய்ந்த நெஞ்சினர். நமது செந்தமிழ் வழக்கினை, திருமுறையின் மாண்பினை, சைவத்தின் திறனை இவர் எடுத்துக் கூறும் பொழுது பெருமித உணர்வு தோன்றும். பேச்சைப் போலவே எழுதும் திறனுமுடையவர். பல ஆண்டுகளாகச் செந்தமிழுக்கும், சிவநெறிக்கும் அரிய தொண்டுகள் ஆற்றிய பெருமை, அருமைச் சகோதரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு உண்டு. சகோதரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சென்ற காலத்தில் மிகு சைவத்துறை விளங்க இயற்றிய பழுதிலாப் பணிகளுக்கும் இனி எதிர்காலத்தில் ஆற்றவிருக்கும் சிறப்புமிக்க பணிகளுக்கும் நமது நன்றி; பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்!

மணிவிழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சகோதரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பல்லாண்டு வாழ்க! வளர்க, அவர்தம் செந்தமிழ்ப் பணியும், சிவநெறிப் பணியும்.

அடிகளார்

குன்றக்குடி — 623206
இராமநாதபுரம் மாவட்டம்
தொலைபேசி; குன்றக்குடி 27

சிவமயம்

ஸ்ரீ தொண்டைமண்டலாதீனம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
வழங்கிய

# ஆசியுரை

" மக்கள் தாமே ஆறறி வுயிரே " என்பது தொல்காப்பியம். இதனால் மக்களாவார்க்குப் பகுத்தறிவு என்னும் சிறப்பறிவு உளதாதல் வேண்டும். இதனைப் பெறாதார் மாக்கள் ஆவர்.

அறிவினை இரு கூறாக்கி, உலகியலறிவு எனவும், மெய்யறிவு எனவும் வகுத்துள்ளனர். இவற்றுள் முன்னது உலக வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது. பின்னதோ உய்யும் நெறிக்கு வழி வகுப்பது ஆகும். ஆகவே இது முன்னதினும் சிறந்தது என்பது தேற்றம்.

இந்த இருவகை அறிவுச் செல்வமும் பெற்றுத் திகழ்பவர் ஒரு சிலரே. அச்சிலருள் ஒருவரே ஈழம் ஈன்றெடுத்த — தாய்க் குலத்தை அணிசெய்யத் தோன்றிய — சிவத்தமிழ்ச் செல்வியார் தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் பெண்மணியார்.

இவ்வம்மையார் மதிநுட்ப நூலொடு உடையவர். மாணவை மண்ணுறுத்தும் நாநலம் வாய்ந்தவர். மணிவாசகனார் அருள் வாக்கில் ஆழ்ந்து படிந்து கேட்டார்ப்பிணிக்கும் வகையில் நுண்பொருள் விளக்கும் திறத்தவர். திட்டமிட்டுச் செயலாற்றிப் பேரவைகளை நடாத்தி வெற்றி கண்டவர். திருக்கோயில் திருப்பணிகளிலும், அன்றாட வழிபாடு, சிறப்பு வழிபாடு, விழாக்கள் இவை நடத்துவதிலும் பெரும் மதிப்பிற்குரியவர். இவை அவர் பெருமைகளுள் சில. இத்தகு நல்லம்மையார் உலகுக்குப் பயனுற வாழ்ந்து அறுபது ஆண்டு நிறைவெய்துகின்றார். ஆகவே, நல்லன்பர் கூடி இவர்க்கு மணிவிழாச் செய்ய முன்வந்துள்ளமையும் இதன் சார்பாக ஒரு மலர் வெளிவருவதுங் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

மலர் நன்கு மலர்ந்து, அம்மையாரின் பண்பு மணம் பரப்பவும், மணிவிழா அனைத்து அங்கங்களுடன் இனிது நடைபெறவும், அம்மையார் முத்துவிழா, பவள விழா, நூற்றாண்டு விழாக்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவம்

57, உபதலைவர் பரமசிவம் தெரு
பெரிய காஞ்சிபுரம் — 631502

உ

ஸ்ரீஸத்குருநாதர் துணை

## ஸ்ரீலஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளின் பிரதம சிஷ்யர் சுவாமி ஹரிதாஸ் கிரி அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

ராதே கிருஷ்ண !

உலகத்தின்கண் தமிழ் என்று தோன்றியதோ அன்றே சைவ சமயமும் தோன்றியது. தமிழ்வேறு, சைவம்வேறு அல்ல என்பது அறிவிற் சிறந்த ஆன்மீகத்தோர் கொண்டுள்ள அசையாத நம்பிக்கை.

தமிழிற்காகத் தொண்டு செய்வது சிறப்புடையது. சமயத்திற்காகச் செய்யும் தொண்டு அதைவிடச் சிறப்புடையது. இரண்டையும் இணைத்துச் செய்கின்ற தொண்டிற்கு இணையான சிறப்பு யாரும் அறிந்திருக்க இயலாது என்று எண்ணுகிறேன்.

இந்த இரண்டையும் இணைத்துத் தொண்டு செய்த அடியார்கள் ஆயிரம் ஆயிரம் உளர். அவர்களில் முதற்கண் நினைப்பிற்கு வரும் மூதாட்டி ஔவைப் பிராட்டி. அடுத்து நினைவுக்கு வருகின்றவர்கள் மங்கையர்க்கரசியாரும், திலகவதி அம்மையரும் ஆவார். இவ்வரிசைக்கிரமத்தில் அன்பும் அருளும் குருபக்தியும் நிறைந்த ''திருநிறைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி'' அவர்களுக்கு ஈழம் வாழ் சமயத்தோர் மணி விழா எடுத்துப் பாராட்ட முனைந்திருப்பது சிறப்பான பெரும் சமயத் தொண்டாகும்.

எல்லாம் வல்ல சத்குருநாதர் ஸ்ரீ ஞானானந்தகிரி பெருமான் திருநிறைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு நீண்ட ஆரோக்கியமான, ஆன்மீகம் நிறைந்த ஆயுள் அளித்து அருள் புரிவாராக.

ராதே கிருஷ்ண !

ஸ்வாமி ஹரிதாஸ் கிரி

தபோவனம்,
227, ஔவை சண்முகம் வீதி,
கோபல்லபுரம்,
மதுரை - 600086.

உ

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய

# வாழ்த்துரை

சிவநேயச் செல்வர்களே!

சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மணிவிழா எடுப்பதறிந்து பேருவகை எய்துகிறோம். எமது குருநாதர், நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்பால் அவர்கள் அளவிறந்த அன்பும் பக்தியும் உடையவர். எனவே நல்லை ஆதீனத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர். ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் 'சிவத் தமிழ்ச் செல்வி' என்ற பட்டத்தையும் அவர்களுக்கு வழங்கினார்கள். சைவ உலகில் தமது வாழ்நாள் முழுவதையும் சைவப்பணிக்கே அர்ப்பணித்த பெருமாட்டி ஒருவர் உளரேல், அவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களேயாவர். இது வெறும் புகழ்ச்சியு மல்ல, மிகையுமாகாது. இலங்கையில் மட்டுமல்லாது தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் ஆதிய தேசங்களில் தமது உபந்நியாசங்கள் மூலமாக சைவத்தின் உன்னத நிலையையும், சைவசித்தாந்தத் தத்துவக் கருத்துக்களையும் சைவமக்கள் அறிந்துணரச் செய்த பெருமை அவர்களையே சாரும். பாமரரும் கற்றறியும்வகையில் மிக எளிய நடையில் சைவநற் சிந்தனைக் கட்டுரைகளையும் நூல்களையும் யாத்துள்ளனர். வானொலிப் பேச்சுகள் அநேகம். காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் ஒப்ப அவ்வரிசையில் வைத்துப் போற்றத்தக்க அம்பாள் அடியார் அவர்கள்.

ஆதியில் சிறுகுடிலில் அமர்ந்து அருள்பாலித்த துர்க்காதேவியை மிகப்பெரிய ஆலயத்திற் கொலு வீற்றிருக்கச்செய்து, மஹாகும்பாபிஷேக விழாவெடுத்து, அழகிய பெரும் திருக்குளம் அமைத்து, சித்திரத் தேர் செய்வித்து, வெளிமண்டபங்கள் அமைத்து, இன்னும் இன்னோரன்ன திருப்பணிகள் தொடர்ந்து நடைபெறுவதென்றால் துர்க்கா துரந்தரியின் துணிச்சலான கைங்கரியங்களை நாம் பாராட்டிப் போற்றாமல் இருக்கமுடியுமா? இவையனைத்தையும் நிறைவுறச்செய்ய அவர்கள் எத்தனை இன்னல்களையும் கஷ்டங்களையும் அநுபவித்திருப்பார்கள். யாரறிவார். இலங்கையில் சீரான நிருவாகத்தோடு இயங்கும் அம்பாள் ஆலயம் இது ஒன்றே. உலகளாவிய புகழ் இவ்வாலயத்துக்கு உண்டு. இவ்வாலயத்தில் மட்டும் அல்லாது அம்மையார் அவர்கள் வெளியில் ஆற்றிய தர்ம கைங்கரியங்களும், ஈந்துள்ள நன்கொடைகளும் அளப்பில.

தேடிப் போகாமல், அம்மையார் அவர்களுக்குக் கிடைத்த விருதுகளும், பட்டங்களும் ஏராளம். அவைகளை அவர்கள் மறந்தும் இருப்பார்கள். 'சிவத்தமிழ்ச் செல்வி', 'துர்க்காதுரந்தரி' என்பன சாதாரணமாக நாம் அறிந்தெழுதுவது. அவர்களுக்கு நல்ல தேக ஆரோக்கியமும், நீடித்த ஆயுளும், தொடர்ந்து சைவப் பணியாற்றும் பாக்கியமும் அருளவேண்டுமென அம்பாள் பொற்பாதங்களை வந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
பருத்தித்துறை வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்
12-8-84

உ

சிவமயம்

முதுபெருந் தமிழ்ப்பேரறிஞர்

## இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## அவர்கள் வழங்கிய

# பாராட்டுரை

விநாயகப் பெருமானை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

*　　　*　　　*

ஸ்ரீ துர்க்காதேவி கோயில் தருமகர்த்தாக்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் முகமாக, துர்க்கா துரந்தரி

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள், தலைமைப் பதவியை ஏற்று, கோயிலில் நித்திய நைமித்தியங்களில் கண்ணுங் கருத்துமாய், தவறுகள் வாராமல் நடத்தி வருகின்றார்கள்.

விசேட காலங்களில் அநேக அபிடேகங்கள் நடைபெறும். அப்பொழுது, அவர்களின் தாபனங்களாகிய குருகுலம், அநாதசாலை இளைஞர்கள் தத்தமக்கு ஏற்ற கருமங்களில் ஈடுபடுவார்கள்.

இக்கோயிலில் அமைந்த இராசகோபுரமும், திருக்குளமும், திருமண அன்னதான மண்டபங்களும் மிக்க சிறப்பு வாய்ந்தன; அறிஞர்களின் சொற்பொழிவுகளுக்குரிய மண்டபமாயும் திகழ்கின்றன.

பல்வேறு இடங்களிலும் தமிழகத்திலுமிருந்து வரும் அறிவாளிகளின் சொற்பொழிவுகளுக்கு செல்வி துர்க்கா துரந்தரியவர்கள் தலைமை வகித்து ஆற்றும் தலைமையுரை மிக்க வியப்பைத் தருவதாயிருக்கும்.

செவ்வாய் வாரங்களில் கன்னியர்கள் தொகை அதிகம். ஏழு செவ்வாய் இடையறுது வரும் வாய்ப்புப் பெற்ற கன்னியர்கள் தம் இஷ்டசித்திகளைப் பெறுவார்களென்பது ஒரு சம்பிரதாயம். அவ்வாறு சித்தி பெற்றவர்கள் பலர். அடுத்து வர வாய்ப்பில்லாதவர்களும் ஏற்ற சித்திகளைப் பெறுகின்றார்கள்.

தமிழகத்திலும், மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் விசேட சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கின்றார்கள் செல்வி துர்க்கா துரந்தரி அவர்கள். அவர்களின் சொற்பொழிவுகள் புத்தக வடிவில் வரவேண்டியவைகள்.

அண்மையில் வட இந்தியாவில், காசிப்பதியில் நடைபெற்ற சித்தாந்த மகாநாட்டில் ஒரு தினம் செல்வி துர்க்கா துரந்தரியவர்கள் தலைமைவகித்து ஆற்றிய தலைமையுரை, குறிப்புரை ஈழத்துச் சைவ தமிழ்மக்களுக்குப் பெருமை தருபவை. நிற்க,

துர்க்கா துரந்தரியவர்கள் எத்தனையோ புத்தகங்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அண்மையில் வெளியிட்ட பெரியபுராண வசனம் மிக்க பயன் பயப்பது. வேறு பல பயன் தரும் புத்தகங்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். பல வேறு தரும ஸ்தாபனங்கள்பாலும் அவர்கள் கவனம் செலுத்துவது இயற்கை.

அவர்களுக்கெடுக்கும் மணி விழா, எதிர்காலத்தில் உரிய உரிய காலங்களில் எடுக்கும் விழாக்களுக்கெல்லாம் கால்கோள் விழாவாய் அமைவதாக என்று,

ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளை முன்னிட்டுக் கொண்டு,

ஸ்ரீ துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களை மிக்க ஆராமையுடன் பாராட்டுவோமாக.

வணக்கம்

சி. கணபதிப்பிள்ளை

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
9-9-1984

சிவமயம்

## தமிழ் நாடு அரசு,
## செய்தி அறநிலைத் துறை அமைச்சர்
## திரு. இராம. வீரப்பன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்து

சிவனருட் செல்வர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரின் தேவாரமும், மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையும் சைவசமயத்தையும் தமிழையும் வளர்த்தன. அந்த அருட்பாக்கள் நம் வாழ்விற்கான இலக்கியங்களாக அமைந்தன. சைவத் திருமுறைகளைப் பாடிய சைவ சமயக் குரவர்களின் வழியில் அன்பு நெறியில் சைவத்திற்கும் தமிழுக்கும் பணியாற்றுகின்ற சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மணிவிழா எடுப்பதறிந்து மகிழ்கின்றேன். நூற்றாண்டு காலத்திற்கு மேலும் அவர்களின் சீரிய தொண்டு தொடரவும், மணிவிழாவும், மலர் வெளியீடும் சிறப்புறவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இராம. வீரப்பன்

*தலைமைச் செயலகம்,*
*சென்னை - 600009,*
*தமிழ் நாடு,*
*21-10-84.*

உ

சிவமயம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தாசபைத் தலைவர்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் வழங்கிய

# பாராட்டுரை

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

திருமணப் பந்தத்தில் ஈடுபடாமல் இருந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலரைப் போன்று தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் பணியாற்றி வருவதைச் சைவத் தமிழுலகம் நன்கு அறிந்துள்ளதுடன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவரைப் பாராட்டிக் கௌரவித்தும் வந்துள்ளது. ஈழத்தில் மட்டுமல்லாமல் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய கடல்கடந்த நாடுகளிலும் சிவத்தமிழ்ச் செல்வியின் சேவை விரிந்து பரந்துள்ளது.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் குலதெய்வம் துர்க்கையம்பாள். 'அவள்' அருளாலே 'அவள்' தாள் வணங்கிவருபவர் தங்கம்மா அப்பாக்குட்டி. அவர்கள் பல்லாண்டு காலம் தான் கோயில் கொண்டிருந்த குடிசையைப் பக்தகோடிகளின் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பேராலயமாக்கி அதிற் கொலுவீற்றிருக்கத் துர்க்கையம்பாள் திருவுள்ளம் கொண்ட பொழுது அப்பேரருளின் கருவியாகும் பெரும்பேறு தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கே கிடைத்தது. அவர் துர்க்காதுரந்தரி ஆனார்.

''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு''

என்கின்றார் திருவள்ளுவப் பெருமான். ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் பல்லாயிரக் கணக்கான அம்பாளின் அடியார்கள் நெஞ்சுருகி அளிக்கும் அன்புக் காணிக்கைகளைப் பேணிப் பாதுகாத்து மனுக்குலத்தின் நல்வாழ்விற்காகவும் ஈடேற்றத்திற்காகவும் செலவிட்டுவருபவர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கின்றார்; அடியார்களுக்கு அன்னதானம் வழங்குகின்றார்; வேதாகமக் கல்வியை வளர்த்து வருகின்றார்; புராண படனங்களையும் திருமுறை விழாக்களையும் நடத்தி வருகின்றார்; சமய நூல்களை அச்சுவாகனம் ஏற்றுகின்றார்; நலிவுற்றோர், பிணியுற்றோரின் துயர் தீர வழி சமைக்கின்றார். சுருங்கச் சொன்னால், ஓர் ஆலயத்தை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும், ஆலயத்தின் சொத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றார் தங்கம்மா அப்பாக்குட்டி.

இவ்வுயரிய பணிகளைப் பல்லாண்டு காலம் தொடர்ந்து ஆற்றுவதற்கு நல்லாரோக்கியத்தையும் நீடித்த ஆயுளையும் சிவத்தமிழ்ச்செல்வி அவர்களுக்கு வழங்கவேண்டும் என அருள்மிகு துர்க்கையம்பாளை மனமுருகிப் பிரார்த்திக்கின்றேன்.

வி. தர்மலிங்கம்

''காமதேனு''
கந்தரோடை, 24-12-84

சிவமயம்

அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரும்
முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமாகிய
திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

எங்கள் இலங்கை மணித் திருநாடு காலத்துக்குக் காலம் சைவமும் தமிழும் மலர்ச்சியுற, சைவத்தமிழுலகம் எழுச்சிபெற, அறிஞர்களை அளித்துவருவது வரலாற்று உண்மை. அந்த அறிஞர்கள் வரிசையில் இப்போது இடம்பெற்றிருப்பவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்பதில் ஐயமேயில்லை. அவர் சிந்தனை, பேச்சு, செயல், வாழ்வு அனைத்தையுமே சைவத்துக்கென அர்ப்பணித்துச் சிவப்பணியில் மூழ்கி, அயராது ஆற்றிவரும் சேவையை இலங்கைமக்கள் மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகமே அறியும். இங்குள்ள கிராமங்கள், நகரங்கள் எங்கும் வாழும் சைவசமயிகள் அவரின் சமயச் சொற்பொழிவுகளால் எழுச்சியும் சைவப் புத்துணர்வும் பெற்றுள்ளனர். அவரின் சைவ அறிவையும் சொல்லாற்றலையும் மதித்து சிங்கப்பூர், மலேசியா, தமிழகம் முதலிய அயல் நாடுகளில் வாழும் தமிழர்களும் சைவச் சொற்பொழிவுகளுக்காக அடிக்கடி அவரை அங்கு அழைப்பித்து அவரைப் பலதடவைகளிற் கௌரவித்துள்ளமை இலங்கைத் தமிழர்களாகிய எமக்குப் பெருமிதம் தருகின்றது. அவரின் ஆற்றலையும் சேவையையும் மதித்து அவருக்கு வழங்கப்பட்டுள்ள கௌரவப் பட்டங்கள் பல. மகிமைமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தை அவர் நிர்வகித்துவரும் முறை எல்லோராலும் வெகுவாகப் பாராட்டப்படுவதுடன், சிவச் சொத்துகள் எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்பதை மற்றும் ஆலயங்களின் நிர்வாகிகள் உணர்ந்து செயற்படுவதற்கு உதாரணமாகவுந் திகழ்கின்றது.

சைவத்தின் மறுமலர்ச்சிக்கு உழைக்கும் நவீன மங்கையர்க்கரசியாக விளங்கும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணி விழா சைவத்துக்கு எழுச்சி தரும் விழாவாகும். அதனையொட்டி வெளிவரும் மணிவிழா மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியுறுகிறேன். எல்லாம்வல்ல அன்னை பராசக்தி அருளால் அவருக்கு நீண்ட ஆயுளும், நிறைந்த தேகாரோக்கியமும், எல்லா நலன்களும் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி எய்துகிறேன்.

90/4, ஹாட்டன் பிளேஸ்
கொழும்பு 7
28-8-1984

வீ. சிவசுப்பிரமணியம்

இலங்கைப் பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்துகலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சர்

## கௌரவ செ. இராசதுரை அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மணிவிழா எடுக்கும் செய்தி மனதிற்கு மகிழ்ச்சி தருகின்றது. காலம் அறிந்து சைவ உலகு எடுக்கும் நன்றிநவில் விழா.

தமிழுக்கும், சைவத்திற்கும் பணிசெய்வதில் மட்டில்லா மகிழ்ச்சியும், மன நிறைவும் நமது முன்னோர்கள் பெற்றார்கள். இறவாத புகழ் கொண்ட தமிழ் நூல்களும், காலத்தால் அறியாத சைவ திருமறைகளும் நம் முன்னோர்கள் நமக்களித்த அரும் செல்வங்களாகும். அக்காலத்தில் ஊருக்கு ஊர் தமிழ் அறிஞர்களும், சைவப்பெரியார்களும் தோன்றி நற்பணியாற்றி வந்தனர்.

தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டு செய்வோர் அருகிவரும் இக்காலத்தில் தம் வாழ்நாள் முழுவதையும் தமிழ்ப் பணிக்கும் சைவப் பணிக்கும் அர்ப்பணித்தவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

அறிஞர்களும், பேரறிஞர்களும், பண்டிதர்களும், பாவலர்களும் பலர் தோன்றிப் பணியாற்றிய போதிலுந் தாய்க்குலத்தின் பிரதிநிதியாக இக்காலத்தில் பணியாற்றி வந்த ஒருவராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விளங்குகிறார்கள்.

இலங்கையிலும், இந்தியாவிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் சென்று தமிழுக்கும், சைவத்திற்கும் அவர் ஆற்றிய பணியின் மூலம் தாய்க் குலத்திற்கும், இலங்கை மணித்திரு நாட்டிற்கும், சைவ உலகிற்கும் பெரும் புகழ் ஈட்டிக் கொடுத்துள்ளார்கள்.

அடக்கமும், பணிவும், ஆழ்ந்த சமயப்பேரறிவும் அவரிடம் நிலைகொண்டு ஆட்சி செய்கின்றன. அன்னையும் அருள் மழை அவர்மீது பொழிந்தவண்ண மிருக்கின்றது. தெய்வமணிக் கருத்துக்களைக் கேட்போர் மனதில் ஆழமாகப் பதியும் வகையில் மணிக்கணக்காகச் சொற்பெருக்காற்றும் வகையில் வல்லமை பெற்றவர். சொற்களுக்கும் தான் எடுத்துக்கொண்ட கருத்துக்களைச் சொல்லுவதற்கும் அவர் தயங்குவது இல்லை. மிக எளிய நடையிற் படித்தோர் மட்டுமல்ல பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் சமய சொற்பொழிவுகளை ஆற்றும் ஆற்றல் வாய்ந்தவர். அவருக்கு மணிவிழா எடுப்பது சைவ உலகு எங்கணும் பெருமைப்படக் கூடிய நிகழ்ச்சி ஆகும்.

அருள்மிகு துர்க்கை அம்பாளுக்கு அழகுமிகு திருக்கோயிலும், அற்புதத் தேரும் ஆக்கிக் கொடுத்த அவர் பணி காலத்தால் என்றும் அழியாது நிலைத்து நிற்கும் தெய்வீகப்பணியாகும். சீரிய அவர் தெய்வப் பணிக்கு மணிவிழா எடுக்கும் குழுவினரை மனதார வாழ்த்துகின்றேன். விழாச் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

பகவான் திரு அருளாற் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும், சைவத்திற்கும் பணிபுரிய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

செ. இராசதுரை

செயலகம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு
இல. 24௧, காலிவீதி, கொழும்பு — 4
30-10-1984

உ
சிவமயம்

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை
திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் வழங்கிய

# மணிவிழா வாழ்த்து

**நேரிசை வெண்பா**

மூவிருப தாண்டு முருகன் திருவருளாற்
பூவுலகில் எய்தியுயர் புண்யவதி — மேவுபுகழ்
தங்கம்மா அப்பாகுட் டிப்புனிதை சீரோங்கு
மங்களமாய் வாழ்க மகிழ்ந்து.

அன்பன்
கிருபானந்தவாரி

107, சிங்கணச்செட்டி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை—600002
தமிழ்நாடு.

உ
சிவமயம்

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீனகர்த்தா,

## சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் வழங்கிய

# ஆசியுரை

ஈழநாட்டின் தனிப்பெருந் திருக்கோயிலாக விளங்கும் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தை அருளொளி வீசும்படி புனருத்தாரண திருப்பணி செய்த பெருமை பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குரியது. பண்டிதரவர்கள் ஆசிரியப்பணியில் முனைந்து வாழ்ந்து உலக போகங்களை யெல்லாம் அநித்தியம் என்பதை உணர்ந்து தெய்வ சேவையே தனது சேவையாக ஏற்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சமய வாழ்க்கை ஆரம்பம் சிறந்த சொற்பொழிவு செய்யும் நிலையில் மலர்ந்தது. இதிகாச, புராணங்கள், திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள், பழந்தமிழ்ச் செல்வங்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு சபையிலே எழுந்து நின்று தமது மணிக்குரலிற் சபையோர் வியக்கும் வண்ணம் ஆற்றிய பல சொற்பொழிவுகளினால் தமிழ்கூறும் நல்லுலகத்தின் ஒப்பிலா மதிப்பைப் பெற்றார்கள்.

துர்க்கா துரந்தரியவர்கள் இவ்வாறு பெற்றுக்கொண்ட பெருமதிப்பின் அடிப்படையில் தெய்வத்திருப்பணிக்குத் தம்மை ஆளாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு கிலமாகக் கிடந்த துர்க்காதேவி ஆலயத் திருப்பணியில் ஈடுபடலானார்கள். அந்த ஈடுபாடு இன்று வியத்தகு பெருங்கோயிலாக எழுந்து நிற்பதைக் காட்டி நிற்கிறது.

இன்று அறுபது ஆண்டு பூர்த்தியாகி மணிவிழாக் காணும், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மேலும் புகழோங்கிவாழ எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் திருவருள் துணை செய்வதாக.

கீரிமலை — கு. நகுலேஸ்வரக்குருக்கள்

உ

சிவமயம்

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வேதாகம பாடசாலை

## ஆசிரியர் வழங்கிய செய்தி

# குணமெனும் குன்று

தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஒரு தனி சமஸ்தானம் எனக் கூறுவது சாலவும் பொருத்தமேயாம். அன்னை துர்க்கையின் அருளாட்சியில் அள விடற்கரிய பணிகள் சிறப்பாக நடைபெறுவது கண்கூடு. அன்னையின் ஆசியுடன் நடை பெறும் பணிகள் யாவும் திருப்பணிகளாகவே அமைகின்றன. ஒரு சமஸ்தானத்திற்கு வேண்டிய முக்கிய பணிகள் யாவும், (நிதி, வருவாய்த்துறை, குழந்தைகள் பராமரிப்பு, உண்டிச்சாலை, கால்நடைப்பண்ணை, கல்வி நிலையங்கள், மின்சாரம், சுகாதாரம், நீர் விநியோகம், வேதாகமம், சித்தாந்தபுராண இதிகாசப் பேருரைகள், கலை, கலாச்சாரம் யாவற்றுக்கும் மேலாகக் காணி கட்டிட இத்யாதி சொத்துக்கள் பராபரிப்பு) தேவஸ்தான அரசாட்சியிலும் அடங்கியுள்ளன. இவை யாவும் செவ்வனே நடைபெறுவதற்கு ஒரு நிர் வாக சபை அமையப்பெற்று அதில் அக்கிராசனராகப் பணியாற்ற ஓர் ஆற்றல்மிகு தலைவரையும் வாய்க்கப்பெற்றது துர்க்காபுர சமஸ்தானம்.

அழகிய பொலிவான தோற்றம், நிமிர்ந்த பார்வை, முகத்தில் முற்றிய கல்வியின் அறிவழகு, எதனையும் ஆழ்ந்து நோக்கும் கண்களை அலங்கரிக்கும் மூக்குக் கண்ணாடி, தோத்திரப் பாடல்களைப் பக்தியுடன் ஓதும் கணீரென்ற குரல், இவைதான் அந்த சமஸ் தான தலைவியின்—இன்றைய மணிவிழா நாயகியின் தோற்றம். தேவஸ்தானத்தின் பணி களிற் பெரியவை சிறியவை என்று பாராமல் எல்லாவற்றிலும் நேரடியான பங்கு வகித்தல் அம்மையாரின் தனிச் சிறப்பாகும்.

சமஸ்தானத்திற்கு வெளியே அம்மையார் அவர்கள் செல்வதாயின் அது ஒரு சமய விழாவாகவோ இன்றேல் இலக்கிய விழாவாகவோதான் இருக்கும். ஆலய கும்பாபிஷேக மகோற்சவ காலங்களில் ஒலி பெருக்கியில் சாஸ்திரீயமான தோடி ராகத்தில் புராணம், இனியமோஹனத்தில் பொருள் நிறைந்த பாடல்களுடன் வெண்கல மணியோசையென தமிழ் பிரவசனமொன்று கேட்டால் அஃது செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது சொற்பொழிவுதான் என்று தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் கூறுமளவிற்கு ஆற்றல் மிக்க பேச்சாளர். மறைந்த நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் எட்டாவது பீடாரோஹண விழாவில் உரையாற்றிய அம்மை யார், எட்டு என்ற எண்ணிலேயே பேசி எட்டைச் சிறப்பித்த உரை இன்றும் காதில் ரீங்காரமிட்டவண்ணம் இருக்கின்றது. அண்மையில் நடந்து முடிந்த பாரதப் பிரதமர் இந்திரகாந்தியின் ஆத்மசாந்திக்கூட்டத்தில் ஆற்றிய உரையில் அம்மையாரின் சரித்திர அறிவு கேட்போரை வியக்கவைத்தது.

ஸ்ரீ துர்க்கதேவி ஆலய விழாக்காலங்களில் அம்மையாருக்குத் தூக்கமே வராது. அம்பாளை அலங்கரிக்கும் வண்ண வண்ண ஆடைகள், திருவாபரணங்கள் முதலியவற்றைத் தெரிவு செய்து அம்பாளை அழகுபார்த்தல் முதல் வரும் அடியார்கள் குறையின்றி வழிபாடு செய்வித்தல், சிரமபரிகாரம் செய்துவைத்தல் வரை அனைத்திலும் உற்சாகமாகக் கலந்து கொள்ளுவார்.

இப்படித்தான் ஒரு விழாநாள். 1982ஆம் ஆண்டு ஆவணிமாதம் உத்தராட நக்ஷத் திரம் மறுநாள் விடிந்தால் திருவோணம், பல இலட்ச ரூபா செலவிற் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட துர்க்கா புஷ்கரணி தடாகப் பிதிஷ்டை, அத்துடன் அம்பாள் தீர்த்த விழாவும்

அமைந்தநாள். எனவே முதல்நாளே சரியான நிர்வாகப்பளு நிறைந்த நாள். அம்பாள் தேரில் ஆரோஹணிக்கும் நாள். ஆலயத்தின் வேலை மிகுந்த நாள். நேரம் காலை 8–30 மணியை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. அம்பாளின் அருள்பவனி இராஜகோபுரத்தின் புறத்தே தேர்மண்டபத்தை நோக்கி வந்தவண்ணம் இருக்கின்றது. கட்டுக்கடங்கா அடியார் கூட்டம். ஒழுங்குகளைக் கவனிப்பதிற் சாரணர்கள், தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இலங்கை வானொலி நிகழ்ச்சியை நேரடியாக அஞ்சல் செய்துகொண்டிருக்கிறது. தேர்முட்டியில் கடைசி நிமிட ஏற்பாடுகளைச் சரிசெய்வதற்கு அம்மையார் படிக்கட்டுகளில் அவசரமாக ஏறிவருகின்றார். அம்பாள் ஆரோஹணிக்கும்வரை யாரும் தேர்முட்டி மண்டபத்திற்கு மேல் வரக்கூடாது என்ற கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் சாரணச் சிறுவன் ஒன்பது வயது நிரம்பாத இளஞ் சாரணன், மேலே வரும் அம்மையாரை அவன் அறியமாட்டான். திடீரென மேலே வரும் அம்மாவை அவன் வழியைத் தடைசெய்து மறித்துவிட்டான். 'பளார்' மறித்த சிறுவன் முதிகில் ஓர் அறை. சிறுவன் பயந்துவிட்டான். அம்மாவின் முகத்தில் கோரத்தின் சாயல், நேரம் காலை 8–45. அம்பாள் ஆரோகணித்துப் புறப்பட ஆயத்தம். அங்கும் ஒரே பக்திக் கூச்சல், கடலலையென ஆர்ப்பரிக்கும் மக்கள் வெள்ளம். "துர்க்கையம்பாள் அடியார்களே." இந்த விளி அமைப்பு ஆலயத்தின் பெருந்தெருவிலிருந்து நாலா திசைகளிலும் அமைக்கப்பெற்ற ஒலி பெருக்கியில் இருந்து புறப்படுகின்றது. சீறிய நாகம் மகுடி ஒலிக்கு அடங்கியது போன்ற நிசப்தம். ஆம், அந்தக்குரல் அடியார்களுக்கு நன்கு பழகிய விரும்பிய மணிக்குரல் — அம்மாவின் குரல். தேர் நிகழ்ச்சிகளை அடியார்களுக்குக் கூற ஆரம்பித்த அம்மையாரின் குரல் திடீரெனக் கம்மியது. அருகில் நின்றவர்களுக்கு அம்மாவின் கண்கலங்கியது தெரியும். ஆம், தனக்கிடப்பட்ட கடமையைச் செவ்வனே செய்த சிறுவனை வருத்தியதற்காகத் தான் வருந்தினர். அதுமட்டுமல்ல, அதனை ஒலி பெருக்கியில் எடுத்துக் கூறி மன்னிப்புக் கோரியது மாத்திரமல்லாமல் அந்தச் சிறுவனை அணைத்து ஆறுதல் கூறிப் பாராட்டவுஞ் செய்தார்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது"

தவறுவது மனித இயல்பு. ஆயினும் அம்மையாரின் பெருங் குணத்தைக் கூற இதுவொன்றே போதும்.

அம்மையார் அவர்கள் தன்னையே பொது வாழ்விற்குச் சமர்ப்பணஞ் செய்திருந்தாலும் தன்னுடன் பணியாற்றும் அனைவரையும் தனித்தனியே நன்கறிவார். அவர்களின் அன்றாட தனிப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதில் ஆலோசனைகள் வழங்குவார். அவர்களின் இன்ப துன்பங்களிற் பங்குகொள்வார். எல்லோராலும் 'அம்மா' என்றழைக்கப்பட்டாலும் அன்பு மிகுந்தோர் 'டீச்சர்' என்று அழைத்தால் ஏற்படும் சந்தோஷத்தை நேரிற் கண்டுதான் உணர முடியும்.

இன்று மணிவிழாக் காணும் (60 வயது) அம்மா அவர்கள் அன்னை துர்க்காவின் அருளால் இன்னும் பலகாலம் அறப்பணி ஆற்றிச் சதாபிஷேகம் கொண்டாடவும் (80 வயது) சதாபிஷேக விழாமலரிலும் நான் அம்மையாரை விதந்து போற்றிக் கட்டுரை எழுதவும் உலக நாயகியாம் என் அன்னையைப் பிரார்த்தித்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கு மனமொழி மெய்யாலே நல்லாசி கூறுகின்றேன்.

வில்வ நாராயண சர்மா

ஸ்ரீ துர்க்கா வேதாகம பாடசாலை
துர்க்காபுரம்
9–10–1984.

சிவமயம்

திருக்கோணேசர் ஆலய பரிபாலனசபைத் தலைவர்
சட்டத்தரணி திரு. எம். கே. செல்வராசா, ஜே. பி., யு. எம்.
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

தமிழுக்கும், சைவத்திற்கும் அருந்தொண்டாற்றி சக்தி வழிபாட்டின் சிறப்பினை உலகறியச் செய்தவரான துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அருந் தொண்டினைப் பாராட்டி மணி விழா எடுப்பது மட்டுமன்றி, பாராட்டு மலர் ஒன்றினையும் வெளியிட மணி விழாச் சபையினர் முன் வந்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.

மெருகிட. மெருகிடப் பொன் ஒளிர்வது போன்று அளப்பரிய சேவையின் மூலம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இன்று அனைத்து லகும் பாராட்டிப் புகழவல்ல பெருஞ் சிறப்பிற்கு இலக்கணமாகத் திகழ்கின்றார்.

தெல்லிப்பழையில் உருவான துர்க்கை அம்மன் ஆலயம் இன்று பெருஞ் சிறப்புடன் விளங்குவதுடன் மட்டுமன்றி நாடளாவிய வகையில் அடியார்கள் இவ்வாலயத்திற்குச் சென்று வழிபாடாற்றிப் பேரருட் பெருஞ் செல்வத்தினைப் பெறவும் அன்னார் வழிகாட்டியுள்ளார்.

சைவத்தினதும் தமிழினதும் பெருஞ் சிறப்புக்களை இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும் ஏனைய பகுதிகளிலும் பரவச் செய்து இன்று துர்க்காதுரந்தரி எனச் சிறப்புப் பட்டமும் பெற்றுத் திகழ்கின்றார்.

ஆத்மீகத் துறையில் மட்டுமன்றி அடியார்க்குச் செய்யும் சேவை ஆண்டவனுக்குச் செய்யும் நற்பணி என்ற கருத்திற்கு அமைய தெல்லி யூரிலே ஆதரவற்ற மக்களுக்குப் புகலிடம் அளித்து அவர்கள் தகுந்த தொழிற் பயிற்சியினைப் பெறவும் நற்பிரசைகளாக வாழவும் வழி அமைத் துள்ளார்.

இது மட்டுமன்றி, சைவத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் தூண்டு கோலாகி அன்னார் ஆற்றிவரும் பணிகள் கணக்கிலடங்கா.

இத்தனை சிறப்புக்களையும் சேவை உணர்வினையும் தன்னகத்தே கொண்டு ஆண்டவனுக்கும் அடியார் தமக்கும் ஆதரவற்றோருக்கும் அருந் தொண்டாற்றி வரும் அம்மையாரின் அரும்பணிகள் அகிலம் உள்ளளவும் ஏற்றிப் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

இத்தகு சிறப்பினை யெல்லாம் தன்னகத்தே கொண்ட அம்மையாருக்கு மணிவிழா எடுக்க முனைந்த மணிவிழாச் சபையினரின் நற்பணிக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வியின் சீரிய தொண்டு மேன்மேலும் சிறக்க அருள் புரியுமாறு ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் கோணேசப் பெருமா னின் திருவடிகளை வாழ்த்தி வணங்குகிறேன்.

திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபை, முு. கோ. செல்வராசா
திருக்கோணமலை தலைவர்
6-11-84

உ

சிவமயம்

சென்னை, பல்கலைக்கழக — மரபுவழி பண்பாட்டு நிறுவன நெறியாளரும், சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத் தலைவரும் ஆகிய

முதுமொழிக்கொண்டல்,

பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தன், எம். ஏ. எல். டி.,

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

*1981ஆம் ஆண்டு மே மாதம் சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் ஆண்டு விழாவைச் சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் யாழ்ப்பாணச் சைவ ஆடவர் மங்கையர் ஒத்துழைப்புடன் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய முன்றிலில் மிகத் திறம்பட நடத்திக்கொடுத்ததையும், மங்கையர் மகாநாட்டில் தலைமையுரை ஆற்றியதையும் பெருமன்றத்தார் இன்றும் பசுமையாக நினைவுகூர்கின்றனர். மின்சக்தி நிலையம் வீடுதோறும் மின்னொளி வழங்குவதுபோல, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் பைந்தமிழ் பழகும் ஈழ நாட்டிலே ஒரு தெய்வீக சக்தி நிலையமாக விளங்கிவருவதற்கு அம்மையாரின் அயரா உழைப்பே காரணமெனின் மிகையாகாது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமான் ஈழத்தில் நலிந்திருந்த சைவத்திற்குப் பொலிவும் வலுவும் ஊட்டினார்கள் என்றால் அதை வளங்குன்றாமல் காத்துவருவதில் ஈடுபட்டுவரும் சைவச் சான்றோர்களில் அம்மையார் முக்கியமாகக் கருதத்தக்கவர்கள். தமிழகத்தினோடு இடையறாது தொடர்புகொண்டிருக்கும் அவர்கள் தாயகமாம் தமிழகத்திற்கும் சேய்நாடாம் ஈழத்திற்கும் இணைப்பாக இருந்துவருகிறார். சாத்திரங்கள், தோத்திரங்கள், சிவ கதைகள், புராணங்கள் இவற்றை விரிவுரை வாயிலாகப் பரப்புதல், ஆலயங்களைப் பராமரித்தல். விழா நடாத்துதல், சமுதாயசேவை இப்படி அம்மையார் ஆற்றிவரும் அறப்பணிகள் பலப்பல. இங்ஙனம் நீண்டகாலமாக சைவத்திற்கும் தமிழிற்கும் அளப்பரிய சேவை செய்துவரும் அம்மையார் அவர்களுக்கு 1985 சனவரியில் பன்னிரு திருமுறைகளைப்போல சைவமணங் கமழுமாறு பன்னிரண்டு நாட்கள் மணிவிழா நடத்தவும், மணிவிழா மலர் வெளியிடவும் முன்வந்துள்ள மணிவிழாச் சபையைப் பாராட்டுகிறேன். அம்மையார் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து அறப்பணிகள் பல செய்வதற்கும், மணிவிழா சிறப்பதற்கும் தில்லை நடராசப்பெருமான் இன்னருள்புரியுமாறு அத்திருவருளை வேண்டுகிறேன்.*

அன்பன்,
பெ. திருஞானசம்பந்தன்

பல்கலைக்கழக வளாகம்,
2, சாம்பசிவம் தெரு
சென்னை—5
17-8-1984

சிவமயம்

இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) தலைவர்
சுவாமி பிரேமாத்மானந்தா அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத்திற்கும் தமிழுலகுக்கும் செய்துவரும் அளப்பரும் தொண்டைப்பற்றி சைவத் தமிழுலகில் அறியாதார் எவரும் இருக்கமுடியாது. அவர்களது அறுபதாண்டு நிறைவை யொட்டி 1985-01-07 தொடக்கம் 1985-01-12ஆம் திகதி வரை எடுக்கும் மணிவிழாவின்போது வெளியிடப்படும் பாராட்டு விழா மலர் வாயிலாக அவருக்கு ஆசி கூறுவதிற் பேருவகை அடைகிறேன்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத் தமிழுலகு செய்த நற்றவப் பயனுய்த் தோன்றிய அருட்செல்வி; அவர் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையுமே சைவத் திருப்பணிக்கென்றே அர்ப்பணித்த பெருமகள். துர்க்காம்பிகையே இவரில் அதிட்டித்து நின்று அரும்பணிகளை ஆற்றுவிக்கின்முர் என்று எண்ணத் தோன்றுகிறது.

அம்மையார் எமது மதநூல்களைத் துருவி ஆராய்ந்து கசடறக் கற்று, அதற்குத்தக நின்று, கற்ற உண்மைகளைக் கேட்போர் பொருள் உணர்ந்து உள்ளம் உருகி இன்புறுமாறு தெளிவுடனும், இனிமையுடனும் பேசுந் திறமைமிக்கவர். சைவமக்கள் எங்கெல்லாம் வாழ்கிருர்களோ அங்கெல்லாம் அவர் புகழ் பரவி நிற்கின்றது. ஈழநாட்டில் மட்டுமன்றி. இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆதியாம் நாடுகளிலும்கூட இவரது பேச்சைக் கேட்டுப் பயன்பெற்ற மக்கள் பலர் உளர். இவரைக் குருவாகவும், அன்னையாகவும் போற்றும் பெரியார்கள் பலருண்டு. அவரது பேச்சில் ஒரு தனி இனிமை; அவர் சொல்லின் செல்வி.

எமது மத உண்மைகளின் நுண்ணிய பொருளை எளிதாக விளக்கிப் பலருக்கும் அறிவு புகட்டும் பேராசாளுகை மட்டுமன்றி, தெல்லி துர்க்காம்பிகையின் அருளை உலகறியச்செய்த பெருமைக்கும் உரியவர் இவர். அந்த ஆலயத் திருப்பணிகளை அந்தரங்க சுத்தியோடு, ஒழுங்காக நிறைவேற்றுவிப்பதன்மூலம் அன்னையின் அருளைப் பலரும் அனுபவித்தின்புறச் செய்வதோடு, பல சமூகப் பணிகளையும் செய்து மக்களுக்குப் பேருதவிபுரிந்து வருகின்முர். அனுதை இல்லம், மகளிர் இல்லம் போன்றவற்றை உருவாக்கி நல்லமுறையில் நிருவகித்து வாழ்க்கை வசதி இன்றி வாழும் பல குழந்தைகளுக்கும் மகளிருக்கும் ஒப்பற்ற அன்னையாகவும் விளங்குகின்முர்.

இவர் இன்னும் பல்லாண்டு உடல்நலமும் உளவலுவுமுடையவராய் வாழ்ந்து நாட்டுக்கும் மதத்துக்கும் நலன் பல புரிய அருள்பாலிக்கவேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவன் திருவருளை வேண்டி எமது ஆசிகளையும் தந்து மகிழ்கின்ருேம்.

இராமகிருஷ்ணமிஷன்
கொழும்பு

சுவாமி பிரேமாத்மானந்தா

சிவமயம்

மட்டக்களப்பு, கல்லடி—உப்போடை இராமக்கிருஷ்ண மிஷன்

சுவாமி ஜீவனானந்தா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

பெரியபுராணத்திற் கூறப்பட்டுள்ள காரைக்காலம்மையார், மங்கையர்க் கரசியார் முதலியோரை நினைவூட்டும் வகையில் தனது வாழ்க்கையினை அமைத்து, இன்று ஈழத்திற் சமயப் பணியும், சமூகப் பணியும் புரிந்துவரும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், அறுபதாவது ஆண்டு நிறைவை எய்திய அரும்பேற்றை எண்ணி ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னார் இப்புவியில் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டுகள் வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அம்மையாரவர்கள் சிவப்பணி புரிந்து வருவதைத் தமிழுலகம் நன்கறியும். பிறந்த பொன்னுடான ஈழத்தில் மட்டுமல்லாது தமிழ்நாட்டிலும், சிங்கப்பூர். மலேசியா போன்ற கடல்கடந்த நாடுகளிலும் அம்மையாரவர்களின் சமயச் சொற்பொழிவுகள் வியாபித்துள்ளன. ஈழத்தில் எங்கெல்லாம் சைவக் கோவில்கள் உண்டோ, அங்கெல்லாம் அம்மையாரின் காலடிகள் பதிந்துள்ளன.

மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கு அவர்கள் விஜயம் செய்தபொழுது அங்கு வதியும் குழந்தைகளுக்கு வாழ்க்கையின் மாண்பினை இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்பி, ''நீங்கள் வாழப்பிறந்தவர்கள், மண்ணில் நல்ல வண்ணம் வாழ லாம், அதற்கேற்ப உங்களது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்'' என்று அவர்களுக்கு ஊக்கமூட்டி ஆற்றிய சொற்பொழிவு அன்று அதனை கேட்டுக் கொண்டிருந்த குழந்தைகள் அனைவருக்கும் ஓர் தாரக மந்திரமாக அமைந்திருக்கு மென்பது எனது நம்பிக்கை. கர்மவினைப் பயனால் அல்லலுறும் மக்கள், அம்மை யாரது சமயச் சொற்பொழிவுகளைக் கேட்டு மன ஆறுதலும், இறை நாட்டமும் கொள்வது சர்வ சாதாரணமாகும்.

ஏனையோரைப்போல் வெறும் பேச்சுடன் நின்றுவிடாது, செயலிலும் அவரது பணிகள் பரிணமித்துள்ளன. தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் அம்மை யாரின் சமயத் தொண்டினுக்கும் ஆலயச் சூழலில் அவர்கள் அமைத்துள்ள அனாதைகள் இல்லம் அம்மையார் மக்களிடத்து மகேசனைக்கண்டு ஆற்றும் தொண் டினுக்கும் சிறந்த சான்றுகளாக நம் கண்முன் நிற்கின்றன. ஓர் ஆலயத்தினை நிர் வகிப்பதும், ஓர் அனாதை இல்லத்தை நிறுவிப் பராமரிப்பதும் எத்தகைய பொறுப்புவாய்ந்த பணிகள் என்பது அவற்றில் அனுபவப்பட்டவர்களுக்கே நன்கு விளங்கும்.

இத்தனை வேலைப்பழுவுக்கு மத்தியிலும், சமயச்சொற்பொழிவுக்காக அவர் நேரம் ஒதுக்கிக்கொள்வது ஆச்சரியமே. ''மக்களுக்கு உதவி செய்ய வேண்டுபவர் தமது சொந்த சுகதுக்கங்களையும், எல்லாவித இச்சைகளையும் மூட்டை கட்டிக் கடலில் எறிந்து விட்டுப் பின்னரே தொண்டில் நாட்டம் கொள்ள வேண்டும்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறியதற்கமைய அம்மையாரவர்கள் தமது வாழ்க்கை யினை அமைத்துக் கொண்டிருப்பது கண்கூடு. நம் நாட்டுத் தாய்மார்களும், யுவதிகளும் அம்மையாரது தன்னலமும் ஆடம்பரமுமற்ற வாழ்க்கையைப் பின் பற்றுவார்களாக. '' தன்னம்பிக்கையே சமய வாழ்க்கைக்கு உரைகல் ''. அம் மையாரின் வாழ்க்கை இக்கூற்றுக்குப் பிரத்தியட்ச உதாரணமாகும். கிடைத்தற் கரிய மனிதப் பிறவியை வறிதே கழிக்காது, சமயப்பணியிலும் மகேசன் சேவை யிலும் தன்னை ஈடுபடுத்திவரும் சிவத்தமிழ்ச் செல்வியின் பணி இறைவனின் ஒப்புதல் பெற்றதென்பதில் ஐயமில்லை.

அறுபதாம் ஆண்டு நிறைவுபெறும் அம்மையார் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ்ப்பணியும் சிவப்பணியும் புரிய எல்லாம்வல்ல இறைவன் அருள் பாலிப்பாராகுக.

இராமகிருஷ்ண மிசன்
மட்டக்களப்பு

சுவாமி ஜீவனானந்தா

உ

சிவமயம்

# மணிவிழா வாழ்த்து

செல்விதங் கம்மா அவர்கள்தாம் அறுபான்
சிறந்தநல் ஆண்டுகள் நிறைந்தார்
கல்வியில் தொண்டில் சிவநெறி பரப்பும்
கடமையில் தலைசிறந்து நின்றார் !
தெல்லிப்பழை துர்க்கா தேவியின் கோயில்
சிறந்திடத் தொண்டுகள் புரிந்தார் !
நல்லவர் அவர்தம் நலம்பல ஓங்கி,
நலம்மிக வாழிநீ டூழி ?

செந்தமிழ் வேந்தர், ந. ரா. முருகவேள்

தமிழ் நாடு

# Novel Northern Star of Religious Refulgence

# Thurkka Thuranthari Thangammah Appacuddy

## DIAMOND JUBILEE OF RARE DISTINCTION

"A woman is the centre of life, the very pivot of existence Life revolves round her. She is the Daughter, She is the Wife, She is the Mother. There is no home and no family without her."

—**Kishori Gopal Krishnan**

The characteristic quality of the human species, according to different thinkers, consists in either self-sacrifice or godliness or moral force or reason. It is common ground that by virtue of the quality of reason the human being is considered to be higher than the animal. This distinction was argued in detail by the extra-ordinary thinker Aristotle in tracing the essence of reason.

A person who inherently possesses most of these essential qualities must necessarily become remarkable in the eyes of any society. The reasonable, who are at once godly, do develop a moral strength that makes them acquire authority in the social community in which they sustain their position.

'Chelvi Thangammah Appacuddy' is the notable nomenclature of that person who because of her characteristic qualities, specially the strength of divine humility, has a claim to the spontaneous gratitude of the wide society that has been perennially enjoying her unstinted service for four decades. There is thus a luxuriant light upon this captivating name that keeps on continuously indicating to the world-wide Tamil community the bright side of human life.

The inherent nature of the illuminating qualities of this rare gem among women of religion, need not be explicitly explained except by reference to her gifted parentage. There lived happily in the southern border of the well known town of Tellippalai, just abutting on the northern limits of the equally remarkable township of Mallakam, an orthodox couple whose inner illumination could easily be evidenced in their serene outer appearance. Shri Appacuddy was content to be a school master in the hilly regions that overlook the historic sylvan Shrine of Lord Skantha at Kataragama, by the winding waters of majestic Menik Ganga. His tutorial assignment could not be carried to its conclusion as priority had to be given to his household that comprised four dove-eyed darlings, daughters all, along with an ideal house-wife, who was the repository of religious practice.

Chelvi Thangammah, perhaps according to an unseen pattern of programme that was suggestive of a definite mission in life, started her happy career as a student in a rural school characteristically called the Kaladdy School, Mallakam. From then onwards, this gifted student has been leaping from attainment to

fresh attainment leading to the Senior School Certificate Examination in Tamil in which she obtained, as expected, marks of merit. The natural brilliance of this talented student very appropriately induced her to seek admission to the noble profession that was well within her reach. As if providentially planned, it was at that time, the Ramanathan Saiva Training College was established to enable aspiring Saiva teachers receive appropriate training in the science of Teaching, imbibing Saiva Ideals by the study of Saiva Literature. Admission to this Institution was on a competitive basis that stood to advantage in the case of candidate Thangammah. Here was training and practice not merely in the study of Sanga classics but also in the learning of chosen Saiva Literature, the Puranas and the Ithihasas. under the able guidance of Shri T. Somasundaram and Shri Sundararaja Ayangar who faithfully interpreted the lofty ideals of the Founder philanthropist, the Sage of Suhasthan.

Having thus obtained the Certificate as a Trained teacher, acquiring specialized instruction in Saiva Literature, pedagogue Thangammah began her panoramic life, the landscape of learning becoming more and more picturesque. Her tutorial activities commenced at the Shri Sundaramoorthy Ayar Tamil School, However, Batticaloa was the starting point of this brilliant career as an accomplished teacher. This Convent School was again conducive to the flowering of disciplined feminity, encouraging youthful Thangammah to eschew the traditional inclination to be involved in wedlock. Celebacy, though not a *sine qua non* for a religious life, yet is certainly a sure basis for higher spiritual service. And to confirm this determination, the next assignment was in the Fatima Tamil School, a school of the Muslim denomination in the metropolis, Here in an ideal setting, conveniently away from the calls of her kin and within reach of facilities for further studies, studious Thangammah set her heart, most logically, on 'being graduated as a Tamil Pandit and Saiva Pulavar. In rapid succession, she was successful with merit in the examinations for Bala Pandits, Pandits and Saiva Pulavars, the first two conducted by the Jaffna Oriental Studies Society and the third by the well known Saiva Siddhantha Samajam. The conferment of the Degree of Pandit required the submitting of special treatises. Pandit Thangammah had to work on the Treatise—சமுத்துப் பிரபந்தங்கள் a very exhaustive research for a youthful graduate. That Pandit Thangammah had reached the required standard was evident from the fact that the panel of examiners was headed by no less a scholar than Shri S. Natesan, the author of Sakuntalai Venba, whose seal of appreciation was in itself an additional testimonial.

Saiva Pulavar Thangammah had by then become a necessary acquisition for the various religious organizations and study circles in metropolitan Colombo where there was ample scope for coordinated religious awakening in the form of discourses, debates and dialogues. And Teacher Thangammah soon turned to be a preacher having a firm foothold on the religious and cultural forum.

The time had come for the homeland to be directly benefitted by the rich scholarship of Senthamil Chelvi Thangammah. The Sathananda School at Alaveddy, situated in the centre of a spiritually inclined village studded with shrines won the race in

securing the invaluable service of Teacher Thangammah. But the hunger of the collegiate students of Kankesanturai Electorate for enjoying the privilege of learning Tamil and Saivaism under talented Thangammah had to be satisfied. Union College, Tellippallai enjoyed the unique distinction of having Pandit Thangammah as its lecturer in Tamil for twelve long years till departmental rules intervened at the concessionary age limit of fifty-five. Though she could have obtained extension of service, the call of her duties as Treasurer of Thurkkai Temple appeared to her to be more urgent and useful.

South Indian Scholars of Saiva Siddhantha philosophy were among the first to recognize the rare talent that has made Thangammah Appacuddy a house-hold word in Sri Lanka. The Annual Conferences in Tamilaham that mark the progress of activities of Saiva propaganda soon became the favourite platform for the rising star of Yalpanam to have her lucid expositions heard far and wide.

The learned lecture delivered at the High School in Chidambaram that stands as a statue-like symbol of the Great Navalar's remarkable contribution in South India to the steady growth of Saiva Renaissance, brought this Nightingale of Sweet Senthamil into the limelight in Tamilaham.

The Annamalai University of Chidambaram that affectionately hosts leading literators would not miss affording its undergraduates the rare opportunity of enjoying the privilege of listening to the rhetorical rendering of the highlights of traditional Tamil classics by this talented orator.

The Saiva Siddantha Maha Samajam of Chennai, the guardian angel in Bharatha of Saiva Siddantha philosophy, has been illustrious for its annual assembly where the President-select would invariably be an outstanding exponent of Saiva Tenets. This great assembly had intuitively chosen the greatest Ceylonese of that time to deliver the presidential address when the Sangam was in its formative age. The Sage of Suhastan, whose silver-tongued oratory had then become remarkably known all over the world, sitting in the presidential seat of that August Assembly, in the solemn manner of a Sannithanam of an Aatheenam, inspired the attentive audience in a scintillating speech in which the mellifluous resonance of choice words was echoing the rare significance of Saiva Siddantha. It was a symphony of Senthamil phraseology in a fluent flow keeping the audience spell-bound. It was also a reminder that the Great Navalar had left behind a rich legacy for scholars of the calibre of Sir P. Ramanathan in Sri Lanka emulously to continue as legatees to maintain the capacity of Sri Lankans as outstanding orators.

From then onwards, the Samajam has been considering the feasibility of inviting Saiva Scholars of Sri Lanka for its annual deliberations.

Pandit V. Nagalingam, President of the Jaffna Saiva Paripalana Sabhai, and Sir Kanthiah Vaithianathan of Thiruketheeswaram Renaissance fame happened to catch the eye of the vigilant Sangam. Several years later, when the Sangam had grown in stature and widened its scope to include Mangayatkarasis and Thilagavathys, the choice naturally fell on Thurkka Thuranthari, who by that time had become the roving ambassador of Saiva Siddantha. Fresh

from the lecture tour of Malaysia and Singapore where she was accorded spectacular receptions after a series of scintillating speeches, Thurkka Thuranthari appropriately appeared as the Saiva woman of the year in the Samajam Annual Deliberations and carried the learned audience with her by her mellifluous voice and sparkling SenThamil.

Conferment of choice epithets indicative of distinction and merit in special branches of literary, cultural and educational activities has been part of the routine of outstanding establishments such as Aatheenams, Mutts, Samajams and Sangams. As a frequent recipient of such conferments, Thangammah Appacuddy, stands in the front line. They are too many to be recapitulated here. But the most significant of them are *Senthamil Chelvi* and *Thurkka Thuranthari*; the latter will serve as the introduction to the next chapter of this sketch.

And now we come to the nerve-centre of all activities of this remarkable lady of religion—the Thurkka Devasthanam.

As one of the few ancient temples of Sri Lanka, Thurkkai Temple situated at Tellippallai, in the heart of the Northern Peninsula, has a long history of fluctuating conditions. This sacred shrine, according to the scripts preserved in the Mavai Kanthan Aatheenam, has been closely connected to the Skantha Temple. consecrated by the Indian Princess Maruthapuravalli, in devotional gratitude, to Providence for restoring her original facial features recovering from a grim curse. The Thurkka Temple consecrated several centuries ago was the only one of its kind then in this Island. The Thurkkai installation on the outer northern Prakaram of another ancient shrine—Naguleswaram, is of recent origin. Tellippallai Thurkkai Temple has been specially known for the Nine-night Poojahs to Sivasakthi in the form of Thurkkai, Lakshmi and Saraswathy, and the tenth day festival called Manampoo, symbolic of the annihilation of Asura Aanavam by Thurkkai in trumphant mood. On that sacred occasion, Lord Muruga visits Thurkkai in a colourful procession and receives the Vel of atomic potential to disarm Soorapanman and subjugate him so as to serve Him as a devotee.

That such a significant shrine should have run into a period of dilapidation cannot be accounted for except as the logical outcome of the indifference and negligence of the devotees and of the change of attitude of the priests-in-charge, discarding spiritual values for temporal tendencies. Unlike Thirukethesevaram where the Portuguese pirates turned proselytizers and laid it low in utter ruins, Thurkkai underwent a natural degradation. The Ten principal devotees who as scions of those who had performed the Navarathiri Festivals, constructed a deed of Trust and assumed Trusteeship to restore the shrine to its pristine glory. However, it was felt that a Restoration Committee should herald the enterprise. This Committee having done good spade work, invited the Trustees to form a a Managing Committee which first took shape in 1965 with Shri S. Thiagarajah Retired Inspector of Schools, as President,. Shri Sivavaakeesar B. A. the eldest son of one of the Trustees, as Secretary and Chelvi Thangammah Appakuddy as Treasurer. Circumstances were such that the Treasurer in the course of finding funds for a limited restoration had been able to do substantial organizational work with the result that what looked dim became brighter month by month.

The Treasurer with the fund of goodwill she had earned during her career as teacher and preacher, was able to organize religious functions in the Temple that attracted devotees as well as persons of spiritual achievement.

Rome was not built in a day—they say. Thurkkai Temple, however, was restored in as few days as possible. This was due to a particular providential touch, a prophetic call by the Sage of Columbuturai, who in one of his rambling utterances, one day straight in front of the Temple on the highway, beckoning those who were in attendance on him, particularly a pious devotee—Thambu Ponnambalam, yelled out "down with the dilapidated structure". This then was the spiritual signal that gave the green light to the helpless band of renovators. As if by magic, the reconstruction work gathered swift momentum with benefactions pouring spontaneously. Chairman Thiagarajah feeling the strain of the responsibility, gave way to a younger but capable administrator, Shri T. T. Jayaratnam B. A., who had already earned a name as an ideal organizer as Principal of Mahajana College which had by then risen sky-high in stature and content. The main structure of Thurkkai Temple having been reconstructed according to strict Agamic conception, the Managing Committee turned its attention to the construction of an ornamental chariot indicative of sculptural elegance. It was during this new venture that President Jayaratnam passed away as if he had been summoned for similar activities in the upper world.

The choice of a successor did not seem a serious problem. The officiating Vice-President himself proposed the name of Thangammah Appacuddy stating that it was the inevitable selection. The entire committee, to one member, hailed the proposal.

And thus the present period of activities of this prodigy of sacrifice and service commenced with a chorus of popular approbation.

The first Consecration ceremony after the renovation was resplendent, in the highest spiritual conception, scrupulously set to the pristine pattern of authoritatively established agamic code. The spectacular achievement of this splendour was the result of the resolute and dedicated service of a well co-ordinated Committee of Management of which Chelvi Thangammah was Treasurer. It was not merely the restoring of this ancient shrine to good condition that had been visualized. What engaged the attention of the Committee of Management was an all-out effort to produce the amplest use of this god-given opportunity to make this Temple full-fledged but bringing to bear, in the massive reconstruction, the stamp of spiritual significance, incorporating the inherent excellence of age-old architecture and sculptural representations of idols. Thus the invaluable services of a renowned South Indian Scholar of the Science of Sculpture and exponent of that excellent art were solicited and secured. Professor Thevalingam who had already achieved distinction in this direction in South India, the cardle of this cherishd art, dedicated himself, heart and soul, to this divine duty and exceedingly embellished the Thurkkai Temple.

In the matter of the execution of the prodigious Chitra Ther—the Artistic Chariot—a Sri Lankan, Pandit Kalakesari Thambithurai, was intuitively chosen.

The very first flash of spiritual thought of devotee Thangammah as

Treasurer was to establish in her personal capacity, a Thirumurai Madam on her own initiative for the preliminary purpose of conducting classes in Thirumurais, Puranams and Saiva Sastras. This establishment soon blossomed out into a convenient venue for all religious discourses and cultural conferences where holy dignitaries often made their appearance and invoked the Favour of Providence.

Appropriately enough, the Chennai Saiva Siddantha Maha Samajam, having great capacity to comprehend the real evolution of religious tendencies, took it a pleasure to solicit the fruitful support of Thurkka Thuranthari fittingly to celebrate the Samajam's *Pavala Vila* in the land of the historical Yalpadi and specially in the spiritually salubrious precincts of the Siva Sakthi Shrine—the Thurkkai Thevasthanam. Here was the finest chance for the Saiva World delightfully to see the capable hand of Thurkka Thuranthari in the art of organization and the science of Saiva Hospitality. The entire Committee of the Samajam and the Chairman Select of the Conference, Vidvasiromani Ratnam Chettiar, were overwhelmingly delighted to see their *Pavala* Conference reaching the summit of success.

The high light of hospitality in a full-fledged place of worship should naturally be the entertainment of the devotees at Maheswara Pooja. This has been a primary function of the Thurkka Thevasthanam so much so that the construction of a spacious hall for this specific purpose had been necessitated. And the Annapoorani Hall came into existence. But even that extensive accommodation would not suffice. The ever stretching scope of the Thevasthanam was soon capable of building another huge hall for the exclusive use of Maheswara Pooja, releasing the Annapoorani Madam for yet another innovation—the Kalyana Mandapam so designed as to afford every facility needed for the auspicious ceremony of Thirumanam. The suitably decorated Dais and the majestic Manavarai bear testimony to the precision of planning.

To be in keeping with the tradition of temporalities, the High Priest's residence, the Secretariat, the Pongal Peedam, Store Rooms, cow husbandry and such other necessaries have been provided by the Thevasthanam.

The shelter for the fair sex, the dormitory for destitute Saiva children, the Gurukulam for godly Brahmin youth and the massive Mahalir Illam forming a string of stately structures along with the architectural arch in the gateway, demonstrate Thurkka Puram in elegant effect.

Special mention must be made of the Theertha (Pond) Pushkarani decently designed as a spacious square encircling the sacred waters of peaceful placidity. The altar appropriately accommodated and the one hundred steps all around, present a picturesqueness that can hardly be forgotten if once seen. The Theertha Ceremony, participated and witnessed by several thousands of devotees, as an annual feature, affords a pleasing panoramic view of aesthetic excellence.

Celebate Thangammah having no compelling need to bedeck herself with bright ornaments and embellish her inherent beauty, however, gives vent to natural feminine passion for jewellery and costly costumes, by making the image of Thurkka Thevi resplendent in the richness of golden ornaments, in the brilliance of brilliants, and above all

in the magnificence of the garlands of sweet-smelling flowers ranging from roses to lovely lotuses. President Thangammah's passion for this picturesqueness has been perennially satisfied by the everflowing gifts gladly endowed by enthusiastic devotees.

There is a graciousness in her of the heart, it is akin to pure love indicating itself as the origin of the exceedingly natural graciousness of outward conduct.

Thurkka Thuranthari was very appropriately appointed a Justice of the Peace. It was indeed doing justice to this coveted appointment; spiritual peace alone can lead to justice.

The poet muses that:

"There is no outward token of graciousness that is not deeply rooted in the ethos".

"True education should transmit both the outward token and the inner root."

Born with the natural talent for imbibing lofty ideas and ideals, Thurkka Thuranthari has been cultivating it not for her immediate temporal ends but for a nobler, spiritual and universal purpose.

There is no pleasure purer than to sit and listen to a sweet succession of words and phrases elucidating the eternal truth, the sure means to sublime salvation. Hindus all over Sri Lanka, in Malaysia, Singapore and South India have enjoyed this rare pleasure.

The path of duty has been the privileged way to spiritual enlightenment. "Ruminating on religious thoughts and dreaming high" Thurkka Thuranthari "has come closest to cultural heaven" leading to the highest reaches of holy aspirations.

Here is a rich reward of virtue, clothed as she is in changeless purity.

Let this simple sketch have an enlivening epilogue

"Whose high endeavours are an inward light
That makes the path before *her* always bright;
Who, with natural instinct to discern
What knowledge can perform, is diligent to learn;
Abides by this resolve, and stops not there
But makes *her* moral being her prime care;
Who, if she rise to station of command,
Rises by open means; and there will stand
On honourable terms..............
Who comprehends *her* trust; and to the same
Keeps faithful with a singleness of aim;
And therefore does not stoop nor lie in wait
For wealth or honours or for Worldly State".

— *Wordsworth*

Winding up this weak writing. I frankly feel that the pen I hold has not fully fed all the feelings of the holder on this admired theme—Thurkka Thuranthari—The subject is vast, the scope is varied.

**R. N. Sivaprakasam**
***Editor, 'Hindu Organ'***

உ
சிவமயம்

# சமுதாயத் தொண்டின் சிறப்பு

"ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் கலியாணம் செய்து கொள்வதற்காகவே பிறக்கின்றாள் என்று எண்ணுவது சரியன்று. வயது வந்த பெண் அதாவது 22 அல்லது 25 வயது நிரம்பிய பெண் கலியாணம் செய்து கொள்ளுவதில் தவறு ஒன்றுமில்லை. இதை நானறிவேன். ஒரு பெண்ணினுடைய பெயரையாவது குறிப்பிட்டு, சேவை செய்வதற்கென்றே அவள் தன் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்திருக்கிறாள் என்ற குறிப்பை உங்கள் பள்ளிக்கூடப் பத்திரிகையில் நான் காண இயலவில்லை"

மகாத்மா காந்தி 1927 நவம்பர் மாதம் யாழ்ப்பாணம் வந்தபோது, இராமநாதன் பெண்கள் கல்லூரியில் எழுப்பிய சவால் இது.

இன்று சரியாக 57 வருடங்களுக்குப் பின் அன்று மகாத்மா தெரிவித்த ஏமாற்றத்துக்கு ஒரு சமாதானம் சொல்லும் வகையில் சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியின் மணிவிழா மலரில் சமயத் தொண்டின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும்.

கடந்த 50 ஆண்டில் உலகம் கண்ட மாற்றம் உலக வரலாற்றில் முன் எப்போதும் காணப்படவில்லை என்பது சரித்திர நிபுணர்களின் முடிவு.

பெருமாற்றம்

இப்பாரிய மாற்றத்தை உரை கல்லாகக் கொண்டு சைவர்களாகிய நாம் வாழும் சமுதாயத்தைக் கணிப்போமானால் மகாத்மா காந்தியின் அன்றைய அறைகூவல் இன்றும் நிறைவேறாத நிலையிலிருப்பது கண்கூடு.

பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் கல்வியிலும் பெண்கள் எங்கள் மத்தியில் இன்று ஏராளம்; ஆனால் படிப்பு முடிந்து வெளியேறும் பெண்கள் பொது வாழ்க்கையில் ஈடுபடுவது மிகக் குறைவு. இலைமறை காய்போல் பலர் இருந்தாலும் துர்க்கா துரந்தரி திரட்டிவரும் தொண்டர் படையில் ஆயிரக்கணக்கானோர் சேர்வதனால் யாழ்ப்பாணம் இலங்கையின் தமிழகமென்றோ சிவபுரமென்றோ அழைக்கப்படுவது சாதாரணமாகிவிடும்.

சமுதாயத் தொண்டின் மூலவேர் அதில் இரண்டறக் கலந்திருக்கும் சமயத் தொண்டிற் காணப்படுகிறது.

இன்று நாட்டில் ஒருதன்மை வளர்ந்து வருகிறது. "நாடு கெட்டுவிட்டது; இளைஞர்கள் ஒழுக்கமின்றி அழிவுப் பாதையில் பயணஞ் செய்கிறார்கள்" என்று கெடுக்கிறவர்களே பேசிக் கொண்டிருக்கிற தன்மை ஒரு புதிய மரபாகி விடுகிறது.

சமுதாயம் கெட்டுப் போகிறது. எங்கள் சமய குரவர்களை, அவர்களின் திருமுறையை நாம் மதிப்பதில்லை. சமய சீல வாழ்வுக்கு நாம் ஆண்டுதோறும் விழா எடுக்கின்றோம். ஆனால் ஒரு எள்முனை அளவாவது, அவர்கள் எடுத்துச் சொன்ன வழியிலே நாம் நடந்து கொள்வதில்லை என்ற குற்றச் சாட்டுச் சர்வ சாதாரணம். அத்துடன் கொள்கைகள் கருத்துக்கள் எதுவானாலும் அவை மோதிக் கொள்ள ஆலயங்களே இடமளிக்கின்றன என்பது இன்னொரு பெருங் குறை.

மாரிபோலப் பேசுவதிலும், நூல்கள் வெளியிடுவதிலும், வியாக்கியானங்கள் வளர்ப்பதிலும் சைவர்களாகிய நாம் சமர்த்தர்கள். அத்துடன் நாம் ஏற்ற கொள்கைகளுக்கே மாறுபாடாக நடந்து கொள்ளும் திறமையும் நமக்குண்டு.

இளைஞர் உலகம்

எம்மை நாமே திருத்திக்கொள்ளும் தேவை மிக முக்கியமானது. அப்போது தான் நாம் பெரியோர்களைப் பாராட்டுவதிலோ தெய்வங்களுக்கு விழா எடுப்பதிலோ பொருள் இருக்க முடியும்.

எங்கள் இளஞ்சமுதாயத்தில் நம்பிக்கை கொண்டு சமுதாயத் தொண்டின் அவசியத்தை அவர்கள் நன்முக உணரும்படி நாம் தலைமைத்துவம் தாங்க முடியுமானுல் இன்று நம்மைச் சூழ்ந்திருக்கும் இருள் நிச்சயம் அகலும்.

விஞ்ஞான மனிதன் பேருலகத்தை இணைத்து வெற்றி பெற்றிருக்கின்றுன். மனிதனுடைய அறிவுச் சுவடுகள் பதியாத மண்டலங்கள் இல்லை. சங்கத்தமிழ்ப் புலவர் கூறிய ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற சொல்லோவியம் இன்று செயல்முறை பரீட்சைக்குரிய தாய் விட்டது. திருமூலரின் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதையும் வருங்கால விஞ்ஞானிகள் நிரூபிக்க முடியுமென்ற நம்பிக்கை கொண்டவர், மறைந்த விஞ்ஞான மாமேதை அல்பேட் ஐன்ஸ்டைன்.

## பெருவெளி

பண்டைய நிலைக்கும், வருங்காலத்தில் இத்தகைய சமயக் கோட்பாடுகள் நிறைவேறுமென்ற நம்பிக்கைக்கும் இடையில் உள்ள பெருவெளியில் நாம் வாழ்கின்றேம். இன்று விஞ்ஞான உலகின் வியப்புக்களைக் கண்டு நாம் மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை. செல்வம் வளர்ந்த போதும் வறுமை போய் விடவில்லை. கருத்துக்கள் வளர்ந்து வரும் போதிலும் மோதிக் கொள்ளும் விலங்குணர்ச்சிகள் ஒழிந்தபாடில்லை. எங்கள் கோவில்கள் பல புனரமைக்கப்படுகின்றன. அதே சமயம் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன.

சைவர்களாகப் பிறக்கும் வாய்ப்புடையவர்கள் புண்ணியஞ் செய்தவர்கள் என்ற நம்பிக்கை இக்காலத்திலும் அருகிப் போகவில்லை. இக்காலம் விஞ்ஞான காலம் என்ற கருத்துமட்டுமல்ல, பொருள் தேடுவதே பெரும் நோக்கமென்ற கூட்டத்தினர் அதிகரித்து வரும் காலம்.

''சைவமுதலா மளவில் சமயமும் வகுத்து'' என்கிருர் தாயுமானவர். சைவம் ஒரு மதம் அல்ல, மதத்தால் வரும் கேடுகளை நம் கண்முன் காண்கின்றேம். சைவம் ஒரு சமயம் மட்டுமல்ல, எல்லாச் சமயங்களுக்கும் முதன்மை பெற்றது என்பதால் முதலாம் எனக் குறித்தார்.

## சிவநெறி

இன்று சமய சமரசம் பேசுபவர்கள் ''எல்லாம் ஒன்று'' எனச் சொல்வது வெறும் புளுகென்றே கொள்ள வேண்டும். எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மொழிகளுக்கும் அடிப்படை இலட்சியம் ஒன்று என்பதை ஒத்துக் கொள்ளலாம். ஆனுல் அவற்றை அணுகும் முறைகளிலேதான் வேறுபாடு. இந்த வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. வளர்ச்சியின் படிமுறைகள் எனலாம்.

காலத்திற்கு காலம் நெறிகள் வளர்ந்து வருகின்றன. ஆயினும் தத்துவ வளர்ச்சியிலும் தத்துவ பார்வையிலும் தமிழ் மக்களின் சைவசித்தாந்த நெறி உயிர்ப்புடையதாக விளங்குவதை உலகம் ஏற்றுக் கொள்கிறது.

சாதாரண மக்களின் சமுதாய உணர்வை வளம்படுத்தி வந்த சித்தாந்தச் சைவ நெறி, விஞ்ஞானம் வேகமாய் வளரும் இன்றைய உலகின் அறிவியல் அடிப்படையிலும் சிறந்த நெறியாக விளங்கவேண்டிய கட்டாயம் தெளிவாகும்.

## கோயில்

சைவ வாழ்வுக்கு அத்திவாரமானது கோயில் வழிபாடு. ஆங்கிலக் கவிஞன் டெனிஸ் ''உலகோர் கனவிலும் பெறமுடியாத மிகுநலன்கள் பலவற்றைப் பிரார்த்தனை கொண்டு வந்து சேர்க்கும்'' என்முர்.

தமிழ் மக்களின் சமுதாய வாழ்வின் உயிர் நிலையம் திருக்கோயில். கடவுளைக் கண்ணுக்கினிய பொருளாகக் கொண்டு திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர் நம் முன்னேர். கோயிலில் நடக்கும் பூசையும் வழிபாட்டுக் கிரியைகள், விழாக்கள் அனைத்தும் இன்றைய ''பகுத்தறிவாளர்'' படித்து அறிந்து போற்றத் தக்கவை; காரணகாரிய ரீதியில் அமைந்தவை.

தம்முடைய சிந்தனையைக் கருத்தைப் புலப்படுத்த, மற்றவர்களுக்கு உணர்த்த, தம்முடைய உணர்வை நிலைநிறுத்திக் கொள்ளச் சின்னங்கள், கிரியைகள், விழாக்கள் பெரிதும் துணை செய்யுமென்பதை மீண்டும் நிலைநாட்டச் சமூகத் தொண்டர்கள் சமுதாயத் தொண்டர்களாகச் செயற்படவேண்டும்.

சமயம் இல்லாத சமுதாயம் குருடு. சமுதாயம் சிறப்புறச் சமயம் நொண்டியென்பதை நாம் உணரும் காலம் வந்துவிட்டது. உதயத்துக்கு முன் செறிந்திருக்கும் காரிருளில் நாம் வாழ்கின்றேம்.

பண்டைய கோயில்கள் பல நூர்ந்து போன விளக்குப்போலவும், சில தேடுவாரற்ற நிலையிலிலும் காணப்படுவது எங்கள் சமுதாயத்தின் சாபக்கேடு.

கல்வியின்றி, தொழிலின்றி, வறுமையில் வாழும் நிர்ப்பந்தம் எங்கள் சமுதாயத்தை நெருக்கிக்கொண்டிருக்கும் போது நாம் முன்னேறும் வழி, திரும்பிப் பார்த்தால் தெளிவுறும்.

தூயவாழ்வுக்கு சகோதரத்துவம் என்ற அடிப்படையில் உருவாகும் மனிதாபிமானத்துக்கு வித்திடவல்ல திருக்கோயில்கள் அவற்றைச் சூழ்ந்திருக்கும் மக்கள் கூட்டத்துக்கு எழுச்சி அளிக்கவேண்டும்.

இன்றைய மாணவ உலகம் திரண்டு தொண்டர் படையாக மாற வேண்டும். சைவ இளைஞர் சைவ இளம் பெண்கள் இன்று தேவைப்படும் சமுதாயப்புரட்சிக்கு முதுகெலும்பு போன்றவர்கள். இதனை இன்று பறைசாற்றுவது தெல்லிப்பழை துர்க்காபுரம்; இங்கு உருவெடுத்திருக்கும் சமுதாயத் தொண்டு எங்கள் நாட்டில் தமிழ் கூறும் பகுதிகளின் மூலைமுடக்கெங்கும் பரவ வேண்டும். இதுவே சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரிக்கு சைவ உலகம் எடுக்கும் மணிவிழாவின் சிறந்த அம்சமாகும்.

ந. சபாரத்தினம், B.A.
முன்னைநாள் அதிபர்,
யாழ். இந்துக்கல்லூரி.

# பகுதி I

# சிவத்தமிழ்ச் செல்வியின் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும்

# திருமுருக அவதாரம் அருந்தமிழின் அவதாரம்

முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் தமிழ்க் கடவுள் முருகன்தா னென்று செந்தமிழ்ச் சான்றோர்கள் கூறு வார்கள். அவ்வாறு கூறுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள. அந்த ஆதாரங்களின்படி, தமிழே முருகன், முருகனே தமிழ் எனவும் கூறலாம்.

முருகு என்ற சொல்லில் தமிழ் மொழி யில் உள்ள மூன்று இன எழுத்துக்களான வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகி யன உண்டு. ஒவ்வோரினத்திலும் உள்ள ஆறு எழுத்துக்கள் முருகனுக்குள்ள ஆறு முகங்களையும் குறிக்கும். முக்கண்ணனுகிய சிவனே சரவணபவனுக மூன்று கண்கள் வீதம், ஆறுமுகத்திற்கும் கண் கள் பதினெட்டு ஆகும். இவையே தமிழில் உள்ள பதினெட்டு மெய் எழுத்துக்களாக வடிவெடுத்துள்ளன. ஆறுமுகத்திற்கும் கரங் கள் பன்னிரண்டு போலத் தமிழில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு உள்ளன. எனவே தமிழ்தான் முருக அவதாரமாகவும், முருகன் தான் தமிழ் அவதாரமாகவும் இவ்வுலகில் வடிவெடுத்தன.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இந்த நான்கு திசைகளுக்குள் கோணத் திசைகள் ஒடுங்க எஞ்சி நிற்பது மேல், கீழ் என்ற விண்ணும் மண்ணுந்தான். எனவே நான்கு பெருந் திசைகளோடு மேல்–கீழ் என்ற இரு திசைகளும் சேர ஆறு திசைகள் ஆகின்றன. இந்த ஆறு திசைகளும் முருகனின் ஆறு முகங்கள் என்று நாம் கூறுவதால் அகிலம் முழுவதற்கும் முருகன் உரியவன் என்ற கருத்துப் புலனுகின்றது. பதினுறு கோண மும் முட்டித் ததும்பி எழுந்த சோதியின் அவதாரமல்லவா முருகன்! எனவே, முருக னின் அருளும், கருணையும், பார்வையும் படாத இடமே இல்லை எனலாம்.

'அசுரர்களை அடக்க உம்மைப்போல் ஒரு மகனை நீர் தந்தருளவேண்டும்' எனத் தேவர் கள் சிவபெருமானை வேண்டினுர்கள். அப் போது தேவர்களைக் காக்க முருகன் தேவையெனச் சிவன் நினைத்தார். அந்த நினைப்பே அருவமாக—உருவமில்லாத சோதி தான் முருகனுகப் பிறந்தது. இந்தச் சோதியே பின்னர் உருவமாக—முருகனுக வடிவெடுத்தது. சிவனின் நெற்றிக்கண்களி லிருந்து தீப்பிழம்பாகத் தோன்றி ஆறு நெருப்புப்பொறிகளும் காற்றிலே கலந்து, சரவணப் பொய்கையில் வீழ்ந்து தாமரை யிலே திருமுருகனுக அவதாரமெடுத்தது.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களும் முருக சம்பந்தமானவை. தீயாகப் பிறந்து, காற்றிலே கலந்து, ஆகா யத்திலே மிதந்து, சரவணப்பொய்கையென் னும் தண்ணீரிலே தவழ்ந்து, நிலத்தோடு தொடர்புடைய தாமரையிலே மலர்ந்தவ னுகையால் பஞ்சபூதங்களாலும் உருவான வன் திருமுருகப்பெருமான் ஆவார்.

சிவனம்சமே திருமுருகன். அவனுக்கு வேல்வடிவில் வந்த சக்தியும் உண்டு. எனவே சிவமும், சக்தியும் சேர்ந்த ஒரு முழுமை அவதாரமாக விளங்கும் திருமுருகப்பெருமா னுல் அவனியில் ஆகாதது எதுவுமே இருக்க முடியாது. தந்தையையும், தாயையும் சுற்றி வந்து உலகத்துக்கு உள்ளே தானும் அடக்கம் என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்தி யவர் விநாயகர் என்றுல், உலகையே சுற்றி வந்து, தனக்குள் உலகமே ஒடுங்கும் என்ற வன் முருகப் பெருமான்.

ஆண்டவன் நமது தலையின் மேல் எழுது வது மேற்கணக்கு. அந்தக் கணக்கை அவ னுற்கூட மாற்ற முடியாது என்பதற்காகவே அதற்கு விதிவிலக்காகக் கீழ்க்கணக்கு ஒன்று எழுதி வைப்பான். அதில் அவன் இந்தத் தலையெழுத்திற்குரியவன் ஈடுபடும் தெய்வ வழிபாட்டினுல், தலையெழுத்திற் சில மாற் றங்கள் ஏற்படும் என்று எழுதிவைத்திருப் பான். அதனுற் தெய்வத்தை வழிபடுகிற வர்களுக்கு மலைபோல இடர் வந்தாலும் பனிபோல நீங்கிவிடும் என்பர். அதிலும் முருகனை வழிபடுகிறவர்களின் முன்னே எந்தத் தீமையும் வரவே வராது. ஏனெனில் பஞ்சபூதத்திற் பிறந்தவன் சிவனுடைய மறு அவதாரம்—சக்தியினுடைய முழுப்பலத் தையும் பெற்றவன்—ஆனபடியால் அவன் முன்னே எந்தத் துன்பமும் அணுகத் துணி யுமா? "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில" என்ற வள்ளுவப் பெருமான் வாக்கையும் நாம் சிந்திப்போமாக. முருகனைச் சிந்தித்த வர்களுக்கு வினைகள் எல்லாம் சிந்திப் போகும் என்பன அன்பர்களின் அனுபவ வாக்காகும்.

[கோலாலம்பூர் —1976 ஏப்பிரல் 5இல் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்]

# நம்பிவந்தோர்க்கு உதவும் நாயகன் விநாயகன்

விநாயகர் பெருமை பற்றிப் பேசமுடிந்த அளவிற்குத்தான் முடியும். பேசிமுடியுமள விற்கு அவன் பெருமை அடங்காது. தம்பி முருகனுக்கு உதவியதைப் போலவே நம்பிக்கை கொண்டு தொழுவோர்க்குத் தும்பிக்கையான் நிச்சயம் உதவி செய்வான்.

ஞானக் கனி பெறுவதற்காக உலகைச் சுற்றி வந்தவன் முருகன். உலகமே தனது தாயும் தந்தையும் என்ற தத்துவத்தை முருகன் உணர்த்தினன். தன் பெற்றோ ரையே சுற்றி வந்து கனியைப் பெற்றவன் கணபதி. இந்தச் சம்பவத்தால் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை உல கிற்கு எடுத்துக் காட்டியவன் விநாயகன். அதுமட்டுமல்ல, தனது ஐந்து கரங்களில் ஒன்றில் வைத்திருக்கும் இரத்தினக் கலசத் தில் உள்ள நீராற்றான் தனது தாய் தந்தை யரின் பாதங்களைப் பூஜித்தான் என்று புரா ணங் கூறுகின்றது. பெற்றோரிடத்திற் பிள்ளைகள் கொண்டிருக்கவேண்டிய பக்தியை இது நமக்கு உணர்த்துகின்றது.

''குழந்தையும் தெய்வமும் கொண்டா டும் இடத்தில்'' என்பது விநாயகருக்கு மிக வும் பொருந்தும். குழந்தைக்கு மிகவும் பிடித்தது இனிப்புத்தான். விநாயகருக்கும் மிகவும் பிடித்தது இனிப்புத்தான். அதனுற் றன் வாழைப்பழம், கற்கண்டு, கரும்பு, மோதகம் முதலிய இனிப்பான பண்டங் களையே நாம் அவனுக்குப் படைக்கின்றோம். அவ்வளவு ஏன்? பிள்ளையார் என்று குழந்தை யின் பெயர். வேறு எந்தத் தெய்வத்தை யும் பிள்ளையார் என்று அழைக்கின்றோமா? அம்பிகைக்கு மட்டுமன்றி அனைவருக்கும் பிள்ளையாராக விளங்கும் விநாயகப்பெரு மான் கையிலே மோதகம் வைத்துள்ளார். அந்த மோதகத்தில் அருமையான பொருள் நிறைந்து கிடக்கிறது. பருப்பு, தேங்காய்த் துருவல், சர்க்கரை ஆகிய மூன்றையும் மாவால் மறைத்துக் கொண்டிருக்கும் தின் பண்டம் மோதகம். மாவாகிய பாகம் மாயை எனப்படும். பருப்பு எனப்படும் சக்தியும், துருவல் என்கிற புத்தியும், சர்க் கரை என்கிற ஆனந்தமும் மாவாகிய மாயையால் மறைத்து வைக்கப்பட்டிருக் கின்றது. இதனையே அவர் கையிலுள்ள மோதகம் என்கிறோம்.

கணபதிக்கு கரங்கள் ஐந்து ஆகும். ஐந்து கரங்களும் ஐந்தொழிலைக் குறிப்பிடு கின்றன. எனவே ஐந்தொழில் ஆற்றுபவன் விநாயகன் என்பது நமக்குத் தெளிவாகின் றது. ஆற்றல் பெற்றவன் முருகன் என்றால் அறிவைப் பெற்றவன் கணபதி. விக்கினங் களை எல்லாம் தீர்த்து வைப்பதால், விக்னேஸ்வரன் எனப்படுபவனை நாளும் தொழுதால் நமக்கு நலங் கோடி உண்டாகும். இன்னுமொரு தத்துவத்தை விநாயகப் பெருமான் நமக்கு உணர்த்துகின்றார். விநா யகன் என்றால் தனக்குமேல் ஒரு நாயகன் இல்லாதவன் என்று பொருள். ஆனைமுக னுக விநாயகப் பெருமானை நாம் வழிபடு கின்றோம். ஆனைமுகத்தவன் தன் ஒரு கையில் அங்குசம் தரித்திருக்கின்றார். உலகியலில் ஆனையை அடக்கும் அங்குசம் பாகன் கையிற் றன் உண்டு. அடங்குவது யானை, அடக்கு வது பாகன். ஆனல் விநாயகப் பெருமான் அடங்குவதும், அடக்குவதும் தானே என்ற உண்மையைப் பக்தர்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கிறார். எனவே விநாயக வணக் கம் மன அடக்கத்தைக் குறிக்கொண் டுள்ளது.

'' அடக்கம் அமரருள் உய்க்கும் '' என் பது வள்ளுவம்.

[செந்தூரில் பரஞ்சோதி விநாயகர் கோயிலில் 1976 ஏப்பிரல் 6ஆந் திகதி ஆற்றிய சொற்பொழிவு.]

# புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்தமைந்த நூல்
# திருமந்திரம்

''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்று நான்காம் நூற்றாண்டிலேயே சீர்திருத்தமான—புரட்சிகரமான கருத்தைக் கூறிய நூல் திருமந்திரமாகும். அது தோத்திர நூல்—சாத்திர நூல் எனப்படுவதை விட வாழ்க்கை நூல் எனக் கூறலே பொருத்தமும் உண்மையும் ஆகும்.

திருக்குறளிற்கும், திருமந்திரத்திற்கும் ஒரே ஒரு வேறுபாடுண்டு. திருக்குறள் அறம், பொருள், இன்பம் மூன்றினையும் முன் வைத்து வீட்டை மறை பொருளாகக் கூறுகின்றது. திருமந்திரமே வீடு பெறுதலை முதன்மையாக வைத்து அறம், பொருள், இன்பத்தை மறை பொருளாகக் கூறுகிறது. எனவேதான் திருக்குறளை வாழ்க்கை நூல் எனக் கூறும் நாம், திருமந்திரத்தையும் வாழ்க்கை நூல் என்றே கூற வேண்டியவர்களாகிறோம்.

அறிவுள்ள மனிதர் வாயிலகப்பட்ட மந்திரங்கள் பல அரிய சக்திகளையும் உத்திகளையும் கொடுக்கும். ஆனால் அறிவில்லாதவர்களிடம் அகப்பட்ட மந்திரங்களோ ஆபாசக் களஞ்சியங்களாக மாறிவிடும். பெரும்பாலான சித்தர்கள் இன்றுஞ்சரி, அன்றுஞ்சரி தங்கள் மந்திரங்களைத் தீமைகளுக்கோ, தன்னலத்திற்கோ பயன்படுத்தியிருப்பதை நாம் காண முடியும். ஆனால் திருமூலர் என்னும் சித்தர் பொய்யுணர்வு பெற்ற சித்தர்களினின்றும் வேறுபட்டு மெய்யுணர்வைப் பெற்ற சித்தராக விளங்கி இருக்கிறார். அதனாற்றான் அவர் ஆக்கியருளிய அருமந்திரமாம் திருமந்திரம் அன்று மட்டுமன்றி என்றும் பொருந்தும் கருத்துக்களைக் கூறுவதாக அமைந்துள்ளது.

ஐம்புலனை அடக்குங்கள், அடக்குங்கள் என்று தான் அறநூல்கள் பல வலியுறுத்துகின்றன. ஆனால் திருமூலர் ஐம்புலனை அடக்க வேண்டாம் எனத் திருமந்திரத்தில் கூறுகிறார். அவர் அதற்குச் சொல்லும் விளக்கம் மிகவும் அற்புதமானது. ஐம்புலனை அடக்குவதற்காக ஆண்டவன் எம்மைப் படைத்தான்? ஒரு மனித உடம்பில் இயல்பாக உள்ள உணர்ச்சிகளை அடக்குவது முறையா? இஃது இறைவனுக்குத் தெரியாதா? இறைவன் நமக்கு ஐம்புலனை அடக்குவதற்காக ஐம்பொறிகளைத் தரவில்லை அவற்றை நேரிய வழியில் பயன்படுத்தி அவை வாயிலாக நல்லறிவைப் பெறவே படைத்துள்ளான். ஐம்பொறிகளையும் அநுபவிப்பது எப்படி? என்பதிற்றான் திருமூலர். ஆணித்தரமான விளக்கத்தைக் கண்டிப்புடன் கூறுகிறார்.

நல்ல அனுபவங்களில் ஐம்புலனைத் திருப்பிவிடல் வேண்டும் என்பதுதான் திருமூலர் மந்திர வாக்கு. நல்ல அநுபவங்கள் பல உள. அவற்றுள் தலைமையானது என்றுமே இறவாத இன்ப அனுபவமாகும். ஐம்புலனையும் இறைவனை அனுபவிக்கும் வழியில் திசை திருப்பி விட்டால் மானிடப் பிறவி மிகவும் பேறு பெற்ற பிறவியாக அமைந்துவிடும். நிலையற்ற நமது உடம்பை மிகவும் ஓம்புதல் வேண்டும் என்கிறது வாழ்க்கை நூலாகிய திருமந்திரம்.

**''உடம்பினை நான் இழுக்கென்று இருந்தேன்''.**

உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டதால் உடம்பினை நான் இன்று ஓம்புகிறேன், என்று கூறும் திருமூலர் உடம்பில் இறைவன் குடிகொண்டுள்ளான். ஆகவே உடம்பைப் பேணிக் காத்துக் கொள்ளுங்கள் என்று நமக்கு நல்வழி காட்டுகின்றார்.

இருட்டறை மூலையில் இருந்த கிழவி, குருட்டுக் கிழவனைக் கூடக் கருதி, குருட்டினை விளக்கி, குணம்பல காட்டி மருட்டியவனை மணம் புரிந்தனளே—இது திருமந்திரத்தில் ஒரு மந்திர வாசகமாகும். மேலோட்டமாகப் பார்த்தால் இந்த மந்திரத்தின் பொருள் ஏதோ வேடிக்கைக் கதை மாதிரித் தோன்றுகிறது. ஆனால் ஆழ்ந்து அதன் உட்பொருளை நோக்கும் போது அழியாத ஒரு பேருண்மையை நாம் உணருகின்றோம். கிழவியாகிய சக்தியோகம்,

இருட்டு உலகில் வாழ்கின்ற ஆன்மாவைத் தூய்மைப்படுத்தக் கருதி குருட்டுத் தன்மையாகிய ஆணவத்தையும் வலிகெடச் செய்து மெய்யுணர்வு நல்கி வீடு பேறளிக்கின்றது. இப்பொருளைத்தான் திருமந்திரம் அருமந்திரமாக நமக்கு உணர்த்துகிறது.

சக்தி யென்னும் யோக நிலையைப் பின் பற்றினால் இத்தகைய நன்மை விளையும். அவ்வாறின்றி உலக ஆசாபாசங்களில் அதிகமாக உழன்று கொண்டிருந்தால் அடையும் கதி என்ன? அதையும் உடைத்து, விரித்து, தெளித்து விளக்குகின்றது திருமந்திரம். ஒருவன் தன் மனைவி செய்து வைத்திருந்த அடிசிலை உண்டான். பின் அந்த மடக் கொடியாளொடு இன்பமும் கொண்டான். இத்தனையும் முடிந்தபின் இடப்பக்கம் சிறிது நோகுது என்றான். சிறிது நேரம் படுக்கையில் படுத்தான். முடிவு..........படுத்தவன் ஒழிந்தே விட்டான். இதனைத் திருமூலர்;

"அடம்பண்ணி வைத்தார் அடிசிலை அயின்றார்
மடக்கொடி யாளொடும் மந்தணம் கொண்டார்
இடப்பக்கம் சிறிது நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே".

என்று கூறுகின்றார்.

"தானுண்டு; சோறுண்டு; தன் வீடுண்டு!" என்று வாழ்ந்தே பழகினவர்களின் கதியைப் பார்த்தீர்களா? இறைவன் நம்மை ஆட்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்? அவமே ஒழிந்தார் என்னும் ஈனச் சொல் வாரா வண்ணம் காத்துக் கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன?

தாய் ஒருத்தி ஒரு பொருளைத் தான் பெறும் பொழுது, அடையும் மகிழ்ச்சியை விடத் தன் பிள்ளை பெறும் பொழுது அடையும் மகிழ்ச்சி அளப்பரியது. அதைப் போல் நாம் இறைவனுக்குக் கொடுக்க நினைப்பதை யெல்லாம், இறைவன் உறையும் இதயங்களைக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு வழங்கினால், அஃது இறைவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும். இவ்வாறு திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

[கோலாலம்பூர் சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தில் 1977 மார்ச் 26இல் ஆற்றிய சொற்பொழிவு]

✳

"வாழ்க்கை என்பதே ஆடல்மயம். இறைவன் நாம், நாம் என்று ஆடுகிறான். நாமோ, நான் நான் என்றே ஆடுகிறோம். அவனுடைய ஆட்டம் நின்றுவிட்டால், நம்முடைய ஆட்டமும் நின்றுவிடும்."

* * *

"அறிவியலில் தோன்றியதே சமயம். அறிவுப்பசி கொண்டலையும் அறிவியல் அறிஞரும் முடிவுப்பசி எடுக்கும்போது ஒடுங்கிவிடுவர்."

* * *

"சிற்றிடையாள் வள்ளி தாம் வசை பாடிய வித்தகனே, வேலன் என்று அறியும் போது அவனே தன்னை ஆட்கொள்ள வந்த தெய்வம் என்று அறிந்து அவனுள் ஒன்றுகிறாள். வள்ளி என்னும் உயிர் இறுதியில் ஆண்டவனை அடைந்துவிடுகிறது.

# வள்ளி திருமணம்

''சாகா வரம்பெற்ற சதுர்மறையோரின்
சமயக் கருத்துக்கள்
புனைந்துரைகூறும் புராணக் கூற்றுக்கள் என்று
புறக்கணித்த தமிழர் .
அதிநவீன காலத்திற்கும் அதற்கப்பாலும்
அவைபொருந்தி நிற்கும் என்பதை
அறிந்து உணர மாட்டார்களா?''

**பெ**ரியார்களின் கருத்தோவியங்கள் பொய்ப்புனை சுருட்டுக்களை மையமாகக் கொண்ட புராணக் கதைகள் என்று தமிழர்களாகிய நாம் அவைகளைப் புறக் கணித்து விட்டோம். அவைகள் அரும் பெரும் தத்துவங்களைக் கூறும் ஞானக் கரு வூலங்கள் என்பதையும் நாம் கருத்திற் கொள்ள மறந்து விட்டோம்.

தத்துவங்கள் உள்ளத்தில் உணர்த்தப் படுவதற்குக் கதைகளாகச் சித்தரிக்கப்பட்டி ருத்தல் கூடும். ஆயினும் அக்கதைகளினின்று எழும் பேரின்ப இலக்கிய ஆதாரங்கள் எவ ராலும் மறுத்துக் கூற முடியாததொன்று. கந்தபுராணத்தில் உள்ள பொருள் எந்தப் புராணத்திலும் இல்லை. ஏனெனில் அஃது எம் சொந்தப் புராணம் என்பர் தத்துவ முணர்ந்த சான்றோர்கள்.

கந்தபுராணத்தை எழுதிய கச்சியப்பர் முதலான சதுர்மறையோர் அமைத்த திரு மறை, திருமுறைகள் எக்காலத்திலும் வாழ்க் கைக்கு இன்றியமையாத தெய்வீகத் திரு நூல்களாக அமைந்துள்ளவை என்றும், நாம் தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும்.

தினைப்புனமே நெஞ்சு; அங்கு வாழ்ந்த வேடுவரே ஐம்புலன்கள்; அதைக் காத்து நின்ற வள்ளியே உயிர்.

அந்தத் தினைப்புனம் என்ற நெஞ்சில் உறைந்திருந்த வள்ளியென்னும் உயிரை, ஐம்புலன்கள் எனும் வேடுவர் கூட்டம் சிறைப்படுத்தி வதைத்ததினின்றும் ஆட் கொள்ள ஆண்டவன் கரந்த வடிவில் வேடு வக் கோலம் பூண்டும் நரையுருத் தாங்கி யும் அருள் புரிந்ததை கந்தபுராணம் கனிச் சுவையுடன் தித்திக்கத் தித்திக்கத் தனி யெடுத்துரைக்கின்றது. ஆண்டவனின் திரு விளையாடலை எவர்தான் முன்கூட்டி அறிந் துணர முடியும்?

காட்டு யானையைப் பிடிக்க எவ்வாறு ஒரு பழகிய யானை உபயோகப்படுகின்ற தோ அவ்வாறே வேடுவக் கூட்டத்தி லிருந்து வள்ளியை மணம்புரிய முருகன் வேடுவவேடம் பூண்டார். வாலிப வேடுவ வேடம் பூண்டு வள்ளியின் கண்ணிலேபட, ''மானைக் காணேன்'' என்று கூறி வள்ளி முன் நின்று, அவள் கனிமொழிகளைப் பருகு வார் போன்று காதன் மொழி பகர்ந்து விளையாடல் புரிந்தார். இத்திருக் காட்சி யைக் கச்சியப்பர் கனிரசம் ததும்பும் தேனினு மினிய கவிகளால் கற்பார் உள்ளம் கடைத் தேறப் பாடியுள்ளார்.

தொண்டுதொடு கிழம் காதல் மொழி பேசுவதைச் செவியுற்ற வள்ளி சினம் பொங்கக் கண்தெறிக்கக் கொடுமொழி பகர் கின்றாள். என்ன பித்துக் கொண்டாற்போல் பிதற்றுகின்றீர்? என்கிறாள் கிழக்கோலம் பூண்ட வேலனிடம் வள்ளி. ''தூய வெள்ளைச் சங்கு நிறங் கொண்ட நரைத் தலைப் பெரியவரே! தகுமோ நீர் விடுக்கும் தகாத வார்த்தைகள்!'' என்று ஐயனை, நரைத் தலையனென்றும் பழிக்கிறாள். ஆட்கொள்ள வந்த ஐயனை அறியாமை மூட ஆத்திரம் பொங்கி எழுகின்றது. முருகன் அநுபவப் பொருள். அநுபவத்தை அநுபவத்தாற்றான் அநுபவிக்க முடியும். சொல்ல, எழுத, வா சிக்க, நினைக்க முடியாதது எதுவோ அது தான் அநுபவம். அநுபவம்தான் முருகன்.

அநுபவம் இன்னும் தலைப்படாத வள்ளி யம்மை கரந்த வடிவில் கிழக்கோலம் பூண்ட முருக வேடனைப் பார்த்து, அச்சமும், கோ பமும் கொண்டு, ''சங்கு நிறமான தூய வெள்ளையைக் கையாண்டு படைக்கப்பட்ட வெண் கூந்தலுள்ளானே! நீ என்ன நீ? என்ன வார்த்தை பேசினாய்?'' எனக் கொடு

சொல் வழங்கியது அவள் அநுபவத்தின் தலை வாசலில் அடிவைக்கிறாள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

தினைப்புனம் என்ற நெஞ்சில் உறைந்து ஒட்டிக் கிடக்கும் வள்ளியென்னும் உயிரை அலைத்துக் கொண்டிருக்கும் வேடுவர் என்னும் ஐம்புலக் கட்டுப்பாட்டிலிருந்து பிரிக்க, வள்ளியின் மனதில் அச்சத்தைத் தோற்றுவிக்கத் தன் அண்ணனாகிய ஐங் கரனை நினைத்து முருகவேடுவன் 'யானை யானை' என அழைக்கிறான். ஐங்கரனும் தம்பிக்கு உதவியளிக்கக் காட்டுயானைக் கோலம் பூண்டு பிளிற்றொலியுடன் தோன்றிப் பயமுறுத்தவே அப்பொற்கொடியாள், 'ஆ ஆ! ஆனை! ஆனை!' என்று அருகில் நின்ற ஆண்டவனாகிய முருக வேடனை அரவணைத் துக் கொள்கிறாள். சிற்றிடையாள் தான் வசைபாடிய முருகவேடனைப் பார்த்து, 'வித்தகனே! என் வேல்விழி காண விழைந்த வேலன் நீயே! என்னை ஆட்கொள்ள வந்த வடிவேலன் நீயே!' என அகங் குழைந்து அன்புருகி ஆராவின்பத்தில் திளைத்தாள். முருகனுள் ஒன்றாகி பகரொணா அநுபவ மாகின்றாள். இதுவே வள்ளி திருமணத்தின் தத்துவமாகும்.

[சிங்கப்பூர் — தேங்ரோடு தண்டாயுத பாணி ஆலயத்தில் 1977 ஏப்பிரல் 26 இல் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.]

✻

'' முருகனும் வேலும் ஒன்றே.'' ''வெல்'' என்ற அடிச் சொல் நீண்டு, ''வேல்'' என்று ஆகியது. அதனால் வேல் என்றால் வெற்றி என்பது பொருள்.''

* * *

'' அல்லல்கள் யாவும் அறியாமையால் விளைகின்றன. அத்தகைய அறியாமையைப் போக்க வல்லது திருவாசகத் தேன்.''

* * *

'' வண்டு பல்வேறு மலர்களிலிருந்து தேனை எடுப்பது போல் வேதாகம உபநிடதங்களி லிருந்து வாதவூரராகிய வண்டு திருவாசகமாகிய தேனை எடுத்து நமக்கு வழங்கி அரு ளியது.''

# முருகனும் வேலும்

நன்மைக்கும் தீமைக்கும் இடையே எப்போதும் போட்டி யிருந்துகொண்டே யிருக்கும். ஆனால் அப் போட்டியில் இறுதியாக நன்மைதான் வெற்றியடையும் என்பதை எல்லாரும் உணர்வர். ஆனபடியால் நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ என்றும் நல்லவற்றையே நினைக்க வேண்டும்; நல்லவற்றையே பேச வேண்டும்; நல்லவற்றையே நாட வேண்டும்; பரந்த சொல்—பரந்த மனப்பான்மை வேண்டும். இப்பாங்கு எம்முள் நிலைக்க வேண்டுமானால் ஒருவனாகிய இறைவனிடம் ஒன்றியிருந்து வாழும் பழக்கத்தை இடைவிடாது நாம் மேற்கொள்ள வேண்டும். இதனால் என்றும் நல்லவனே வெற்றி பெறுவான் என்பது திண்ணம். இவ்வாறு நமது புராதன புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

நன்மை என்றும் வெற்றிபெறும் என்னும் உண்மையை தன்னை நாடும் அன்பர்கள் உள்ளத்து உணரும் படியாக முருகப் பெருமான் திருக்கரத்தில் வேலைத்தாங்கி வைத்திருக்கிறான். அடியார்களும் "வேல் வேல்! வெற்றி வேல்! வீர வேல்! சூரவேல்!" என நாவாரத் துதித்து நாடரும் நன்மைகளையும் சித்திகளையும் பெறுகின்றனர். ஞான வேலை வழிபடுகின்றவர்கள் முருகனையே வழிபட்டவராகின்றனர். முருகன் முன்னிலையில் தலையிற் கரங்குவித்து அன்பர்கள் மனம் ஒன்றும் போது அவர்கள் முருகன் கைவேல் ஆகின்றனர்; முருகனும் முன்வந்து அவர்களை ஆட்கொள்ளுகின்றான்.

வெல் என்ற வேர்ச்சொல் முதனீண்டு வேல் என்று ஆகியது. அதனால் வேல் என்றால் வெற்றி என்ற பொருள். நமது வாழ்வில் இருவகைப் பகைவர்களை நாம் காணலாம். வெளிப்படையான பகைவர்கள் ஒருவகையினர். இவர்களை நாம் ஒருவாறு வென்றுவிடலாம். நமக்குள்ளே மறைந்து நிற்கும் பகைவர்கள் மற்றொரு வகையினர். நம்முள் நிறங்காட்டாது கரந்து நிற்கும் ஐம்புலப் பகைவர்களே இவர்கள். இவர்களை வெற்றி கொள்ள நம் உள்ளே ஒருவேல் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வேலுக்கு ஞானம் என்று பெயர். ஞானம் என்னும் விளக்கை முன்வைத்து நாம் வாழ்க்கையை நடாத்திச் சென்றால் எந்த இருளையும் முக்கியமாக எமது அகவிருளையும் நம்மாற் கடக்க முடியும். ஞானம் என்பது இறைவனை அறியும் அறிவு. அறிவை அறிவால் அறிந்துணர்ந்து அறிவாய் நின்றால் அகப் பகைவரால் நிகழும் ஆரிருள் அழிந்தொழிந்து விடும்.

எமது ஞானத்தையே முருகன் திருக்கரம் தாங்கி நிற்கிறது. இதனால் முருகன் திருக்கை வேலுக்குத் தனிவேல் என்ற சிறப்புப் பெயரை அடியார்கள் வழங்குகின்றார்கள். மற்றவர்களை அழிக்கும் கொடிய வேல்களினின்றும் இதனைப் பிரித்து தனிவேல் என்றழைப்பதில் ஒரு தனிச் சிறப்பு தனி வேலுக்கு அமைவதை நாம் உணரலாம். முருகன் திருக்கைத் தனிவேல் கொடுமையைத்தான் தீய்க்குமேயன்றி உயிர்களை வதைக்காது. அறிவூட்டி அருளூட்டி ஆனந்தப் படுத்தும். வேல்தாங்கி நிற்கும் வேலன் எம் வாழ்வின் வழிகாட்டி. பேரா வியற்கைப் பெரு வாழ்வளிக்கும் பெருமான். வேல் தாங்கி நிற்கும் வேலனை நாம் வழிபட்டுய்வோமாக.

*[கோலாலம்பூர் — செந்தூல் ஸ்ரீதெண்டாயுதபாணி கோவிலில் 1977 ஏப்பிரல் 13ஆம் நாள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்]*

# வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்

**சைவசித்தாந்தம் கனிச்சாறு !**
**குழந்தைகள்கூடப் பருக முடியும் !**
**திருமுறைகளைப் பயின்று மயக்கம் தெளிவீர் !**

எமது வாழ்வு திடம்பட அமைய வேண்டுமாயின் எமது பாரம்பரியக் கொள்கைகளில் ஆணித்தரமான நம்பிக்கை அமைய வேண்டும். எண்ணிய எண்ணங்கள் திண்மை பெற இந்த அடிப்படை நம்பிக்கை அத்தியாவசியம். இஃதின்றேல் அச்சாணி இல்லாத தேர் போலச் சின்னாபின்னமாய் விடும். வாழ்க்கை நிறைவு பெறாது.

ஒரு சிறிய கதை சொல்ல விரும்புகின்றேன். ஒரு சமயப் பிரசாரகர் கப்பல் ஒன்றில் நடுக்கடலிற் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். திடீரெனப் பெரும்புயல் வீசத் தொடங்கியது. கப்பல் தத்தளித்து ஆடியது. அதைக் கண்டு பயந்த பிரசாரகர் மாலுமியைப் பார்த்து, "இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்" என்று கேட்டார். "பயப்பட வேண்டாம். ஆண்டவன் இருக்கிறார்" என்று மாலுமி பதிலளித்தான். "ஐயையோ? அப்படி என்றால் அது கடைசி நிலையல்லவா?" என்று பிரசாரகர் துடித்தார். மற்றவர்களுக்குச் சமய போதனை செய்யும் பிரசாரகருக்கு அடிப்படை நம்பிக்கை இல்லை. அடிப்படை நம்பிக்கைதான் எண்ணிய எண்ணியாங்கு எய்துவதற்கு இலகுவான வழியாகும். இதனால் வாழ்வும் நிறைவு பெறும்.

எங்கள் வாழ்வகங்களில் எண்ணிக்கையற்ற சங்கங்களும் சமயங்களும் இருக்கின்றன. என்றாலும் பலன் என்னவோ! குறைவுதான். வேதாந்திகள் மாயாவாதத்தையும் நினைக்கிறார்கள். அதனாற்றான் வறட்டு வேதாந்தம் என்னும் பழமொழியும் ஏற்பட்டிருக்கின்றது.

வேதாந்தம் என்பது கனி; சித்தாந்தம் என்பது பிழிந்தெடுத்த சாறு! கனியைத் தோல் வேறு சுளை வேறு விதை வேறு சக்கை வேறாக்கிச் சாறெடுத்துப் பருக ஒரு சிலராற்றான் முடியும். ஆனால் பிழிந்தெடுத்த சாறெனில் முதிர்ந்த வயோதிபர் நோயாளர் குழந்தைகள் கூடச் சிரமமின்றிப் பருகலாம். சுருக்கமாகச் சொன்னால் வேதாந்தத்தையறிவது சிரமம். சைவ சித்தாந்தத்தையறிவது சுலபம். நம்முடைய வாழ்வு ஒரு பிரயாணமாகும். இதில் ஒரு நோக்கம் இருக்கிறது. நோக்கம் இல்லாமல் கருமம் கிடையாது. நம்முடைய பிறவியும் ஒரு நோக்கத்தைக் கொண்டதாகும். வீட்டிலிருந்து வாழ் வாங்கு வாழ் என்று தெளிவுறுத்தி மீட்சியடையச் செய்வது சைவசித்தாந்தமேயாகும்.

சைவ சமயம் காட்டிற்குச் சென்று கடுந் தவம் புரியும்படி போதிக்கவில்லை. கடலிற் தோணி செல்லலாம். ஆனால் தோணிக்குள் கடல் நீர் புகுதல் கூடாது. அப்படி உலகில் நாம் வாழ வேண்டுமேயன்றி உலகம் நம்முள் வாழக் கூடாது. இது சைவ நெறியாகும்.

அவன், நான் என்று வேதாந்தம் கூறுகிறது. அது பலப்பல முத்திகளை வகுத்துக் காட்டுகின்றது. நான்—அவன் என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. இது அத்துவித முத்தியாகும். நம் குறிக்கோளுக்கு ஏற்ற முறையிலானதாகும். இது மானிடப் பிறவியின் நோக்கத்தை அறிந்து அந்நோக்கம் நிறைவேறுகின்ற முறையில் வாழ்வதே சைவ சித்தாந்தமாகும். இதனால் வாழ்க்கை நெறியை இயல்பான வழியில் வகுத்துக் காட்டுவது சைவசித்தாந்தம் என உணரலாம். அரிது அரிது மானிடராகப் பிறத்தலரிது. அதனாற் பெரியோர்கள் நோக்கமில்லா வாழ்வைப் புறக்கணித்தார்கள்.

சைவ சித்தாந்தத்தை முதலாவதாக உணர்த்துவதில் முதனூலாக விளங்குவது சிவஞான போதமாகும். இறைவன் குருவடிவாக வந்து பக்குவவான்மாக்களை ஆட்கொள்ளுவார் என்று சிவஞான போதத்தில் எட்டாவது சூத்திரத்திற் கூறப்படுகிறது.

அரச புத்திரன் ஒருவன் ஒரு வேடர் கூட்டத்துடன் வாழ்ந்து வருகிறான். தான் யார் பிள்ளை என்பது அவனுக்குத் தெரியாது. அவன் பக்குவம் அடையுங் காலத்தில் 'நீ என் பிள்ளை' என்று அந்த அரசன்

அவனை வேடர் கூட்டத்தினின்று மீட்டுச் செல்கிறார். இது ஐம்புலன்களாகிய வேடரிடையே மயங்கி நிற்கும் உயிரை இறைவன் வந்து ஆட்கொள்வதை உட்பொருளாக உடையது. மாணிக்கவாசக சுவாமிகளும் தம்மை இறைவன் ஆட்கொண்ட போது உலகை மறந்து இறைவனை அறிந்து, 'இறைவா, என்னை நான் கண்டு கொண்டேன்' என்று மொழிந்தருளியதை ஒப்பு நோக்கித் தெளியலாம். உயிர் தன் குறிக்கோளை அடையும் முதன்நிலையாகும் இது.

குருவாக வந்து இறைவன் தம்மை ஆட்கொண்டதும் தமது வாக்கின்பணி, நெஞ்சின் பணி, காயத்தின் பணி மூன்றையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு, "சமயவாழ்வு ஒழுக்கத்தை நான் கைவிடேன்" என்று மாணிக்கவாசகர் தம்மை ஒளிநெறியில் நிலைப்படுத்திக் கொண்டார். உள்ளப் பணிக்கு முதலில் பொய்யை நீக்கல் வேண்டும். கள்ள நெஞ்சிற்கு இறைவன் அகப்பட மாட்டான். உள்ளம் ஒன்றுபட வேண்டும். நினைப்பிற்குத்தான் முதலிடம். அதனாற்றான் நாவுக்கரசர் 'நெஞ்சே நீ வா!' என்று தமது நெஞ்சைக் கோயிலுக்கு அழைத்தார். உள்ளத்தை வேறு நினைப்பில் வைத்து நாம் ஆலயத்திற்குச் செல்வதிற் பயனில்லை.

சிவஞான போதத்து 9ஆம், 10ஆம் சூத்திரங்கள் இறையனுபவத்தைக் கூறுகின்றன. உயிர் பக்குவமடைந்து தனது பாரத்தை யெல்லாம் விட்டு மேலே எழுகின்றது. அப்போது அது பழைய அநுபவிப்புக்களை யெல்லாம் நினைத்துப் புதுப் பெருமை பேசுகின்றது. இதற்குத்தான் 'உயிர் விளக்கம்' என்று பெயர்.

சைவ சித்தாந்தம் வாழ்க்கை நெறியாகும். நீ வாழ்வதற்காக நீ வணக்கம் செய்கிறாய். சோற்றை உனக்காக உண்கிறாய். அதே போல் இறைவனையும் உனக்காகவே வணங்குகிறாய் என்பதைச் சைவ சித்தாந்த வாழ்க்கை நெறி தெளிவாக எடுத்து விளக்குகிறது. இது தெளிதல் ஆகும்.

பதினோராவது சூத்திரம் உயிர்கள் அடைந்த பரிபூரண நிலையை உணர்த்துகிறது. சீவன் முத்தர்கள் தாம் காணும் காட்சிகளிலெல்லாம் இறைவனையே காண்கிறார்கள். கருங்கல்லில் கடவுளைக் காண்பவனே ஞானி. அதற்கு உள்ளம் உயர்தல் வேண்டும். "காக்கைச் சிறகினிலே நந்தலாலா, உன்றன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா" என்று பாரதியார் பாடினார். காணும் காட்சிகளிலெல்லாம் அவர் கண்ணனைக் கண்டார். பக்குவமடைந்த உயிர்கள் முத்தி அடைந்த போதிலும் அவற்றிற்கு மற்றுஞ் சில கடமைகள் உள என்று சிவஞானபோதத்துப் பன்னிரண்டாஞ் சூத்திரம் கூறுகின்றது. அவை சிவனடியார்களைப் பேணுவதும், இறைவனுக்கு உருவங் கொடுத்து அலங்கரித்து விழாச் செய்து இரசித்தலும் ஆகும். ஆலயத்திற்கும் உருவ வழிபாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுப்பது சைவசமயம். நாமத்தைக் காட்டி ரூபத்தைக் காட்டுவது சைவசித்தாந்தம். காற்று எங்கும் இருக்கிறது. அப்படியாயிருந்தும் சில வேளைகளில் காற்றின் பயனை அடைய முடியாது தவிக்கிறோம். அதை வாங்கக்கூடிய சக்தி நமக்கில்லை. விசிறியினால் காற்றைப் பெற்று ஆனந்தமடைகிறோம், அதேபோல்தான் கடவுளை வணங்க ஆலயத்திற்குச் செல்லுவதும். இப்போது நாம் பொய்யுணர்வில் தலைப்பட்டு நாமே நம்மைக் கீழ் நிலைக்குக் கொண்டுவருகிறோம். இந்த அவநெறியை மாற்றிச் சிவநெறியில் நின்று உள்ளஞ் சிவக்கத் திருமுறைகளைப் படித்து உணர்ந்து மயக்கந் தெளிய வேண்டும்.

ஆலயம் ஏன்? அர்ச்சனைகள் ஏன்? கல்லுக்குப் பாலாபிடேகம் ஏன்? என்றெல்லாம் நம் நாட்டு இளைஞர்கள் நாத்திகம் பேசும் காலம் இன்றைய நிலையாகும். "கோயிலாவ தேதடா, குளங்களாவ தேதடா, கோயிலும் நமக்குளே, குளங்களும் நமக்குளே" என்ற சித்தர் பாடலைக் கூடச் சித்தத் தெளிவின்றிப் பிதற்றுவதை நாம் கேட்டு மனமுடைகினறோம். இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது தாய்மார்களின் கடமையாகும். சிவனடியார்களின் வரலாற்றைக் கற்பித்து சைவப் பண்புகளைப் புகட்டி தெய்வ நம்பிக்கையையும் சமயப் பற்றையும் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தி அவர்களை நல்லவர்களாக வாழச் செய்ய வேண்டிய பொறுப்பு முக்கியமாகப் பெண்களுக்கே உரியது.

[மலேசியா — சிரம்பான் விவேகானந்தர் மண்டபத்தில் 26-4-1971இல் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்]

# சைவமுந் தமிழும்

இயற்கையில் நின்று இலக்கியம் படைத்த
மேதைகளும்,
பக்தியில் நின்று பாசுரம் பாடிய
பக்தர்களும்,
அடிப்படையில் தமிழர் கருத்திற் கொப்ப
ஒருமைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழும் சைவமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து செயலாற்றி யிருக்கின்றன. சைவத்தையும் தமிழையும் இணைத்துச் சென்றிருக்கும் அமரகவி பாரதியாரைக் குறித்து நாம் நன்கு அறிந்துள்ளோம். ஆனால் அதே வேளையில் தம்மைத் தமிழன் தமிழன் என்று சொல்லிச் சென்றிருக்கின்ற திருநாவுக்கரசு சுவாமிகளை நன்கு புரிந்துகொள்ளவில்லை.

தமிழ் தமிழ் என்று தமிழ் மொழியைத் தற்காத்து நின்ற பல்லவ காலத்துச் சைவ சமயப் பெரியார்கள் அத்தமிழால் வைதும் வாழ்த்தியும் இருக்கிறார்கள். இஃது அவர்களின் அன்பின் மேலீட்டாலும் தமிழ் சமய ஈடுபாட்டினாலும் நிகழ்ந்தன என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பவன் முருகன்' என்ற கருணை வள்ளல் அருணகிரி நாதர் கூறியதை நாம் கருத்திற்கொண்டால் நன்கு விளங்கும்.

பாண்டியர் காலத்து இயற்கையில் நின்று பல இலக்கியங்களைச் சமைத்த இலக்கிய மேதைகளும், பல்லவர் காலத்தில் பக்தியில் நின்று பாசுரம் பாடிய சமயப் பெரியோர்களும் ஒரே குறிக்கோளுடன் தமிழ் ஒன்றேயென அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். தொல்காப்பியம் முதலிய தொல்லிலக்கண நூல்களும், பொய்யடிமையில்லாத புலவர்கள் ஆக்கிய இலக்கிய நூல்களும் சமய நூல்களும் இதற்குப் போதிய சான்றுகள் பகருகின்றன.

இலக்கிய விற்பனர்கள் இயற்கையை ஏதுவாக்கிக் கொண்டிருப்பினும் அதற்கு ஆண்டவனின் அருளைத் தளமாக அமைத்துக் கொண்டனர். தமிழனின் தனித் தெய்வமான முருகனையே தமிழாகவும், தமிழையே முருகனாகவும் இலக்கியம் படைத்த மேதைகளும், பாசுரம் பாடிய பக்தர்களும் எண்ணிப் பார்த்திருக்கின்றனர். தமிழும் தமிழ்ப் பண்பும் தமிழ் இனத்திற்கே உரிய ஒன்று என்று எண்ணாது இருதரப்பாரும் இவை ஆழிசூழ் உலகிற்கே உரியதென்றும் கொண்டிருக்கின்றனர்.

தமிழிற்கு உருகிய அடியவரின் உள்ளமும், அந்த உள்ளத்தெழுந்த இறையுணர்வுப் பாடல்களுமே இனிமையை நல்கின்றன. அதனால் தமிழ் வேறு இறைவன் வேறு என்ற வேறுபாடற்ற ஒருமைப்பாட்டைத் தமிழ் பெறுகின்றது. சுந்தரத் தமிழ் விழைந்த ஆண்டவன் ஒருகணம் தன் அடியார் ஒருவரின் உள்ளத்து நாடோறும் எழுப்பும் சலங்கை ஒலியையே நிறுத்திவிட்டார் என்ற செய்தி பெரிய புராணத்தில் வருகிறது. இன்பம் சொட்டச் சொட்ட தமிழ் செய்த சேக்கிழார் இச்செய்தியை மிக இனிமையாகப் பாகஞ்செய்து வடித்துத் தந்திருக்கிறார்.

வேறு எம்மொழியிலும் மொழியைச் சேர்த்துக் கடவுள் பெயர் கூறுவதில்லை. தமிழ் ஒன்றுதான் தமிழ்க் கடவுள் என அழைப்பதால் தமிழ் வேறு கடவுள் வேறு என்ற பேதம் அற்றுப்போகிறது.

[சிங்கப்பூர் — சவுந் பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் ஆலயத்தில் 1974 ஏப்ரல் 25ஆம் நாள் ஆற்றிய சொற்பொழிவு.]

# சைவம் காத்த மங்கையர்

மூன்றாவது நூற்றாண்டு கால முதல் பதினான்காவது நூற்றாண்டு வரை தனித்து முன்னணி பின்னணியில் நின்று சமயங்காத்த பெண்மணிகளின் வரலாறும் பெருமையும் எடுத்துக் கூறியவர் சோழ நாட்டு முத லமைச்சர் சேக்கிழார் பெருமான்.

சேக்கிழார் பெருமான் முதலமைச்சராக இருந்துவந்த சோழநாட்டிலே அந்நாட்டு மன்னன் சீவகசிந்தாமணிக் காப்பியத்தைத் தினந்தோறும் கற்றுப் போற்றிவந்தபோது சிற்றின்ப ரசமே அக்காப்பியத்தின் பெருகிய பாகமாதலின், அச்சிற்றின்ப நுகர்வை மன்னன் எய்திவிடுவான் என்று கருதி, ''மன்னா, சிற்றின்ப போதைதரும் இந் நூலைக் கற்பது உம்போன்ற மன்னனுக்கு பயன் இல. பேரின்பத்தை நுகர்தலே பொருந்தும்'' எனக் கூறினார். தமது அமைச்சர் கூறும் அறிவுரை கேட்ட மன்னன், ''அப்படியாயின் அம்மாதிரியான ஒரு நூலை நீரே வடித்துத்தாரும்'' எனக் கட்டளை பிறப் பித்தார்.

மன்னவனின் பதிலைக் கேட்ட அமைச்சர் சேக்கிழார் பெருமான் அன்றிருந்து சரியாக ஓராண்டு நிறைவில் 4253 நிகரற்ற பாடல் களைப் புனைந்து பெரிய புராணம் என்னும் வரலாற்று நூலை யாத்தமைத்தார். தமிழ்ப் பெண்கள் மண வாழ்க்கையில் ஈடுபடாது தனித்து நின்றும், மணம்புரிந்துகொண்டு கணவனுக்குப் பின்னணியிலிருந்தும் அவர் களுக்கு முன்னணியிலிருந்தும் அக்காலத்தில் சைவசமய பண்பாடுகளுக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தை பாண்டிமாதேவி, திலகவதியார், காரைக்கால் அம்மையார் ஆகிய மங்கையர் திலகங்கள் தடுத்து நிறுத்திய வரலாற்றைப் பெரிய புராணம் விரித்துரைக்கிறது.

இன்று தமிழரின் பண்பாட்டுக் கலைக் கருவூலம் என்று போற்றப்படும் தஞ்சைப் பெரிய கோவிலை அன்று ராஜராஜ சோழன் எழுப்பக் காரணமானவர், அம்மன்னனின் தமக்கையார் பெரிய குந்தவை தேவியா ராகும். அவ்வாறானதொரு கலைக் கோயிலை எழுப்ப வேண்டுமென்று ராஜராஜ சோழன் கனவிற்கூடக் கருதியதில்லை. தனது அக்கா குந்தவை தேவியாரின் வேண்டுகோளை நிறைவேற்றவே அந்த அரும்பெரும் கலைத் திறனை வெளிப்படுத்தும் பெரிய கோயிலை எழுப்பினான். உலகம் வியக்கும் வண்ணம் உருவாகிய அக்கலைக்கோயிலை எழுப்பக் காரணமாக ஒரு பெண்ணே பின்னணியி லிருந்தார் என்பதை எண்ண மங்கையர் பெருமை மகுட மணிபோல் ஒளிர்வதை நாம் வியக்காமல் இருக்கமுடியாது.

சைவம் காத்த பெண்மணியினரில் கணவனுக்குப் பின்னிருந்து செயற்பட்ட மங்கையர் திலகம் இயற்பகைநாயனாரின் மனைவியை முன் நிறுத்திப் பார்க்கலாம். இயற்பகைநாயனார் இயற்கைக்கு மாறான செயல் ஒன்றைச் செய்தமையால் அவ்வாறு அழைக்கப்பட்டார். இந்த இயற்பகையார் எது கேட்பினும் இல்லை என மறுத்துக் கூறார். அந்தக் கோட்பாட்டையே நியமமாகக் கொண்டிருந்த அவருக்கு ஒரு சோதனை வந் தது. அடியார் ஒருவர் அவரது இல்ல மணுகி, ''இயற்பகையாரே! எனக்கு ஒன்று வேண்டும். இல்லையெனாது உம்மால் அதைத் தர இயலுமோ?'' என வினவினார். அப் போது இயற்பகையார் '' தாங்கள் கேட்பது என்னிடம் இருப்பின் தவறாது தருவேன்'' எனப் பதிலுரைத்தார். ''அவ்வாறாயின், யான் உன் மனைவியை வேண்டி வந்தனன்'' என்றார் அடிகள். செவிமடுத்த இயற்பகை யார் சற்றும் தயங்காது ''மெய்த்தவர்க்கு யான் ஒன்று ஈந்தனன்'' என்று விடை பகர்ந் தார். தனது மனைவியைத் தா எனக் கேட்ட அடியவருக்கு அதைத் தந்தேன் என உடனடி யாக விடைபகர்ந்த இயற்பகையார் தன் மனைவியின் அனுமதிகூடப் பெறாது அவள் கற்பு நெறியால் கணவனுக்கு மாறுபடாள் எனக் கருதி தந்தனன் என்றார். மனைவியை அழைத்து செய்தியைக் கூறினார் இயற்பகை யார். அதற்கு அம்மாதுசிரோமணி கற்பு நெறி தவறாது கணவனே காப்போன் எனச் சுற்றித்திரியும் எனக்கு இந்தச் சோதனையா? என ஆண்டவனை நினைத்து அடியாரின்

பாதங்களில் தொட்டு வணங்குகிறாள். அதன் மூலம் கணவன் கட்டளைக்கு அவர் மனைவி கீழ்ப்படிந்து விட்டதை உணர்த்துகிறார். அடிகள் மனைவியை அழைத்துச் செல்லும்போது இயற்பகையார் ஒருமுறைகூடத் திரும்பிப் பார்க்கவில்லை. ஏனெனில், அவள் இப்போது மாற்றான் மனைவி ஆயிற்றே. இது கண்டு அடிகள் வடிவில் வந்த ஆண்டவன் அப் பெண்ணைத் திரும்பக் கணவனிடம் செல்லுமாறு கட்டளையிட்டு மறைந்தார். இங்கே பொதிந்துகிடக்கும் சைவசமயத் தத்துவம் பண்பாட்டிற்கு மனைவியாகிய பெண்ணே காரணமாகிறாள்.

திலகவதியார் தன் தம்பிக்காகவே கன்னியாக உயிர்வாழ்ந்திருந்தார். தம்பி திருநாவுக்கரசரோ தனது சைவசமயத்தைப் புறக்கணித்துச் சமண சமயத்தைத் தழுவி நின்றார். திலகவதியார் மனம் வெதும்பி ஆண்டவனிடம் முறையிட்டுக் கொள்ளத் திருநாவுக்கரசரும் சூலை நோயினால் பீடிக்கப்படுகிறார். வேறு கதியின்றி வீடு திரும்பும் நாவுக்கரசர் அக்காள் காலில் வீழ்ந்து மன்னிப்புக்கோரி சைவசமயத்துக்கு மீண்டும் திரும்புகிறார். பின்னர் நாவுக்கரசர் 3000 பாடல்களைப் பாடியருளி சைவசமயக் கோட்பாடுகளை நிலைநிறுத்தினார். இவ்வாறு தமிழிற்கும் சைவத்திற்கும் ஒருங்கே பணிபுரிய நாவுக்கரசரின் உடன் பிறப்பான தூண்டு தவ விளக்குத் திலகவதியாரே காரணமானார்.

கணவனுக்கு முன்னின்று சைவம் காத்த பெருமை காரைக்கால் அம்மையாருக்குரியது. இவ் அம்மையாரே சைவம் காத்த மூத்த அம்மையாராவார். கணவனால் தெய்வமெனக் கைவெடுத்துக் கும்பிடப்பட்ட நிலையில் அவனைவிட்டு விடைபெற்றுக்கொண்டு அவனுக்கு முன்னணியில் சென்று பணியாற்றிச் சமயங்காத்த பெண்மணியானார்.

[சிங்கப்பூரில் 1974 ஏப்பிரல் 29ஆம் நாள் ஆற்றிய சொற்பொழிவு]

---

# அறிவியலில் தோன்றியதே சமயம்

''அறிவுப் பசி கொண்டலையும்
அறிவியல் அறிஞரும்
முடிவுப் பசி எடுக்கும்போது
முடங்கி விடுவர்.''

படைப்புக் காலத்து மனிதன் தோன்றி, தான்தோன்றித் தனமாகத் திரிந்தலைந்த போது கண்டதல்ல சமயம். அவன் இயற்கையைப் படிப்படியாக உற்றுணர்ந்து அறிவியலில் காலடி எடுத்து வைத்தபோது அந்த அறிவியலுக்கும் எட்டாத ஒரு பின்னணி, மனிதனின் வாழ்க்கைப் பாதையிலே மின்னொளிபோலத் தோன்றிப் பிணைந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டே சமயங் கண்டான்.

அவ்வாறு தோன்றிய மனிதனின் நவீனக் கருத்துக்களிடையே பிறந்த சமய முறைகளில் அவன் கண்டுணர்ந்த பேருண்மைகள் சாதன வளர்ச்சி குன்றியிருந்த அக் காலத்தில் நிலைபெறவும் தெளிவுறவும் உருவங்கள் சமைத்தான். சமய வழியில் நின்று தான் கண்ட நெறிமுறைகளுக்குக் கட்புலனாகும் வடிவம் தந்த மனிதன் ஒவ்வோருண்மையையும் வெளிப்படுத்த ஒவ்வொரு உருவம் சமைத்தான்.

இயற்கையின் ஆற்றல்களுக்கு ஈடு கொடுக்க முடியாத அக்கால மனிதன், அவ்வாற்றல்களைச் சாந்தப்படுத்த ஒவ்வோர் ஆற்றல்களுக்கும் ஒவ்வொரு வடிவங் கொடுத்து வழிபாட்டு முறைகளையும் மேற்கொண்டதால்தான் பலவுருவ வழிபாடு நமது சமுதாயத்தில் தோன்றியது. அவன் உணர்ந்த உண்மைக் கூறுகளான அறநெறி முறைகளைத் தான் படைத்த உருவங்கள் மூலம் வழிபட்டு வாழ்க்கையைச் சீரமைக்க ஒரு கூறாகக் கொண்டான். அவ்வாறு சமயங்கண்டு அறநெறிமுறைகளைப் பேணும் நாகரிக வாழ்க்கைக்கு முதன்முதலில் அடிகோலியதோடு அதற்கான வழிகளையும் காட்டித்தந்தது தமிழன் கண்ட சமயம்.

அறிவியல் சிந்தித்துச் சிந்தித்துச் சீர்ப்பட்ட மனிதனுடைய மூளையிலிருந்து பிறக்கிறது. கேட்டல், சிந்தித்தல், தெளிதல் வாயிலாக ஒருமைப்பட்ட உள்ளத்தில் இருந்து உதிக்கின்றது உளவியல். மூளையிலிருந்து பிறக்கும் செயற்கூறுகளை உள்ளம் சாட்சியாக இருந்து நன்றெனில் உடன்பட்டும் தீதெனில் மறுத்தும் மனித வாழ்வை வளம்படுத்துகின்றது. மூளையின் வெளிப்பாடான அறிவியலுக்கும் உள்ளத்தின் வெளிப்பாடான உளவியலுக்கும் இடையே இடையறுது நடக்கும் போராட்டமே நாத்திகம் ஆத்திகம் என்ற பெயரைப் பெறுகின்றது. இவற்றின் போராட்டம் எல்லையற்றதாகும்; தினமும் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது.

தலையில் உள்ளவரைதான் மயிருக்கும் சிறப்பு. அதேபோல உயிர் உள்ளவரைதான் உடலுக்குஞ் சிறப்பு. இதை நன்ருகச் சிந்தித்துச் செயலாற்றிய சமயப் பெரியார்கள் தாங்கள் கொண்ட குறிக்கோளை அடைவதில் திண்மை பெற்றவர்களாக விளங்கி அதைச் சாதித்துக் கொண்டார்கள். அவர்கள் கொண்ட திடமான உறுதிப்பாட்டில் ஆயிரம் நாள்கள் உணவருந்தாது தங்கள் உடலைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். உயிர்போகும் தறுவாயிலும் உறுதி தளராதவர்களாக அவர்கள் வாழ்ந்து காட்டினர்.

தன்னிலும் இனியான் ஒருவன் உளன் என்றுணர்ந்த சமயப் பெரியார்கள் வாய்த்த தம் பிறவியை மதித்து மனித்துவம் பெற்றுத் தெய்வ சம்பத்தை வெளிப்படுத்தி, 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருமந்திரத்திற்கொப்ப எம்மையும் வாழவும் வழிப்படவும் வைத்தார்கள். அறிவியலை அன்பியலாக்கிய பெருமை அவர்களுக்கே உண்டு. ஆன்மீகம் தழைக்க அறிவியலை அன்பியலாக்கிய அவர்களை மறவாது மறுக்காது அவரடி நிலைத்து நின்று வாழ்வோமாக.

[சிங்கப்பூர் — சுண்ணும்புக் கம்பம் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் 1974 ஏப்பிரல் 19இல் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்]

---

# மலேஷியா, சிங்கப்பூர் தமிழர்கள் சமயத்தின்மீது காட்டும் ஆர்வம்

மல்லாகத்தை இருப்பிடமாகக் கொண்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமிழுக்கும் சைவசமயத்துக்கும் தமது சொற்பொழிவின் மூலம் அரிய தொண்டாற்றி வருகின்ருர். அவரது மலேஷியா, சிங்கப்பூர் பிரயாணம் பற்றி விசாரித்தபோது மிகுந்த உற்சாகத்தோடும், புன்முறுவலோடும் விடையகர்த்தார். மலேஷியாவிலும் சிங்கப்பூரிலும் உள்ள தமிழ் மக்கள் தமிழிலும் சைவசமயத்திலும் கொண்டுள்ள ஆர்வம் பற்றி அவரது கருத்து என்ன என்று நான் கேட்டபோது அவர் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்.

எனது மலேஷியா சொற்பொழிவு சுற்றுப்பிரயாணத்தில் ஏறக்குறைய 40 கோவில்களைத் தரிசித்தேன். மகாமாரியம்மன் கோவில், கந்தசாமி கோவில், தண்டாயுதபாணி கோவில், பிள்ளையார் கோவில் என்பன அங்கு அதிகம் உண்டு. தமிழ் சைவ மக்கள் பெரும்பாலும் வெள்ளிக்கிழமைகளில் புலால் உண்ணுமல் கோவில் தரிசனம் செய்கிருர்கள். விரதம் அனுட்டானம் ஒரு சிலர் கையாளுகிருர்கள். தாவர போசனமே சதாகாலமும் புசிப்பவரும் இருக்கிருர்கள். 40 வயதிற்கு மேற்பட்டோர் சமய ஈடுபாடு உடையவர்களாய் இருக்கிருர்கள். குழந்தைகள் இளைஞர்கள் சமய வழிபாட்டில் ஈடுபடுவது குறைவு. இருந்தாலும் எல்லா வீடுகளிலும் சுவாமி அறையுண்டு. அந்த அறையை மிகப் புனிதமாக வைத்துக் கொள்கிருர்கள். இவர்களுக்கு வைதீக நம்பிக்கை நிறைய உண்டு. சோதிடம், சாத்திரம், நாள், கோள் என்பவற்றில் முழு நம்பிக்கையுண்டு. அதற்கு பிரீதி, சாந்தி செய்வதுமுண்டு.

**நீங்கள் அங்கு கண்ட புதுமை என்ன?**

சகல போகமும் உண்டு. செல்வம் நிறைந்த நாடாயிருந்தும் இவற்றிலும் மேம்பட்டது அருட்செல்வம் என்ற நம்பிக்கையால் அதனைப் பெற, அறிய ஆவல் படுகின்றனர். கோயில்களில் தூய்மை அதிகம். பிராமணர்களுக்குத் தட்டுப்பாடாகையால் சாதாரண பூசாரிமார்களே பூசை செய்கின்றனர். சில கோவில்களில் பிராமணரும் உண்டு. புலால் உண்ணுமல் சிலர் தாவர போசன உணவுடையோராக வாழ்கின்றனர். தெருக்களிலோ வெளியிடங்களிலோ எது வித கஞ்சல் குப்பைகளையும் காணமுடியாது. கஞ்சல் குப்பை போட்டவர்களுக்கு 10 வெள்ளி குற்றம். இது சம்பந்தமான வழக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் நடைபெறும். அங்கு பிச்சைக்காரர்கள் மிகமிகக் குறைவு. அவர்களை நான் காணமுடியவில்லை. பிச்சை எடுப்பது கேவலம் என்று எண்ணித் தொழில் செய்து பிழைக்கிறுர்கள் போலும் என்ருர்.

**யாழ்ப்பாணத்து மக்களோடு ஒப்பிடுகையில் அவர்கள் காட்டும் ஆர்வம் என்ன?**

மலேஷியா, சிங்கப்பூரில் வாழ்கின்ற யாழ் மக்கள் தமது தாய்நாடாகிய யாழ்ப்பாணத்தில் பெரும் பற்றுடையவர்களாய் இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் தோன்றிய நாவலர், யோகர் சுவாமிகள் போன்ற பெரியார்களுடைய குருபூசைத் தினங்களை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிருர்கள். சமயச் சொற்பொழிவுகளை மிக ஆர்வத்துடனும் பக்தியுடனும் கேட்கிருர்கள். நான் அங்கு தங்கி நின்ற 24 நாட்களிலும் 27 கூட்டங்களில் சொற்பொழிவாற்றியுள்ளேன். அதிகமானேர் என்னுடைய சொற்பொழிவில் விளங்காத பகுதிகளைக் குறித்து வைத்து நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமோ அதற்கு என்னிடம் விளக்கம் கேட்டுச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்கிருர்கள். அவர்களுடைய இந்த ஆர்வத்தைக் கண்டு மிக ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. எத்தனையோ மக்கள் ஏன் மாணவர்கள் கூட தமது படிப்பில் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை. ஒரு காதால் வாங்கி மற்றக் காதால் விட்டு விட்டுச் சென்றுவிடுகிருர்கள். அங்கு இன்னொரு புதுமை என்னவென்ருல் எல்லா ஆலயங்களையும் அடுத்து ஒரு விசாலமான மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. இவை கல்யாண மண்டபம் என்றும், கலா மண்டபம் என்றும் அழைக்கப்படும். இந்த மண்டபங்களிலேதான் கூட்டங்களும் விவாகங்களும் நடைபெறும். இந்த ஒழுங்கு கோவில்களின் புனிதத்தைப் போற்றிக் காப்பதாக அமைகிறது. இந்த ஒழுங்குமுறை நம் நாட்டிலும் இருந்தால் மிக விசேஷமாக இருக்கும்.

**இந்தப் பிரயாணம் உங்களுக்கு ஒரு புதிய அனுபவம் என்று நினைக்கிறேன்.**

ஆம், மலேஷியா நாட்டில் உள்ள ஏறக்குறைய 15 பட்டினங்களில் நான் சொற்பொழிவு செய்தேன். ஏறக்குறைய உள்நாட்டிற்குள் 2000 மைல் பிரயாணம் செய்துள்ளேன். சமயத்தைப் பேணுவதற்குரிய ஒரு வாய்ப்பை மக்களுக்குச் சொற்பொழிவுகள் மூலம் கொடுக்க முடிந்தது. அதேநேரத்தில் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளவேண்டிய ஆலயத்தூய்மை, நேர் ஒழுங்கு, சைவ சமய உண்மைகளை மேலும் கற்றுத் தேர்ந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம், பயபக்தி ஆகியவற்றைப் பெற்றேன்.

**புதுவருட தினத்தை அவர்கள் கொண்டாடும் முறைபற்றிச் சிறிது சொல்லமுடியுமா?**

புதுவருடத்துக்கு முதல் இரவு வீடுகளைக் கழுவித் தூய்மை செய்து வாயிலில் மாவிலை கட்டிய கும்பம் வைத்து குத்து விளக்கு ஏற்றுகின்றனர். அதிகாலை பிள்ளையார் கோவிலுக்குப் போய்த் தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து வீட்டுக்கு வந்து பொங்கல் செய்கின்றனர். புதுவருடத்தை ஒருவராவது கொண்டாடாமல் விடுவதில்லை. முழு நம்பிக்கையோடும், ஒழுங்கு முறையோடும் அவர்கள் இத் தினத்தைக் கொண்டாடுவதைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இத் தினத்தில் நானும் அவர்களோடு சேர்ந்துகொண்டாட எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுச் சந்தோஷமடைகிறேன். கைவிசேஷம் வழங்கும் முறையும் நல்ல நாள் பார்த்து உணவருந்துவிக்கும் முறையும் மிகுதியாக உண்டு. புது வருடத் தினத்திற்குப்

பின்னர் நான் ஒரு வியாழக்கிழமையன்று ஒரு தமிழர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். நான் இவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறேன் என்று தெரிந்தும் எனக்கு ஒரு காப்பி, தேநீர் தர மறுத்துவிட்டார்கள். நான் மலாயா, சிங்கப்பூரில் ஒரு மாத காலத்திற்கு மேல் தங்கியிருக்கப் போவதில்லை என்று தெரிந்ததும் அந்த ஒரு மாத காலத்துக்குள் கூட என்னுடன் தங்களுக்குக் கோபதாபம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று கூறினார்கள். அவர்கள் கொண்டிருக்கும் இந்த நம்பிக்கையைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

**அங்குள்ள பெண்களைப் பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

அங்குள்ள பெண்களில் முப்பது வயதுக்கு மேற்பட்டோர் பல சங்கங்களை வைத்துப் பணியாற்றுகின்றனர். இவற்றுள் மலேஷியா மாதர் முன்னேற்றச் சங்கம், திவ்விய ஜீவன சங்கம், சிங்கப்பூர் மாதர் சமூக முன்னேற்றச் சங்கம் ஆகியன எனக்கு வரவேற்பளித்தன. இச் சங்கங்களின் வளர்ச்சிக்காகப் பெண்மணிகள் யாவரும் ஒருமித்து ஒத்துழைப்பதை நோக்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இச் சங்கங்களில் வசூலிக்கப்படும் பணம் மங்களம் சகோதரியரால் நடாத்தி வரப்படும் 'சுத்த சமாஜம்' என்ற அனதை விடுதிச்சாலை, குருடர் செவிடர் பாடசாலை ஆகியனவற்றுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. மாதர்கள் மாதாந்தம் நிதி வசூலித்து இப்படியான தர்ம காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இம் மாதர்கள் இலங்கைத் துணிகளையும், இந்தியத் துணிகளை (கதர்) யும் உடுத்துவதில் அதிக விருப்பம் காட்டுகின்றனர். தமது உடைகளிலும் தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தையே முற்றாகப் பின்பற்றுகின்றனர்.

**அங்குள்ள இசை, நடனக் கலைகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

"இங்குள்ள மக்களுக்கு கலையார்வம் உண்டு. அடிக்கடி தமிழ் நாட்டிலிருந்து நடனக்காரர் இசையாசிரியர்கள் வந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். இசை நடனக் கலைகளில் மிகுந்த ஆர்வம் இருந்தாலும் நல்ல தேர்ச்சி இல்லை. அதற்குக் காரணம் திறமையில்லா ஆசான் பற்றாக்குறையே யாகும்; இல்லை என்றே கூறலாம். திருமுறைகளைக்கூடப் பண்ணோடு பாட எல்லோருக்கும் ஆசை உண்டு. பண்ணோடு பாடுவதைக் கேட்டு இன்புறுகிறார்கள். பண்ணோடு பாடுவோர் மிகக் குறைவு. மலாயாவில் இசை நடன வளர்ச்சி குறைவு. சங்கீத ஞானசபா ஒன்று ஓரளவுக்கு கோலாலம்பூரில் இக் கைங்கரியத்தில் ஈடுபாடு கொண்டு உழைக்கின்றது" என்றார்.

அவர் மேலும் சொன்னார்:

"சமயத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்து வளர்க்கிறோமோ அதுவே எமது முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக அமையும் என அங்குள்ள மக்கள் முற்றுமுழுதாக நம்பி அதன்படி ஒழுகிவருகிறார்கள். ஓய்வு நேரங்களில் லேஸ் பின்னுதல், உடை தைத்தல், கைவேலை செய்தல் ஆகியனவற்றில் பொழுதைக் கழிக்கின்றார்கள். இதனால் அவர்களின் ஓய்வு நேரம் நல்ல பொழுதாகக் கழிவதுடன் வருமானமும் கிடைக்கிறது. இச்சிறு முயற்சி நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும் முயற்சியாக உள்ளது. தெருவிலே பெண்களைக் காண முடிவதில்லை. காரியாலயங்களுக்கோ தொழில் ஸ்தாபனங்களுக்கோ செல்லும் பெண்களை மட்டும் அதுவும் காலை, மாலை நேரங்களில்தான் காணமுடிகிறது. அங்கு கன்னிப் பெண்கள் காரை ஓட்டிச்சென்றாலும் தனித்துப் போவதில்லை. அங்குள்ள மக்களில் பெரும்பாலோர் பொதுச் சேவைகளில் ஈடுபடுபவர்களாயுள்ளனர். தமிழ் நூல்கள், தமிழ்ப் பத்திரிகைகள் மிகப் பற்றாக்குறைவினால் மக்கள் தமிழ் படிப்பதற்கு ஆர்வம் இருந்தும் தமிழ் படிப்பதற்கு, வாசிப்பதற்கு வசதியற்றிருக்கிறார்கள். இருந்தபோதிலும் அவர்கள் தமிழரிலும் தமிழ் மொழியிலும் கொண்டிருக்கும் பற்றுதலினால் நிச்சயம் அவர்களுக்குத் தமிழுன்னையின் அனுக்கிரகம் கைகூடும்.

[நேருக்கு நேர் உரையாடியவர்: செல்வி விமலா பஞ்சநதேஸ்வரன்]

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த
திருவிடை மருதூர்
ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம்

# திருமுறைக் கருத்தரங்கம்

27-10-73 — 29-10-73வரை

''இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தடைகழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே''

திருவாவடுதுறை ஆதீன முதல்வராக விளங்குகின்ற வணக்கத்துக்குரிய ஞானசாரியார் அவர்களே, ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த அருட்பெரு மக்களே, பேரறிஞர்களே, சிவநேயச் செல்வர்களே, உங்கள் அனைவருக்கும் அடியேனுடைய உளங்கனிந்த வணக்கம் உரித்தாகுக.

எம்பெருமான் திருவருளும் ஆதீன முதல்வர் குருவருளும் சேர்ந்து அடியேனை இக் கருத்தரங்கிற் பங்குகொள்ள வைத்தது என்றால் அதில் மிகையொன்றும் இல்லை. ஈழநாடும் திருவாவடுதுறை ஆதீனமும் நீண்ட காலத் தொடர்புடையவை. அத்தொடர்பு அன்றும் இன்றும் ஆன்மீகத் தொடர்பாக வளர்ந்து வந்துள்ளது. எமது யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானை இவ்வாதீனம் கௌரவித்து நாவலர் என்ற பட்டத்தைச் சூட்டியமை ஈழநாட்டுச் சைவ மக்களின் உள்ளத்தினின்றும் நீங்காத உவகைச் செய்தியாகும். இத்தகைய தொடர்பிலே அடியேனுக்கும், இத்தேவஸ்தானத்திலே நடைபெறும் திருமுறைக் கருத்தரங்கத்திலே மாதர் அரங்கத்திற்குத் தலைமைதாங்கும் பேறு கிடைத்துளது. இதற்காக எமது மனமுவந்த நன்றியைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும், தேவஸ்தானத்துக் கண்காணிப்பாளருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இத்தகைய கருத்தரங்கங்களிலே ஈழத்து அறிஞர்களும் பங்குகொள்ளுவதற்கு மேலும் வாய்ப்பளிக்க வேண்டும் என்று தாழ்மையாக வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இவ்வரங்கத்திலே திருநாவுக்கரசு நாயனருடைய திருமுறைகள் பற்றிய ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று பிற்பகல் நடைபெற்ற வினாவிடை அரங்கம் கற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மகளிர் அரங்கத்திலே மங்கைநல்லார் நால்வர் உரையாற்ற வருகைதந்துள்ளார்கள். நுண்மாண் நுழைபுலமும், பேச்சாற்றலும் வாய்ந்த இவர்களது உரைகளை ஆவலோடு கேட்டுப் பயனடைவதற்கு இங்கே பெருங் கூட்டம் திரண்டு வந்துள்ளது. இந்த நிலையில் நாவரசருடைய திருமுறைகளின் பெருமைகளைப்பற்றித் திரும்பத் திரும்ப எமது நினைவிலிருத்துவது பயன் தருவதாகும். பெருமானைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளேயென்று இறைவனைப் பேசிப் பேசிப் போற்றியவர் அப்பர் சுவாமிகள். வாயே வாழ்த்து கண்டாய் என்று வாய்க்கு அருட்கட்டளை விடுத்தவரும் அவரே. ஓதுவோர்க்கும் உணர்வோர்க்கும் உள்ளத்தை உறுத்தித் தூய்மை அளிக்கும் சக்தி அப்பர் திருமுறைகளுக்குண்டு. இவை ஆற்றல்மிக்க அருள் நூல்களாகும். உண்மையை அறுதியிட்டுச் சொல்வதும் உள்ளத்தை உருக்குவதும் உலக அனுபவத்தை மிகுத்துக் காட்டுவதும் ஆகிய சிறப்புகள் இத்திருமுறைகளில் காணக்கூடியவை. சைவ மக்கள் வாழ்வை எடுத்துக்கொண்டால் திருமுறைச் செல்வத்தை மறந்தால் எமக்கு உய்வே இல்லை என்ற அளவிற்கு அவை வழிபாட்டில் இணைக்கப்பட்டுள்ளன.

'' ஆசையறுய் பாசம்விடாய்
ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்—சீசி
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே உனக்கென்ன வாய்.''

திருமுறைகள் அருளாளர்களின் உள்ளத்தைத் திறந்து காட்டுவன. ஆயிரத்து முன்னூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த அப்பர் பெருமான் எத்துணைப் புதுமை வாய்ந்தவராக, சீர்திருத்தவாதியாக, சிறந்த தொண்டராக, முற்றுந் துறந்த முனிவராக விளங்கினுர் என்பதை 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளிலிருந்து நாம் காணலாம். சேக்கிழார் பெருமான் அப்பரடிகளைக் குறிப்பிடும்பொழுது தொண்டர் என்றும் முனிவரென்றும் சிறப்பான நாமம் கொடுத்துப் போற்றுவது சிந்தனைக்குரியது. திருவடி தீட்சை கிடைக்கப் பெற்ற இடத்தில்,

''நன்மைபெருக அருள்நெறியே
வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனுர்
வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றேம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினுன் சிவபெருமான்.''

எனப் பாடியுள்ளார். இங்கே தொண்டர் என்ற நாமம் கொடுக்கப்பட்டுள்ளது. திருவையாற்றிலே திருக்கயிலைக் காட்சி காட்டப்பட்டபொழுது தொண்டனுர்க்கு அங்கு நிகழ்ந்தன யார் சொல்லவல்லார் என்று குறிப்பிடுகிறுர். நாவரசரும் தன்னைக் குறிப்பிடுகின்ற இடத்தில் தொண்டன் என்ற பெயரை வைத்தே ஒரு தேவாரம் பாடியுள்ளார்.

''தொண்டனேன் பட்ட தென்னே
தூயகா விரியில் நன்னீர்
கொண்டிருக் கோதி யாட்டி
குங்குமக் குழம்பு சாத்தி
இண்டைகொண் டேற நோக்கி
ஈசனை எம்பிரானைக்
கண்டனைக் கண்டி ராதே
காலத்தைப் போக்கி னேனே.''

திருப்பூம்புகலூரிலே எம் பெருமான் முற்றுந் துறந்த ஒரு முனிவராக நாவரசரைக் காட்டுகின்றுர். ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் திண்மையும் தேவ அரம்பையர் நடனமாடிய தன்மையைக் கண்டு சிந்தை திரியாத திறனும் இவரிடத்திலே அமைந்திருந்தன என்பதைக் காணுகின்ற பொழுது அவர் முனிவர் என்ற நிலையிற் காட்சியளிக்கிறுர். எம் பெருமானிடத்து இடையறுப் பேரன்பு கொண்ட நாவரசர் தனக்கு அறிந்தும் அறிவித்தும் நிற்கும் இறைவனை எவ்வாறு அனுபவித்தார் என்பதை அவர் திருமுறைகளிற் காணலாம்.

''காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலில்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே''.

அந்த வகையில் வாழ்ந்த சீவன் முத்தர் இவர். அறிந்தும் அறிவித்தும் நிற்கிற இறைவனைத் தான் அறிந்துவிட்டேன் என்பதை எவ்வளவு அழகாகக் கூறுகின்றுர்.

''கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே.''

என்றுர். அவர் மேற்கொண்ட நெறியாகிய சரியை என்பது உடலைத் திருவருள் நெறியிலே நிலைபெறச் செய்யும் தவமாகும். இதன் முதிர்ச்சியிலே நான் என்பது அழிந்த நிலைக்கு வந்து விடும். தன் முனைப்பின்றி மனங்கசிந்து ஓங்குணர்வின் உள்ளடங்கி நின்று பணி புரிந்தவர் நாவரசர். 'தன் கடன் அடியேனையுந் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அவர் அருள் வாக்காகும். திருத்தொண்டின் நெறியிலே உலகம் நின்று வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் இவர். திருவதிகை தொடக்கம் திருப்பூந்துருத்தி வரை தொண்டு செய்து வாழ்ந்து காட்டினுர். திருப்பூந்துருத்தியில் தங்கியிருந்து பாடிய பதிகங்களில் நாமும் தொண்டு செய்ய வேண்டும் என்று வழிகாட்டினுர். இன்று நம் மத்தியில் தொண்டர்கள் தோன்றுவது மிகக் குறைவாகி விட்டது. பலரிடம் தியாக சிந்தனையைக் காணமுடியவில்லை. இந்தச் சூழ் நிலையில் அப்பரடிகளின் அருள் வாழ்வைப் பிரதிபலிக்கும் திருமுறைக் கருத்

தரங்கம் மிக இன்றியமையாததே. திரு நின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட இவர் சமுதாயத்தின் சீர்திருத்தத்தில் எத்துணை அக்கறை காட்டினுர் என்பது வெளிப்படைச் செய்தியாகும். சைவம் என்பது மனிதன் தன்னைக் குறித்தும், தான் வாழும் உலகத்தைக் குறித்தும், உள்ளும் புறமும் கலந்து நின்று இயக்கும் கடவுளைக் குறித்தும் நூலறிவாலும், வாழ்க்கை அனுபவத்தாலும் கண்ட சமயமாகும். சமூக நலமே சமயநலன் என்று பேணிய மதம் சைவம். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கொள்கையே சைவத்தின் அடிப்படை. அத்தகைய பெருமை பெற்ற சைவசமய வரலாற்றிலே பெண் மக்களுக்குப் பெரும்பங்குண்டு. ஒவ்வோர் குடும்பத்தையும் முற்பட நின்று நடத்துவோர் பெண்களாக இருப்பதால், சமய உணர்வு நல்கும் பொறுப்பும் அவர்களுக்கேயுண்டு. திருநாவுக்கரசரை எமக்குத் தந்த திலகவதியாரை இங்கு நாம் நினைந்து போற்றுகிறோம். தம்பியார் உளராக வேண்டும் என்று தயவு வைத்தவர் அவர். இம் மாதர் அரங்கத்திலே அன்னுரைப் பற்றிய கருத்துரை வழங்கப்படவிருப்பதும் போற்றுதற்குரியது. புகழனுர் பெருஞ் சிறப்பின் உளரானுர் என்று சேக்கிழார் போற்றுதற்குரிய வகையில் கால்வழி யற்றுப்போகாமல் காத்தவரவரே. சைவம் வளர வேண்டுமானுல் இத்தகைய தொண்டு மனப்பான்மை மங்கையர்களிடத்தில் வளர வேண்டும். இன்று விஞ்ஞான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மறுபிறப்பையும் வினைப்பயனையும் பற்றிப் பேசுவதிலும் பார்க்க சமய அடிப்படையிலே சமுதாயத்தை எவ்வாறு உயர்த்தலாம் என்பதைச் சிந்திப்பதும் செயல் புரிவதும் பயன் தருவதாகும்.

இறுதியாக இந்த இடத்தில் ஒன்றை நினைவு கூராமல் இருக்க முடியாது. திருவிடை மருதூர்ப் பெருமான் திருவருளை மாந்தி நிற்கும் பக்த கோடிகளனைவரும் இதனையுணர்வர். மகாலிங்கம் என்று சிறப்பித்துப் பேசப் பெறும் சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளிக் காட்சி தரும் இடம் இவ்வாலயம். திருமுறை யாசிரியர்களாலும் பிற்கால ஞானிகளாலும் பாடப்பட்ட பெருஞ்சிறப்பு மிதற் குண்டு. "முனிவரோ டமரர்கள் முறை வணங்க இனிதுறை வளநகர் இடைமருதே" என்று ஞானசம்பந்தரும், "இனியன் தன்னடைந்தார்க் கிடை மருதனே" என்று நாவரசரும், "இடை மருதுறைவோன் எந்தை பிரான்" என்று சுந்தரரும் தேவாரங்களிற் போற்றிப் பாடினர். மாணிக்கவாசக சுவாமிகளின் அருளனுபவத்தைப் பார்ப்போம்.

> "எந்தை எந்தாய் சுற்றம் மற்று
> மெல்லா மென்னுடைய
> பந்தம் அறுத்தென்னை யாண்டுகொண்ட
> பாண்டிப் பிரான்
> அந்த இடை மருதில்
> ஆனந்தத் தேனிருந்த
> பொந்தைப் பரவிநாம்
> பூவல்லி கொய்யாமோ."

இத்தலத்தின் மற்றொரு மகிமை பிரமகத்தி தோஷ நீக்கம் கொடுத்த அருட்படலம் என்பதாகும்.

எனவே இத்தகைய புண்ணிய தலத்திலே காலடி வைக்கக் கிடைத்த பாக்கியமே பெரும் பேருகும். இவை யாவற்றுக்கும் காரணராக நின்றுதவிய கண்காணிப்பாளர் திரு. அருணுசலம்பிள்ளைக்கும் திருவாவடுதுறை ஆதீனத்துக்கும் மீண்டும் என் நன்றியைக் கூறித் தலைமையுரையைச் சுருக்கமாகப் பூர்த்தி செய்கிறேன்.

[மங்கையர் அரங்கத் தலைமைப் பேருரை — 29-10-73]

✳

"உயிர்கள் உய்தியடைய வேண்டுமென்று எடுத்த அவதாரமே முருக அவதாரமாகும். ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும், போதாதென்று ஆறு திருமுகமும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு தோன்றினுன்."

சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை
74ஆம் ஆண்டு நிறைவு விழா,

# ஆரணி சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமைப் பேருரை

''கைப்போது மலர்தூவிக்
காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத்
தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி
ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போது மினியானை
என்மனத்தே வைத்தேனே.''

எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருள் துணைநிற்க.

சிவ நெறியும், செந்தமிழ் நெறியும் தழைத்தோங்க அரும்பணியாற்றும் சைவ சித்தாந்த சமாஜத்தினர்களே, சைவப் பெருமக்களே. சக்தியின் அம்சமாக விளங்கும் திருவுடை மங்கையர்களே, உங்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த வணக்கம் உரித்தாகுக.

''இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்று குறிப்பிடுகிறார் அப்பர் சுவாமிகள். அவனை மறந்த நாள் வாழ்விலே கெட்ட நாள் எனப் பேசுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இத்தகைய அருளாளர் வழியிலே நின்று வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் பலரை இவ்வவையின்கண் காணும் பேறு கிடைத்துள்ளது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனுகிய சிவனுக்கு நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். திருவாசகத்தில் திருப்பூவல்லி என்ற பகுதியில் பெண்கள் இத்தகையதொரு நன்றி கூறி மலர் கொய்யும் பரிசினை மணிவாசகப் பெருமான் காட்டுகிறார்:

''வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய்
வாழ்த்த வைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத்
தெம் பெருமான்
அணங்கோ டணிதில்லை யம்பலத்தே
யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ.''

அவன் புகழ் பாடவும் அடியார்க்கெளிவந்த அவன் கருணைபற்றி நினைக்கவும் அவனடியார் அடியாரோடு கூடிச் சிவானுபவம் பெறவும் இத்தகைய மகாநாடுகளே வாய்ப்பளிக்கின்றன.

இன்று காலையில் சைவ மங்கையர் மகாநாட்டுக்காகக் கூடியிருக்கிறோம். இம் மகாநாட்டுக்குத் தலைமைதாங்கும் பேறு அடியேனுக்குக் கிடைத்துள்ளது. தாமும் தரமுடையவர்களாகி மற்றவர்களையும் தரமுடையவர்களாக்குவதுதான் சிறந்த சமயப்பணி. அவ்வகையில் சைவ சித்தாந்த சமாசத்தினர் அடியேனையும் தரமுடையளாக்கி இப்பணிக்கும் பணித்துள்ளார்கள். இந்நேரத்தில் எனது மனமுவந்த நன்றியைச் சமாஜத்தினருக்கு மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றேன். மேடையிலே வீற்றிருக்கும் அருள் நலமும் அறிவு நலமும் வாய்க்கப்பெற்ற சகோதரிகளின் உரையைக் கேட்க எல்லோரும் ஆவலாக இருப்பீர்கள் என்பது அடியேன் நம்பிக்கை. அதுவுமன்றி என் முன்னிலையிலே சைவசித்தாந்தப் பேரறிஞர்கள் பலர் வீற்றிருக்கிறார்கள்.

''வஞ்சகப் பெரும்புலைய னேனையுன்
கோயில் வாயிலில்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரியனாக்கினாய்'

என்ற வாசகத்தைத்தான் இச் சந்தர்ப்பத்தில் நினைந்து திருவருளை ஏத்துகிறேன்.

''இந்தச் சரீரம் இறைவனால் நமக்குத் தரப்பட்டது, அவனை வழிபட்டு முத்தியடைவதற்காகவே'' என்பது யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அருளிய வாக்கு. இவ்வாக்கையே முன்வைத்துத் தலைமையுரையை ஆற்றலாம் என்று நினைக்கின்றேன்.

ஈழநாட்டுக்கும் இந்நாட்டுக்குமிடையே அமைந்த ஆன்மீகத் தொடர்பில் நாவலர் பெருமானுக்குப் பெரும் பங்குண்டு. நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கிருந்து இங்கு வந்து சைவப்பணி ஆற்றியதுமன்றி ஈழத்தில் சைவ சித்தாந்த நெறியை எழுத்தாலும் பேச்சாலும் நிலை நிறுத்திய பெருமை அவருக்கு உண்டு. இதன் பயனாகவே 1948, 1960ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திலும், திருக்கேதீஸ்வரத்திலும் மிகச் சிறப்பாகச் சைவசித்தாந்த மகாநாடுகள் நடைபெற்றன. ஈழத்திலிருந்தும் காலத்துக்குக் காலம் சைவசித்தாந்தப் பேரறிஞர்கள் இங்கு அழைக்கப்பட்டு மகாநாடுகளுக்குத் தலைமைதாங்கியும், உரையாற்றியும் சென்றுள்ளனர் என்பதைப் பணிவுடன் ஞாபகப்படுத்திக்கொள்கிறேன்.

''வாழ்வெனும் மையல்விட்டு
வறுமையாம் சிறுமை தப்பி
தாழ்வெனும் தன்மை யோடு
சைவமாம் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால
உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப்
போற்றுவார் அருள்பெற் றாரே.''

''குலம், இளமை, கல்வி, செல்வம் என்னும் இவற்றாலேற்படும் செருக்கு ஒழிந்து வறுமையினாலேற்படும் பின் செல்லலாகிய சிறுமையும் அகன்று மெய்யன்பினாலேற்படும் பணிவோடு சைவசமயத்தில் பிறந்து வாழும் புண்ணியப் பேறு கிடைப்பது மிக அரிதாகும்'' என்பது அருணந்திசிவனார் கருத்து. சைவசமயத்திற் பிறந்து, சைவசமயமே சமயம் என்று பெருமை பேசிக்கொண்டிருக்கிற நாம் சைவத்தின் உயர்வு பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும்.

சைவம் சிவசம்பந்தமுடையது. சிவம் என்பதற்கு அன்பு, இன்பம், ஆனந்தம் எனப் பல பொருள் கூறுவர். ''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே'' என்று பேசுகிறார் மணிவாசகப் பெருமான். ஆண்டவனிடத்தன்றி அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே சைவத்தின் தலையாய சிறப்பாகும். இதனாலேயே கொல்லாமை, கொன்றதைத் தின்னாமை சைவத்தில் வற்புறுத்தப்படுகிறது.

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி
இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே''

என்று வேண்டுகிறார் தாயுமானார். சைவத்தின் பெருமைக்கும், பழமைக்கும் மொகஞ்சோதரோ, ஹாரப்பா கால நாகரீகச் சின்னங்கள் மாத்திரமன்றி உலகெங்கணும் அதாவது மெக்சிக்கோ, ஆஸ்திரேலியா, தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஆகியவற்றில் இடம் பெற்றிருந்த சிவ வழிபாடும் சான்றாக அமைகிறது. 'உலகெலாம்' என்று சிந்தித்த ஒரேயொரு சமயம் சைவம். ''வையகமுந் துயர் தீர்கவே'' என்பதும் ''அப்பாலு மடிச் சார்ந்தா ரடியார்க்கும் அடியேன்'' என்பதும் சைவத்தின் பரந்த கொள்கையைத் தெற்றென விளக்குகிறது.

''யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்''
என்பதும்

''விரிவிலா அறிவி னோர்கள்
வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்''

என்பதும் சைவத்தின் விரிந்த நோக்கையும் பரந்த தத்துவத்தையும் காட்டி நிற்பன. சைவசித்தாந்தம் என்று சொல்லும்போது ''சைவ'' என்ற அடைமொழி சேர்ந்து அது ஒரு தனிப்பெருங் கடவுட்கொள்கை என்பதைக் காட்டி நிற்கிறது. ''சைவத்தின் முடிந்த முடிவு'' என்று இதற்கு விளக்கம் கூறுவர். வாழ்க்கையோடு இணைந்த நெறியே இது. இக் கொள்கைகள் எக்காலத்தும் மாறுதலை. வாழ்வாங்கு வாழ்ந்தால் போதுமென்றே இந்நெறி காட்டுகிறது. இறைவனை அடைவதற்கு மிக அழுத்தமான பாதை சைவசித்தாந்தமே என்று பேரறிஞர்கள் பலர் எடுத்துக் காட்டி யுள்ளனர்.

'' ஓரும் வேதாந்த மென்றுச் சியிற்பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே ''

என்று குமரகுருபரசுவாமிகளும் எடுத்துக் கூறியுள்ளார். கந்தபுராணத்திலே காசிபர் உபதேசமும் இவ்வடிப்படையிலேயே அமைகிறது.

'' சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே''

என்று பாடத் தொடங்குகிறார் காசிபர்.

இங்கே முதற் பொருளாகப் பேசப்பட்ட பரம் பொருளையே '' சிவம் '' என்று குறிப்பிட்டு வழிபட்ட மக்கள் அதனுடனிணைந்த சக்தியையும் உணரத் தலைப்பட்டனர்.

''சிவமெனும் பொருளும் ஆதி சக்தியோ
டிணைந்திடின் எத்தொழிலும் வல்லதாம்''

என்ற கூற்றுப்படி அவளது பேராற்றலே அனைத்தையும் இயக்குகிறது என்ற நம்பிக்கையிலே சக்தி தத்துவம் காட்டப்படுகிறது. சைவமங்கையர் மகாநாட்டிலே இச் சக்தி தத்துவத்தைப் பற்றிச் சிறப்பாக நாம் நினைப்பதும் பொருத்தமானதே.

'' சிவம்சக்தி தன்னை யீன்றும்
சக்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும் புணர்ந்திங்
குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும்
பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் தெரியு மன்றே.''

இதிலிருந்து சக்தியும் சிவமும் ஒன்றே என்பது வெளிப்படை. ''அப்பன் நீ அம்மை நீ'' என்ற வாக்கும் ''அம்மையே அப்பா'' என்ற வாசகமும் இந்த அடிப்படையிலே எழுந்தவை. குழந்தையைப் பெற்றுப் பாலூட்டித் தொட்டிலில் வளர்த்திச் சிறிது வளர்ந்த ஞான்று விளையாட விட்டுப் பார்த்து மகிழ்பவள் தாய். குழந்தை குறும்பு செய்யுமாயின் அச்சுறுத்தி அழுங்குழந்தையை அணைத்து அதற்கு வேண்டுவனவற்றைக் கொடுத்து அமைதியாக உறங்க வைப்பவள் தாய். இறைவனும் இவ்வாறே தாயாக நின்று உயிர்களை வளர்க்கிறான் என்ற கருத்தில் தாயுமானார் பாடலொன்றைக் காணலாம்.

''காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போற்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற் கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை அமுதம் ஊட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்ட மைத்திட்
டேரிட் டதன்கருதி மொழிதப்பின் நமனைவிட்
டிடருற வுறுக்கி இடர்தீர்த்
திரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொண்மின் என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே''.

உயிர்கள் அனாதியாகவே ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடக்கின்றன. இருள் செறிந்த இக் கருப்பையில் அகப்பட்டுக் கேவல நிலையில் நிற்கின்றன. இவ்வழுந்துதலிலிருந்து நீங்குவதற்குப் பற்பல உடம்பைக் கொடுத்து உயிரறிவைச் சிறிது விளக்க வைக்கின்றான் இறைவன். பிறவிதோறும் இவ் விளக்கம் ஏற்பட்டுப் பிறவாமையாகிய பேரின்ப நிலை கிட்டுகிறது. எனவே நித்தியானந்தப் பெருவாழ்வில் உயிர்கள் அமைதியுற்று வீடுபேறடைகிறதே முடிந்த முடிபு. இந் நிலையைத் தாயாக நின்று இறைவன் தருகிறான் என்பதே சைவ சித்தாந்த முடிவு.

''தன்னிலைமை மன்னுயிர்கள்
சாரத் தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''.

என்பது திருவருட்பயன். சக்தி தரும் சாரத் தரும், தன்னிலைமை [இறைவனது ஒப்பற்ற தன்மையை] சாரத்தரும் என்பதை விளக்கமாகக் காண்கிறோம். கேவல, சகல சுத்தம்

ஆகிய மூன்று நிலைகளுக்கும் மேற்காட்டிய தாயுமானுர் பாடல் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது. இறைவன் தாயாக நின்று உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்குகின்முன் என்பதைச் சிறப்பித்துப் பேசுகிருர் சுவாமிகள்.

''தாயுடன் சென்று தாதையைக் கூடிப் பின் தாயை மறந்து ஏயுமதே நிட்டை'' என்று கூறிய பட்டினத்தார் வாக்கும் இவ்வுண்மையையே காட்டுகிறது. சக்தியின் அம்சமாக விளங்கும் தாய்மாரும் இத்தகைய தொரு தியாகத்தையே சமுதாயத்தில் ஆற்று கின்றனர். அம்பாளே தியாகேஸ்வரியாக நின்று இவ்வுண்மையைக் காட்டுகிருள். தம் முடைய அடியார் செய்த பாவங்களையும் பிழைகளையும் போக்கி அருளி அவர்களை அடியாராக்கி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உமையம்மை சிவபெருமானையே வேண்டி நின்றதாகக் காஞ்சித் தல வரலாறு காட்டுகிறது. அர்ச்சனை புரியும் ஆகம விளக்கத்தை இறைவனே திருக்கைலாயத்திலே உமாதேவிக்கு விளக்கி அருளினுர்.

''வெள்ளி மால்வரைக் கயிலையில்
வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணி
யருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையி னுகமத்
திறனெலாந் தெரிய
வுள்ள வாறுகேட் டருளினு
ருலகையா ளுடையாள்.''

அதாவது வெள்ளியங்கிரியில் வீற்றிருப்பவரும் கங்கையைத் தரித்தவருமான சிவபெருமானின் திருவாக்கினின்றும் வெளிவந்த சிவாகமத்தை உமாதேவி கேட்டருளினுள்.

''எண்ணி லாகம மியம்பிய
இறைவர்தாம் விரும்பு
முண்மை யானது பூசனை
யெனவுரைத் தருள
வண்ண லார்தமை அர்ச்சனை
புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின
பெருந்தவக் கொழுந்து.''

எண்ணிறந்த ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளிய இறைவனுக்கு உவந்தது பூஜையாதலால் அந்தப் பூஜையைச் செய்து அவருடைய அருளைப் பெறவேண்டுமென்று தேவியே விரும்பினுள். அதன் பயனுகக் காஞ்சியிலே முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து அறம் வளர்த்த நாயகியாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிருள். உமையம்மையின் அம்சமாக விளங்குபவர்கள், பெண்கள். இவர்களின் உயர்விலேயே வீட்டின் உயர்வும் நாட்டின் உயர்வும் தங்கியுளது. உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண்குலமே அமைய வேண்டும். தர்மம், சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை, கற்பு, தன்னம்பிக்கை, தன்னடக்கம் ஆகியவை அனைத்தும் பெண்குலத்துக்குப் பெருமை தருவன. பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்துக்கும் பெருமையைத் தேடிக் கணவனைக் கண் கண்ட தெய்வமாகப் போற்றி விளங்க வேண்டிய கடமை பெண்களுக்கு உண்டு. அம்பிகையின் பல்வேறு வடிவங்கள் பெண்களின் பல்வேறு சக்திகளை விளக்கி நிற்பன. அன்னபூரணியாக இருந்து ஆண்டவனுக்கே ஈகையின் சிறப்பைக் காட்டியவள் உமாதேவி. அவள் உலகுக் கெல்லாம் படியளந்து எல்லாப் பெண்களும் அறம் வளர்க்கும் செல்விகளாக விளங்க வேண்டுமென்றும் வழிகாட்டினள்.

திருநாவுக்கரசு நாயனுர் காலத்தில் அவர் பெயராலே தர்ம கைங்கரியங்களில் ஈடுபட்ட அப்பூதி அடிகளாரையும் அவரின் மனைவியாரையும்பற்றி யறிகின்ருேம். இறைவனின் சோதனையாக மூத்த மகனை இழந்தும் ஈகையின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக இக்குடும்பம் விளங்குகிறது. பசித்து வந்த சிவனடியாருக்கு இன்னமுதும் மாங்கனியும் அளித்து ஈகையின் சிறப்பை எடுத்துக் காட்டியவர் புனிதவதியார். நள்ளிரவிலே வீட்டுக்கு வந்த சிவனடியாரை அன்னமூட்டிப் பசி நீக்குவதற்கு வழி காட்டியவர் இளையான் குடிமாறநாயனுரரின் மனைவியார். அமுதசுரபி கொண்டு பசியால் வருந்துவோருக்கு அமுதளித்தவள் மணிமேகலை. கணவனைப் பிரிந்திருந்த காலத்தில் ''அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம்

பலும், துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'' என்று கண்ணகி கூறுவதி லிருந்து பெண் குலம் பெருமையோடு வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டது ஈகை என்பது வெள்ளிடைமலே.

''படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடுங் கோயில் நம்பற்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பற்கொன் றீயில்
படமாடுங் கோயில் பரமற்கங் காமே''

இத்திருமந்திரக் கருத்துப்படி மக்களுக்கு ஈவதே மகேஸ்வரனுக்கு உவப்பானது எனக் காட்டப்படுகிறது. உயிர்களின் உண்மை ஊதியம் ஈகையின் சிறப்பிலேயே அமைந்துள்ள தென்பதை வள்ளுவரும் காட்டுகிறுர்.

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லே உயிர்க்கு''

ஈதலினுலேயே புகழ் கிடைக்கிறது என்பதை அழுத்தமாகக் கூறவந்த வள்ளுவர் ஈதலேயும் புகழையும் இணேத்து ஒருமையிலே வைத்து ''அது'' என்று பேசுகிறுர்.

அடுத்து விருந்தோம்பும் பண்பில் பெண் மக்கள் சிறந்திருந்த தன்மையை நோக்கலாம். கோசல நாட்டின் பெருமையைக் கூறவந்த கம்பநாட்டாழ்வார்.

''பெருந் தடங்கண் பிறைநுத லார்க்கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து மன்றி விளேவன யாவையே''

என்று பாடியுள்ளார். இன்றும் விருந்தோம்பும் பணியில் பெண் குலம் கொண்ட ஈடுபாட்டிற்குச் சங்க இலக்கியங்கள் பெரும் சான்ருக விளங்குகின்றன. விருந்து வரும் என்று கரைந்த காக்கைக்கு அன்னமிட்டு மகிழ்ந்தது சங்க காலப் பெண் குலம். கணவனுடன் கொண்ட ஊடலே நீக்குவதற்கு விருந்து ஒரு வாயிலாக அமைந்ததைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. திருவாரூர்ச் சிறப்பைக் கூற வந்த சேக்கிழார் ''மேலெல்லாம் அகில் தூபம் விருந்தெல்லாம் திருந்துமனே'' என்று சிறப்பிக்கிருர். இல்லங்களெல்லாம் விருந்திஞல் சிறப்படைய வேண்டும். இதற்குரியவர்கள் இல்லத்தரசிகளே. செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பவர்க்கு வானத்தவர் நல் விருந்தளிப்பர் என்பது பொதுமறை.

சைவத்தின் பெருமையிலும் வளர்ச்சியிலும் பெண்கள் பெரும் பங்கு பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டும் முகமாகப் பூம்பாவையை எழுப்பிய இடத்தில் ஞானசம்பந்தர் கருத்தைக் காண்கிறேம்.

''மண்ணி னிற்பிறந் தார்பெறும்
பயன் மதிசூடும்
அண்ண லார்அடி யார்தமை
அமுது செய்வித்தல்
கண்ணி னுல்அவர் நல்விழாப்
பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன்
வருகென உரைப்பர்.''

அடியாரைப் போற்றலும் அமுது செய்வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபடுதலும் பெண்குலத்தின் கடமைகள் என்பதை இவ்வரலாறு காட்டுகிறது.

இன்னும் பக்தி நெறியில் பெண் மக்கள் கொண்டுள்ள பங்கைக் கவனிப்போம்.

திருவாசகத்திலே மணிவாசகர் கூற்றென்றிற் காணலாம்:

''முன்னேப் பழம்பொருட்கும்
முன்னேப் பழம்பொருளே
பின்னேப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே
உன்னேப் பிராஞகப்
பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ
ராவா ரவருகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு
மிலோமேலோர் எம்பாவாய்''

கன்னியர்கள் தமக்குக் கிடைக்கப்பெறும் கணவன்மார் சிவதொண்டர்களாகவே அமையவேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர்; ஏனென்றால் பக்தியனுபவம் கணவனுக்கும் மனைவிக்கும் ஒன்றாய் அமையாவிடத்துத் திருப்தியாக இல்லற தர்மம் அமையாது. இதற்கு எடுத்துக்காட்டாகக் காரைக் காலம்மையார் வாழ்வு அமைகிறது. விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழுவதென வாழ்ந்தவர் அம்மையார். ஆனால் திருமண வாழ்வு சிறப்பாக அமையவில்லை. எனினும் கணவனாலேயே "தெய்வம்" எனப் போற்றப்படும் பெருநிலையும் இவருக்கு ஏற்படுகிறது. அந்நிலையிலே சிவனறிவொன்றே கைவரப் பெற்றவராய் உற்பவித் தெழுந்த ஞானத் தொருமையிலே அற்புதத் திருவந்தாதியைப் பாடுகிறார். அதில் ஓரேயொரு பாடலை மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

"வானத்தா னென்பாரு
மென்கமற் றும்பர்கோன்
தானத்தா னென்பாரும் தாமென்க —
ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட
மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தான்என்பன் யான்."

இங்கே ஒரு பெருமிதம் தோன்றுகிறது. அதாவது ஆண்டவன் தன்னகத்திலே குடியிருக்கிறான் என்பதே அதற்குக் காரணமாகும். "ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன் ஒன்றே என்னுள்ளத்தினுள்ளத்தேன்" என்று பாடிப் பேய் வடிவுடன் காற்றிலும் கடிதாகச் செல்லுகிறார்.

"அண்டர் நாயகனார் என்னை அறிவரேல்
அறியா வாய்மை
எண்டிசை மாக்களுக்கு
யான் எவ்வுருவாவென்"

என்பது அவர் கருத்து.

தலையினால் நடந்து திருக்கயிலையை அணுகியபொழுது "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை" எனக்கூறி, இறைவன் உமையம்மைக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். அதுவுமன்றி அம்மையே உனக்கு என்ன வேண்டும் என்று கேட்ட ஞான்று அதற்குப் பதிலாக வெளிப்பட்ட அருள் வாக்குகளை நாம் என்றென்றும் போற்றி ஓதவேண்டியவர்களாக இருக்கிறோம்.

"இறவாத இன்பஅன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுஉன்
னடியின்கீழ் இருக்க என்றார்."

சமய வாழ்வில் தலைப்பட்ட பெண்கள் தியாகத்தின் சின்னங்களாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இயற்பகையார், சிறுத்தொண்டர் ஆகியோரின் மனைவியர்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இயற்பகையாரின் நிலையான அன்பைப் பெற்றவர் அவர் மனைவியார். இதனைச் சோதிக்கும் முகமாக இறைவனே எழுந்தருளி சிவனடியாராக வந்து நாயனாரின் மனைவியைத் தனக்குத் தரும்படி வேண்டுகிறான். 'விதி மணக்குல மடந்தை யுன்னை இம் மெய்த்தவர்க்கு யான் கொடுத்தனன்' என்கிறார் இயற்பகை. இதனை ஏற்றுக்கொண்ட மாதரசி "இன்று நீர் எனக்கு உரைசெய்த இதுவேல் என்னுயிர்க் கொருநாத நீருரைத்த தொன்றை நான் செயுமல்லால் உரிமை வேறுளதோ" எனக் கூறிய மாண்பினை நினைந்து நினைந்து போற்றவேண்டியுள்ளது.

கணவனாரின் நியமத்தை நிறைவேற்றும் பொருட்டு தன் மகனையே இழக்கத் துணிந்த திருவெண்காட்டு நங்கையின் தியாகத்துக்கு எதிர்நிற்க வல்லவர் யார்?

"இல்லதென் இல்லவள் மாண்பானால்
உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"

என்பது பொய்யா மொழியன்றோ!

அடுத்து "தர்மம்" என்ற இடத்துக்கு வருவோம். இவ்வழியில் நின்று நாட்டை, சைவ ஒளியில் மேலோங்கச்செய்த பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. நாட்டை

யும் குடிமக்களேயும் நன்னெறியிற் செலுத்த வேண்டியது அரசியல் தருமம். ஒப்பற்ற சிறந்த பாண்டிநாடு நீற்றெளி விளக்கம் குன்றி, ஆலயங்களில் ஒளி குன்றி, சைவ சீலங் குன்றி இருந்த காலத்தில் மனமுடைந்து சிவதர்மத்தை நாட்டிலே நிலைநாட்டப் பாடு பட்டவர் மங்கையர்க்கரசியார். இதனுலேயே மங்கையர்க்குத் தனி அரசி என்று போற்று கிருர்—சேக்கிழார். அதுமாத்திரம் அன்று. ''பொங்கொளி வெண் திருநீறு பரப்பினு ரைப் போற்றுவார் கழல் எம்மால் போற்ற லாமே'' எனப் பாடியுள்ளார். ஞானசம் பந்தப் பெருமானும் ஆலவாயம்மானைப் பாடுமுன்பு அரசியாரைப் பாடுகின்ருர்.

சிவநெறி வழுவாத சோழர் குலத்திலே அவதரித்த அரசியார் ''தெய்வப்பாவை'' என்று போற்றப்படுகிருர். இடர்ப்பாடு மலிந்த காலத்திலே நெருக்கடிக்குள்ளே சைவத்தை வளர்த்தார் அரசியார் என்பதை ஞானசம்பந்தர் கூற்றிலிருந்து அறியலாம். ''சூழுமாகிய பரசமயத்திடையே தொண்டு வாழும் நீர்மையீர் உம்மைக் காண வந்தனம்'' என்று கூறுவதில் இருந்து இவர் காலத்தை நோக்கி ஆற்றிய பணியை ஊகித்தறிய முடியும்.

தம்மைப் பேணி, தம் கணவனைப் பேணி, சைவத்தைப் பேணி, பாண்டி நாட்டையே பேணிய பெருமை மங்கயர்க் கரசியாருக்கே உண்டு. ஆன்மீகத்தோடு கல வாத அரசியல் அர்த்தமற்றது என்பதை மன்னவனுக்கே எடுத்துக்காட்டிய பெருமை இவருக்குடையது. ''புகலியில் வந்து ஆண்டு கொண்டவர் தம்பால் அமணர்தாம் செய்த தீங்கு முண்டவாறு இவ்வாருகி முடிந்ததோ'' என்று சிந்திக்கின்ருர்; தாய் போல் கழற லும் தழீஇக் கோடலும், ஆய்மனைக் கிழத் திக்கு உரியவாகும்; என்றபடி வேண்டிய நேரங்களில் கணவனுக்கு உறுதியுரைப்பதில் மனைவி தவறக்கூடாது. கொண்ட கொழு நனை நன்னெறிப்படுத்தலும் இல்லாளின் முக்கிய கடனுகும். மங்கையர்க்கரசியார் சைவத்தைத் தாமும் உணர்ந்து கணவனுருக் கும் உணரவைத்தார். சிவனடியாரைச் சிவனென மதித்துப் போற்றியவர். இவரு டைய தூய உள்ளத்தையும் உயர்ந்த சைவப் பற்றையும் உன்னிய ஞானசம்பந்தர், அவர் மேற் பரிவு கொண்டார். மன்னவன் குற்ற மிழைத்தானென்று தெரிந்திருந்தும் பையவே சென்று பாண்டியற் காகவே என்று பாடினுர். அரசியாரின் மங்கலவாழ்வுக்குக் குறையேற் படக் கூடாது என்பதே ஞான போனகர் கருத்து.

''பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையா ரன்பி னுலும்
அரசன்பால் அபராதம் உறுத லானும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னுலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னுத லாலும்
தீப்பிணியைப் பையவே செல்க என்ருர்.''

தீப்பிணி பையவே சென்று பாண்டியனை வருத்தியதும் பெருமான் திருநீற்றுப் பதிகம் பாடியதால் நோய் நீங்கியதும் நாமறிந்த வரலாறுகளாகும். இதனுலேயே ''மங்கை யர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்'' என்று நாமும் போற்றி நின்றதோடு ''போற்று வார் கழல்எம்மாற் போற்ற லாமே'' என்று கூறி அரசியாரின் மாண்பினை உலகுக்கு அறி விக்கின்ருர்.

இன்னும் தவக் கோலத்தோடு வாழ்ந்த திலகவதியாரையும், சங்கிலியாரையும் நாம் மறக்க முடியாது. தூண்டு தவ விளக்கனை யார் என்று திலகவதியார் போற்றப்படு கிருர். தூண்டு சோதி விளக்கனையார் என்று சங்கிலியார் போற்றப்படுகிருர். தந்தையார் புகழனுருடைய கால்வழி யற்றுப் போகாமல் பாதுகாத்தவர் திலகவதியாரே. மருணீக்கி யார் சமணம் புக்க செயலைத் தாங்க மாட் டாது ''அடியேன் பின் வந்தவனை மீண்டு வினைப் பரசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டுமென்று'' இறைவனிடமே விண்ணப் பித்தார். இதனை ஏற்றுக் கொண்ட எம் பெருமான் ''உன்னுடைய மனக்கவலை ஒழி'' என்று ஆறுதல் கூறியதுமன்றி மருணீக்கி யாருக்குச் சூலைநோய் கொடுத்து ஆட் கொண்டார். தம்பியாருக்குத் திருநீறணி வித்து திருப்பதிகம் பாடுவித்து எம்பெரு

மான் வாக்காக "நாவுக்கரசு என்னும் நாமம் உலகேழினும் மன்னுக" என்ற பெரு நிலைக்கு ஆக்கி வைத்தார். இதனாலேயே "உற்றவிடத்து உய்வு நெறி தருவாராய்த் தம்முன்பு வந்தார் பின் தாம் வந்தார்" என்று, திருநாவுக்கரசர் புராணத்திற் சிறப் பித்துப் பேசப்படுகிறது.

இன்னும் சங்கிலியாருடைய தவ வாழ் வையும் நாம் அறிகின்ற போது பெற்றோர் கள் அவருக்குத் திருமணம் பேசியபோது.

"இன்றுஎன் திறத்துநீர் மொழிந்ததிது
வெண்பரிசுக் கிசையாது
வென்றி விடையார் அருள் செய்தார்
ஒருவர்க் குரியேன் யான்."

என்று மொழிந்த திறன் அவரினுறுதிப் பாட்டையும் தவக்கோல விருப்பையும் எடுத் துக் காட்டுகிறது. இதனாலேயே, தம்பிரான் தோழரையும் விஞ்சிச் சங்கிலிக்கு அருள் கொடுத்த சிறப்பை சத்தியம் கேட்ட நிகழ்ச்சி யின் மூலம் நாமறிகிறோம். தம்பிரான் தோழரை மணம் புரிந்து கொள்ளும்படி சங்கிலியிடம் இறைவன் இரு தடவைகள் எழுந்தருளிச் சென்றதை, "வஞ்சியிடைச் சங்கிலியார், வழியடிமைப் பெருமையோ" என்று வியப்போடு எடுத்துக் காட்டுகிறார் சேக்கிழார். எனவே இம்பர் மனைத்தவம் புரிந்து திலகவதியார் பணியாற்றியதும், திருவொற்றியூர் ஆலயத்திலேயே பூமாலை கட்டும் தொண்டிற் சங்கிலியார் ஈடுபட்ட தும், சைவக் கன்னியர்களின் அருட் பணி களுக்குச் சிறந்த சான்றுகளாக அமை கின்றன.

இவ்வாறு சைவத்திற் பெண்கள் பெரும் பங்கு கொண்டு, அதனை மேலோங்க வைத்த சம்பவங்கள் பலவுள. இவர்களில் அன்றாட வாழ்க்கையிலும் நிகழ்ச்சிகளிலும், சமய உணர்வு உயிர் நாடியாக வரைந்து அரன் பூசை, அடியார் பூசை, விருந்தெதிர்தல், திருத்தொண்டு புரிதல், சிவ சின்னம் பேணல், தற்காத்தல், தற்கொண்டார்ப் பேணல், கற்பு நெறி வாழாமை யாகிய பெரும் பண்புகளுடன் வாழ்ந்து வந்துள் ளார்கள். இந்த வழியைச் சைவ மங்கையர் கள் பின்பற்றி வாழ முயல வேண்டும். சைவத்தின் பெருமையையும், சித்தாந்தக் கருத்துக்களையும், திருமுறைகளையும் சைவ மங்கையர்கள் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். குடும்பத்தினருக்கும் இவற்றைப் போதிப்பதிற் சிறந்த சைவ ஆசிரியராகப் பெண்கள் விளங்க வேண்டும். இல்லங் களிலே, வாரத்திற் கொருமுறை கூட்டுப் பிரார்த்தனைகளும், திருவிளக்குப் பூஜை களும் நிகழ்த்தப் பயின்று கொள்ள வேண் டும் வருடமொருமுறை, தலயாத்திரை செய்வதில் பெண்கள் ஈடுபட வேண்டும். திருமணங்களை நிறைவேற்றி வைத்தல், அநாதை இல்லங்கட்கு உதவுதல், வாழ்க்கை யிலே விரக்தியுற்றோர்க்கு ஆறுதல் கூறி நல்வழிப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபடுவதும் சைவ மங்கையரின் பெருங்கடனாகும்.

குடும்ப வருவாயில் குறிப்பிட்டவொரு விகிதத்தைச் சமயப் பணிக்கு ஒதுக்கி வைத்து வாழப் பயின்று கொள்வதோடு சிறந்த சைவ கலாச்சாரத்தோடு வாழும் நெறியினை யும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு சமய வாழ்வில் எமக்கு எமது பங்கை ஆற்றி வருவோமானால் வீடும் நாடும் சிறந்து தெய்வ ஒளி வீசும் என்பதற்கு ஐயமில்லை.

இன்று காலை இத்தகையதொரு திரு வருள் அனுபவத்தைப் பெற அனைவருக்கும் நல் வாய்ப்புக் கிடைத்துள்ளது. எனவே ஈழத்துச் சைவ மக்கள் பேரிலே எனது மனமுவந்த நன்றியைச் சமாஜத்தினருக்குச் சமர்ப்பித்து எல்லாம் வல்ல சிவபரம் பொருளின் கருணையினால் சமாஜப் பணிகள் மேன்மேலும் ஓங்க வேண்டு மென்று பிரார்த் தித்து அமைகின்றேன்.

17-5-1980

※

" திருக்கோயில்களில் திருவிழாக்களை, திருவிழாக்களாக நிறையச் செய்ய, ஆங்காங்கு உள்ள சைவ மக்கள் முன்வர வேண்டும். "

# மணிவாசகரின் ஞான உள்ளம்

அறிவாற் சிவமாக விளங்கியவர் மணிவாசகர். திருவருள் வழிநின்று அவர் அருளிய பனுவல்கள் திருவாசகமும் திருக்கோவையாருமாகும். பாவை பாடிய வாயாற் கோவையைக் கேட்க விரும்பிய தில்லையானருளால் வெளிவந்ததே கோவை. திருவாசகத்தின் தொடக்கம் 'நமச்சிவாய' என்றும் திருக்கோவையாரின் முடிவு 'ஊதிபமே' என்றும் அமைந்துள்ளது. எனவே நமச்சிவாய ஊதிபமே என்று நுண்பொருள் தொனிக்கக் கூடியதாக அடிகளின் ஞான உள்ளத்திலிருந்து வெளிவந்துள்ளது.

இறையுணர்வு தருவதில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிச் சிறப்பு தமிழ்மொழிக்குண்டு. தமிழிலே இறையுணர்வு பற்றி ஓர் அடி பாடத் தொடங்கிவிட்டாலே உடன் தெய்வீகம் நிரம்பி வழியும். இந்த அநுபவத்தைத் திருவாசகத்தில் நிரம்பக் காணலாம். மணிவாசகப் பெருமான் ஞான நெறியில் நின்று சைவமும் தமிழுந் தழைக்கப் பாடியவர். "தண்ணூர் தமிழளித்த தண் பாண்டி நாட்டானே" என்று கூறுவதாலும் "கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறை வாய் நுழைந்தனையோ" என்று கூறுவதாலும் அவர்களின் தமிழார்வம் நமக்குப் புலனாகிறது. இவர்கள் காட்டிய நெறி ஞான நெறி. இராச யோகம், பக்தியோகம், கர்ம யோகம், ஞானயோகம் என்பவற்றில் மற்ற மூவரையும் விட அடிகள் சிறிது வேறுபடுகிறார். மற்ற மூவர்களின் வாழ்க்கையிலும் பக்தியும். கர்மமுமே தலைசிறந்துநிற்க, இவரின் வாழ்வில் ஞான யோகமே தலைசிறந்து நிற்கிறது. இதனைத் திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் சிறப்புறக் காணலாம். முதலமைச்சர் பதவியிலே இருந்தும் நிலைத்த பொருள் நிலையாத பொருள் என்பவற்றை உணர்ந்தவர். குதிரை வாங்கிவரச் சொல்லிக் கொடுத்தனுப்பிய பொருளினை இறைவன் திருப்பணியிலே செலவுசெய்தார். மன்னன் பிறநாட்டின்மேல் போர் தொடுப்பதை அவர் விரும்பவில்லை. 1800 ஆண்டுகட்கு முன்பு, இன்று நாம் பேசுகிற பஞ்சசீலக் கொள்கை அடிகளிடம் காணப்பட்டது. அரசனளித்த பொருள் அனைவருக்கும் பயன்படவேண்டுமென்ற எண்ணத்தாற் கோவிற் திருப்பணியிற் செலவு செய்தார். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக எடுத்தபடியால் இறைவன் சற்குருவாக வாய்த்தான். அடிகளும் தன்னையுணர்ந்து தலைவனை உணரும் நிலைக்கு வந்தார். உலகம் அவர் மனதில் துச்சமான நிலையிற் கணிக்கப்பட்டது. அதனாற்றான் ஏவலாளரைவிட்டு அழைத்த சமயத்தில், அரசனின் அழைப்பைக்கூட அவர் மதிக்கவில்லை. திரிமலந்தீர்ந்து சிவனவனாகி மாறியவர்களின் தன்மை இதுவே. அன்பு நிலையில் எழுந்தது திருவாசகமென்றால் ஆனந்த நிலையில் எழுந்தது திருக்கோவையாராகும்.

ஆன்மாக்களின் இயல்பான தன்மை மேல்நோக்கிச் செல்லவேண்டுமென்று விரும்புதலேயாகும். பலர் மருள் வழியாக கீழ் நோக்கிச் செல்வர். சிலர் அருள் வழியாக மேல்நோக்கிச் செல்வர். இந்த இரண்டாவது வழியை நான்கு படிகளில் அமைக்கலாம். தன்னுணர்வு, முயற்சி, காட்சி, அதீத நிலை என்பன அப்படிகளாகும். இந்த முதற் படியில் நின்று நோக்கினால்

"வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்
......................................................................
அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையை"

என்றும்,

"இமைப்பொழுது மென்னெஞ்சில்
நீங்காதான்"

என்றும் தன் உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். தன்னுணர்வு ஏற்பட்டபொழுது அவ்வுணர்வைக் கொண்டு உயிர் நன்முயற்சியில் ஈடுபடுகிறது! எங்குற்றான் எவ்விடத்தானென்று ஆராய்கிறது! ஆராய்ச்சிக்கு அகப்படாதபொழுது அழுகிறது; சுற்றிச் சுற்றி அவர் திருவடிகளையே தேடுகிறது;

தேடிக் காணுதவிடத்தில் தனது குறையை உணருகிறது; தனது நெஞ்சையே நொந்து "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே, வல் வினைப்பட்டு ஆழ்கின்றாய்" என்று திட்டு கிறது; இன்னும், "ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற்கு அன்பிலை, என்புருகிப், பாடு கின்றிலை, பதைப்பதும் செய்கிலை; பணிகிலை; பாதமலர் சூடுகின்றிலை; சூட்டுகின்றதுமிலை; துணையிலி பிணநெஞ்சே" எனத் தன்னையே நொந்து இறைவனைத் தேடும் முயற்சியில் உள்ளத்தைச் செலுத்தி நிற்றலே இரண்டா வது படியாகும்.

காட்சி என்ற மூன்றுவது படியை எடுத்துக் கொண்டால் அந்த நிலையிலேயே உள்ளம் ஓரளவு அமைதியை அடை வதைக் காணலாம். "உணக்கிலாததோர் வித்து மேல்விளையாமல் என்வினை யொத்த பின், கணக்கிலாத் திருக்கோலம் வந்து நீ காட்டினாய் கழுக்குன்றிலே" என்னுந் திருக் கழுக்குன்றப் பதிகத்தில் அடிகள் அடைந்த அமைதியைக் காணலாம். பிரிவாற்றுமைத் துயர் அலைத்ததனுல் பல தலங்களுக்கும் செல்லாது திருப்பெருந்துறையிலிருந்து திரு வுத்தரகோச மங்கை, திருவாவடுதுறை முத லிய தலங்களுக்குச் சென்று திருக்கழுக்குன் றத்தை யடைந்து நின்ற நேரத்தில் அங்கே அடிகளுக்கு மேலும் பிரயாணம் அவசிய மில்லை என்ற கருத்திலே காட்சி யருளப் பட்டது. அதனுல் அங்கு நின்று சிதம்பரத்தை யடைந்தார். அங்கேயும் குருமூர்த்தி வடி வைக் கண்டு அக்காட்சியிற் திளைத்துச், "சிந்தைதனைத் தெளிவித்துச், சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தம் அணி கொள் தில்லை கண்டேனே" என்று பெரு மிதங் கொண்டார். இந்தப் பெருமிதத்தி னுலேயே நாலாவதுபடி தொடங்குகிறது. அடிகள் உலகத்திற்காகப் பாடியது திருவாசக மென்றுல் தனக்காகப் பாடியது திருக் கோவையார் என்று கூறலாம். நாலாவது படியில் எழுந்தது திருக்கோவையாரே. திருவாசகம் தோத்திர நூல்; திருக்கோவை யார் சாத்திர நூல். அத்துடன் பேரின்பப் பெருநூலுமாகும். "ஆரணங் காணென்பர் அந்தணர்" என்ற பாடலை நோக்கும் போது பல முகங்களும் பட்டைகளும் தீந்த ஒரு வைரக் குன்றம் எவ்வாறு கதிரொளிக் கேற்பவும் காண்போர் நிற்கும் கோணத்திற் கேற்பவும் தன்னொளியின் பகுதிகளைக் கட்டுமோ அவ்வாறே பொருள் காட்டி உணர் வூட்டுவது திருக்கோவையாராகும். இது மதுரைப் பெருமான் அருளால் மணிவாசக ருள்ளத்தில் முகை கொண்டு கூத்தப்பெரு மான் அருளாகிய கதிர்களால் நானூறு இதழ்களுடன் மலர்ந்தது; கற்போர்க்குப் பேரின்பமாகிய தேனைக் கொடுத்தது. இது தான் கோவையின் முதலிலேயுள்ள திருவளரி தாமரையென்பது. அத்தொடர் ஒன்றினையே திருக்கோவையார் என்று கூறினும் அதில் மிகையொன்றுமில்லை.

"உருவாருந் தமிழ்ச்சங்கத்
தடம்பொய்கைத் தோன்றி
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான
ஒளியையுடைத் தாதி
மதுவாருங் கிளவியிதழ்
நானூ றுகி
மதுப்பொருளாய் மதிப்புலவர்
வண்ட லுண்ண
தருவாரும் புலியூரின்
உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனுமிரவி
தன்கதிரா லலரும்".

இதிலே பக்குவ ஆன்மா தலைவனுகவும், பரம்பொருளாகிய எம்பெருமான் நாயகி யாகவும், தோழி திருவருளாகவும், தோழன் ஆன்மபோதமாகவும் செவிலித்தாய் திரோ தாயியாகவும், நற்றாய் பரையாகவும் அறிவன் நூற் பொருள் செல்கிறது. மற்றப் பனுவல் களிலும் பார்க்க இதிலே காணப்படும் ஒரு மாறுபாடு ஆன்மாவை நாயகனுகக் கொள்ளு வதே. ஏனெனில் தனியே ஒவ்வொரு துறைகளைச் சொல்லாமற் கோவையாக நானூறு துறைகளைச் சொல்லுவதாலும், சிவானந்தம் போலும் சிற்றம்பலம் போலு மென்னும் மேன்மையை நாயகிக்குக் கொடுப் பதாலும் எம்பெருமானை நாயகி பாவத்தி லேயே அமைத்துள்ளார். அபேத இன்ப மாகப் பெற்று ஆனந்தம் அநுபவிக்குங்கால் நாயகி கூற்றையும் அறிந்துய்ய வேண்டும் திருக்கோவையாரில் வரும் இருபத்தைந்து கிளவிக் கொத்துகளுக்கும் இருபத்தைந்து

பேரின்ப விளக்கமுண்டு. இயற்கைப் புணர்ச்சிதான் ஞானகுரு தரிசனம். கடைசியில் உள்ள பரத்தையிற் பிரிவுதான் உயிர் சர்வஞ்ஞத்துவம் பெற்று அளவிலாப் பேரின்பமெய்தி யிருக்கும் நிலை. இப்படியாக ஒவ்வொரு பிரிவிற்கும் விளக்கம் கூறிற் பெருகும். சில நுணுக்கங்களை மாத்திரம் கவனிப்போம்.

''வளைபயில் கீழ்கடல் நின்றிட
மேல்கடல் வானு கத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத்
தில்லைத்தொல் லோன் கயிலைச்
சிலைவயின் நீங்கிஇக் கெண்டையங்
கண்ணியைக் கொண்டு தந்த
விளைவை யல்லால் வியவேன்
நயவேன் தெய்வம் மிக்கனவே''.

ஏதோ ஒரு திசையாகச் சென்றுகொண்டிருந்த தன்னை அகப்படுத்தி தன்னை உய்யு நெறி காட்டிக் காட்சி தந்து உய்யக் கொண்ட தன்மையை விளக்குவதற்குக் கீழ்கடலிலிட்ட நூலொன்று மேல்கடல் நின்ற துளைவழி சென்று நின்ற தன்மைக்கு ஒப்பிடுகிறார். இதனையே அற்புதப்பத்திலும் அருளிச் செய்திருக்கிறார். ''இவனைக் கண்டு இங்கு நின்று அங்கு வந்த கவளக் களிற்று அண்ணலே இக்கடலிடத்தே'' எனத் தலைவனைப் பாங்கன் வியக்கிறான். இது ஆன்மபோதம் பின் வாங்கும் நிலையைக் காட்டுகிறது.

எனவே ஞானநெறி காட்டிய மணிவாசகர் தமது அநுபவத்தை எடுத்துக்கூறிய தன்மையிலே நாம் கலந்து பாடுவோமானால் அது இராமலிங்க வள்ளலாருக்குச் சுவைத்தது போல் ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிக்குமன்றோ!

[1964ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற திருமுறை விழாவில் திரு. அ. ச ஞானசம்பந்தன் அவர்களின் தலைமையில் பேசப்பெற்றது.]

---

# அன்னை அருள்

சமயம் என்பது மனிதனுடைய அன்றட வாழ்க்கை அலுவல்களிலிருந்து விடுவிக்கக்கூடிய ஒரு சிறந்த மார்க்கமாகும். இது இம்மை, மறுமை, வீடு மூன்றுக்கும் வழி காட்டும். மனிதனுடைய புறவாழ்வுக்கு ஊணும், உடையும், உறையுளும் தேவையாவதுபோல் அகவாழ்வுக்கு வழிபாடு தேவையாகும்; இவ்வழிபாட்டைப் பலவகையில் வேறுவேறு காலங்களில் நடாத்தி வருகின்ற மரபு பல நூற்றாண்டு காலமாகப் பேணப்பட்டு வருகிறது. சிவனைக் குறித்துச் சிவராத்திரியும், சக்தியைக் குறித்து நவராத்திரியும், முருகனைக் குறித்துக் கந்த சட்டியும். விநாயகனைக் குறித்துச் சதுர்த்தியும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. இவற்றில் நவராத்திரி தினங்கள் சிறப்பான தேவி வழிபாட்டு நாட்களாகும். இந் நாட்களில் உலக மாதாவாகிய பராசக்தியை வேறுவேறு வடிவங்களில் வைத்துத் துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரஸ்வதியாகவும் வழிபடுவோம்.

''தனந்தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும்அன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி
ராமி கடைக்கண்களே.''

என்றார் அபிராமிபட்டர்.

மனிதவாழ்க்கை செந்நெறியிற் கழிய வேண்டுமானால் அறிவும் பொருளும் வீரமும் நல்லோர் சேர்க்கையும் நமக்குத் தேவை. இவற்றை உலக மாதாவாகிய தாயே உலகத்

தவர்க்கு வழங்குகிறுள். "அவள் தந்த ஆக்கமிவ் வுலகமெல்லாம்" என்று சித்தாந்தம் கூறுகிறது. நமது பேச்சும், மூச்சும், ஆக்கமும், ஊக்கமும், ஏற்றமும், தோற்றமும் அவளாலேயே வந்தமைந்துள்ளன. அவளே அருட்சக்தி. மாரிபோல் அவனருளை வாரி வழங்குகின்ற தெய்வம் அவள். அப்பனுகிய அவனும் அம்மையாகிய அவளும் ஒரு வடிவமே. ஒன்று அறிவுச் சொரூபம், மற்றது அன்புச் சொரூபம். சில இடங்களில் எம்பெருமானை "அத்தா" என்று அழைத்துப் பாடிய நாயன்மார் வேறு சில இடங்களில் "அன்னே" என்று பாடுகிறுர்கள்.

"அன்னே அன்னே என்றும் சிலசமயம்
நின்னையே ஐயா ஐயா என்னவே
அலறிடும் சிலசமயம்"

என்றுர் தாயுமானவர். அம்மையும் அப்பனுமாய் இறைவனை வழிபட்டே அடியார்கள் அருளமுதம் மாந்தினர். இறைவன் யோக வடிவிலேயும் தேவியுடன் இருந்தே அருள் பாலிக்கின்றுன் என்பதை மணிவாசகர் திருவாசகத்தில் எடுத்துக் காட்டுகிறுர்.

"நானும்என் சிந்தையும்
நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையலும்
தாழ்சடையோன் ஆண்டிலனேல்"

என்பது அவர் கூற்றுகும்.

"மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்"

என்று பாடுகிறுர் ஞானசம்பந்தப் பெருமான். எனவே போக வடிவிலும் கோர வடிவிலும், யோக வடிவிலும் சிவமும் சக்தியும் இணைந்தே தொழிற்படும் என்பது புலனுகும். தேவியின் அருள் பெற்றவர்கள் பலர். கம்பர், காளமேகம், காளிதாசர், குமரகுருபரர், பாரதியார் போன்ற கவிஞர் பெருமக்கள் தேவியை வழிபட்டுப் புலமை பெற்று அரசரோடு சரியாசனத் தகைமைக் குரியராயினர். பட்டர் தமது அபிராமி அந்தாதியில் தேவி வழிபாட்டினுல் அடையும் பேறுகளை விளக்குகிறுர்.

"சொல்லும் பொருளும் எனநட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுவார்க்
கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ
லோகமும் சித்திக்குமே."

எனவே, நவராத்திரி நாட்களில் தேவியைக் கும்பத்திலேயும், பிம்பத்திலேயும் அமைத்து வழிபட்டு, வீரம், செல்வம், கல்வி என்பவற்றைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

[வெளியீடு: கலாசாரப் பேரவை— வலிகாமம் தெற்கு, சுன்னுகம். கலைவிழா மலர்—1972]

⁂

"அருட் தெய்வமாக, அழகுத் தெய்வமாக, ஞானத் தெய்வமாக, தமிழ்த் தெய்வமாக விளங்குகின்ற முருகனுக்குத் தமிழர் கண்ட வழிபாடு தொன்றுதொட்ட வழிபாடாகும். "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்ற தொல்காப்பிய அடி அதனை வலுயுறுத்துகின்றது."

* * *

"மகா கும்பாபிடேக விழா அருள் நிகழ்ச்சிகளைக் காண்பது பெரும் புண்ணியமாகும். பெருஞ்சாந்திவிழா, குடமுழுக்கு விழா என்றெல்லாம் பேசப்படும் இந்தத் தெய்வச் சாந்நித்தியம் வாய்ந்த திருவிழாவைக் காணும் பேறுபெற்றவர்கள் பெரும் பாக்கியவான்கள்".

# சரஸ்வதி வழிபாடு

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் தெய்வமாக விளங்குபவள் அன்னை சரஸ்வதி. ஞானங்களுக்கெல்லாம் இவளே நாயகி. வெள்ளைக் கலையுடுத்து புத்தி, கல்வி, வாக்கு ஆகியவைகளுக்குத் தலைவியாய் வெண்டாமரையில் எழுந்தருளி வீணை ஏந்திய கையுடன் வீற்றிருப்பாள். தன்னைப் போற்றுபவர்களின் அறியாமையை நீக்குவது இவளது கருணை, விளையாட்டு. இதனாலேயே அறிவினால் இயங்கும் நிலையங்கள் தோறும் அன்னைக்கு விழா எடுக்கப் படுகிறது.

இறைவனைத் தாயாக வணங்கும் பெருமை இந்து தர்மத்தின் சிறப்பை உணர்த்துவதாகும். அந்த உறவில் அமைதியும் ஆனந்தமும் பிறக்கிறது. இந்தப் பேரானந்த உறவைப் பலப்படுத்தும் நாட்கள் நவராத்திரி நாட்கள். இந்நாட்களில் சக்தி பூசையினால் மகிழ்ச்சியடைகிறது நம் நாடு. வீரம், செல்வம், கல்வி என்பவற்றாற் சிறப்புப் பெற்ற நாடு நம் நாடு. எல்லாவற்றுக்கும் முதல்வியாகிய சக்தி: கலைமகள், திருமகள், கொற்றவை என மூவராய் நிற்கிறாள். கலைமகளது திருவருளைப் பெற்றுக் கல்வியிற் சிறந்து விளங்கினோர் பலர். கவிச் சக்கரவர்த்தி கம்ப நாடரும் கலைமகள் திருவருள் பெற்றே சிறப்புற்றார் எனக் கூறப் படுகிறது. குமரகுருபரர் சுவாமிகளும் கலைமகளருள் பெற்று மொகலாய மன்னனுடன் உரையாடிப் பெருமை பெற்றார்.

''பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற்
பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காய்''

என்று கலைவாணியிடம் வேண்டி நிற்கிறார். பாட்டுக்கொரு புலவன் பாரதியும் பக்தியோடு பரவுகிறார்.

''வேதத் திருவிழியாள் — அதில்
மிக்கபல் லுரையெனும் கருமையிட்டாள்
சீதக் கதிர்மதியே — நுதல்
சிந்தனை யேகுழல் என்றுடையாள்
வாதந் தருக்கமெனும் — செவி
வாய்ந்தநற் துணிவெனும் தோடணிந்தாள்
போதமென் நாசியினாள் — நலம்
பொங்குபல் சாத்திர வாயுடையாள்
கற்பனைத் தேனிதழாள் — சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாள்''

எனப் பல வகையில் அன்னை கலைமகளின் திருவுருவை வர்ணிக்கிறார்.

நவராத்திரி இறுதி மூன்று தினங்களும் மகா சரஸ்வதிக்குப் பெருவிழா எடுக்கிறோம். ஏனெனில் இவளே பிரபஞ்சத்தை நிர்வாகம் செய்பவள். ஒவ்வொரு சிறுதுறையிலும் இறங்கி சக்திகளின் ஒத்துழைப்பைக் கூட்டி வைப்பது சரஸ்வதியின் கடமை.

மனித வாழ்க்கை என்ற வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறாள். அதைப் பேரின் பத்தோடு சுருதி சேர்க்கிறாள். நாம் அவளை விரும்பித் தியானம் செய்யும்போது அவள் வீணையொலி எம்முள் ஒலிக்கிறது. ஞானமும் வல்லமையும் எம்மிதயத்தில் இறங்குகிறது. அங்கிருந்து பூலோகத்துக்கு அவை பாய்ச்சப் படுகிறது. இதனால் விண்ணும் மண்ணும் இசைந்து காட்சி தருகிறது. இவற்றை அக அநுபவத்திற் கண்டுகொள்ள வேண்டும்.

கொழும்பு மருத்துவ பீடத்தின் இந்து சங்கச் சார்பில் கலைமகளுக்கு விழாவெடுப்பது போற்றுதற்குரியது. கலையைக் கடவுளாகக் கண்டவர்கள் எம்முன்னோர். அந்த அடிப் படையில் மருத்துவ மாணவர் உடற்பிணி, மனப்பிணி, உயிர்ப்பிணி மூன்றையும் அகற்ற வல்லுநராகப் பயிற்சி பெறல் வேண்டும். இதற்கு வழிகாட்டுவது தெய்வீக விழாக்களே யென்பது வெளிப்படை. இவர்கள் ஞான மணங் கமழும் மலரொன்றினையும் வெளியிடவிருப்பது உவகைக்குரியது. எனவே இந்து மன்றத்தினைப் போற்றி, செயற்படும் உறுப்பினரைப் போற்றி அன்னை கலைவாணியின் அருளால் இவர்கள் சகல சிறப்பும் பெற வாழ்த்தி அமைகின்றேன்.

[வெளியீடு:- இந்துமன்றம், மருத்துவ பீடம், கொழும்பு வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம், கலைமகள் விழா மலர்-1978.]

# ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

எல்லாப் பிறப்புள்ளும் மானிடப் பிறப்பு ஒன்றே மாண்பு வாய்ந்தது. உயிர்கள் எனப் படுபவை ஒன்று முதல் ஆறுவரை அறிவுடையவை. ஆனல் ஆறறிவும் நிறையப் பெற்றவர்கள் மானிடரே. ஏனைய உயிரினங் களுக்கு ஆறும் அறிவு இல்லை. இந்த ஆருவது அறிவானது சிந்தித்துத் துணியும் பகுத்தறி வாகும். இதனையே வள்ளுவர் ''சென்ற விடத் துச் செலவிடாது தீதொரீஇ நன்றின் பால் உய்ப்பதறிவு'' என்று கூறினர். நன்மை இது நீதி இது அநீதி இது என்று பகுத்துணரக் கூடிய சிந்தனை மனிதன் ஒருவனுக்கே உண்டு. அத்தகைய சிறப்பாற்றல் பெற்ற மனிதன் ஒழுக்கத்தை உயிராக மதிக்கக் கடமைப் பட்டவன். மக்களுக்கு பண்பு ஒழுக்கமாகவே அமைகிறது. சிலசமயங்களில் விலங்குகளுக் கும் ஏனைய உயிரினங்களுக்கும் சில சிறந்த பண்புகள் அமைந்திருப்பதைக் காணுகிறோம். ஆனல் மனிதன் அறம் பிறழாத ஒழுக்கத் தினலேயே சிறப்படைகிருன். மக்கட் பிற வியை எடுத்த நாம் பிறப்பினுல் மாத்திரம் பெருமை அடையமுடியாது. வாழுகின்ற சிறப்பினுற்றான் மக்கட் பிறப்புக்குப் பெருமை ஏற்படுகிறது. தமிழிலக்கியத்திலே ஒழுக்கம் என்பதை ''திணை'' என்ற சொல் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் என்ற பழைய நூலிலும் ''உயர்திணை என்மனர் மக்கட் சுட்டே'' என்று குறிப்பிட்டுள் ளார். சங்க இலக்கியங்களிலும் திணை என்ற சொல் ஒழுக்கத்தையே குறிப்பிடுகிறது. எனவே ஒழுக்கம் மக்கள் வாழ்விற் சிறந் தோங்க வேண்டும் என்ற கருத்து மிகப் பழம்பெரும் கருத்தாகும்.

பண்டைத்தமிழ் மக்கள் ஒழுக்கத்தையே உயிராகப் பேணினர்கள். ஆனல் வள்ளுவர் அதற்கு மேலும் அரண் செய்து சிறப்பிக் கிருர்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.''

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஒழுக்கக் கேட்டினுல் அடையும் பழிக்கு நன் மக்கள் நாணினர்கள். அப்படி ஒரு தீப்பழி நேரு மாயின் ஒழுக்கத்தைப் போற்று முகமாக உயிரைவிடவும் தயாராக இருந்தார்கள். உயிர்கொடுத்துப் புகழ்கொண்ட வாழ்க்கை, நம் முன்னேருடைய வாழ்க்கையாகும். இதனுலேயே ஒழுக்கமுடைமை என்ற ஒரு அதிகாரத்தையே அமைத்துத் தந்துள்ளார் வள்ளுவர். நமது முன்னேர் வாழ்வில் இலட்சியம் காணப்பட்டது. அந்த இலட்சி யத்திற்கு அடிப்படை ஒழுக்கமே என்பது விளங்கக் கிடக்கிறது. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் புறநானூறு அழகாகக் காட்டுகிறது. ''பிறர் அஞ்சுவது அஞ்சி புக ழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறின் கொள்ளலர்'' என்பது புறநானூற்றுப் பாடல் ஆகும். இன்னும் ஒ ழு க் க மு டை ய வ னை உயர் பிறப்பின னென்றும் அது அற்றவனை இழிபிறப்பின னென்றும் சான்ருேர்கள் வகுத்துக் காட் டினர்,

''ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி''

என்ற குறட்பாவும் இப்பாகுபாட்டைக் காட்டுகிறது. மக்களின் உயர்வு தாழ்வு ஒழுக் கத்திலேதான் தங்கி இருக்கிறது. ஏனென் ருல் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என் பர் வள்ளுவர். தமிழ் இலக்கியங்களிலே சீரிய ஒழுக்கத்தைப் பாத்திரங்களின் மூலம் பெரும் புலவர்கள் எடுத்துக் காட்டினர். தசரதன் தனது வாய்மையைக் காப்பதற்காக உயிர் விட்டதை இராமாயணத்திற் காண்கிறோம். தருமன் பொறுமை, தருமம் என்னும் ஒழுக் கத்தை மேற்கொண்டமையால் உலகம் போற்றும் உத்தமனுக மகாபாரதத்திற் காட்சி அளிக்கிருன்.

''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்''

என்பதற்கிணங்க நல்லொழுக்கத்தை மறந்து வாழ்ந்தோர் முடிவில் துன்பப்பட்டு ஒழிந்ததைச் சரித்திரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. துரியோதனன், இராவணன் முதலியோர் பேராற்றல் படைத்தவர்களாய் இருந்தும் ஒரு சிறிய ஒழுக்கக் கேட்டினால் முடியிழந்து மானமிழந்து தீராப்பழி எய்திய வரலாறுகளே இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளன, பெண்வழிச் சென்ற அதிகமான் மகனுக்கு அறிவுரை கூறும்பொழுது ''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்ற புறப்பாட்டினால் மக்களின் ஒழுக்கத்திற்கேற்பவே நாடு சிறப்படையும் என்பதை ஔவையார் காட்டுகிறார். நாம் பழைமை பேசுவதில் மாத்திரம் பெருமைப்படுகிறோம், அந்தப் பழைமையை அவர்கள் வாழ்ந்துகாட்டிச் சீரிய ஒழுக்கத்தை எம் வாழ்வில் இணைத்துக்கொள்ளத் தயங்குகிறோம். இன்று நம் மத்தியிலே ஒழுக்கம் எது? ஒழுக்கக்கேடு எது? என்று பகுத்துணர முடியாத ஒரு அவலநிலை உருவாகி வருகிறது. இந்நிலையில் வள்ளுவருடைய குறளுக்குச் சிறந்த முக்கியத்துவம் கொடுத்துப் போற்றுவது தமிழ்ச் சங்கங்களின் பெருங் கடனாகும்.

['தமிழ்க்கழகம்', தொழிற்றிணைக் கழகம், கொழும்பு – 5, தமிழாரம் 10ஆவது ஆண்டுச் சிறப்பிதழ்]

---

# தோத்திரப் பிரியன்

''ஆதியந்த மாயினும்
ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினும்
சோதியுள்ளோர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையாற்
கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால்
உணர்ந்துரைக்க லாகுமே.''

இறைவழிபாட்டிற் சிறந்த இரு பகுதியாக அமைந்தவை தோத்திரமும் தியானமும். அவற்றுள் தோத்திரமென்பது பிற இடங்களிற் சென்று அலைந்து அல்லலுறும் மனத்தை ஒருமுகப்படுத்தி இறைவன்பால் செலுத்த உதவுவதாகும். மக்களை அருளுலகில் ஈடுபடவைக்கும் சக்தி தோத்திரங்களுக்குண்டு. கண்ணீரை உகுக்கச் செய்து உள்ளத்தை உருக்கிப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடுவதும் தோத்திரங்களே. தியானமென்பது இறைவன் வேறு நாம் வேறு என்ற நிலையில்லாமல் அவனோடு ஒன்றித்து நிற்க வைக்கும் நிலையாகும். அந்த அனுபவத்தை அகத்திலே காணலாம். அஃதாவது அகவுலகில் சஞ்சரிக்க உதவியாக அமையும். ஆனால் முதற்கண் இன்றியமையாது வேண்டப்படுவது தோத்திரமே. ஏனெனில் புறத்திலே அமைதியை ஏற்படுத்தித்தான் அக அமைதிக்கு வழிகாணலாம். தோத்திரங்கள் பாட்டாக அமைந்து இசையோடு சேரும் பொழுது உருக்கத்தைத் தருகின்றன. உள்ளத்தை இன்புறுத்துவது இனிய ஓசையே. இசை என்று கூறும்பொழுதும் இறைவனையும் எம்மையும் இசைவிக்கின்ற ஒரு சக்தி உண்டு என்பதை அச் சொல்லே காட்டுகின்றது. கேட்போர்களையும் பாடுவோர்களையும் பரமனிடத்து இசைவித்து நிற்பது பாட்டேயாகும். இசைத் தமிழாற் பாடிப் பரவுகின்றவரே இறைவனை நன்கு உணரலாம் என்பது அருளாளர் கருத்து. ''அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே'' என்றார் அப்பர் சுவாமிகள்.

''பண்ணொன்ற இசைபாடும்
அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும்
மணிகண்டன் மருவுமிடம்''

என்பது ஞானசம்பந்தர் தேவாரமாகும்.

வேதங்களில் சாமவேதம் இசையோடு பாடப்படுவதால் அதுவே இறைவனுக்கு மிகவும் உவப்பானது என்று குறிப்பிடப்படுகின்றது. வேதத்திலும் பல பகுதிகள் இருப்

பினும் தோத்திரங்களாக அமைந்த பகுதி களையே சிறப்பு வேதமாக ஓதுவார்கள். இறைவனே தன் திருவாயால் வேதங்களை ஓதிக்கொண்டும் தன் திருச் செவியால் இசையை அநுபவித்துக்கொண்டும் இருக் கிறான் என்பது புராண விளக்கம். அவ னுடைய வடிவமே தோத்திரமாக விளங்கு கிறதென்பர். பண்டைக் காலத்திலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தேவபாணி என்ற பெயரில் வழங்கப்பட்டமையும் யாவ ராலும் அறியப்பட்ட செய்தியாகும். இற்றைவரை தமிழில் எழுந்த பக்திப் பாசு ரங்களும் திருமுறைகளும் எண்ணில் அடங்கா. இறைவனே தோத்திரப் பிரியனாக இருந்து அடியார்கள் மூலம் இவற்றை உல கிற்கு வெளிப்படுத்தியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவ னால் தடுத்தாட்கொள்ளப்பட்ட நேரத்தில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. திருவெண் ணெய் நல்லூரிலே கோயில் கொண்டு எழுந் தருளிய பெருமான் அசரீரி வாக்காகச் சுந்தரருக்கு மொழிந்ததனைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு காட்டுகிறார்.

''மற்றுநீ வன்மை பேசி
வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பில்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மை
சொற்றமிழ் பாடு என்றார்
தூமறை பாடும் வாயார்.''

அஃதாவது தாம் விரும்பும் பாட்டு அர்ச் சனை பாட்டே என்பதை உலகுக்குக் காட்டி யருளினார். அடியார்கள் பல தலங்களுக்கும் சென்று பாடிப் பாடி இறைவன் புகழைப் பரவச் செய்தமை பெரியபுராணத்தில் காட் டப்பட்டுள்ளது. இறைவனுக்கு மிக விருப்ப மானது பாமாலையே என்பதைத் தாயுமான சுவாமிகளும் ''பன்மாலைத் திரள் இருக்க பாமாலைக்கே பட்சம் பரமனுக்கே'' என்று பாடி யுள்ளார். பண்சுமந்த பாட்டுகளுக் காக இறைவன் மண் சுமந்தான் என்பதும், பிரம்படிபட்டோன் என்பதும் திருமுறைச் சான்றுகளாகும். ஓரிடத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் மிக நகைச்சுவையாக இறைவன் புகழ்ச்சி விருப்பன் என்பதைக் காட்டுகின் றார். இதற்கு அவர் தரும் சான்று மேலும் சுவையானது. அஃதாவது மாணிக்கவாசகர் சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய பாடல்களை எழுதிப் பாதுகாக்கவேண்டும் என்ற விருப் பம் சிவபெருமானுக்கு ஏற்பட்டது. இதனால் தானே ஏடும் எழுத்தாணியும் கொண்டு மாணிக்க வாசகரிடம் சென்று அவர் பாடிய பாடல்களையெல்லாம் சொல்லும்படி கேட்டு, ஒன்றும் விடாமல் எப்படியோ எழுதினார். ஏனென்றால் ஒரு நாட்டின் அமைச்சர் தன் னைப் புகழ்ந்து பாடிய பாடல் என்பத னாலேயே அவை பெருமைக்கு உரியனவாகை யால் புகழ்ச்சி விருப்பனாகிய இறைவன் அதனை எழுதிக்கொண்டான் என்று காட்டு கின்றார் புலவர். என்றாலும் புகழ்ச்சி விருப் பன் என்று கூறுதலும் தகாது. ஏனெனில் அவன் விருப்பு வெறுப்பற்றவன் என்பதை யும் காட்டுகின்றார். இப்பாடல் நால்வர் நான்மணி மாலையில் அமைந்துள்ளது.

''நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ,
மனம்நின் றுருக்கும் மதுர வாசக,
கலங்குறு சிவன்நெறி விளங்குறு வீர,
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனும் உணரான்; அஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள்; காணிற்
கண்களோ ஒன்று காலையிற் காணும்
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்:
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்;
ஆயினும், தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன், அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்,
இகழ்ச்சி அறியா என்பணி வானே.''

இத்தகைய நிகழ்ச்சிகளில் இருந்து இறை வன் ''தோத்திரப்பிரியன்'' என்பதும் பாடுவார் பழிதீர்ப்பான் என்பதும் நாமறிந்த உண்மையாகும்.

கொழும்பு ஸ்ரீ ஞானானந்த சேவா சமா சத்தின் சார்பிலே ஆண்டாண்டு தோறும் தைமாதக் கிருத்திகையில் நடைபெறும் குரு பூசை விழாவும் இந்த அடிப்படையில் நடத்

தப்பட்டு வருவதாகும். அருட்பாடல்களின் சக்தி சமுதாயத்தில் துயரைப் போக்கி இறைவன் திருவடி இன்பத்தில் திளைக்க வைக்கும் இத்தகைய நிகழ்ச்சிகள் பல இவ்விழாவில் இடம்பெறுவது தவப்பேறுகும். இந்த வாய்ப்பைக் கொழும்புவாழ் மக்களன்றி அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இறுதியில் தாயுமான சுவாமிகளின் ஒரு பாடலைக் குறிப்பிட்டு நிறைவுசெய்யலாம்.

''பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோ
பாமாலைக் கேநீதான் பட்ச மென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னுர் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்துநிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா என்றே
எனைக்கலப்பாய் திருக்கருணை யெம்பி ரானே.

[ஸ்ரீ ஞானந்தசேவா சமாஜம் சிறப்புமலர் — 1978].

---

# அருளது சக்தியாகும்

நாரந்தனை மனோன்மணி அம்பாள் கருணையை நினைக்கவும் வாழ்த்தவும் ஒரு பேறு கிடைத்தமை புண்ணியச் செயலாகும். இந்த வகையிலே இவ்வாலய மகோற்சவ ஆரம்பம்பற்றிப் போற்ற வேண்டிய நாட்கள் இந் நாட்களாகும். கொடித்தம்பம் நாட்டித் தேர்த்திருப்பணி நிறைவு செய்து, ஒரே காலத்தில் அருட்பணிபுரிதல் அற்புதமானது. நாரந்தனை சைவ மக்களின் அயரா உழைப்பும் உறுதியான சைவப்பற்றும் போற்றுதற்குரியது. மனோன்மணி அம்பிகை இவர்கள் உள்ளத்திலே கோயில்கொண்டெழுந்தருளி இத்தனை அருட் செயல்களையும் நடாத்துகின்றுள் என்று கூறுவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்துக்கள் இறைவனையும் இறைவன் அருளையுமே ஆணென்றும் பெண்ணென்றும் சிவன் என்றும் ''சக்தி'' என்றும் கூறிவருகின்றனர். இங்கு சிவன் – சக்தி என்று பாகுபடுத்திக் கூறினுலும் உண்மையில் இரண்டு பொருளில்லை. ஒரு பொருள் இரண்டு நிலையில் விளக்கப்படுகிறது என்பதே பொருள். இதனை உவமை வாயிலாக விளக்குவர். கதிரவன் தன் நிலையில் கதிரவனுக விளக்கப்படினும் நமக்குப் பயன்படும் நிலையில் ஒளிக்கதிராக வெயிலாக விளக்கப் படுகிறுன். இவ்வாறு இருநிலையில் விளக்கப் படினும் பொருள் ஒன்று. இதைப்போன்று சந்திரனையும், நிலவையும் குறிப்பிடலாம். தன் நிலையில் சந்திரன், உயிர்களுக்குப் பயன்படும் நிலையில் நிலா. இதனுல் சந்திரனும் நிலாவும் வேறு பொருளாகி விடுவதில்லை. இறைவனும் இதைப்போன்றே இரண்டு நிலைகளில் விளக்கப்படுதல் உண்டு, தன் நிலையில் சிவன் என்றும் ஆன்மாக்களோடு கொண்டுள்ள தொடர்பு நிலையில் சக்தி என்றும் விளக்குவர். இச்சக்தியே அருள். இறைவன் ஆன்மாக்களோடு கொண்டுள்ள தொடர்பே அருள். இவ்வாறு விளக்குவதைத் தவிர பொருள் இரண்டல்ல ஒன்றே.

''அருளது சக்தியாகும் அரன் தனக்கு
அருளை யின்றித் தெருள் சிவமில்லை
அந்தச் சிவமின்றி சக்தி இல்லை''

என்பது சிவஞான சித்தியார் பாடல். சிவம், சக்தி என வேறுபடுத்திக் கூறினுலும் நாம் வழிபடும் பராசக்தி சிவபரம் பொருளுக்கு அன்னியமான பொருளன்று; சிவமேயானவர்கள் சிவத்தைப் பாடினுலும் எல்லையில்லாத ஆற்றலுடைய பரம்பொருளாகவே பாடுவர்.

'' அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவ மில்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறுஅறி யேனே.''

என்பது திருமூலர் பாடல்.

''அவளை அறியா அமரரு மில்லை
அவளின்றிச் செய்யும் அருந்தவ மில்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகு மாறுஅறி யேனே''

என்பதும் திருமூலர் சக்தியைப் பாடிய பாடல்.

இவ்வாறு பாடியதோடு சிவமும் சக்தியும் பிரிவின்றிக் கலந்து நிற்றலையும் திருமூலர் பாடுவர்,

''உணர்ந்துட னேநிற்கும் உள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையும் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கனிந்தெழு வார்க்குக் கதியளிப் பானே.''

ஆன்மாக்களோடு இறைவன் கொண்டுள்ள தொடர்பே சக்தியாகச் சிவத்தை வழிபடுவதற்குக் காரணமாகும். நம் வாழ்க்கையின் தொடக்கத்திற்கும் முடிவுக்கும் அவனருளே — பராசக்தியே காரணம், நம் வாழ்க்கையின் அனைத்திற்கும் அவனருளே காரணம் என்பதை,

''அருளிற் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுது ஊட்டி
அருளால் என்நந்தி அகம்புகுந் தானே''

எனத் திருமூலர் பாடுவர். இவ்வாறு அருளால் ஐந்தொழில்கள் நிகழ்கின்றன எனக் கூறுவதற்கு வேறாக பராசக்தியே ஐந்தொழில்களையும் நிகழ்த்துவதாகக் கூறுவதுண்டு. இதனை நம் சமய நூல்கள் வழி நின்று விளக்க முயல்வோம். நாம் இறைவனின் நிழலில் வாழவேண்டியவர்கள். அவன் குழந்தைகள். அவனே நமக்குத் தலைவன். இதனை மறந்து தெய்வத்திற்கு எதிராக நம்மைக் கொண்டுவிடும் ஆணவம் என்னும் கொடிய பிடிப்பில் அகப்பட்டு வாழ்கிறோம். இவ்வாணவப் பிடிப்பிலிருந்து விலகி நாம் இறைவன் திருவடி நிழலில் இன்புற்று வாழ அவனிட மிருந்து வெளிப்படும் அருளே சக்தி. நாம் உய்ய ஐந்தொழில்களையும் நிகழ்த்துவதுமிதுவே.

இச்சக்தி இரண்டு நிலையில் செயல்படுகிறது. ஒருநிலை மறைந்திருந்து உதவுதல் அல்லது ஆதிசக்தி என அந்நிலையிலது திரோதான சக்தி எனப்படுகிறது. பிறிதொருநிலை வெளிப்பட்டு நின்று உதவுதல். வெளிப்பட்ட நிலையிலதனையே பராசக்தி என்கிறோம். சித்சக்தி சிவசக்தி என்றும் கூறுவர். சக்தி மறைந்து நின்று அருள்வதும் ஆன்மாக்களின் பக்குவத்தைப் பொறுத்தது. இதனைச் சித்தாந்த மொழியில் பேசுவதாக இருந்தால் இருவினை ஒப்பு மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களுக்குப் பராசக்தியின் நேர்தரிசனம் கிடைக்கிறது. அதற்கு முற்பட்ட நிலையில் சக்தி மறைந்து நின்றுதான் ஆன்மாக்களை உய்யச் செய்யும் தன் பணியைச் செய்து வருகிறாள். இவ்வாறு மறைந்து நின்று செய்கின்ற பணிதான் இருவினை ஒப்பு மல பரிபாகங்களுக்குக் காரணமாகின்றது.

இவ்வருட் சக்தி தமக்கு உதவும் நிலையில் பிறவாற்றாலும் விலக்கப்படுதல் உண்டு. ஆன்மாக்களுக்கு மூன்று இயல்புகளைக் கூறுவர். (1) விருப்பு (இச்சை), (2) செயல் (கிரியை), (3) அறிவு (ஞானம்). அவற்றைச் செம்மைப் படுத்தி இயக்குவதற்காக இறைவனருளும் மூன்று சக்தியாக விருந்து நமக்கு உதவுகிறது. அவ்வாறு உதவும் நிலையில் அச்சக்தி ''இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞான சக்தி'' எனப் பெயர் பெறுகின்றன என்பர். இம்மூன்றையும் முன்னர் குறிப்பிட்ட இரண்டோடும் சேர்த்துச் சிவசக்தியை ஐந்து நிலைகளில் விளக்குவர் — ஆதிசக்தி, பராசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி. பின்னர் குறிப்பிட்ட மூன்று சக்திகளும் பராசக்திக்கு வேறானவையல்ல, பராசக்தியின் வெவ்வேறு தோற்றங்களே.

''நின்ற பராசக்தி நீள்பரன் தன்னோடு
நன்றறி ஞானமும் இச்சையு மாய்நிற்கும்
நன்றியும் கிரியா சக்தி நண்ணவே
மன்றன் அவனருள் மருவிடும் தானே.''

என்னும் திருமந்திரம் இதனை உறுதிப்படுத்தும். இத்தத்துவத்தை உட்கொண்டு தேவியின் தெய்வத் திருக்கோலங்கள் விளக்கப்படுதலுண்டு. காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என்னும் தெய்வத் திருக்கோலங்கள் ஈண்டு நாமறிவோம். இம்மூன்று வடிவங்களும் திருநாமங்களும் தேவியின் அருட் கருணையை நினையச் செய்யும் தன்மையன. இத்திருக் கோலங்களில் மீனாட்சியைக் கிரியாசக்தி என்றும் காமாட்சியை இச்சாசக்தி என்றும் விசாலாட்சியை ஞான சக்தி என்றும் கூறும் மரபுண்டு. மனோன்மணி அனுக்கிரக மூர்த்தமாய் நின்று அன்னை காமாட்சியைப் போன்று இஷ்ட சித்திகளை அருளுகிறாள் என்பது அருளாளர்கள் நம்பிக்கை. எம்முள்ளத்திலும் இவ்வருள் மூர்த்தத்தை எழுந்தருளுவித்து இந்தத் திருநாட்களில் வழிபட்டு உய்தி பெறுவோமாக.

[நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் புதிய சித்திரத் தேர்ப்பவனி சைவ மகாசபை விசேட மலர் — 1976].

# கொடியேற்ற மகத்துவம்

சைவமும் தமிழும் தழைத்தோங்க நற்பணிபுரியும் நாடுகள் பல. அவற்றில் தென்கிழக்காசியாவில் விளங்கும் சிங்கப்பூர் சிறப்பிடம் வகிக்கிறது. சிறிய நாடாயினும் மதம், மொழி, இனம் என்பவற்றில் ஒற்றுமையும் அபிமானமும் கொண்டு விளங்கும் மக்களைக் கொண்ட நாடு இந்நாடு. இந்திர புரிக்கு நிகரான இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களும் ஏற்றம் மிகுந்த பண்பாடு உடையவர்கள். மத நம்பிக்கை அவர்களிடம் ஊறிக் கிடக்கிறது. நாற்பதுக்கு மேற்பட்ட சைவக் கோவில்கள் அந்நாட்டை அணிசெய்கின்றன. அவற்றில் ஸ்ரீ செண்பக விநாயகராலயம் தனிச்சிறப்பு மிக்கது. அவ்வாலய பரிபாலனம் மிக நேர்த்தியாக நடைபெறுவதைக் கண்ணாரக் காணும் பேறுபெற்றேன். அத்தகைய ஆலயத்தில் கொடிமரம் நாட்டி விழா எடுக்க முன்வந்துள்ளனர் அந்நாட்டுச் சைவத் தமிழ் மக்கள். இந்த முயற்சி அளவிடற்கரிய பேரருள் முயற்சியே. இப் பணியினால் அந்நாடு மேலும் சிறப்பும், திருவருட் பொலிவும், அமைதியும், செல்வப் பெருக்கமும் அடையும் என்பதிற் சந்தேகமில்லை.

மனம், வாக்கு, காயங்களுக்கு அப்பாற்பட்ட இறைவன் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி இருக்கும் இடங்களே ஆலயங்களாகும். பாலிலே நெய்போல வெளிப்படாது நிற்கின்ற இறைவன் ஆலயங்களிலே தயிரிலே நெய்போல விளங்கி நிற்கின்றான். மனித உடம்புபோல ஆலய அமைப்பும் விளங்குகிறது. தெய்வத்தின் சாந்நித்தியத்துக்கு உரிய புனித இடம் ஆலயத்தில் கொடிக் கம்பத்திலிருந்து கர்ப்பக்கிருகம் வரை வியாபித்திருக்கிறது. கொடிமரம் மூலாதாரமாகவும் பலிபீடம் சுவாதிட்டானமாகவும் பக்கத்திலே அமைந்துள்ள வாகனம் மணிபூரகமாகவும் அமைந்துள்ளன. இறைவனின் அருளை உயர்த்திக்காட்டிக் கொண்டிருப்பதுபோல் கொடிமரம் விளங்குகிறது. கொடிமரத்தை துவஜஸ்தம்பம் என்று சொல்வர். இது கோவில் கோபுரத்தின் முக்காற் பங்கு உயரத்துக்கு அமைய வேண்டும். நிலத்துக்குள் ஐந்தில் ஒரு பாகம் ஸ்தாபனம் செய்யப்படவேண்டும். அடிப் பாகம் சதுரமாக அமையவேண்டும். இது ஸ்தம்பபீடம் என்று சொல்லப்படும். பலி பீடத்தின் உயரம் மூலஸ்தான மூர்த்தியின் உயரத்துக்குச் சமமாக அமையவேண்டும்.

மனித உடலுக்கு முதுகெலும்பைப் போலக் கொடிமரத்துக்கு அதன் தண்டுப் பகுதி இன்றியமையாதது. உடலில் சுழுமுனை நாடி செல்லும் வழியாகிய வீணைத் தண்டைக் கொடிமரம் குறிக்கிறது. 33 வளையங்கள் கொண்டது முதுகெலும்பு. வீணைத் தண்டு மூலாதாரத்திலிருந்து பிரமரந்திரம் வரை இருப்பதுபோலக் கொடிமரமும் மூல லிங்கத்தின் மட்டத்திலிருந்து ஸ்தூபியின் அளவுவரை இருக்கும். குண்டலினி சக்தி சுழுமுனை நாடி வழியாக எழுவதுபோல் கொடிமரத்தில் இடபக்கொடி ஏற்றப்படுகிறது. இத்துடன் விழா ஆரம்பிக்கப்படுகிறது.

கொடிக்கம்பம் தாபித்தல் கி. பி. 2ஆம் நூற்றாண்டிலேயே நடைமுறையில் இருந்தது என்பதற்குச் சான்றுகள் உண்டு, அக்கால நாணயம் ஒன்றில் கொடிமரமும் ஆலயமும் பொறிக்கப்பட்டுள்ளது. வேதபுராணங்களில் கொடிமரம் பற்றிய குறிப்பு இருப்பதால் இது பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருந்தது என்பது தெரிகிறது. கொடிமரத்துக்கு வீணா தண்டம், மேரு தண்டம் என்னும் பெயர்களும் உண்டு. 33 கணுக்களுடன் செய்யப்படும் கொடிமரம் உத்தமமானதாகும். கொடியேற்றுவதற்கு முன் யாகசாலை அமைத்து யோகமாயை முதலிய சக்திகளை ஒன்பது கும்பங்களில் வைத்து ஆவாகனம் செய்வர். இதற்குப் பின் திக்கு பாலகரைப் பூசித்து வணங்கி பாலிகைகளில் முளைகளை நிறைத்து அட்டபந்தனம் செய்வர். இன்னும் பல கிரியைகள் ஆற்றிய பின்பே கொடியேற்றப்படும். சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுபடவேண்டும் என்ற தத்துவத்தைக் கொடியேற்றம் காட்டுகிறது.

முழுமுதற் பொருளாகிய எம்பெருமான் அம்பிகையாய், விநாயகராய், முருகனாய், இன்னும் பல வடிவுகளை உடையவராய் ஆலயங்களில் கோயில் கொண்டருளுகிறார். அவருடைய வடிவங்களைக் கும்பத்திலும் பிம்பத்திலும் தம்பத்திலும் தாபித்து வழிபட்டு வருவது சைவ ஆகம மரபு. அபிஷேக நாட்களிலே கும்பத்திலே இறைவனை இருத்துகிறோம். மகா உற்சவ நாட்களிலே கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தம் வரை தம்பத்திலே இறைவனை இருத்துகிறோம்.

கோயிலிலே பலிபீடத்தைச் சார்ந்து கொடிமரம் இருக்கிறது. கொடிமரத்திலே ஒரு ஆடை சுற்றப்பட்டிருப்பதையும் அந்த ஆடையுடன் ஒரு தருப்பைக் கயிறு இணைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். கொடிமரம் சிவத்தையும் ஆடை ஆன்மாவையும் தருப்பைக் கயிறு ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் பாசத்தையும் குறித்து நிற்கின்றன. உயிர்கள் எல்லாம் சிவமாகிய கடவுளையே ஆதாரமாகக் கொண்டு விளங்குகின்றன. அதனையே கொடிமரத்தைச் சுற்றியுள்ள சீலை காட்டுகிறது. ஆனால் தருப்பை சீலையையே பற்றி நிற்கிறது. தருப்பையாக இருப்பது ஆணவம், கன்மம், மாயை என்கிற மும்மலங்கள். மலங்களினால் பீடிக்கப்பட்ட உயிர்கள் முடிவில் சிவத்தோடு ஒன்றிப் பாசத்திலிருந்து நீங்கி இருப்பதையே கொடிமரத்தோடு சேர்ந்து நிற்கும் சீலை காட்டுகிறது. பதி, பசு, பாசம் என்ற முப்பொருளையும் இவை காட்டுகின்றன. மகோற்சவ காலங்களில் கொடிமரத்தையே சிவமாகக் கண்டு பகலும் இரவும் அதற்குச் செய்யும் ஸ்தம்ப பூசையினைத் தரிசிப்பதால் சிறந்த தீட்சைப் பயனையடைந்து பெரும் புண்ணியம் அடைகிறோம்.

கொடியேற்றம் என்பது மற்றொரு கருத்தையும் உணர்த்துகிறது. இறைவனுக்குக் கொடியாக இருப்பது எருது. அது தான் தரும தேவதை. நாட்டிலேயும், வீட்டிலேயும் தருமம் தழைக்கவும் அறம் ஓங்கவும் நீதி நிலைக்கவும் வேண்டும் என்பதற்காக அந்த அறக்கொடியையே மகோற்சவ காலங்களில் தொடக்க நாள் கொடியாக ஏற்றுவது வழக்கம். பலரும் அறிய உயர்த்திக் காட்டி அந்த நாட்களில் தேவர்கள் முனிவர்கள் கந்தருவர்கள் எல்லோரும் அந்தச் சிவாலயத்துக்கு அணித்தாக வந்து உறைகிறார்கள் என்ற நம்பிக்கையோடு விழாக்கள் நடாத்தப்படுகின்றன. பஞ்சகிருத்தியமாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் தொழில்களில் கொடியேற்றம் படைத்தலைக் குறிக்கும். இரண்டாந் திருவிழா காத்தலைக் குறிக்கும். அத்துடன் இருவகை யாக்கை நீக்கம், மூவகைக் கன்ம நீக்கம், நான்கு கரண நீக்கம், ஐம்புல ஆசை நீக்கம், காமாதி ஆறு நீக்கம், ஏழுவகைப் பிறப்பு நீக்கம், என்பவை ஏழு திருவிழாக்களும் காட்டுகின்றன. இவை மறைத்தலைக்காட்டுகின்றன. எட்டாந் திருவிழா இறைவனின் எண்குண விளக்கத்தைக் காட்டுகிறது. ஒன்பதாம் திருவிழா ஒன்பது திருமேனியில் இறைவன் விளங்குகிறான் என்பதைக் காட்டுகிறது. தேர்த்திருவிழா என்பது அழித்தல் தொழிலைக் காட்டுகிறது. தீர்த்தத் திருவிழா அருளல் தொழிலைக் காட்டுகிறது.

கொடியேற்றம் இன்னும் ஒரு உண்மையைக் காட்டுகிறது. அஃதாவது மனிதன் தனது ஆறு ஆதாரங்களையும் கடந்து எம்பெருமானை அடைகின்ற பெருவெளியில் சஞ்சரிக்கும் பெருநிலையை அடைவதே அவன் குறிக்கோளாகும். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன ஆறு ஆதாரம். இவ்வாறு கடந்து குண்டலினி சக்தி மேலெழும்புவதையே கொடிச் சீலை காட்டுகிறது. சுற்றிச் சுற்றி அது போய் மேலே பிரம்மரந்திரம் என்கிற வெளியை அடைவதே முடிவான இன்பமாகும். கொடியேற்ற விழா இந்தத் தத்துவத்தையும் உணர்த்துகிறது. எனவே ஆலயத்தில் இருந்து நிறைந்த திருவருட்பயனை அடைய வேண்டுமானால் அங்கு கொடிக்கம்பம் நாட்டி கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரை பகலும் இரவும் விழாக்கள் நடாத்தி அந்த நாட்களில் சைவமக்கள் விரதமிருந்து வழிபாடு செய்து ஸ்தம்ப பூசையைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற முயல வேண்டும்.

[ஸ்ரீசெண்பக விநாயகர் ஆலய மகோற்சவ சிறப்பிதழ் – 29-1-73—7-2-73. 19, சிலோன் றேட், சிங்கப்பூர் 15.]

# விநாயகர் ஷஷ்டி விழா

## (பெருங்கதை)

விநாயகன் என்றால் மேலான தலைவன் என்பது பொருளாகும். அப்பெருமானை நினைத்து எக்கருமத்தைத் தொடங்கினாலும் அதில் வெற்றி நிச்சயமாகும். புத்தியையும் சித்தியையும் முத்தியையும் தருபவன் அவனே. சிவகணங்களுக்கு அதிபதி அவனே. அப்பெருமானை நினைத்து வழிபடுவோர் ஒவ்வொரு மாதத்திலும் வரும் சதுர்த்தியையும் ஆவணிச் சதுர்த்தியையும் கார்த்திகைப் பூரணைக்குப் பின் பிரதமை முதல் இருபத்தொரு நாளால் வரும் சஷ்டியையும் சிறந்த தினங்களாகக் கொள்வர். இதனைப் பெருங்கதை விரதம் என்றும் சொல்வர். இக்காலத்தில் பிள்ளையார் கதை படிப்பது வழக்கம்.

இதை விளக்கும் புராணக் கதைகள் பல உண்டு. திருமால் குருட்டுப் பாம்பாகும்படி ஒரு சாபம் பெற்றார். அச்சாபத்தை நீக்குவதற்காக விநாயகப் பெருமானை வழிபட்டு சாபத்திலிருந்து நீங்கினார். அப்படி நீங்கிய தினமே மார்கழிச் சஷ்டி தினமாகும். இத்தினத்தில் விநாயகனை வழிபடுவோர் இப்பிறப்பில் செல்வம், புகழ், சிறப்புகளையும் மறுமையில் மோட்சத்தையும் அடைவர். பெருங்கதை நடக்கும் இக்காலங்களில் அதிகாலையில் நீராடி, பிள்ளையார் கோவிலுக்குச் சென்று ஆசார சீலராய் விரதமனுட்டிக்க வேண்டும். இந்தநாளில் நூல் கையிலே கட்டி ஒரு நேரம் சாப்பிட்டு இருபத்தோராம் நாள் உபவாசமிருந்து அடுத்தநாட் காலை போசனமுண்டு விரதத்தை முடிக்கலாம். இக்காலங்களில் கோயில்களில் பிள்ளையார் சரித்திரம் படித்தும் கேட்டும் பயனடைய வேண்டும். அந்தணர், அறிஞர், செல்வர் யாவரும் பிள்ளையார் விரதத்தால் பெரும் பயன் அடைவர். பிள்ளையார் விரதம் பிடிப்போர் நோயின் கொடுமை, இயமனின் கொடுமை என்பவற்றிலிருந்து நீங்குவர் என்று கூறுவர்.

விநாயகப் பெருமானின் துதிப்பாட்டாக இதனைப் பாராயணம் பண்ணுதல்வேண்டும்.

''ஒற்றை மருப்பும் ஒரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும்—பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தி
லெப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.''

விநாயகராலயங்களில் மார்கழிச் சஷ்டி தினத்தில் கயாமுக சங்காரம் நடைபெறும். கயாமுகன் ஒரு அசுரன், கொடியவன். தேவர்களை வருத்தியவன். அவனுடைய கொடுமையினால் தேவர்கள் அவனை வணங்கித் தோப்புக்கரணம் போட்டுத் தலையிலே குட்டி வணங்கினர். ஆனால் அத்தேவர்கள் சிவபெருமானை வழிபட்டதால் அவரே விநாயக வடிவம் எடுத்து யானை முகத்தோடு நின்று யானைத் தலையை யுடைய கயாசுரனை வென்றார். தேவர்கள் மகிழ்ந்து தமது தலையிலே குட்டி, தோப்புக்கரணம் போட்டு விநாயகப் பெருமானை வழிபட்டனர். அவனுடைய யானை முகமே ஓங்காரம். அதுவே பிரணவம். அதுவே ஞானம். அதனை நினைத்தால்போதும் எங்களுக்கு சகல ஞானமும் வந்தடையும். ஆகவே பிள்ளையாரை வழிபட்டு சித்தி, புத்தி, முத்தி மூன்றையும் பெற்று வாழ்வோமாக.

[சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலய மகோற்சவ சிறப்பிதழ் — 1973]

※

'' இன்று நம்மால் இலக்கண வழுவற்ற முறையில், நல்ல தமிழ் எழுத முடிவதில்லை. இளைஞர்கள் நாவலர் பெருமானின் உரைகளை வாசித்துப் பயிற்சி பெறுவதன் மூலம் இக் குறைபாட்டைப் போக்கிக் கொள்ள வேண்டும்.''

# ஆலயங்களும் மகோற்சவங்களும்

கோயில்களே பக்தி நெறியை வளர்க்கும் வாயில்களாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தெய்வீகத்தை உயிராகக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள் தமிழர்கள். இவர்களுடைய நாகரிகம் சமய அடிப்படையிலேயே வளர்ச்சியுற்றது. மலையிலும் காட்டிலும் வயலிலும் கடற்கரையிலும் இறைவழிபாடு நடத்திய மக்கள் காலகதியில் நிலையான ஆலயங்களை அமைக்கத் தொடங்கினார்கள், அவற்றைச் சார்ந்து வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் குறிக்கோள் எனக் கொண்டார்கள். இதன் பயனாகவே ஆலயங்கள் சிறப்படைந்தன.

உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். இறைவன் எங்கும் இருக்கின்றான் என்றாலும் கோயிலில்தான் அவனை உணரமுடிகிறது. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தனாகிய அவன் கோயிலிலும் இருக்கிறான் என்பதை நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்கின்றோம். ஏனைய இடங்களில் இறைவன் விளங்குவதற்கும் கோயிலில் எழுந்தருளி இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. இறைவனை எங்கும் காணவேண்டுமானால் அவர்களுக்கு உயர்ந்த ஞானபக்குவம் வேண்டும். காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காணுகின்ற ஞானிகளுக்கே அந்தநிலை ஏற்றது. ஆனால் அத்தகையோர் ஒரு சிலரே. ஏனையோர் கோயிலிலே அமைக்கப் பட்டிருக்கும் விக்கிரகங்களையும் வடிவங்களையும் காண்பதனால்தான் இறைவனை உணருகிறார்கள்.

> ''திருக்கோயில் உள்ளிருக்கும்
> திருமேனி தன்னை
> சிவனெனவே கண்டவர்க்குச்
> சிவன்உறைவான் ஆங்கே.''

என்ற வாக்கின்படி விக்கிரகத்தின் உள்ளே ஊடுருவி நின்று நாம் காணவேண்டிய உண்மைப் பொருளே இறைவனாகும், சிறப்பாக இறைவனைக் கற்கோயில்களிலும் அடியவர் உள்ளத்திலும் காணமுடியும். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்பவன் அவன். அந்த நிலையிலே சிந்தித்த மனிதன் உடம்பின் அமைப்பையே கோயில் அமைப்பாகக் கொண்டு கட்டிடங்கள் அமைத்து ஆலயங்களை அமைத்தான், பண்டைக் காலத்துத் தமிழ்மக்கள் வாழ்க்கையில் கோயில்களே முதன்மையான இடம் பெற்றிருந்தன. கோயிலுக்குரிய செலவுகள் போக எஞ்சிய பகுதி கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. ஏழைகளுக்கு விடுதிகளும் மருத்துவ விடுதிகளும் இசைக் கல்லூரிகளும் ஆலய நிர்வாகத்திலேயே இயங்கின. தஞ்சை இராசராசன் காலத்தில் இத்தகைய திருப்பணிகள் நடைபெற்றதாகச் சரித்திரச் சான்றுகள் உள. மக்கள் பணியே மகேசுரன் பணியாகப் பேணப்பட்டது. இதனால் ஆலயங்களும் மக்கள் வாழ்க்கையும் நெருங்கிய தொடர்புடையனவாக விளங்கின.

நல்லமுறையில் அழகான கட்டிடங்களும் விக்கிரகங்களும் அமைத்தால் மட்டும் போதாது. விழாக்களும், நித்திய நைமித்திகங்களும் சிறப்புற நடைபெறுவது ஆலய வளர்ச்சிக்கு இன்றியமையாதன. காலத்துக்குக் காலம் குடமுழுக்காட்டி சிறப்பு விழாக்கள் செய்துவருவது திருவருட் சக்தி பெறுவதற்கு இடமளிப்பதாகும். மந்திரம் மூலமாகவும் அபிஷேகம் மூலமாகவும் விக்கிரகத்திற்குத் தெய்வீக சக்தி கொடுக்கப்பட வேண்டும். மின்சார இணைப்பும், மின் விசிறியும் சேர்ந்து காற்று வீசுவதற்கு உதவுவது போல மந்திரம் முதலிய கிரிகைகளும் விக்கிரகத்திலிருந்து தெய்வீக சக்தி வீசுவதற்கு உதவுகின்றன. மின்சார இணைப்பு இல்லாவிட்டால் மின் விசிறியால் பயனில்லை. அதேபோல் கிரிகைகளோடு கூடிய பூசைகள் இல்லாவிட்டால் விக்கிரகத்திலிருந்து திருவருட்சக்தியை எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே ஆலயங்களில் விழாக்கள் சிறப்பாக அமையவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

விழாக்கள் எல்லாம் ஊருக்குச் செய்யும் சாந்திபோல் அமைவன. அன்றாடம் நிகழும் நித்திய பூசையிற் சில குறைகள் நிகழ்வதும் இயற்கையே. அக்குறைகளினால் ஏற்படும் குற்றங்களை நைமித்திய பூசைகளே நீக்குகின்றன என்பர்.

'' சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.''

என்ற வள்ளுவர் குறளுக்கு உரை விரித்த பரிமேலழகர்,

' நித்தியத்தில் நைமித்திய மாதலின்
அதனை முற்கூறினார் என்பர்.''

இங்கே சிறப்பு என்பது நைமித்திய மாகும். இறைவனைப்பற்றிச் சிறப்பாகத் தியானிக்க வாய்ப்பளிக்கும் நாட்கள் விழா நாட்களாகும். மனிதனுடைய பந்த பாசத்துக்கு இது ஒரு விடுமுறை என்று கூறினால் அதில் மிகையொன்றும் இல்லை. விரதம் என்பது உள்ளத்துக்குத் தெளிவு தருவதற்காக அமைக்கப்பட்டது. மக்களுக்காக ஒரு ஆன்மீகச் சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதற்கே திருவிழாக்கள் ஏற்பட்டன. விழா நாட்கள்தான் ஒருவனுடைய உண்மை வாழ்க்கைக்கு உரிய நாட்கள். அவை இறைவனோடு தொடர்பு கொள்ள வாய்ப்பளிக்கும் நாட்களாகும். எனவே இந்த நாட்களில் மக்கள் சிவாலய தரிசனம் செய்து சிறந்த திட்சா பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். இப்படியான விழாக்கள் பல காலமாக நம் நாட்டில் நடைபெற்று வந்தமை தெரியவருகின்றது. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

''ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்
கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாது போதியோ
பூம்பாவாய்''

எனத் திருமயிலாப்பூர் பதிகத்திலே பாடியுள்ளார். இன்னும் ''பெருஞ் சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்'' என்றும் பாடியுள்ளார். திருக்குறள் முதலிய நூல்களிலும் விழாக்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. திருவாரூர் திருவாதிரை விழாவை அப்பர் சுவாமிகள் சிறப்பித்துப் பாடியமையும் நாம் அறிந்ததே. மகோற்சவங்கள் என்பதன் பொருள் ''மேலான யாகம்'' என்பது. உற்சவம் என்றால் சுகத்தைக் கொடுப்பது. இதில் ஈடுபடுவோர் அனைவருக்கும் மேலான இன்பத்தையும் உள்ளத்திற்கு அமைதியையும் உயிருக்கு ஊதிபத்தையும் நல்குவது என்பது தெளிவாகும். எனவே,

''தனக்குவமை யில்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

என்ற வள்ளுவர் கூற்றைச் சிந்தையிற் கொண்டு சிவாலய தரிசனம் செய்து மகோற்சவ தரிசனம் பெற்று வாழுதல் மக்கட் பிறவியின் மகத்தான கடனாகும்.

[புங்குடுதீவு அரியநாயகன் புலம்
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
கும்பாபிஷேக மலர் – 9-2-73]

※

'' திருக்கோயில்களில் திருவிழாக்களை, திருவிழாக்களாக நிறையச் செய்ய ஆங்காங்கு உள்ள சைவமக்கள் முன்வர வேண்டும்.''

※ ※ ※

'' திருமுறைகள் கோயில்களில் ஒலிக்கட்டும்; கூட்டுப் பிரார்த்தனை மன்றங்கட்கு, கோயில் விழாக்களிற் சிறப்பிடம் அளியுங்கள்.''

※ ※ ※

'' மூளையிலிருந்து பிறக்கிறது அறிவியல்; உள்ளத்திலிருந்து பிறக்கிறது உளவியல்; மூளையிலிருந்து பிறக்கும் அறிவு ஒன்றைச் செய் என்று சொல்லும்போது, அதைச் செய்யாதே என்று தடுக்கிறது உளவியல். இவ்விரண்டுக்கும் இடையே நடக்கும் போராட்டமே நாத்திகம், ஆத்திகம் ஆகிய இரண்டுக்குமிடையே நடைபெறும் போராட்ட மாகும்.''

# அருள் சுரக்கும் அண்ணல்

அங்கிங் கெனுதபடி எங்கும் நிறைந்த இறைவன் திருக்கோயில்களிலே எழுந்தருளி அடியார்களுக்கு அருள்புரிகின்றான்.

ஏனைய இடங்களிற் பாலில் நெய்போல மறைந்து நிற்பான்..

ஆலயத்தை ஒரு புருஷ வடிவமாகக் கொண்டால் அதிலுள்ள கருப்பக் கிரகம் தலையாகும். அர்த்த மண்டபம் கழுத்தாகும். மகாமண்டபம் மார்பாகும். யாகசாலை நாபியாகும். கோபுரம் பாதமாகும்.

இத்தகைய அமைப்பிலே அமைந்த திருக்கோயில் விக்கிரகங்களிலே இறைவன் எழுந்தருளுகின்ற அற்புதத்தைக் காட்டுவதே கும்பாபிஷேகக் கிரியையாகும்.

நாம் துயரமின்றி வாழவேண்டுமானுல் திருவருளே துணையாக அமையவேண்டும். திருவருளில் தோய்ந்தவர்களுக்கு இன்பமே எந்நாளும், துன்பம் இல்லை என்ற அனுபவம் பிறக்கும். இதற்காகவே ஆலயங்களைப் புதுக்குவித்தலும் குடமுழுக்கு விழா முதலிய கிரியைகளை ஆற்றுதலும் சிவப் பணிகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பு மாநகரில் யாழ்ப்பாணத்தார் கோயில் எனப் போற்றப்படுவது செக்கடித் தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலாகும்.

இவ்வாலயத்தில் நித்திய நைமித்தியப் பணிகள் சிறப்புற நடைபெறுவது யாவராலும் போற்றுதற்குரியது. இவ்வொழுங்கின் பேரிலேயே தற்போது கும்பாபிஷேக விழாவும் நிறைவேறி இருக்கிறது.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது கோயிற் தூபிகள், கருவறைகள், மற்றும் சுதைகள் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்து சுவாமியின் மூர்த்திகரத்தை எழுப்பிக் கொள்ள வேண்டும் என்பது சிவாகமத் தெளிவாகும்.

புதிதாக ஒரு கோயிலைக் கட்டுவதிலும் பார்க்கக் கட்டிய கோவில்களைப் புதுப்பித்துக் கொள்ளுதல் மிகப் பெரிய புண்ணியமாகும். அத்தகைய புண்ணியத்தை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் அறங்காவலர்களும் அடியார்களும் பெற்றுள்ளனர்.

கலியுகத்துக்கு வரப்பிரசாதியான தெய்வம் கதிர்வேலாயுதனே. அருள் சுரக்கும் அண்ணல். அவன் வழியாக முன்னின்று மெய்யருள் சுரந்து அடியார் வேண்டிய வரம் கொடுப்பான். அத்துடன் அழியாத வீடும் தரக் கடவான் அவன் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

எனவே, எல்லாம் வல்ல ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமான் இவ்வாலயத்தில் இன்று புத்தொளியும் புன்னகையும் காட்டி அடியாரை வரவேற்று அருள் புரிகின்றான். தமரும், நமரும் அவனை உள்ளத்திற்கு எழுந்தருளி வரவேண்டுமென்று வரவேற்போம், வாழ்த்துவோம், வணங்குவோம், வரம் பெறுவோம்.

இதற்குப் பின்வரும் பிள்ளைத் தமிழ்ப் பாடல் வழிகாட்டுகிறது:

''கண்ணுல் உனது திருவடியைக்
கண்டு ஆதரவு பெருகிஇரு
கையாற் றொழுதுன் திருக்கோயில்
காலால் வலஞ்செய் துனதுபுகழ்
பண்ணுல் உருகிப் புகழ்ந்துகண்ணீர்
பாயா எனையும் தாயாகிப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதிவாழும்
அண்ணு வருக உலகுமுழு
தாண்டாய் வருக கதிதரும்எம்
ஐயா வருக ஆறுமுக
அப்பா வருக விளங்குகதிர்
வண்ணு வருக மயில்ஏறும்
மன்னு வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே.''

[ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோயில் (கொழும்பு) மகா கும்பாபிஷேக மலர் — 29-10-80]

# மணிவார்த்தை

சமய குரவர்களில் ஒருவராகிய மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில் ஓரிடத்தில், 'வாக்குன் மணிவார்த்தைக் காக்கி' எனப் பாடியுள்ளார். குருமணியாகத் திருப்பெருந்துறைக் குருந்தமர நீழலிலே எழுந்தருளி ஞான உபதேசம் போதித்து நின்ற எம்பெருமானைப் பற்றிய வார்த்தைகள் என்பதைப் பரஞ்சோதி முனிவரும் தனது பாடலொன்றில் விளக்கியுள்ளார். மணிவார்த்தைகளை அருளியபடியால் மாணிக்கவாசகர் எனப்பட்டார் என்பதை அப்பாடல் விளக்குகின்றது.

"பழுதிலாதசொல் மணியினைப்
பத்திசெய்து அன்பு
முழுதுமாகிய வடத்தினால்
முறைதொழுது அலங்கல்
அழுது சாத்தும்மெய் யன்பருக்கு
அகம்மகிழ்ந்து ஐயர்
வழுவி லாதபேர்
மாணிக்க வாசகர்"

என்றார்.

அடிகளுக்கு எழுந்த அழுகை 'இன்னும் சிலகாலம் இவ்வுலகத்தில் இருப்பாயாக' என்பதனைக் கேட்டதனாலேயே எழுந்தது என்க. குருமூர்த்தியைப் பிரிந்த நிலையில் ஆற்றாமை மீதூர அழுதழுது புலம்பினார். அவருடைய அழுகை திருப்பெருந்துறையிலிருந்து மதுரை வரை சென்று பின்பு திருப்பெருந்துறைக்கு வந்து அங்கிருந்து சிதம்பரம் வரை சென்று முடிகிறது. அப்படியாகச் செய்த தெய்வீகப் பிரயாணத்திற் பாடிய பாடல்களின் தொகுதியே திருவாசகம். இதனை மணிவாசகமென்றும், திருவாசகமென்றும் பலபடப் பாராட்டுவார்கள். திருவாசகம் எழுதுவதற்குக் குருமணியால் உணர்த்தப்பட்ட திருவைந்தெழுத்தின் விளக்கமே காரணமாகும். திருவாசகம் எட்டாம் திருமுறையாக அமைந்ததன் காரணமும் ஒன்றுண்டு. சிவஞானபோதத்தில் சூத்திரப் பாவாகிய,

"ஐம்புல வேடரின்
அயர்ந்தனை வளர்ந்தெனை
தம்முதல் குருவுமாய்த்
தலத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையில்
அரன்கழல் செலுமே."

என்னும் பாடலுக்குத் திருவாசகத்தைக் காதலாக, கசிந்து, கண்ணீர் மல்க ஓதினால் அடையும் இன்பத்தை இராமலிங்க சுவாமிகள் தமது அனுபவத்திலே விளக்குகின்றார்:

"வான்கலந்த மாணிக்க
வாசகனின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே".

திருவாசகத்தைத் தேனாகவே அடியார்கள் சுவைத்தார்கள். உணவுமாகி மருந்துமாகி உதவுந் தன்மை தேனுக்குண்டு. சுகதேகிகள் தேனைக் குடித்துத் தேகபலம் தேடிக் கொள்வார்கள், நோயாளிகள் தேனை மருந்துடன் உண்டு நோயை மாற்றிக்கொள்வார்கள். அதே போன்று அருள்வயப்பட்டோருக்கு அவர் மயக்கறுத்து உய்தி காட்டுகிறது. இன்னுந் தேன் தூய மலரில் தோன்றி உண்ணவரும் வண்டுகளுக்கு இன்சுவையளிக்கிறது. வாதவூரடிகளின் திருவாசகம் அவரின் தூய இருதய கமலத்திலே தோன்றி ஓதுவார்க்குப் பேரானந்தப் பெருவாழ்வு அளிக்கிறது. தேன் உடல் நோயைத் தீர்க்கும்; திருவாசகம் உயிர் நோயைத் தீர்க்கும். தேன் குடிப்பார்க் கேற்படும் பித்தும் உணர்தற்குரியது. பின்னையது தெய்வீகப் பித்து. இந்தப் பித்தினால் உலகச்சாயல் படிப்படியாக மறந்து தெய்வச்சாயல் படிப்படியாகத் தோன்றுகிறது. இந்த நிலையிலேதான் "நானார் யார்? என்னுள்ளமார்? ஞானங்களார்? என்னை யாரறிவார்?" என்ற கேள்விகள் எழுகின்றன. திருவாசகத் தேன் கொடுக்கும் இன்பத்தைச் சிவப்பிரகாச சுவாமிகள்:

"திருவா சகமிங்கு ஒருகா லோதின்
கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பரா குனரன்றி மன்பதை உலகில்
மற்றையோ ரிலரே"

எனப் பாடியுள்ளார்.

மணிவாசகத்தின் சில பாடல்களைக் கவனிப்போம். முதலிலே வரும் சிவபுராணத்திலே இறைவன் தன் பொருட்டுச் செய்த அருட்டிறனைக் குறித்து:

"நிலந்தன்மேல் வந்தருளி
நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க்
கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த
தயாவான தத்துவனே"

என்று இறைவனைப் போற்றுகிறார். திருவாசகத்தில் வரும் திருச்சதகம் என்ற பகுதியே எம்போலியரை மையமாக வைத்துக் கொண்டு அடிகள் பாடிய பகுதியாகும். "சத்தியஞான தேசிகர் மோகம் சதமமாம்" என மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் திருச்சதகத்தைக் குறிப்பிடுகிறார். பக்திச் சுவை சொட்டும் பாங்கிலே உலகத்தவர் ஓதி உய்வடையும் வழியிலே பாடப்பெற்றது இப்பகுதி:

"நாடகத்தா லுன்னடியார்
போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள்எம் முடையானே."

உலக மக்களின் வாழ்க்கை நிலையிலே இப்பாடல் அமைந்ததேயல்லாமல் மணிவாசகர் தன்மை இப்பாடல் நிலையில் அமைந்ததன்று. நாடகத்துக்கு உடுப்புப் போட்டவன் அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கேற்ப எவ்வாறு நடிப்பானோ, அதே போன்று தானும் அடியார் வேடம் போட்டு நடிப்பதாகவும் உண்மையடியார்கள் வீடு பேற்றை விரும்புவது போலத் தானும் விரும்புவதாகவும் கூறி இப்படியான பொய்வேடத்தை விட்டு உள்ளம் உருகக்கூடிய வழியைக் காட்டும்படி இறைவனை வேண்டி நிற்கிறார். வீடுபேற்றைக் கேட்காது இடையறா அன்பையே கேட்கிறார். உண்மை அடியார்கள் கூடுமன்பினில் கும்பிடலேயன்றி வீடும்வேண்டா விறலின் மேவினர் என்பது சேக்கிழார் வாக்கு. இன்னும், தன்னை யாட்கொண்ட பெருங் கருணைத் திறத்தை விளக்குகின்ற பொழுது மற்றைய அடியார்கள் நிலையையும் ஒப்பு நோக்கிப் பார்க்கிறார். பெருமானுடைய நாமத்தைக் கேட்டவுடனேயே பள்ளத்தை நோக்கிப் புரண்டு செல்லும் நீரினியல்பு போன்று இறைவனை நோக்கிப் பதைத் துருகுபவர்கள் அவ்வடியார்களென்றும் அவர்களிருக்கத் தன்னை ஒரு பொருளாக மதித்து ஆட்கொண்டமைக்கு உள்ளந்தாள் தொடக்கம் பலநெஞ்சுகள் நின்றுருகவேண்டுமே என்றும், இங்கே ஒரு நெஞ்சுங் கூட உருகாமல் நிற்கிறதேயென்றும், உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பொழிவதற்குப் பதிலாக, இந்த இரண்டு கண்கள் கூட மரத்துப் போய்விட்டனவே என்றும், நெஞ்சு கல்லாகிவிட்டதென்றும் தனது நிலையை இழித்துக் கூறுகின்றார். இறைவா உன்னால் ஆட்கொள்ளப்பட்டவனுடைய தீவினை இப்படியாகவா இருக்க வேண்டும் எனக் கவல்கிறார். பிறர் சொல்லக் கேட்ட மாத்திரத்தில் நெஞ்சமழிந்து நிலைகெட்ட பக்தர்களும் இருக்க, நேரே கண்டும் கல்லைப் போல் உருகாத தீவினையேனும் இருக்கிறேனே என்பது அவர் பாடற் பொருள்.

கோத்தும்பி என்பது அரச வண்டு. இதனை விளித்துப் பாடுகின்ற பகுதி திருக்கோத்தும்பி என்று திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளது. இறைவன்பால் தூதாகச் சென்று ஊதுமாறு வண்டைப் பார்த்துப் பணிக்கிறார். 'அரச வண்டே, நீ விரும்பி உறைகின்ற பூவிலே தினையளவு தேன் தானே இருக்கிறது? அதற்காக நீ எத்தனை பூக்களுக்கு அலைந்து திரிகிறாய். இந்த ஆசை

யிலே உன் வாழ்நாளெல்லாம் வீணுளாய்க் கழிகிறது. நினைக்குந்தோறும், காணுந்தோறும், பேசுந்தோறும் இனிப்பவன் ஒருவன் இருக்கின்றான். அவன் திருவடி மலரில் அவ் வினிய தேனைப் பருகலாம். அது உடம்பி லுள்ள எல்லா எலும்புகளையும் உருக்குந் தன்மையது. ஆகவே அப்பேரின்பத் தேனைப் பருகாது அழிகின்ற சிற்றின்பத்தேனில் நாட்டத்தை வையாதே. பிந்தியது உண்டால் மாத்திரம் இனிப்பது; முந்தியது கண்டாலும், நினைத்தாலும், பேசினுலும் இனிப்பது' என்னும் கருத்தை யமைத்துப் பாடிய பாடலைக் கவனிப்போம்.

''தினைத்தனை யுள்ளதோர்
பூவினில்தே னுண்ணுதே
நினைத்தொறும் காண்டொறும்
பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புள்நெக
ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ.''

அடிகளுடைய மனக் கருத்துத் தன்பிறவி நீக்கப்பட வேண்டுமென்பதே. இக் கருத்தை யவர் பல இடங்களில் இறைவனிடம் விளக்கியுள்ளார்; ''பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே'' என்பதே அவர் வேண்டுதலாகும். தேவர்களெல்லோரும் தாம் வாழ்வதற்காகவும், தம்பதவி நிலைப்பதற்காகவும், தம்மை மற்றவர்கள் தொழவேண்டு மென்பதற்காகவுமே உன்னை வணங்குகிறார்கள். ஆனல் நான் என்பிறவி யறவேண்டு மென்பதற்காகவே உன்னை வணங்குகிறேன் என்பதை விளக்குகிறார். திருவாசகத்தின் இறுதிப் பகுதியில் இறைவன் தனக்கருளிய ஆக்கப்பாடுகளைக் குறித்து வியந்து பாடிய பாடல்கள் பலவுள. உலக இன்பத்திலே மயங்கித் திரிகின்ற அறிவிலிகளுடன் கூடித்திரிந்த தன்னை மும்மலங்களையும் அறும்படி செய்து நிலைபெற்ற பேற்றையளித்து நாய்க்குத் தவிசிட்டது போன்று தனக்குத் தந்த பெருமையினை அச்சோப்பதிகத்தில் விளக்குகிறார்:

''செம்மைநல மறியாத
சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து
முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி
நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா
ருர்பெறுவார் அச்சோவே''

என்று ஆனந்த மிகுதியாற் களித்துப் பாடுகிறார். எனவே மணிவாசகரின் வாயிலிருந்து வந்தவை யனைத்தும் மணிவார்த்தைகள். அவை அவரின் தூய இருதய கமலத்திலிருந்து சொரிந்த தேன் துளிகள். அவை ஓதுவாரை உருக்கும் பக்திப் பனுவல்கள். அதிலுள்ள ஒரு மொழியே எம்மையும் எம்மிறைவனையும் ஒன்றுவித்துத் தரும்மொழி என அனுபூதிச் செல்வர்கள் கூறுகிறார்கள். இந்த அனுபவத்தை நாமும் ஓரளவு அடைய வேண்டுமானல் மணிவாசகர் உள்ளத்தோடு ஒன்றுபட்டு நின்று காலை மாலை ஓதி அதனைப் பாராயணம் பண்ணி உய்தியடைய வழிகாண்போமாக.

[யாழ்ப்பாணம் — அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் இராஜகோபுர கும்பாபிஷேக மலர் — 1973 ]

※

''சாகாவரம் பெற்ற சதுர்மறையோரின் சமயக் கருத்துக்கள் புனைந்துரை கூறும் புராணக் கூத்துக்கள் என்று புறக்கணித்த தமிழர், அதி நவீன காலத்திற்கும் அதற்கு அப்பாலும் அவை பொருந்தி நிற்கும் என்பதை அறிந்து பார்க்க வேண்டும்,''

* * *

''சைவமும் தமிழும் அமைதியையும், தூய்மையையும், மகிழ்ச்சியையும், தரும்.''

# தணிகாசலமும் என் கண்ணுற்றதே

குன்றுதோ றாடும் குமரப் பெருமான் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்புரியும் திறனே ஐந்தாவது படைவீட்டில் வைத்து விளக்குகிறார் நக்கீரர். சேயோன் மேய மைவரை உலகமெனப் பாடிய தொல்காப்பியமும் முருகப் பெருமானைக் குன்றக்குடியானாகக் காட்டுகிறது. இத்தகைய குன்றுகளில் தனிச்சிறப்புப் பெற்றது தணிகை மலையாகும். இதுவே கந்தபுராணத்தில் மிகச் சிறப்பாகப் பேசப்படும் வரையாகும். முருகப் பெருமான் வள்ளிநாயகியாரை அழைத்துக் கொண்டு திருத்தணிகை மலையை அடைந்தார். அப்பொழுது வள்ளிநாயகியார் இம் மலையின் பெருமைகளைத் தனக்குக் கூறும்படி வேண்டினார். அதற்கிசைந்து பெருமான் கூறுகிறார்;

"போர்க்கோலம் தணிந்து சினம் தணிந்து தாம் வீற்றிருந்தமையால் செருத்தணி என்ற நாமம் ஏற்பட்டது என்பதையும், மலர்களில் தாமரையும், ஆறுகளில் கங்கையும், பதிகளில் காஞ்சியும் சிறந்து விளங்குதல் போன்று மலைகளில் இந்தச் செருத்தணி சிறந்தது என்பதையும் எடுத்துக் காட்டுகிறார்:

"விரையி டங்கொளும் போதினுள்
மிக்க பங்கயம்போல்
திரையி டங்கொளும் நதிகளிற்
சிறந்த கங்கையைப்போல்
தரையி டங்கொளும் பதிகளில்
காஞ்சியந் தலம்போல்
வரையி டங்களில் சிறந்ததித்
தணிகை மலையே."

என்பது கந்தபுராணம்.

ஆறுமுகமான பொருள் அமர்ந்த மலை தணிகை மலை. அருணகிரியும், அடியார் குழாமும், அன்பர் கூட்டமும் புகழ்ந்து பாடித் துதிக்கும் மலை தணிகை மலை; இங்கே தணிவது என்ன? பணிவார்க்குப் பசிதணியும். பாடுவார்க்குப் பயந் தணியும். திருநாமம் படிப்பவர்க்குப் பகை தணியும். பரவுவார்க்கு மிடி தணியும். நினைப்பார்க்கு வினை தணியும். நினைத்தவை அனைத்தும் குறைவின்றி நிறைவேறும்!

செந்தமிழ் முனி அருணகிரியார் எவ்வளவு அழகாகப் பாடுகிறார்:

"நினைத்தது எத்தனையில் தவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமல்
கனத்த தத்துவமுற்று அழியாமல்
கதித்த நித்தியசித்து அருள்வாயே!
திருத்தணிப் பதியிற் பெருமாளே."

வள்ளலார் தமது பிள்ளைப் பராயத்தில் திருத்தணி முருகனைக் கண்ணாடியிற் கண்டு களிப்புற்றார். அவருடைய காட்சி அனுபவத்தைக் காண்போம்:

"சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும் திகழ்கடப்பம்
தார்கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத் தாள்களுமோர்
கூர்கொண்ட வேலும் மயிலும்
கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா
சலமுமென் கண்ணுற்றதே."

முருகக் காட்சியினால் முழு மனிதராக மாறியவர் வள்ளலார். பிற்காலத்தில் அவருடைய ஞான வாழ்வுக்கு அடிகோலிய தனைத்தும் இளமையிற் கண்ட தணிகைமலை முருகனுடைய காட்சியினாலேயே ஏற்பட்டது என்றால், அதில் மிகையொன்றுமில்லை.

தணிகைப் பெருமானை அகத்தில் எழுந்தருளச் செய்வார்க்கு ஞானப்பசியுண்டாகும். அருளின்மை என்ற வறுமை நீங்கும், பிறவிப்பிணி ஒழியும்; தியான நேரம், கணப்பொழுதிலிருந்து அரை நிமிஷமாகி, ஒரு நிமிஷமாகி, ஒரு மணியாகி, ஒரு நாளாகி முந்நூற்றி அறுபத்தைந்து நாள் என்று முதிர்ந்த ஒரு வருட அனுபவமாய் உயரும் சிறப்பை விளக்குவதற்கே 365 திருப்படிகள் உள்ளன என்பதும், தியானமுடையோர்க்கு அந்த உயர்வு கிடைத்து, ஆண்டவன் தரிசனம் உண்டாகும் என்பதும், மலைக் கோயில்கள் மூலம் நாம் பெறும் அருளனுபவமாகும்.

இத்தகைய நிலையில் பேராதனை முருகன் கோயில் அமைந்துள்ளது. எம்பெருமான் முருகனைப் போற்றி நற்புலமை பெறுபவர், பேராதனை வளாகத்தினர் என்பதை யாவரு மறிவர். எனவே, மேலும் மேலும் எம் பெருமானின் திருக்கோயில் பொலிவுறவும், இந்து சமய பீடம் நற்பணியாற்றவும் திருவருளை வாழ்த்துகிறேன்.

[இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, இந்து தருமம் வெள்ளி விழாமலர்-1978]

# திருவைந்தெழுத்து

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப் பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான்ம றக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே."

இறைவன் நமக்கு இச்சரீரத்தைத் தந்தது அவரை வழிபட்டு முத்தியடைவதற்காகவே என்பது நாவலர் பெருமானின் அருளுரையாகும். மக்கள் அடைதற்பாலன வாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பயன் நான்கினுள் இறுதியில் உள்ள வீடு ஒன்றே முடிந்த பயனாகும். அதனால் வீடு பேற்றையே 'பரமபுருடார்த்தம்' என்று பெரியோர் கூறுவர். இவ் வீடு பேற்றிற்குரிய சாதனங்களாகக் கூறப்படுபவை திருநீறு, உருத்திராட்சம், திருவைந்தெழுத்து என்பன. இவற்றில் திருநீறும், உருத்திராட்சமும் புறச்சாதனங்கள் என்றும், திருவைந்தெழுத்து அகச்சாதனமென்றும் கூறப்படும். திருமுறைகளிலும் மெய்கண்ட சாத்திரங்களிலும் திருவைந்தெழுத்தின் பெருமையும் விளக்கமும் உணர்த்தப்பட்டுள்ளன. "ஐந்தெழுத்து" எனவும் "பஞ்சாட்சரம்" எனவும் இதனை உணர்த்துவர். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர்ச்சொற்களாக அமையும். 'சி' என்பது சிவத்தையும், 'வா' என்பது திருவருளையும், 'ய' என்பது உயிரையும், 'ந' என்பது மாயை, கன்மம், திரோதான சக்தியையும், 'ம' என்பது ஆணவ மலத்தையும் குறிக்கும். ஐந்தெழுத்தும் இப் பொருளை உணர்த்தி நிற்கின்றன. 'சி' என்பதும் 'வா' என்பதும் பதி, 'ய' என்பது பசு, 'ந' என்பதும் 'ம' என்பதும் பாசம். ஆகவே பதி, பசு, பாசம் என்பனவே திருவைந்தெழுத்து உணர்த்தும் பொருளாகும். சி, வ சித்துப் பொருள். ந, ம அசித்து. ய சதசத்து.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்
பெருவெழுத்தும் — நெஞ்செழுத்திப்
பேசும் எழுத்துடனே
பேச எழுத்தினையும்
கூசாமல் கட்டக் கொடி."

உமாபதி சிவாசாரியாற் பாடப்பட்ட நூலே கொடிக்கவியாகும். சிதம்பரத்திலே ஏறாது இருந்த கொடியை ஏறச்செய்தவர் அவரே. திருவைந்தெழுத்தின் விளக்கங் கூறி நெஞ்சில் விதிப்படி தியானிக்கவே கொடியும் ஏறியது என்று காண்கிறோம். பஞ்சாட்சரத்தை ஐந்து வகையாகக் கூறுவர். தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம் அத்சூக்கும பஞ்சாட்சரம் என வகுப்பர். தூலம், சூக்குமம் ஆகிய இருவகைப் பஞ்சாட்சரமும் கொடிக்கவியில் 'ஐந்தெழுத்து' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பிரணவத்தோடு கூட்டி உபதேசிக்கும்போது ஆசாரியாராவர்கட்குப் பீஜ அட்சரங்களோடு எட்டெழுத்தாகவும் ஏனையோருக்கு ஆறெழுத்தாகவும் உபதேசிக்கப்படும். காரண பஞ்சாட்சரம் என்பது 'ஓம் சிவாய' என்பது. இதுவே நாலெழுத்து எனப்படும். இதனையே முத்தி பஞ்சாட்சரம் என்றும் சொல்வர். பிஞ்செழுத்து என்பது 'சிவ', பெருவெழுத்து என்பது 'சி'. இங்ஙனம் பலவகையாகச் சொல்லப்படும். பஞ்சாட்சரங்களைப் படிமுறையாக ஓதுவதே அவைகளை நெஞ்சில் அழுத்துதலாகும். இவ்வாறு அழுத்தி ஓதினால் சிவம் விளங்கி ஆனந்தம் பெருகும் என்பதையும் அருள் வெளிப்படும் நிலையே பேசும் எழுத்து என்றும் ஆனந்தத்தில் அழுத்தும் நிலையே பேசா எழுத்து என்றும் குறிப்பிடுகின்றனர். ஆகவே பஞ்சாட்சரப் பயனை உலகிற்குக் கூத்தப் பெருமான் வழங்குகிறார் என்பதைக் காட்டக் கொடி கட்டினார் உமாபதிசிவம்.

தமிழ் வேதமாகிய தேவாரங்களில் நடுவில் அமைந்த நான்காந் திருமுறையில்

நடுவிலமைந்தது திருக்குறுந்தொகை. இதில் நடுப்பாடலாகிய தேவாரத்தின் திருவைந் தெழுத்தே குறிப்பிடப்பட்டுள்ளது.

"விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி வாயவென்று
எண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே."

இதனாலே வடமொழி வேதமும் தமிழ் மொழி வேதமும் திருவைந் தெழுத்தையே மையமாகக் கொண்டு விளங்குதல் தெளிவாகிறது. மாணிக்கவாசக சுவாமிகளும் திருவாசகத்தை "நமச்சிவாய வாழ்க" என்றே தொடங்குகிறார். "நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" எனப் பாடி குருமூர்த்தியிடம் இருந்து பெற்ற ஐந்தெழுத்து உபதேச உண்மையை எடுத்துக் காட்டுகிறார்.

எனவே ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஐந்தெழுத்துச் சிந்தனை இடைவிடாது ஒலித்துக் கொண்டு இருக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் கடவுள் நம்பிக்கையும் உறுதியும் நிச்சயம் தேவையானது. உலக வாழ்விற்கு ஒளியூட்டுவது தெய்வ நம்பிக்கையேயாகும். இவ்வுலகத் துன்பங்கள் அனைத்தையும் ஐந்தெழுத்துத் தியானம் நீக்கிவிடும். உலகத் துயரெல்லாம் விறகுக் கட்டானால் அதனைப் பொசுக்குகின்ற ஞானக் கனல் ஐந்தெழுத்தாகும்.

"ஒன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழம்
தின்று கண்டேன் சிறு தித்தித்த வாறே"

நமச்சி வாயப் பழம் ஏனைய பழங்களைப் போலத் தோற்றமும் அழிவும் இல்லாத ஞானப்பழமாகும். அதனைச் செபம் செய்து வாழ்விற்கு உறுதுணை தேடிக் கொள்வோமாக.

[ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம் சிறப்பு மலர் — 8-2-1976]

---

# இராஜகோபுர மகா கும்பாபிஷேகம்

"திருவாக்கும் செய்கருமம்
கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்
— உருவாக்கும்
ஆதலால் வானோரும்
ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தங் கை."

மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியே இறைவன். அங்கிங்கெனாதபடி நிறைந்திருப்பவனை ஆலயங்கள் கட்டி விக்கிரகங்களில் எழுந்தருளச் செய்து வழிபடுவதே ஆலய வழிபாடு. ஆதி மனிதன் தனக்கு நன்மை செய்பவற்றை வணங்கினான். சூரிய வணக்கம், அக்கினி வணக்கம் என்பன இத்தகைய முறையில் எழுந்தவையாகும். ஆனால் காலஞ் செல்லச் செல்ல மனித மனம் விரிந்து ஒரு நாமம்; ஒருருவம் ஒன்று மில்லாற்கு ஆயிரந் திரு நாமம் பாடித் தொழும் மார்க்கம் எழுந்தது. இதன் பயனாகவே ஆலயங்கள் எழுந்தன. எங்கும் ஒலி அலைகள் பரவிக்கிடந்தாலும் அவற்றைச் சேகரித்து வெளியிட வானொலிப் பெட்டி எவ்வாறு தேவைப்படுகிறதோ அதேபோல் அருள் வெளிப்பாட்டுக்கு ஆலயம் இன்றியமையாததாகின்றது. 'ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்பது சிவஞானபோதம். இவ்வடிகளில் காணும் கருத்து எவ்வளவோ பெருமையும் தூய்மையுமுடையது. ஆலயம் என்பது தொழுபவர் நெஞ்சில் மட்டுமல்ல, உண்மையாகவே சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஒரு ஊருக்கு உண்மை அழகையும், ஒளியையும் கொடுப்பன ஆலயங்களே. திருக்கோவில் இல்லாத ஊரை "அடவிகாடே" என்று அப்பர் சுவாமிகள் வர்ணிக்கிறார். ஆலயங்களைக் கட்டிக் கும்பாபிஷேக விழாக்களை நம் முன்னோர் எடுத்துத் தெய்வீகப்பணி செய்த நோக்கம் இதுவேயாகும். ஆனால் கோயில்களைக் கட்டிவிட்டால் மட்டும் போதாது. தொடர்ந்து கோவிற் பணி சிறப்பாகவும்,

நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெறவும் வழிகாண வேண்டிய கடமை சைவ நன்மக்களுக்கு உண்டு.

இத்தகைய சைவ நன்மக்கள் பலர் வாழுமிடம் காரைநகர். இவ்வூரில் அற்புதமாக விளங்கும் வாரிவளவு பிள்ளையார் ஆலயமும் முன்னணியில் விளங்குவதாகும். அங்குள்ள அடியவர்கள் அனைவரும் வாரிவளவு விநாயகனைத் தமது உள்ளக் கோயிலில் ஏற்றி வழிபடுகிறார்கள். கபிலதேவ நாயனார் பாடலில்:

''வாழைக்கனி பலவின்கனி
மாங்கனிதாஞ் சிறந்த
கூழைச்சுருள் குழை அப்பமெள்
ளுண்டைஎல் லாம்துறுத்தும்
பேழைப்பெரு வயிற்றோடும்
புகுந்தெம் உளம்பிரியான்
வேழத் திருமுகத்து
செக்கர் விநாயகனே.''

எனக் குறிப்பிடுகிறார். இதே கருத்தைத் தமதுள்ளத்தில் வைத்துப் போற்றுபவர்கள் இவ்வூர் மக்கள். இவ்வாலயம் இன்று அழகிய சிற்ப வேலைப்பாடுகளோடு அமைந்த இராஜகோபுரத்துடனும் எழில் மிகுந்த திருக்கோயிலுடனும் காட்சி தருகின்றது. திருப்பணித் தொண்டரும், திருக்கோயிற் கண்காணிப்பாளரும், விநாயக பக்தருமாக விளங்குபவர் அன்பர் சிவஞானம் அவர்கள். அவர்களின் அயரா உழைப்பைக் காரைநகர் மக்கள் நன்கு அறிவர். அறங்காவலர் அமரர் கணேசபிள்ளையும் திருமதி கணேசபிள்ளையும் சிவபுண்ணியத்தில் தோய்ந்த உள்ளத்தினர்; செந்தண்மையாளர். அவர்களின் பெருந்தன்மையைப் போற்றாமலிருக்க முடியாது. நன்கு அறிந்து தெளிந்த உள்ளத்தோடு திருப்பணிகளை நடாத்த ஒருவரை நியமித்த சிறப்பையே உன்னிப் பார்க்க வேண்டும். தொண்ணூறு வருடங்களுக்கு முன் மண்கோயிலாக விளங்கிய இவ்வாலயம் இன்று வானளாவுங் கோபுரத்தோடு காட்சி தருகின்றதென்றால் அறங்காவலர் 'சுப்பு' உடையார் பரம்பரையினரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இன்றைய அறங்காவலர் திருமதி பரமேஸ்வரி கணேசபிள்ளை அவர்கள் பெண்மையின் பிறப்பிடம். சாந்தமும் பொறுமையும் கொண்ட இவ்வம்மையார் வாரிவளவு விநாயகனின் அடியாள் என்ற நிலையிலேயே காட்சி தருவார். ஆலய நித்திய நைமித்திய ஒழுங்கும் மிகவும் பாராட்டுக்குரியது. பல ஆண்டுகளுக்கு முன்பு தேர்த் திருப்பணி சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. இத்தேர் தனித் தேக்கு மரத்திலேயே செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்துச் சிற்பிகள் :

புதிதாக அமைந்த இராஜகோபுர நிர்மாணத்துக்கு தமிழ்நாடு சிதம்பரத்திலிருந்து சிற்பி திரு K. இராமமூர்த்தி அவர்களும், அவர்கள் குழுவினரும் அழைக்கப்பட்டனர். இவர்களே தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய இராஜகோபுரத்தைக் கட்டி முடித்தவர்களாவர். திரு. இராமமூர்த்தி, திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு பிரம்மராயர், திரு பழனிவேல் ஆகிய நால்வரும் சிதம்பரத்தைச் சேர்ந்த சிற்பிகள். இவர்களின் சிற்ப வேலைத்திறனை இந்நாட்டிலும் தமிழ்நாட்டிலும் பாராட்டாதவர்கள் இல்லையென்றே கூறலாம்.

தற்போது இராஜகோபுரத்துடன் முன் மண்டபமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ''வீட்டைக் கட்டிப்பார்'' என்பது பழமொழி. வீட்டைக் கட்டும்போது ஏற்படும் புதுப்புது அனுபவங்களிலும் பன்மடங்கான அனுபவம் கோயில் கட்டும்போது ஏற்படுகிறது. ஒரு ஆலயத் திருப்பணியில் ''இராஜகோபுரம்'' முக்கியமானது. கோயில் வாயில் எனப்படும் பெருமை இதற்குண்டு. ''வாய் கோபுர வாசல்'' என்றார் திருமூலர். அழகிய சிற்பங்கள் புராண வரலாறுகளைக் காட்ட, கோபுர அமைப்பு தூலலிங்க தரிசனத்தை நல்கி நிற்க, ஐந்து வாயில்கள் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூத தத்துவத்தை உணர்த்த கலைமேவும் தலைவாசலாக இராஜகோபுரம் விளங்குகிறது. இராஜகோபுரம் கட்டுவது என்பது சாதாரணமான செய

லன்று. தெய்வ பலத்தோடு விடாப்பிடியாக ஆன்ம பலமும் இணைந்தால் ஒழிய இப்பணியை நிறைவேற்ற முடியாது. ஆனால் கருணைக்கடலாம் கணநாதன் இப்பணியை நிறைவேற்றித் தந்துள்ளான் என்பது அற்புதத்தில் அற்புதமே. கல்லுக்குள் உறுதியையும், நீருக்குள் தண்மையையும், தீயுக்குள் வெப்பத்தையும், பஞ்சுக்குள் மென்மையினையும் படைத்தவன் பரம் பொருளே. எங்கும் எவற்றிலும் நீக்கமற நிறைந்திருந்தாலும், அவனுடைய அருட்சக்தி வெளிப்படுமிடங்கள் இப்பூவுலகில் திருக்கோயில்களேயாகும்.

'திருக்கோயில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவனுறைவா னங்கே
உருக்கோலி மந்திரத்தால்
எனநினையு மவற்கும்
உளனெங்கும் இலனிங்கும்
உளன்என் பார்க்கும்
விருப்பாய வடிவாகி
இந்தனத்தில் எரிபோல்
வந்துதித்து மிகுசுரபிக்
கெங்கும்
உருக்காண ஒண்ணாதை
பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போலும்
வெளிப்பட்டருளுவான்அன்பர்க்கே'

என்பது சிவஞான சித்தியாரில் ஒரு பாடல். வளர்ந்து வரும் விஞ்ஞானம் இயந்திரம் போன்ற வாழ்வு முதலியன மனிதனை அமைதியான ஆன்மீகச் சூழலில் இருந்து எங்கோ இழுத்துச் செல்கின்றன. பாலைவனத்தின் நடுவே அமைந்த சோலைகள் போலக் கோயில்கள் ஆன்ம கோடிகளுக்கு அருள் நிழல் காட்டும் கற்பகத் தருக்களாகும். இத் திருப்பணிகளில் ஈடுபடுவோர் அதி மனிதர்கள் என்று போற்றப்படுதற்குரியர். ஏனெனில் மனிதனை விலங்கு நிலையிலிருந்து விடுவிக்க எடுக்கப்படும் பணி இதுவாகும்.

''கண்டுநின்ற மாயையும்
கலந்துநின்ற பூதமும்
உண்டுறங்கு மாறுநீ
ருணர்ந்திருக்க வல்லிரேல்
பண்டையாறு மொன்றுமாய்ப்
பயந்தவேத சித்தராய்
அண்டமுத்தி யாகிநின்ற
வாதிமூல மாவிரே.''

நாம் மாயையின் பிடியில் எவ்வளவு தூரம் சிக்குண்டு கிடக்கிறோம் என்பதை இப்பாடல் காட்டுகிறது. இப்படிச் சிக்கித் தவிப்பவர்களுக்குக் கரையேறும் தெப்பங்களாகத் திருக்கோயில்கள் காட்சி அளிக்கின்றன.

பெருமைக்கும், நுண்மைக்கும், பேரருட்கும், பேற்றின் அருமைக்கும் ஒப்பில்லாத இறைவனுக்கு உயர்ந்த இராஜகோபுரம் கட்டுவதன் நோக்கம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். உயர்ந்து நிற்கும் இராஜகோபுரங்களனைத்தும் மனிதனுடைய உள்ளம் உயரவேண்டும் என்பதையே காட்டுவது. இதற்கு வழிகாட்டுவன திருக்கோயில்களே.

காரைநகரில் வாரிவளவு விநாயகனுக்கு முதன் முதலாக இராஜகோபுரக் கும்பாபிஷேகம் நடைபெறுவதும் ஒரு பொருத்தமாகும். சிவன் கோவில், அம்மன் கோவில், முருகன் கோவில்களால் சிறப்புப் பெற்ற இவ்வூரில் முதல் நிறைவேற வேண்டியது விநாயகப் பெருமானுடைய இராஜகோபுரம் என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே தொடர்ந்து ஏனைய திருக்கோயில் திருப்பணிகளும் நிறைவேறும் என்பது திண்ணம்.

இன்று 31-1-1982 ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்தின் சரித்திரத்தில் ஒரு பொன்னான நன்னாள். மூலமூர்த்திக்கும், இராஜகோபுரத்துக்கும், ஒன்றாக மகா கும்பாபிஷேகம் நடைபெறக் கிடைத்த நன்னாள். சைவமக்கள் அனைவரும் இவ்விழாவிற் கலந்து கண்ணினால் அவர் நலவிழாப் பொலிவு கண்டு இன்பசுகம் பெறவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

[காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக மலர்].

# சைவசமய வளர்ச்சிக்குப் பெண்கள் ஆற்றிய தொண்டுகள்

சைவம் சிவசம்பந்தமுடையது. சிவம் அன்புமயமானது. எனவே அன்பு நெறியே சைவநெறி. அதுவே பழந்தமிழ்க் கொள்கைத் திரட்சியாகவும் காணப்படுகிறது. அது எந்தச் சமயத்திற்கும் கொள்கைக்கும் முரண்படுவதன்று. எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கி அவற்றுள் அடங்காப் பெருநெறிகளையும் தமதாக்கிப் பரந்து பெரு நோக்குடன் விளங்குவது சைவசமயம். வேதாகமங்களே சைவத்தின் முதனூல்கள் ஆகும். வேதங்கள் இறைவனை மனம் வாக்குக் காயங்களுக்கப்பாற்பட்டவனாகக் காட்டின. ஆனால் ஆகமங்களோ எங்குமுள்ள பொருளை எங்கும் காணலாம் என்று காட்ட முயன்றன. அதாவது சிறந்த இடத்தைத் தூய்மை செய்து நீர், மந்திரம், இயந்திரம், கிரியை முதலியவற்றால் இறைவன் திருவருளைத் தேக்கும் வழியைக் காட்டியது. இந்தவகையிலே பீடம், கருவறை, விமானம், பெருமண்டபம், திருச்சுற்று ஆகியவற்றாலும் நந்தி, பலிபீடம், கொடிமரம், கோபுரம் என்பவற்றாலும் பெருங் கோயிலமைத்து வழிபடும் மரபு சைவமக்கள் மத்தியில் வளர்ந்து வந்தது. கட்டிய கோயிலைப் புதுக்குவிப்பதும், நித்திய நைமித்திகங்களைச் சிறப்புற நடாத்துவதும், கோயிலை மையமாகக் கொண்டு சைவச் செந்நெறி வளர்தற்கான தொண்டுகளை யாற்றுவதும் சைவமக்களின் பெருங்கடனாகும். இப்பணியில் மலேசியா வாழ் சைவமக்கள் பெரும்பங்கெடுத்து வருகிறார்கள். சிலாங்கூர் இலங்கைச் சைவ சங்கத்தினரின் சிவப்பணியை இச்சமயத்தில் போற்றி நிற்கிறோம். நிற்க, சமயப் பணியில் ஆண்களோடு பெண்களும் சமபங்கெடுத்துப் பணிபுரிந்துள்ளனர் என்பதை எமது சைவசமய வரலாறு காட்டுகிறது. பெண்மையின் சக்தியைக் காட்டுவதற்காகவே இறைவன் மாதொரு பாகனாய் விளங்குகிறான். அடியார்களுக்கு அருள் செய்யவருங்காலத்தும் அம்மையை இடப் பாகத்திற் கொண்டே எழுந்தருளுகிறார். இருநாழி நெற்கொண்டு எண்ணான்கு அறமும் வளர்த்தவள் அம்பிகை.

"சிவமெனும் பொருளும் ஆதிசக்தியோடு
சேரின் எத்தொழிலும்
வல்லதாம் அவள் பிரிந்திடின்
இயங்குவதற்கும் அரிது
அரிதென மறை இசைக்குமால்"

என்பது சௌந்தரியலகரி. எனவே அவனது உருவாயமைந்த மகளிர் அறம் வளர்ப்பவராய், அன்னபூரணிகளாய், விளங்கிச் சமயத் தொண்டாற்ற வேண்டியவர்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே ஔவையார் போன்ற பெண் புலவர்கள் சிவநெறி வாழ்வு வாழ்ந்தனர். அதிகமான் அரிதிற் பெற்ற நெல்லிக் கனியை ஔவைக்குக் கொடுத்த பொழுது எல்லாம் வல்ல சிவபெருமானின் அற்புதத்தோடு ஒப்பிட்டு அரசனைப் பாராட்டுகிறார் ஔவை. "இவள் நம்மைப் பேணும் அம்மை காண்" என்று மொழிந்தாரே சிவபெருமான். அந்தப் பெருமை பெற்ற காரைக்காலம்மையார் சைவத்திருத் தொண்டில் தன்னை அர்ப்பணித்த பெருந்தகையார். கணவனுக்கு முன்னணியில் நின்று அவனாலேயே "தெய்வம்" என்ற போற்றுதலையும் பெற்று அருள் வாழ்வு வாழ்ந்தவர் அம்மையார். கணவன் தம்மை விட்டு நீங்கியபோது சிவநெறியில் ஊன்றி நின்று தமது உடலழகு அலங்காரமனைத்தையும் உதறித்தள்ளிவிட்டு இறைவனிடமே பேய் வடிவை வேண்டிப் பெற்றவர்.

"ஈங்கிவன் குறித்த கொள்கை
இதுஇனி இவனுக் காக
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்துன் பாலே
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு மென்று
பரமன்தாள் பரவி நின்றார்."

—பெரியபுராணம்.

இறையருள் வழிநின்று எலும்பும் தோலு மாகிய பேய்வடிவு கொண்டு.

"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்—சுடர்உருவில்
என்பறுக் கோலத் தெரியாடும் எம்மானுர்க்கு
அன்பறுது என்நெஞ் சவர்க்கு."

என்று வைராக்கிய பக்தி மிளிரப் பாடல்களைப் பாடினுர். தெய்வத் திருவருட் பாசுரங்களைப் பாடி நாயன்மார்களுக்கே வழி காட்டியவர் காரைக்காற் பேயார். இல்லத்தில் நின்று சிவனடியார்களைப் பேணல், கணவனுல் நீக்கப்பட்டபின் ஆண்டவன் ஒருவனுக்கே ஆளாதல், தெய்வப் பாசுரங்களைப் பாடிச் சிவநெறிக்கு அரண் செய்தல் ஆகிய வற்றில் முன்னின்று வழிகாட்டினுர் காரைக்கால் பேயார்.

மங்கையர்க்குத் தனி யரசியாகிய பாண்டிமாதேவி, தனது நாட்டில் சமண இருளைப் போக்கிச் சைவ விளக்கை ஏற்றி வைத்தவர். ஏழாவது நூற்ருண்டிலே சைவ உணர்வும் சைவ ஒழுக்கமும் தடுமாறிச் சிறுமையுறுவது கண்டு மனங்கலங்கி நின்றவர் அரசியார். ஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு அழைத்துச் சைவத்தை விளங்க வைத்தவர். நெறிமாறியிருந்த தன் கணவனைச் சைவனுக்கி மேன்மை பெற்றவர். சைவ வாய்மை ஒழுக்கத்தில் ஊன்றி நின்ற அரசியாரையும் அமைச்சனுரையும் ஞானசம்பந்தப்பிள்ளையார் கண்ணுற்று,

"சூழலு மாகிய பரசம யத்திடைத்
தொண்டு செய்து
வாழு நிர்மையிர் உமைக் காண வந்தனம்"

எனக் கூறித் திருவாய் மலர்ந்தருளினுர். ஆலவாய் அப்பனையும் அங்கயற்கண்ணி அம்மையையும் வழிபட நின்ற பெருமானுக்கு மங்கையர்க்கரசியாரின் சைவத் தொண்டே முன்னிற்கிறது. அதனைத் தேவாரத் திருப்பதிகத்தில் அழகுற அமைத்துள்ளார்.

"செந்துவர் வாயாள் சேலன கண்ணுள்
சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெயப் பாரிடை நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தம்
தண்எருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே."

சேக்கிழார் சுவாமிகளும் மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் என்று போற்றுகிருர். கணவனுல் தெய்வம் என்று பாராட்டப்பட்டார் காரைக்காலம்மையார். சேக்கிழார் சுவாமிகளால் தெய்வம் என்று பாராட்டப்பட்டவர் மங்கையர்க்கரசியார். அரசியாரின் அறிவும், ஆற்றலும், சைவப்பற்றும் பாண்டிநாட்டின் பெருமையை வழிவழியாகப் பேணிக்காத்தது என்று கூறினுல் அது மிகையாகாது, திருக்களிற்றுப்படியாரில் ஒரு பாடல் மிகச் சுவையாக அமைந்துள்ளது. சம்பந்தரைப் பார்த்து வினுவுவது போன்ற பாணியிலே அப்பாடல் வருகின்றது. அதாவது "சம்பந்தா நீ பொய்கைக் கரையிலே இருந்து அழுததைக் கண்டு பால் சுரந்த அன்னையோ அல்லது உனது வருகையை அறிந்து கண்ணீர் சொரிந்த அரசியோ சிறந்தவர்கள் என்பதைச் சொல்வாயாக" என்பது அப்பாடலின் பொருளாகும். இத்தகைய நிலையில் உமையம்மையையும் மங்கையர்க்கரசியாரையும் ஒப்பிட்டு நோக்கும் சிறப்பை நாம் காண்கிருேம். ஞானசம்பந்தருடைய குழந்தைத் தன்மையை நினைத்துப் பேதலித்த மனத்தையுடையவராகி அரண்மனையிலே கண்ணீர் சொரிந்து "இச் சிறுவனுக்கு யாராவது தீங்கு செய்து விடுவார்களோ" என்று அஞ்சினுர் அரசியார். அதனை உணர்ந்த ஞானக் குழந்தை

"மானி னேர்விழி மாத ராய்வழு
திக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாய்ஒரு பாலன் ஈங்குஇவன்
என்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை ஆதி யாய
இடங்களிற் பல அல்லல்சேர்
ஈனர்கட் கெளி யேன்அலேன் திரு
ஆலவாய் அரன் நிற்கவே"

என்று பாடி அரசியாரின் துன்பத்தைத் துடைத்தார். பாண்டி நாட்டில் ஆலயங்கள் மீண்டும் புத்தொளிவீசவும், திருநீற்றின் பெருமையைச் சைவ உலகம் அறிந்து உய்யவும், பாண்டியன் மரபுக்கு இழிவு நேரிடாமல் இருக்கவும் பணியாற்றியவர் மங்கையர்க்கரசியார். கொாண்டவனைப் பேணிய பெருமையும் சைவத்தில் மீண்டும் நிலைபெறச்செய்த பெருமையும் மங்கையர்க்கரசியாரையே சேரும்.

''தூண்டுதவ விளக்கனையார்'' எனப் போற்றப்படுபவர் திலகவதியார். அவர் தனக்கு என ஒரு தனிப்பாதையை அமைத்துக்கொண்டு தம்பியைச் சைவத் தொண்டனுக்கும் பணியில் கண்ணும் கருத்துமாக அரும்பாடுபட்டார். இளமை மோகங்களில் நாட்டம் செலுத்தவேண்டிய காலத்தில் விதி சதியினுல் திசை திருப்பப்பட்டு அனுதரவான நிலையில் ஆண்டவன் ஒருவனையே பற்றிக் கொண்டார். தம்பியாராகிய மருள்நீக்கியார் சமணசமயத்திற் சேர்ந்துவிட்டார் என்பதை அறிந்து பெரும் துன்பமுற்ருர். ஏனென்ருல் முன்னமே தன்னுயிரை விடுத்து இறைவன் அடியைச் சேர இருந்தவரை தம்பியின் பாசமே மீண்டும் உயிர்வாழச் செய்தது. அந்த நிலையில் வாழ்ந்தவருக்குத் தம்பியின் மதமாற்றம் தாங்கொணுத் துயரைக் கொடுத்தது. தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயவு மேலும் மேலும் உள்ளத்திற் பெருகி ஓங்கியது. வீரட்டானேசப் பெருமானைத் தினந்தோறும் வணங்கிப் பணி செய்து வருபவர். அன்று ஒருநாள் வரமொன்றை வேண்டிக்கொண்டார். அதாவது தன் தம்பியைச் சைவத்துக்கு மீட்டுத் தர வேண்டும் என்பதாகும். அவர் வேண்டுதலை ஏற்ற இறைவன் சூலைநோரயைக் கொடுத்து மருள்நீக்கியாரை திருநாவுக்கரசர் ஆக்கினுன் அன்றே! தன் தம்பிக்குத் திருநீறும் கொடுத்து, திருவைந்தெழுத்தையும் உபதேசித்து, சிவாலய வழிபாட்டுக்கும் வழிகாட்டியவர் திலகவதியார். உழவாரத் தொண்டு புரிவதற்கு வழிகாட்டி வைத்தவரும் இவரே. இதனுலேயே தவத்தைத் தூண்டிய விளக்குப் போன்றவர்; தம்பியைத் தூண்டிய விளக்குப் போன்றவர்; சைவத்தைத் தூண்டிய விளக்குப் போன்றவர் என்ற கருத்தமையச் சேக்கிழார் சுவாமிகள் தூண்டுதவ ''விளக்கனையார்'' என்று போற்றுகின்ருர். திலகவதியாரின் சேவையினுல் திருத்தொண்டுக்கு ஒரு அப்பர் தோன்றினுர் என்ற பெருமையோடு நினைக்கின்ரேம் அல்லவா;

பெரியபுராணத்தில் மேலும் பல சிவனடியார்களுடைய சைவ வாழ்வுக்கு வழி காட்டிய பெண்மணிகளைப் பற்றி அறிகின்ரேம். திருவாசகத்தில் பெண்களின் ஆடல்களைக் காட்டுவதன் மூலம் அவர்களுடைய சைவ ஒழுக்கத்தை விளக்கியுள்ளார் மணிவாசகர். பாவை நோன்பு போன்றவை பெண்களினுல் அனுட்டிக்கப்பட்டவை. பெண்கள் இறைவனை நோக்கி,

> '' உன்னடியார் தாள்பணிவோம்
> ஆங்கவர்க்கே பாங்காவோம்
> அன்னவரே எங்கணவர்
> ஆவார் அவர்உகந்து
> சொன்ன பரிசே தொழும்பாய்ப்
> பணிசெய் வோம்,
> இன்ன வகையே எமக்கெங்கோன்
> நல்குதியேல்
> என்ன குறையும் இலோம் ''

என்றபடிநிற்கும் சிறப்போடு பெண்களுடைய நோன்பு முறை பேசப்படுகின்றது. ஆண்டாள் திருப்பாவையிலும் பெண்கள் கண்ணபிரானை வழிபட்டு நாட்டின் நல்வாழ்விற்காக வேண்டி நிற்கும் வரங்கள் காட்டப்பட்டுள்ளன. இன்னும் பத்தாம், பதினெராம் நூற்ருண்டில் சோழர்கள் திருப்பணி செய்த காலத்தில் பெண்கள் அவர்களுக்குக் கொடுத்த ஒத்துழைப்பைச் சரித்திரம் காட்டுகின்றது. செம்பியன் மாதேவி என்ற அரசி சிவாலயத் திருப்பணிகளில் மிகவும் அக்கறை காட்டினுர். குந்தவைப் பிராட்டியார் தனது சகோதரன் இராஜ ராஜ சோழனுக்கு சிவாலயத் திருப்பணி செய்யும் அவசியத்தை நாளும் பொழுதும் உணர்த்தியதன் பேரிலேயே தஞ்சைப் பெருங் கோயில் கட்டி எழுப்பப்பட்டது. திருமுறை

கண்ட சோழனுக்கு ஆதரவு அளித்து அப் பணியில் ஊக்கம் கொடுத்தவர்கள் சோழ அரசியர்களே.

நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் ஆகிய காலங்களிலும் பல பெண்மணிகள் சைவ வாழ்வு வாழ்ந்து தம் கணவருடைய சமய வாழ்வுக்கு வழிகாட்டிச் சமயப்பற்று உடையவர்களாக விளங்கினார்கள். பிற் காலத்திலும் அன்னை சாரதாதேவி, கஸ் தூரிபாய் போன்ற பெண்மணிகள் சமய வளர்ச்சியிலும் ஆன்மீகப் பாதையிலும் பெரும் பங்கு கொண்டார்கள் என்பது யாவரும் அறிந்ததே. என்னை இந்த நிலைக்கு ஏற்றி வைத்தவள் என் மனைவி சாரதாவே என்று போற்றுகின்றார் ஸ்ரீ பரமகம்சர். சுவாமி விவேகானந்தரைப் பெற்று எடுத்த தாயின் தூய சக்தியை நாம் மறக்கமுடி யாது. மகாத்மகாந்தியடிகளைச் சத்திய நெறி யில் வழிப்படுத்திய அவரின் அன்னையாரை எவரும் நினைவு கூருவர்.

ஆகவே தெய்வீக வாழ்வு என்பது இல்லறமாகிய மனைவாழ்க்கையென்னும் வித் தில் தோன்றி விரிந்து கிளைத்த விளைவே யாகும். இவ்வித்து அன்பு நீராலும் அருட் காற்றாலும் இன்ப வெப்பாலும் செழித்து முளை கொண்டு வளர நிறை நெஞ்ச முள்ள மங்கையரே காரணர்களாவர். பெண் என்பது பெட்பு என்னும் பண்பினை உணர்த்தி நிற்கிறது. அதாவது விருப்பத் திற்குரியவர்கள். அவ்விருப்பு பெரு விருப் பாகச் சிவ விருப்பாக அமைகிறது. இதனு லேயே ஆன்மாக்கள் அனைத்தையும் பெண் ணெனப் பெருநூல்கள் பேசுகின்றன. மாதர்கள் தாயாம் நிலையிலும் மனைவியாம் நிலையிலும் உடன் பிறப்பாம் நிலையிலும் மனைக்கு முதல்வியாம் நிலையிலும் பொறுப் புடையவர்கள். சைவ ஒழுக்கம் பேணும் பெண்மணிகள் பன்னிரு திருமுறை களைப் பேணி வாழும் பயிற்சியுடையவர் களாக விளங்கவேண்டும். திருமுறைகளைக் குடும்பத்துடன் சேர்ந்து வாரத்தில் ஒரு நாளைக்கேனும் ஓதும் பழக்கத்தை ஏற் படுத்த வேண்டும். திருவிளக்குப் பூசை மலராலும் அட்சதையாலும் ஆற்றி வீட்டில் மங்கல நிலையை ஏற்படுத்த வேண்டும். விரதங்களை அனுட்டித்தலும் சிவாலயப் பணிகளாகியவற்றைச் செய்தலும் செய் வித்தலும் மங்கையரின் தலையாய பணி களாக அமைய வேண்டும். எனவே சமய வாழ்வில் பெண்கள் பங்கு மகத்துவமானது என்பதை உள்ளத்தே கொண்டு மனையறத் தின் வேரனையராய் தம்மைக் காத்துத் தற் கொண்டானைக் காத்து, நாட்டைக் காத்து, சைவத்தைக் காத்து தனிப் பெருஞ் சக்தி யினராய் விளங்கவேண்டும் என்பது திரு வருட் கட்டளையாகும்.

[அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் (கோலாலம்பூர்) மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் — 1-6-1978]

✻

"சமயக் காழ்ப்பு மிகுந்த காலையிலேயே சாதி வெறியைத் தூக்கியெறிந்துவிட்டார் சுந்தரர்."

✻ ✻ ✻

"நல்லவற்றையே நாம் நினைக்கவேண்டும். நல்லவற்றையே நாம் பேசவேண்டும். நல்ல வற்றையே நாம் நாடவேண்டும். பரந்த சொல், பரந்த மனப்பான்மை வேண்டும். நல்லவனே பெரு வெற்றி பெறுவான் என்று நமது புராணங்கள் கூறுகின்றன."

✻ ✻ ✻

"தமிழ்ப் பெண்கள் எங்கு வாழ்ந்தாலும், நமக்கே உரித்தான சிறந்த பண்பாடு, ஒழுக்கம், வாழ்க்கை முறை என்பவற்றை மறக்காது அவற்றைப் போற்றி வாழ வேண்டும்."

# தாய்மையே இறைவனின் முதல் வடிவம்

''தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.''

உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். அதாவது குழந்தையைப் பெற்றுப் பாலூட்டித் தாலாட்டித் தொட்டிலில் வளர்த்தி பின்பு சிறிது வளர்ந்த ஞான்று விளையாட விட்டுப் பின்நின்று பார்த்து மகிழ்பவள் தாய். எவை எவை எப்பொழுது தேவை என அறிந்து கொடுத்து வளர்ப்பது அன்றி அமைதியாக உறங்கவைப்பவளும் தாய். இதே நிலையிலேயே இறைவனும் தாயாக நின்று ஆன்மகோடிகளைப் பேணி எடுத்துப் பிறப்பறுக்கின்றான் என்பது சைவசித்தாந்த முடிபு. இறைநிலையில் இது ஒரு உயர்ந்த தத்துவமாகும்.

உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண்குலமே அமையவேண்டும். தர்மம், சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை, கற்பு, தன்னம்பிக்கை, தன்னடக்கம் ஆகியவை அனைத்தும் பெண்குலத்துக்குப் பெருமை தருவன. பிறந்த இடத்துக்கும், புகுந்த இடத்துக்கும் பெருமையைத் தேடிக் கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி விளங்க வேண்டிய கடமை பெண்களுக்கு உண்டு.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்துமதம். இதையொட்டியே சாக்தம் என்ற ஒரு பிரிவு ஏற்பட்டது. சைவம் அம்மை அப்பனைப் பேசி நிற்க, சாக்தம் எல்லாம் அம்மையின் உறவாகவே இணைந்து விடுகிறது.

தாய்மையருள் மீன்கண் பார்வைபோல் இரட்சிப்பது. அருளே உமையாகவும் அறிவே சிவமாகவும் இவ்வுலகை இயக்கி நிற்கும் நிலையைச் சைவத் திருமுறைகளிற் பரக்கக் காணலாம்.

ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது திருக்கூத்து. இதனை ஆடுபவன் நடராசன். தாளம் போடுபவள் பராசக்தி. அம்மையின் தாள லயம் குன்றினால் அப்பனின் தாண்டவம் பிழைத்தால் உலக இயக்கமே தாறுமாறாகிவிடும். இதனால் எம்பெருமான் அம்மையின் பக்கம் நோக்கி அமைதியாக ஆடுகிறான்.

''மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்.''

என்று போற்றுகிறார் சேக்கிழார்.

சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றி வாழ்ந்த சிறப்புக்குரியவர்கள். தீயினில் தெறலாய், பூவினுள் நாற்றமாய், கல்லினுள் மணியாய், சொல்லினுள் வாய்மையாய் இறைப்பொருளை அனுபவித்தார்கள்.

எனினும், பெண்மக்கள் திருவிளக்கேற்றியும், மலர் தூவியும், நெல் தூவியும், கோலமிட்டும் வழிபட்டமைக்குச் சான்றுகள் பலவுண்டு. வீட்டு முற்றத்து மல்லிகை மலரும் மாலைநேரத்தில் விளக்கேற்றி வழிபாடுசெய்வதில் அவர்கள் ஈடுபாடு கொண்டமையும், குரவைக் கூத்தாடி முருகனைப் பூசித்த முறைமையும் அக்காலப் பாடல்களிற் காண முடிகிறது.

தை நீராடிப் பாவை நோன்பு அனுட்டித்த சிறப்புக்களையும் அகநானூறு என்ற நூலிற் காணமுடிகிறது.

சைவத்தின் பெருமையிலும் வளர்ச்சியிலும் பெண்கள் பெரும் பங்கு பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டும் முகமாகப் பூம்பாவையை எழுப்பிய இடத்தில் ஞானசம்பந்தர் வேண்டுதலைக் காண்கிறோம்:

"மண்ணி னிற்பிறந் தார்பெறும்
பயன் மதிசூடும்
அண்ண லார்அடி யார்தமை
அமுது செய்வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப்
பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன்
வருகென உரைப்பார்."

அடியாரைப் போற்றலும் அமுது செய் வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபடுதலும் பெண்குலத்தின் கடமைகள் என்பதை இவ்வரலாறு காட்டுகிறது.

இன்னும் பக்திநெறியிற் பெண்மக்கள் கொண்டுள்ள பங்கைக் கவனிப்போம். திருவாசகத்திலே மணிவாசகர் கூற்ருென்றில் காணலாம்:

"முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானுகப்
பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ
ராவா ரவருகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு
மிலோமேலோ ரெம்பாவாய்."

கன்னியர்கள் தமக்குக் கிடைக்கப்பெறும் கணவன்மார் சிவதொண்டர்களாகவே அமைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர்.

ஏனென்ருல் பக்தியனுபவம் கணவனுக்கும் மனைவிக்கும் ஒன்ருய் அமையாவிடத்துத் திருப்தியாக இல்லறதர்மம் அமையாது. இதற்கு எடுத்துக்காட்டாகக் காரைக்கால் அம்மையார் வாழ்வு அமைகிறது. விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழுவதென வளர்ந்தவர் அம்மையார். ஆனுல் திருமண வாழ்வு சிறப்பாக அமையவில்லை யெனினும் கணவனுலேயே "தெய்வம்" எனப் போற்றப்படும் பெருநிலையும் இவருக்கு ஏற்படுகிறது. அந்நிலையிலே சிவநெறி யொன்றே கைவரப் பெற்றவராய் உற்பவித்தெழுந்த ஞானத் தொருமையிலே அற்புதத் திருவந்தாதியைப் பாடுகிருர். அதில் ஒரேயொரு பாடலை மாத்திரம் எடுத்துக் கொள்வோம்:

"வானத்தா னென்பாரு
மென்கமற் றும்பர்கோன்
தானத்தா னென்பாரும்
தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட
மெய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தான்என்பன் யான்".

இங்கே ஒரு பெருமிதம் தோன்றுகிறது. அதாவது ஆண்டவன் தன்னகத்திலே குடியிருக்கின்ருன் என்பதே அதற்குக் காரணமாகும்.

"ஒன்றே நினைத்திருந்தேன்", "ஒன்றே துணிந்தொழிந்தேன்", "ஒன்றே என்னுள்ளத்தினுள் அடைந்தேன்" என்று பாடிப் பேய் வடிவுடன் காற்றினும் கடிதாகச் சொல்கிருர்:

"அண்டர்நா யகனுர் என்னை
அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கு
யான் எவ்வுரு வாயென்"

என்பது அவர் கருத்து.

தலையினுல் நடந்து திருக்கைலையை அண்மித்த பொழுது "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை" என்று கூறி இறைவன் உமையம்மைக்கு அறிமுகம் செய்து வைக்கிருர். அதுவுமின்றி அம்மையே உனக்கு என்னவேண்டுமென்று கேட்ட ஞான்று அதற்குப் பதிலாக வெளிப்பட்ட அருள் வாக்குகளை நாம் என்றென்றும் போற்றி ஓதவேண்டியவர்களாக இருக்கிருேம். இறைவனை நோக்கி அமையார் வேண்டிநின்ற இவ்வரம் எம்மையும் தெருட்டுகிறது.

" இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்
னடியின்கீழ் இருக்க என்றார்."

இறைவன் "அம்மையே" என்று அழைக்கப்பட்ட பெருமையைச் சேக்கிழார் வியந்து போற்றி " மடுத்த புனல் வேணியினார் அம்மையென மதுரமொழி கொடுத்தருளப் பெற்றாரை, அடுத்த பெருஞ் சீர்பரவல் யாரளவாயினதம்மா " எனப் பாடியருளினார்.

வீட்டிலே கணவன்மாருக்குப் பின்னணியாக நின்று பெருந் தொண்டும் தியாகமும் புரிந்த பல பெண்மணிகளைப் பெரியபுராணம் எடுத்துக் காட்டுகிறது. திருநீலகண்டம் என்ற சொல்லையே தன் தாரக மந்திரமாகக் கொண்டு ஒழுகி அடியார்களுக்குத் திருவோடு செய்தளித்து வாழ்ந்தவர் திருநீலகண்டர். இவருடைய புறவொழுக்கங் காரணமாகக் கருத்துவேற்றுமை மனைவியாருக்கிருந்தது — சிவனடியார் ஒருவருக்கு இத்தகைய மாசு ஏற்படக்கூடாது என்பது அவருடைய மனைவியாரின் எண்ணம். ஒருநாள் கணவர் தீண்டப்போன சமயத்தில் "எம்மைத் தீண்டு வீராயின் திருநீலகண்டம்" என்று சத்தியம் செய்தார். கணவர் சிறந்த சிவதொண்டர் ஆகையால் அன்றுமுதல் தமது மனைவியையோ பிற பெண்களையோ சாரவில்லை. எவருக்கும் இச் செய்தி தெரியாவண்ணம் வாழ்க்கை நடத்தினார் அவர் மனைவியார்.

" கற்புறு மனைவி யாரும்
கணவனார்க் கான எல்லாம்
பொற்புற மெய்யு றுமல்
பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண்
இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி யின்மை
அயலறி யாமை வாழ்ந்தார்."

கணவருடைய கடைமைகளிலும் குடும்பக் கடமைகளிலும் தவறு நேராமலும் வேண்டியாங்கு செய்து வேறு வாழ்ந்தமையைத் தெரிவிப்பது இப்பாடலாகும். இயற்பகையார் மனைவியும் சிறுத்தொண்டர் மனைவியும் புரிந்த தியாகம் அனைவரும் அறிந்ததே.

ஏன், பிற்காலத்தில் அன்னை சாரதாதேவியின் தியாகம் எம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறதே. தொண்டுநெறியில் தலைப்பட்டு தூண்டுதவ விளக்காக அமைந்து சிறந்த குடியையும் கூடிப் பிறந்த தம்பியையும் பெருமைப்படுத்திய பணி திலகவதியாருடையது. தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயவு பெருகிச் சைவத்தையே வளர்த்த தொண்டரை ஆக்கித் தந்தது. திலகவதியாரின் தூய தொண்டுகளுக்கு இது ஒரு பெரும் எடுத்துக்காட்டாகும்.

இவ்வழியில் நின்று நாட்டை மேலோங்கச் செய்த பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. நாட்டையும் குடிமக்களையும் நன்னெறியிற் செலுத்தவேண்டியது அரசியல் தர்மமாகும். அரசியல் பணியில் இது சிவ தர்மமாகவே மாறிவிட்டது.

" மங்கையர்க்குத் தனிஅரசி
எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து
வளைகைம் மானி
செங்கமலத் திருமடந்தை
கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த
தெய்வப் பாவை
நங்கள்பிரான் சண்பையர்கோன்
அருளி னாலே
நம்தமிழ்நா டுற்றஇடர்
நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு
பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மாற்
போற்ற லாமே."

தம்மைப் பேணி, தம் கணவனைப் பேணி, சைவத்தைப் பேணி, பாண்டிநாட்டையே பேணிய பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. ஆன்மீகத்தோடு கலவாத அரசியல் அர்த்தமற்றது என்பதை மன்னனுக்கு எடுத்துக்காட்டியவர் இவர். இடர்ப்பாடு மலிந்த காலத்திலே நெருக்கடிக்குள்ளே சைவத்தைப் பேணி வளர்த்த அம்மையார் " தெய்வப் பாவை" என்று போற்றப்படுகிறார். பெண் பிறந்தார் யாவரும் இத்தகைய பணிகளிலும் முன்னின்று நாட்டை ஆன்மீக நெறியில் நலனடையச் செய்தல் வேண்டும்.

[அகில உலக இந்து மகாநாடு
சிறப்புமலர்– 1982]

# குடமுழுக்கின் மகத்துவம்

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளை "கடவுள்" எனக் குறித்தனர் தமிழ்ச்சான்றோர். எல்லாவற்றையும் கடந்தது என்பது இதன் பொருள். எல்லாவற்றையும் கடந்த தாயினும் எல்லாப் பொருளிலும் அது நீக்கமற நிறைந்தும் நிற்கின்றது. இதனைக் குறிக்க "இறை" என்ற பெயரையும் அதற்கு இட்டனர் ஆன்றோர். இறை—இறுத்தலை—தங்கிநிற்றலை உடையது. இன்னும் எல்லாப் பொருளிலும் தங்கி நின்று அவற்றை இயக்குவது என்றற்கு "இயவுள்" என்ற பெயரையும் கூறினர். இறை, கடவுள், இயவுள் என்ற மூன்று சொற்களும் சைவசித்தாந்தத்தில் ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பது என்று கூறும் இறை நிலையைக் குறித்து நிற்றல் அறியத் தக்கது.

பொருட்டன்மையால் வேறாயும், கலப்புத்தன்மையால் ஒன்றாயும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும் நிற்கின்ற இறைவனை உயிர்கள் காண்பது வழிபாட்டினால்தான்.

சிறப்பு வழிபாடு, பொதுவழிபாடு என வழிபாடு இருவகைப்படும். சிறப்பு வழிபாடாவது: கடவுள் எனக் குறிக்கப்பட்ட அவ்வுண்மை நிலையைக் கண்டு அறிவு மாத்திரத்தால் வழிபடுதல். அங்கே மனவாக்குக் காயங்கட்குத் தொழிற்பாடு இல்லை. இது பரம ஞானிகட்கே இயல்வது. ஏனையோர்க்கு இயலாதது. இதனை திருநாவுக்கரசு நாயனார்,

"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன் உனை நானலேன்"

என்று கூறுகின்றார்.

பொது வழிபாடாவது இறைவனை அருவம், அருவுருவம், உருவம் என்னும் வடிவங்களில் கண்டு மனமொழி மெய்களால் வழிபடுவது. இவற்றினுள்ளும் அருவ வழிபாடு அட்டாங்க யோகமும் கைவரப் பெற்று தாரணை, தியானம், சமாதி என்பவற்றில் பழகிய சிறந்த யோகியர்கட்கே இயலும். ஏனையோர்க்கு இயலாது. அருவுருவத் திருமேனி இலிங்கம், உருவத் திருமேனிகள் நடராச மூர்த்தம், சோமஸ்கந்த மூர்த்தம் முதலாகப் பல உள்ளன. இவைகளை, திருக்கோயிலிற் சென்று கண்டும், தம்தம் இல்லத்தில் வைத்தும், வழிபடுதல் பலருக்கும் இயல்வதாகும். என்றாலும் இல்லத்தில் வைத்து வழிபடும் வாய்ப்பும் பலருக்குக் கிடைத்தல் அரிது. ஏனெனில் அதற்கு வேண்டிய காலம், இடம், துணை, பழக்க வழக்கங்கள் முதலியன எல்லார்க்கும் அமைதல் இயலாது. ஆகவே திருக்கோயிலிற் சென்று ஆங்கு இருக்கும் திருமேனிகளில் இறைவனைக் கண்டு வழிபடுதலே யாவர்க்கும் பொருந்துவதாகும். அதனால் திருக்கோயில்கள் அளவற்றன நம்நாட்டில் காணப்படுகின்றன.

எல்லா உலகங்கட்கும் அப்பாற்பட்ட இறைவன் ஆன்மாக்களின் பொருட்டு, திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிகளில் நின்று அவர்கள் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக்கொண்டு இம்மை, மறுமை, வீடு என்பவற்றில் அவரவர்கள் வேண்டிய பயனை அவரவர்கட்கு அருளுகின்றான்.

"தாவர சங்கமங்கள் எனும்
இரண்டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு
மன்னுயிர்க் கருணை வைப்பான்."

என்பது சிவஞான சித்தியார். (தாவரம் – திருக்கோயிலில் இருக்கும் திருவுருவம்; சங்கமம் – அடியார்கள்)

இறைவன் மற்றைய இடங்கள் போல் அல்லாமல் திருக்கோயிலில் இருக்கும் திருமேனிகளில் இருந்து அருள் செய்வது மந்திர சாந்நித்தியத்தினாலேயாம். இஃது இத்திருமேனிகளில் உண்டாகச் செய்வதே "பெருஞ்சாந்தி" எனப்படும். மகா கும்பாபிடேகம் என்று சொல்லப்படுவது இதுவே. புதியனவாய் அமைக்கப்படும் ஆலயங்களில் இது முதலாவதாகச் செய்யப்படல் வேண்டும்.

அதன் பின்பே நித்திய பூசைகளும், நைமித்தியமான விழாக்களும் செய்தற்குரியன. பழமையாய் உள்ள ஆலயங்களிலும் இம் மந்திர சாந்நித்தியம் நீங்காதிருத்தற் பொருட்டு அவ்வப்பொழுது பெருஞ்சாந்தி செய்யப்பெறல் வேண்டும்.

திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிகளிற் செய்யும் பலவகை வழிபாடுகளுள் "பெருஞ் சாந்தி" தலையாயது. அதனால் இது நடைபெறும் இடங்களில் மக்கள் இன்றியமையாது சென்று கண்டு வழிபட்டுப் பயன் பெறுதல் வேண்டும்.

மண்ணினிற் பிறந்தார் பெறும்
பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை
அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப்
பொலிவுகண் டார்தல்"

என்னும் கருத்தினைத் திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூர்த் திருப்பதிகத்தில் பல வகையாக விளக்கியருளத் தொடங்கி ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி உத்திரவிழா முதலியவைகளைக் குறிப்பிட்டு முடிவில்,

"பெருஞ்சாந்தி காணாதே
போதியோ பூம்பாவாய்"

என்று அருளினார். இதனால் இச்சிறப்பு வழிபாட்டினைச் சென்று கண்டு வணங்குதல் மக்கட் பிறப்பு எடுத்ததன் பயனாகும் என்பது தெளிவு.

இங்கு ஞான வைரவப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது குறித்து இவ்வூர் மக்கள் பெருமித மடைகிறார்கள். வைரவர் பக்தர்களை இரட்சிக்கும் காவற் தெய்வம். அகந்தையைக் கிள்ளி எறிந்து விட்டு அருள் கொடுப்பவர். அவரை மனம், மொழி, மெய்களால் விரும்பி வழிபடுபவர் அனைவரும் நற்கதியடைவர் என்பது திண்ணம்.

[கரம்பன் கிழக்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் திருக்குடத் திருமஞ்சன மலர்]

---

# எழில்மிகு துர்க்கையின் அருள்மிகு திருக்கோலம்

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத் தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாயவள். அமைதியான வாழ்வையும் அளவில்லாத ஆனந்தத்தையும் அருளும் அன்னையாக மிளிர்கிறாள். இவளை உபாசித்துப் பெரும் புண்ணியம் பெற்றோர் பலர். எவனுக்கு மறு பிறவி என்பது ஒன்று இல்லையோ அவனே அம்பிகையை உபாசிக்கும் பாக்கியம் பெற்றவனாவான்.

நம் நாட்டில் தேவி வழிபாடு மிகச் சிறந்து காணப்படுறது. அம்பிகையின் உருவபேதங்கள் பல. அவற்றை அமைத்துக் கொண்டு வேறு வேறு நிலையில் வைத்து வழிபடுவோர் பலர்.

எக்காலத்தில் தர்மத்துக்குக் குறைவு உண்டாகி அதர்மம் மிகுதியாகின்றதோ அப்பொழுது நான் அவதரிப்பேன் என்று பார்த்தசாரதியான கண்ணன் கீதையில் அருளினான். அதேபோல் எப்பொழுது அரக்கர்களால் துன்பமுண்டாகிறதோ அப்பொழுது நான் அவதரித்துப் பகைவர்களை நாசஞ் செய்வேன் என்பது தேவியின் அருள் வாக்கு. இவ்விதம் தேவியும் கண்ணனும் ஒரே கருத்துள்ள வாசகங்களை வெளிப்படுத்துவதனால் இருவரும் ஒரே தத்துவமாக இருக்கவேண்டுமென்பது புலனாகிறது. "அரியலால் தேவியில்லை" என்பது தேவாரம். பரமேஸ்வரனுடைய சக்தி போக காலத்தில் பவானியாகவும், போரிலே துர்க்கையாகவும், கோப காலத்தில் காளியாகவும், இரட்சிக்கும் காலத்தில் விஷ்ணுவாகவும் பிரிந்து

காட்சி தருகிறது. இதனுல், சக்தி தத்துவமும் விஷ்ணு தத்துவமும் ஒன்றென்பதை அறியலாம். சக்திகளின் பெருமையை விளக்குவது சப்தசதி மந்திரமாகும். இதில் எழுநூறு மந்திரங்கள் இருப்பதாலும் எழுநூறு வகையான பிரயோகங்கள் அமைவதாலும் சப்தசதி என்று பெயர் கூறுவர். சப்த என்பது ஏழு; சதி என்பது நூறு.

சிறப்பாகச் சப்தசதி மந்திரத்தினுல் உணர்த்தப்படும் தேவதை துர்க்கை. துர்க்கா தேவி ஒன்பது பேதமுடையவளாகச் சொல்லப்பட்டிருக்கிருள். ஜெயா, விஜயா, பத்ரா, பத்திரகாளி, ஜுமுகி, துர்முகீ, ப்ரக்ஞா, வ்யாக்கிரமுகீ, சிங்கமுகீ என்று ஒன்பது வகையாகத் துர்க்காதேவி சொல்லப்பட்டிருக்கிருள். மேலும் ஆகமங்களில் வனதுர்க்கை, ஜலதுர்க்கை, வன்னிதுர்க்கை, ஸ்தூல துர்க்கை, விஷ்ணு துர்க்கை, பிரமா துர்க்கை, ருத்ரா துர்க்கை, மஹா துர்க்கை, சூலினி துர்க்கை என்று ஒன்பது வகையான திருக்கோலங்களும் கூறப்பட்டிருக்கின்றன. துர்க்கையை எல்லா நலம் குறித்தும் பிரார்த்திக்கலாம். பிராமண குமாரியாக நின்று உயர்நலம் அளிக்கின்ருள். சத்திரிய குமாரியாக நின்று வெற்றி தருகின்ருள். வைசிய குமாரியாக நின்று லாபம் அளிக்கின்ருள். சூத்திரகுமாரியாகநின்று திருமணம் பிள்ளைப் பேறு ஆகிய வரங்களைத் தருகின்ருள். நாட்டிலே மழையில்லாது வரட்சியுற்ற நேரத்தில் மழையைப் பொழிவித்துப் பசிப்பிணியைத் தீர்த்து இரட்சிப்பதால் சாகம்பரி, சதாட்சி என்ற நாமங்கள் ஏற்பட்டன. துர்க்கன் என்ற அசுரனைக் கொன்றமையால் துர்க்கா என்னும் சிறப்பு நாமம் கொண்டு வழிபடப்படுகிறது.

மகிடாசுரனுல் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் பிரமாவிடமும் விஷ்ணுவிடமும் தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டனர். ஆங்கு வெளிப்பட்ட சினம் என்னும் சக்தி ஒன்று சேர்ந்து உருவெடுத்த வடிவமே துர்க்கை வடிவம் என்று பேசப்படுகின்றது. துர்க்காதேவி சிங்க வாகனத்தில் ஆரோகணித்து மகிடாசுரனை எதிர்த்துப் போருக்கெழுந்தாள். அவ் அசுரனும் படைகளுடன் போருக்கு வந்தான். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமே அசுரசைனியங்கள் அனைத்தையும் அழித்துவிட்டது. அசுரன் மகுட உருவில் வந்தபோது அவன் செருக்கை அடக்கி அம்பிகை தனது திருவடியால் அழுத்தி ஆட்கொண்டாள். தேவி சதுர்ப்புஜங்களில் சங்கு சக்கரம், தாமரை, ஜெபமாலை என்பவற்றைத் தாங்கிநிற்கும் திருக்கோலம் தியானத்திற்கு விருந்தளிப்பதாகும். துர்க்காதேவிக்கு ஈழவளநாட்டில் மிகப் பழமையான தனிப்பெருங் கோயில் அமைந்திருப்பது என்ருல் அது யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலுள்ள தெல்லிப்பழையிலேதான் இருக்கிறது. கிழக்குப் பார்த்த சந்நிதியாகப் பிரதான வீதியை நோக்கிய வண்ணம் காட்சி தருவதும், தலவிருட்சங்களாக இலுப்பையும் மாவும் மகிழும் அரசும் அமைந்து விளங்குவதும், ஆகம விதிகளுக்கமைய மூலமூர்த்தியும் பிரகார மூர்த்திகளும் அமைந்து காட்சி தருவதும், பாகசாலை, யாகசாலை, வாகனசாலை, அந்தணர் சாலை, அலுவலகம், திருமுறை மண்டபம், பக்தர்கள் விடுதி, திருநந்தவனம், அன்னதான மண்டபம் என்பவற்ருேடு இவ்வாலயம் தோற்றமளிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஏராளமான பக்தர்கள் இப்பொழுது இங்குவந்து அவரவர் இஷ்டபூர்த்திக்கு வேண்டுதல் செலுத்தி அதனுல் நிவர்த்தியும் பெறுகிருர்கள் என்பதும் கண்கூடு. கடந்த பத்து ஆண்டுகளுக்குள் துர்க்காதேவியின் அருட்பிரகாசம் பிரவாகித்து, ஈழவள நாடெங்கணும் செறிந்து பாய்கிறது. அன்னையின் அருள்மிகு திருக்கோலத்தினைப் பல்லாயிரம் மக்கள் எழில்மிகு சித்திரத் தேரில் வைத்துத் தரிசிப்பதற்கு இவ்வாண்டு எதிர் நோக்கியவண்ணம் இருக்கிருர்கள்.

நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அன்னை பவனிவரும் காட்சி அடியார்களை அத்திருவருள் ஒளிக்குள் நிறுத்திவிடும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாண்டு ஆவணி உத்தராட நாளை ஆவலுடன் எதிர்நோக்கும் எம் அனைவருக்கும் அன்னையின் கருணை முற்ருகக் கிடைக்கட்டும்.

[தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலயம் சித்திரத் தேர் சிறப்பு ஆண்டுமலர்.]

# பிற்காலச் சோழப் பெருமன்னர் காலத்துச் சமய வளர்ச்சி

**9 ஆம்** நூற்றாண்டிலிருந்து 13 ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட சோழப் பெருமன்னர்கள் தமிழ்ப் பேரரசை ஈழம் தொட்டு இமயம் வரை பரப்பினர். அவற்றுக்கு இட்ட நிபந்தங்களும் எழுதி வைத்த கல்வெட்டுக்களும் நாடெங்கும் நிறுவிய மடங்களும் சோழப் பெருமன்னர் காலத்திற் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து பணம் படைத்தோரின் அறச் சிந்தனையைத் தூண்டியது. சமணப் பள்ளிகள், புத்த விகாரைகள் என்பவற்றிலும் பார்க்க மிக உயர்வாக இந்துக் கோவில்கள் எழுந்தன. இந்துமதப் போராட்டம் பல உட்பிரிவினின்றும் நீங்கி ஒரே கடவுட் கொள்கையை வளர்க்கும் நிலைக்கு உதவியது. விஜயபாலன் என்ற மன்னன் மரபிலே வந்த சோழ மன்னர்கள் சைவத்தையும் வைணவத்தையும் வளர்த்தனர். நாயன்மாரது தோத்திரப் பாடல்களும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் 11 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டன. முதலாம் இராஜராஜன் சிறந்த பக்தனாகி மறைந்திருந்த திருமுறைகளைத் தேடி நம்பியாண்டார் நம்பி மூலமாகத் தில்லையில் கண்டெடுத்துப் பதினொரு திருமுறைகளாக வகுத்தான். நாதமுனி என்பவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை வகுத்து பண்ணும் அமைத்து வைத்தார். சிவன் கோயில்களில் திருமுறைகளும் வைணவ கோயில்களில் பிரபந்தங்களும் பாட ஒழுங்குகள் செய்யப்பட்டன. பூசை வேளைகளில் திருப்பதிகங்கள் பாட ஓதுவார்கள் நியமிக்கப்பட்டனர். முதலாம் இராஜராஜ சோழன் தஞ்சாவூர்ப் பெருங்கோயிலில் நாற்பத்தெட்டு ஓதுவார்களை நியமித்தான். மூன்றாம் குலோத்துங்கன் நாயன்மாரின் விழாக்கள் கொண்டாடத் தேவதானம் அளித்தான். பிராமணர்கள் அநேகர் நியமிக்கப்பட்டு நிவேதனம் பெற்றனர். இக்காலத்திலே பெருங் கோயில்கள் கட்டுவதிலே சிறந்த கவனமெடுக்கப்பட்டது. 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டுகளில் கற்கோயில்கள் சிலவே யிருந்தன. விஜயபாலன் தஞ்சாவூரில் துர்க்கைக்குச் சிறந்த கோயில் கட்டினான். ஆதித்தன் திருச்செஞ்சையூர் முதலிய இடங்களில் சிவன் கோயில்களைக் கட்டினான். முதலாம் பராந்தகன் தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்தான். திருவிடை மருதூர், திருவாவடுதுறை, திருவெழும்பியூர் முதலிய கோயில்களையும் இவனே கட்டினான். கண்டராதித்த சோழன் சிவன்கோயில்கள் கட்டியதுமன்றி, திருவிசைப்பா பாடிய பெருமைக்கும் உரியவன். இவனின் மனைவி பெயர் செம்பியன்மாதேவி. கோயில்களுக்குப் பட்டாடை ஆபரணம் வெள்ளிப் பாத்திரம் என்பவற்றை நன்கொடையாகக் கொடுத்து கோபுரங்களைக் கட்டி எழுப்பிய பெருமை செம்பியன்மாதேவிக்கு உண்டு. முதலாம் இராஜராஜன் தஞ்சாவூர்ப் பெருங் கோயிலைக் கட்டுவித்தான். இக் கோயில் கட்டி முடிக்கப்பட்ட காலம் 1003 ஆம் ஆண்டு என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. இத் திருப்பணிக்கு ஆறு ஆண்டுகள் எடுத்தன. சோழ மன்னரின் பெரும் புகழுக்கும் சிவபக்திக்கும் காரணமாக இது அமைந்துள்ளது. கோயிலின் நீளம் 893 அடி. அகலம் 597 அடி. விமானம் 216 அடி. விமானத்தின் உச்சியில் வைக்கப்பட்டுள்ள செம்புக்குடம் 3083 இறுத்தல் நிறைகொண்டது. குடத்தின் மீதுள்ள பொன் தகடு 2926 களஞ்சு பவுன் நிறை கொண்டுள்ளது என்று கணக்கிட்டுக் கூறுவர்.

இராஜராஜ சோழனுடைய மகன் கங்கை கொண்ட சோழன் என்பவன் கங்கை கொண்ட சோழேச்சரம் என்ற கோயிலைக் கட்டுவித்தான். இது சிற்பத்திற் சிறந்து விளங்குகின்றது.

இவனின் பின் வாழ்ந்த முதலாம் குலோத்துங்கன் என்பவன் திருநீற்றுச் சோழன் எனப் பட்டம் பெற்றவன். இவனே முதன்முதல் சூரியனுக்குக் கோயில் கட்டினான். இரண்டாம் குலோத்துங்க சோழன் சேக்கிழார் சுவாமிகள் மூலம் பெரியபுராணம் பாடுவித்து பன்னிரண்டாம் திருமுறையாக அந்நூலை இடம்பெறச் செய்தான்.

சோழப் பெருமக்களே தில்லைக் கோயிலுக்கும் எல்லையற்ற திருப்பணிகள் செய்தனர். கோயில் கட்டும் வேலைகள் 13ஆம் நூற்றுண்டோடு ஒரளவுக்குப் பூர்த்தியாகியது. இக்கோயில்கள் மக்கள் வாழ்க்கையோடு பெருந் தொடர்பு கொண்டன. காணிச் சொத்துடைய நிலையமாகவும், வங்கியாகவும், முதலாளித்துவம்பெற்றனவாகவும், மருத்துவ சாலையாகவும், நூதன சாலையாகவும், கலைக்கூடமாகவும் சோழப் பெருமன்னர் காலக் கோயில்கள் விளங்கின. அரசரதும் பொதுமக்களதும் ஆதரவைக் கோயில்கள் பெற்றன. ஒவ்வொரு ஆலயங்களும் சமூக வாழ்விற்கு அச்சாணிபோல் நின்று உதவின. தமிழர் பண்பாட்டிற் கிருப்பிடமாகவும் சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை என்பவற்றை வளர்ப்பனவாகவும் இவை காட்சியளித்தன. நடனமும் நாடகமும் நடைபெறுவதற்கு மண்டபங்கள் ஆலயங்களிலேயே கட்டப்பட்டன. கூத்தாடுவதில் சிறந்தோர்க்கு நிலங்கள் பரிசுகளாகக் கொடுக்கப்பட்டன. விக்கிரமசோழன் தன் காலத்தில் ஒன்பது கூத்துக்களை ஆடுவித்தான். நாட்டிய நங்கைகளுக்கு நிலதானமும் வழங்கப்பட்டது. சிதம்பரம் கிழக்குக் கோபுர வாசலில் நூற்றெட்டு நாட்டிய நிலைகள் சிற்பமாகச் சித்திரிக்கப்பட்டன. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டிய மன்னனவனே இராசேஸ்வரன் என்னும் நாடகம் நடைபெற வழிவகுத்தான். அந் நாடகம் ஆடியோரனைவருக்கும் ஆண்டுதோறும் நூற்றிருபது புசல் நெல் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

அக்காலக் கோயில்களின் சில பகுதிகள் கல்லூரிகளாய் அமைந்திருந்தன. அங்கு வேதம், திருமுறை, தர்மசாத்திரம், வியாகரணம், சோதிடம், மருத்துவம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. திருவொற்றியூரில் இவற்றைக் கற்பிப்பதற்கு மண்டபமும் அமைக்கப்பட்டு இருந்தது.

யாத்திரை செய்வோர்க்குக் கோயில்களில் இரவு தங்குவதற்குப் படுக்கையும் உணவும் கொடுக்கப்பட்டன. எல்லாத் தொழில்களுக்கும் நிலதானமே வழங்கப்பட்டது. வெள்ளத்தால், நெருப்பால் அழிவு ஏற்பட்ட காலத்தில் மக்கள் கோயில்களில் அடைக்கலம் புகுந்தனர். பொருளுதவும் பண்டாரமாகவும் அக்காலக் கோயில்கள் விளங்கின. சோழர் காலத்திலே மடங்களும் மடாலயங்களும் மட்டுமன்றிப் பெருங் கோயில்கள்கூட அரும்பெரும் பணியாற்றி சமுதாய நற்லுறவை வளர்த்ததோடு மக்கள் உள்ளங்களில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் அறநிலையங்களாக விளங்கவைத்த பெருமை சோழப்பெரு மன்னர்களுக்கே உண்டு. எனவே இக்காலத்திலேயும் ஆலயத் திருப்பணிகள் புரிந்து அறப்பணி புரிவோர் எமது முன்னோர் காட்டிய வழியை நினைவிலிருத்தி அம்முறையிற் சிவபுண்ணியச் செயல்களில் ஈடுபடுதல் பயனளிக்குமன்றோ.

''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடுமின் தேடிச் சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க்
கொள்வனே.''

[திருக்கேதீஸ்வரம் மண்டலாபிஷேக விழா ஆண்டு மலர்]

※

'' பெற்றோர்கள் பேரின்ப இலக்கியங்களைக் கற்பதுடன், அவற்றைத் தங்கள் பிள்ளைகளும் கற்க ஊக்குவிக்க வேண்டும்.''

* * *

'' இயற்கையில் நின்று இலக்கியம் படைத்த மேதைகளும், பக்தியில் நின்று பாசுரம் பாடிய பக்தர்களும் அடிப்படையில் தமிழர் என்னும் கருத்துக்கு ஒப்பவொரு ஒருமைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.''

# சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகள்

உலகிலே ஆத்மீக உயர்வினல் உயர்ந்த நாடு பாரதநாடு. இதற்குக் காரணம் இந் நாட்டினர் குறிப்பிட்ட ஒரு சமய நெறியை ஒழுங்காகக் கடைப்பிடித்தொழுகி வந்தமையேயாகும். எந்தச் சமயத்தை எடுத்துக் கொண்டாலும் அதன் உட்பொருளாக விளங்குவது ஒரேஒரு பரம் பொருளேயாகும். இவ்வுண்மையைச் சிறப்பாகச் சைவசமயம் வலியுறுத்திக் காட்டுகிறது. சைவசமயம் மிகவும் பழமை வாய்ந்தது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மொகன்சதாரோ நாகரீகத்திலே சிவலிங்க வழிபாடு இடம்பெற்றிருந்த செய்திக்குச் சான்றுகள் உண்டு. புதைபொருள் ஆராய்ச்சியினர் அங்கு சைவ சமயக் கடவுளரின் உருவங்களைக் கண்டெடுத்தனர் என்பது சரித்திர சம்பவமாகும். கிறீஸ்து பிறப்பதற்கு முன்பே கிழக்கு ஐரோப்பா, எகிப்து, பாரசீகம், மொசப்பத்தேமியா முதலிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் சைவசமயக் கொள்கைகளைத் தமக்குள்ளே அடக்கியதுமன்றி, தமக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் உடையர். இது காலத்தாலும் கருத்தாலும் அனுபவ நிலையாலும் உயர்ந்தது.

சைவம் என்பது சிவத்தை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. சிவம் என்பதற்கு அன்பு, பூரணம், செம்மை, இன்பம், மங்களம் என்னும் பல பொருள்கள் உண்டு. அச்சிவத்தையே பதி என்றும், கடவுள் என்றும், பரம்பொருள் என்றும் அழைப்பர். பதிக்கு, சொரூப லட்சணம், தடத்த லட்சனம் என இருவகை லட்சணங்கள் உண்டு. பதி ஒன்ருயும், வேருயும், உடனுயும் உயிர்களோடு இரண்டறக் கலந்துள்ளது. அதுவே ஐந்தொழில் ஆற்றும் சைவ சமயத்தில் சிறப்பாக செய்வினை, செய்வான், அதன் பயன், சேர்ப்பான் என்ற நான்கு பொருளும் பேசப்படும். பதியாகிய முழுமுதற் கடவுளை அடையும் பேறே உயிர்களின் முடிவான நிலையாகும். இந்த நிலையையடையத் தடுத்து நிற்பனவே பாசங்கள். பாசங்களை நீக்கித் திருவருட் துணைகொண்டு பதியை அடைய முடியும். இதனையே சைவ சித்தாந்த சாத்திரங்கள் விரித்துக் கூறுகின்றன.

சைவ சித்தாந்தம் மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. அவை உலகினை இயக்கும் கடவுளைக் குறிப்பனவாயும். மக்களைக் குறிப்பனவாயும், மக்கள் வாழும் உலகினைக் குறிப்பனவாயும், அமைந்துள்ளன. கடவுள், உயிர், உலகம் இம் மூன்றையும் நிலையான பொருள் என்றே சைவம் குறிப்பிடுகிறது. இவற்றின் சிறப்பான வேறுபாடுகள் என்னவெனில், அறிவிக்காமல் அறிகின்ற பொருள் பதி; அறிவித்தாலறியும் பொருள் பசு; அறிவித்தாலும் அறிய முடியாதது பாசம். இந்த மூன்றில் எந்த ஒன்றும் வேறு ஒன்ருக மாறமாட்டாது. ஆனல் ஒன்ருேடொன்று தொடர்புடையவை. அதனைப் பின்னே குறிப்பிடுவோம்.

முதலில், பதியைப்பற்றி எடுத்துக்கொள்வோம். பதியாகிய கடவுளுக்கு இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று தன்னியல்பாகிய சிறப்பியல்பு. அதனையே சொரூப இலக்கணம் என்பர். இந்த நிலையில் கடவுளுக்குப் பெயர், குணம், குறி என்பன ஒன்றும் இல்லை. உருவம், அருவம். அருவுருவம் ஒன்றுமில்லை. மனம், வாக்கு, காயம் மூன்ருலும் அறியப்படாத நிலையில் இருப்பார். இந்தக் கடவுள் நிலையே பரமசிவம் எனப்படும். ஆனல் பெயர் இல்லாத கடவுளுக்குப் பெயர் தந்து வழங்குகிற மரபு எமது மரபு. அதன்படி ரூபமற்ற கடவுளுக்கு ரூபமும், நாமமற்ற கடவுளுக்கு நாமமும் வைத்து வழிபடுகிருேம். சிறப்புநிலையில் உள்ள பரமசிவன் உயிர்களுக்கு அருள் செய்வதற்காக இரக்கங்கொண்டு தானகவே பல படிகள் இறங்கிவந்து பல நிலையிலுள்ள கடவுளர்களை மேற்கொண்டு, அவர்கள் மூலமாக ஐந்தொழில் செய்கிருன். இந்த நிலை பொதுநிலை அல்லது தடத்த லட்சணம் என்று சொல்லப்படும். இந்தப் பொதுநிலையில் ஒன்பது திருமேனிகள் கொள்ளப்படும். சிவம், சக்தி, நாதம். விந்து, சதாசிவன்,

ஈசன், உருத்திரன், மால், அயன் என்பவை அவையாகும். ஒன்றிலும் தோய்வு இல்லாமல் சுயம் பிரகாசமாய் நிற்கும் தன்மையில் பதி எனவும் பெறுபவன் ஒருவனே.

உடலுக்குள் உயிர் இருப்பதுபோல இறைவன் உயிர்களுடன் கலந்து ஒன்ருய் நிற்கிறுன். சூரியன் ஒளி கண் ஒளியில் கலந்திருந்தாலும் இரண்டும் வேருக நிற்பது போல் இறைவன் வேருகவும் நிற்கிறுன். ஒன்றைப் பார்க்கும்போது கண்ணெளிக்கு உயிருணர்ச்சி யிருப்பதுபோல உடனுய் உயிர்களுடன் நிற்கிறுன்.

சிவம் உயிர்களிடம் கொண்டுள்ள கருணையே சக்தியாகும். அருள் ஆற்றல்தான் சக்தி. அதனைப் பெண்ணுகக் கண்டு வழிபடுகிறேம். ஆனுல் சிவத்தையும் சக்தியையும் பிரிக்கமுடியாது. பழமும் சுவையும் போலவும், நெருப்பும் சூடும் போலவும், மணியும் ஒலியும் போலவும், பண்ணும் இசையும் போலவும் சிவமும் சக்தியும் பிரிக்க முடியாதவை. உலக வழக்கையொட்டி இத்தொடர்பை நாயகன் நாயகியாகக் கொள்வர். ஆனுல் அவன் பிரம்மச்சாரி; அவள் கன்னி.

கடவுள் இருப்பிடங்களாக எட்டு இடங்களைக் கூறுவர். சூரியன், சந்திரன், ஆன்மா, நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பன அவை. அவன் மக்கள் குணங்களாகிய மூன்று குணங்களையும் கடந்து எட்டுக் குணங்களையுடையவன். ஞானியர் இப்படிக் குறித்தனரேயன்றி இவற்றைக் கடந்த நிலையே அவனுடைய நிலையாகும்.

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களைச் செய்கின்ருன். உயிர்கள் என்றுமுள்ளவை. ஆகவே உயிர்களைப் படைப்பதில்லை. உடம்பையும், உலகங்களையும், கருவி கரணங்களையும் போகப் பொருள்களையுமே படைக்கின்ருன். படைக்கும் போதும் இல்லாதது படைக்கப்படுவதில்லை. நுண்மையான காரணத்திலிருந்து பருமையான காரியந் தோன்றுவதுதான் படைப்பு. குயவன் பானையை மண்ணில் இருந்து படைக்கின்ருன். சக்கரம் முதலிய கருவிகளைத் துணையாகக் கொள்கிருன். அதேபோல் இறைவன் மாயையிலிருந்து இவற்றைப் படைக்கிருன். மாயையே முதற் காரணம்; சக்தி துணைக் காரணம்; இறைவன் நிமித்த காரணம். காத்தல் என்பது உயிர்களை உடம்புகளில் உரிய கால எல்லைவரை நிலைநிறுத்திக் காப்பாற்றல். அழித்தல் என்பது உயிருக்கு இளைப்பாற்றுக் கொடுத்தல் (நித்திரை போல). மறைத்தல் என்பது உயிரின் அறிவை ஒருமுகப்படுத்தித் திரைச்சீலையால் மறைப்பது போல மறைத்து வினைகளை ஒப்பு வருவித்தல். அருளல் என்பது உயிர்களின் பந்தங்களை ஒழித்து, வீடுபேற்றை நல்குதல். இதுவே இறைவன் செய்யும் பேரருட் செயலாகும்.

இறைவனை உருவங்கொடுத்து வழிபடும் முறை சைவ சமயத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம் வணங்குவோருடைய மன ஒருமைப் பாட்டுக்கேயாகும். எல்லோரும் தமது மனத்தைக் கட்டுப்படுத்தி வணங்கும் ஆற்றல் உடையவர்களன்று. அப்படியானவர்களுக்கு உள்ளத்தில் நிலைபெற்று விளங்குவதற்காகவே ஆலயங்களைக் கட்டி உருவங்களை அமைத்தனர். பசுவின் உடம்பு முழுவதும் பால் இருக்கிறது என்ருலும் அதன் மடுவிலிருந்தே பாலைப் பெறுகிறேம். அதேபோல் இறைவன் அங்கு இங்கு எனுதபடி எங்கும் நிறைந்துள்ளான் எனினும் ஆலயங்களிலேயே அவனுடைய அருளை நாம் பெறமுடியும் என்ற நம்பிக்கையை எமது முன்ஞேர் எமக்குக் காட்டியுள்ளார்கள். இதனுற்ருன் இறைவனை நாம வடிவிலும், மந்திர வடிவிலும், ரூப வடிவிலும் வைத்து வணங்குகின்ருர்கள். ''நமசிவாய'' என்ற நாம வடிவிலும் 'ஓம்' என்ற மந்திர வடிவிலும் மற்றும் நடராசர், சிவகாமி, பிள்ளையார், முருகன் என்ற ரூப வடிவிலும் வைத்து வழிபடுவது சைவமரபு.

கடவுள் எப்படியோ, அப்படியே உயிர்கள் தொன்மையே நிலைபேருக என்றும் இருப்பவை. உயிர்கள் அனந்தமானவை. அவற்றை ஓரறிவு முதல் ஆறு அறிவு உயிர் ஈருகவும், நான்கு வகைத் தோற்றம் ஏழுவகைப் பிறப்பு எண்பத்துநான்கு நூருயிரம் யோனிபேதமாகவும் கூறப்படும். ஒருமித்து மொத்தமாக

எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதம் எனக் கணக்கிட்டுள்ளனர். உயிர்களனைத்தும் மலத்தாற் பீடிக்கப்பட்டுள்ளது. மலச்சார்பைக் கருதி உயிர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஆணவ மலம் ஒன்றேயுடையவர்களை விஞ்ஞானகலர் என்றும், ஆணவம், கன்மம் என்ற இரு மலங்கள் உடையவரை பிரளாயகலர் என்றும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்கள் உடையவரை சகலர் என்றும் பிரிப்பர். உயிர்களின் குற்றங்கள் யாவற்றுக்கும் ஆணவமே காரணமாகும். மலம் உள்ள வரையிற் பிறப்பு உண்டு. பாவ புண்ணியங்களின் விளைவாகவே அதற்கேற்ற பிறப்பு ஏற்படுகிறது. கடவுளையடைந்து முத்தியடைவதற்கு மக்கட் பிறவியே மிகமிகச் சிறந்தது. உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாக உள்ளன. கடவுளைச் சாரும் போது தெளிவுடையதாயும், உலகத்தைச் சாரும்போது மயக்கமுடையதாயும் இருக்கும். மயக்க நிலையிலிருந்து தெளிவு பெற்று முத்தியடைவதற்காகவே மனிதப் பிறவியைக் கடவுள் கொடுத்துள்ளார்.

சைவ சித்தாந்தம் கூறும் மூன்றாவது பொருள் பாசமாகும். இது உயிர்களுக்கு மயக்கத்தையும் அறியாமையையுங் கொடுப்பதாகும். மாயை மயக்குவது. ஆணவம் அறியாமையைக் கொடுப்பது. கன்மம் பிறவி எடுப்பதற்குக் காரணமானது. எனவே பாசம், ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று வகைப்படும். ஆணவம் பல சக்திகளையுடையது. உயிர்கள்தோறும் அது கலந்து அநாதியாகவே உள்ளது. ஆன்மாவின் தொழிலை மறைப்பது. இது இருளிலும் பார்க்கக் கொடியது. இருள் தன்னைச் சேர்ந்த மற்றப் பொருள்களைக் காட்டாவிட்டாலும் தன்னை யாவது காட்டும். ஆனால் ஆணவம் தன்னையும் காட்டாது; பிற பொருளையும் காட்டாது. ஆனால் முத்திநிலையில் இது வலி கெட்டு நிற்கும். எனினும் முத்தியடையத் தகுதியற்ற ஏனைய உயிர்களோடு என்றைக்கும் கூடி நிற்கும். எனவே இதற்கு அழிவில்லை. இடையிலே இது ஆன்மாவோடு சேரவில்லை. அப்படிச் சேர்ந்தது யாது என்றால் விடை காண முடியாது. இறைவன் இப்படியான செயலைச் செய்யான். ஆன்மாவும் தனக்கெனச் செயலில்லாதது. ஆணவம் சடப்பொருளான படியால் சேர மாட்டாது. ஆகவே ஆணவம் அநாதியாகவே செம்பிற் களிம்பு போன்றும், நெல்லின் உமி போன்றும் உள்ளது. மாயை என்பது உடம்பு, உலகம், கரணம், போகம் என நான்கு வகைப்படும். உயிரின் அறிவை ஓர் அளவுக்கு விளக்குவது இதுதான். விடியும் வரை எரிகின்ற விளக்கு இருளை ஓர் அளவுக்கு நீக்குவது போல் மாயையானது ஆன்மாவுக்கு விளக்கம் கொடுக்கிறது. முப்பத்தாறு தத்துவங்களும் இதனுள் அடங்கியுள்ளன.

| | | |
|---|---|---|
| ஆன்மதத்துவம் | 24...... | அசுத்தமாயை |
| வித்தியாதத்துவம் | 7...... | சுத்தாசுத்தமாயை |
| சிவதத்துவம் | 5...... | சுத்தமாயை |

மாயையின் தொழில் இச்சை, ஞானம், கிரியையை எழுப்புவதாகும்.

கன்மம் பழையவினை, புதுவினை, நுகர்வினை என மூன்று வகைப்படும். பழைய வினை என்பது உயிர் முற்பிறப்புக்களில் செய்த வினைகளின் தொகுதி. இது சஞ்சிதம் எனப்படும். புதுவினை என்பது எடுத்த பிறப்பில் புதியதாகச் செய்யப்பட்ட ஆகாமியம் என்னும் வினை. நுகர்வினை என்பது அநுபவிப்பதற்காக எடுத்துக்கொண்டுவந்த பிராரத்துவம்.

பிறவியில்லாத பெருநிலையே வீடுபேறாகும். வீடும் பேறும் என அதனைக் கொள்ளலாம். வீடு என்பது பாசவீடு; பேறு என்பது சிவப்பேறு ஆகும். செம்பிலே களிம்பு கழிந்துவிட செம்பு பிரகாசமாக நிற்கும் நிலை போன்றது இதுவாகும். முத்தி நிலையில் ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து நிற்கும்.

நீரோடு நீர் கலந்தது போலன்று; நீரோடு உப்புக் கலந்தது போலாகும். இதனை அத்துவிதம் என்பர். அ + துவிதம்.

துவிதம் இரண்டு; அ என்பது அல்ல; ஆகவே இரண்டு அல்ல; ஆனுல் ஒன்றுமல்ல; இந்த நிலையே முத்தி நிலையாகும். விளக்க மாகச் சொன்னுல் உயிர் திருவருளால் மல மற்று, சிவமாகிச் சிவத்தொடு சேரும் நிலை யாகும். நான் எனது என்ற செருக்கற்ற நிலையிலேயே இது கைகூடும்.

இந்த நிலையை அடைவதற்கு நான்கு மார்க்கங்கள் உண்டு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சிவ னடியார் பணிபுரியும், சிவத்தொண்டுகளும் சரியையின் பாற்படும். இதனுல் புறத்தடை களை நீக்கலாம். கிரியை என்பது இருதய சுத்தி செய்து வேள்வி செய்தல் முதலியன. இதனுல் இந்திரிய மயக்கங்கள் நீக்கப்படுகின் றன. யோகம் என்பது புலனெடுக்கித் தியா னத்தில் மூழ்கல். இதனுல் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங் கள் சுத்தி செய்யப்படுகின்றன. ஞானம் என்பது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்ற நிலையில் உயர்ந்து அறியாமையை அகற்றல். சரியை வழி நின்ருல் ஈசன் உலகை அடையலாம். கிரியை வழி நின்ருல் ஈசன் அருகில் இருக்கலாம். யோகத்தின் வழி நின்ருல் ஈசன் உருவம் பெறலாம். ஞான வழி நின்ருல் சிவனுடனும் பெற்றியை அடையலாம். சமயகுரவர் நால் வரும் இந்த வழியிலேயே நின்று இறைவ னடி சேர்ந்தார்கள்.

எனவே சைவ சித்தாந்தம் கூறும் முப் பொருள்களாகிய பதி, பசு, பாசம் மூன்றும் அநாதியானவை என்றும் நடுநின்ற பசு. பாசங்களோடு சேர்ந்து உழன்று, பின் நல்வினை வசத்தால் திருவருட்துணை கொண்டு பதியை அடைகிறது என்றும், அப்படி அடைவதற்குரிய வழிகளே சரியை, கிரியை, யோகம் ஞானமென்றும் கண் டோம்.

[காரைநகர் மணிவாசகர் சபை 25ஆவது ஆண்டு மணிவாசகர் விழா மலர்.]

---

# பரஞ்சோதி முனிவரின் சைவந் தமிழ்ப் பற்று

இறைவனுடைய அறுபத்துநான்கு திரு விளையாடல்களும் நடைபெற்ற இடம் மதுரை. தென்பாண்டிநாட்டான் என்று இறைவன் போற்றப்படுவதற்கு மதுரையம் பதியே இடமாக அமைந்தது. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும் புலவர்களாக இருந்து தமிழ் ஆய்வுக்கு வழிகாட்டிய இடம் மதுரை. ''கூடலில் ஆய்ந்தவொண் டீந்தமிழ்'' என்று பாடிய மாணிக்கவாசகர் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த சிறப்பை ஆழ மாக விளக்குகிருர். முத்தமிழையும் வளர்த்த இடம் மதுரை. பாணபத்திரன் என்ற இசைவல்லான் பொருட்டு இறைவனே இசைப் போட்டி நடாத்திய இடம் மதுரை. வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகிய முனிவர் கள் தரிசிக்கும்பொருட்டு இறைவன் திருக் கூத்தாடிய இடம் மதுரை. இதனுலேயே வெள்ளியம்பலம் என்று கூறுவர். மதுரை யம்பதியில் வாழ்ந்த மக்கள் தத்தம் ஒழுக்க நெறியில் நின்று, சைவசித்தாந்திகளாக ஒழுகுவதுபற்றிப் பல பாடல்களில் விளக்கப் பெற்றுள்ளது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளில் நின்று மக்கள் உய்தியடைந்தனர் என்ற சிறப்பை இந்திரன் முடிமேல்வளை எறிந்த படலத்தில்;

''காலையில் ஆசான் சொல்வழி
நித்தக் கடன் முடித்து
உச்சிதொட்டு அந்தி மாலையின்
அளவும் புராண நூல்கேட்டு
மாலைதொட்டு மாயமோர் நான்கு
சேலன கண்ணுள் பங்களைப்
பூசைசெய்க அப்பூசனை முடிவில்
மூலமந்திரம் நூற்றெட்டு
முறையினுல் ஆகுதி முடித்தல்.''

என விளக்குகிருர்.

இப்பதியில் வாழ்ந்த மக்களுக்கு அறச் சிந்தனை நிரம்ப உண்டு என்பதற்குரிய சான்றுகளாக திருநாட்டுச் சிறப்பிலே பின் வரும் பாடல் இடம் பெற்றுள்ளது.

"வெம்மையால் விளைவு அஃகினும்
வேந்தர்கோல் கோடிச்
செம்மை மாறினும் வறுமைநோய்
சிதைப்பினுஞ் சிவன்பாற்
பொய்ம்மை மாறிய பக்தியும்
பொலிவு குன் றுவாய்த்
தம்மை மாறியும் புரிவது
தருமமந் நாடு."

மதுரை மாநகர், அங்கையற் கண்ணி யையும் ஆலவாய் அப்பனையும் போற்றி வழிபட்ட பக்தர்களைத் தன்னகத்தே கொண் டதால் அதன் சிறப்பு மேலும் மேலும் உயர்ந்துள்ளது. இல்லங்களிலே பக்தி மிகுந்த பெண்கள் அம்மையையும் அப்பனையும் எந்நேரமும் நாமஞ் சொல்லிப் போற்று வதைக் கேட்ட கிளிகளும், நாகணவாய்ப் பட்சிகளும் அதனையே தாமும் சொல்லிப் பயிலுவதை அழகாகக் காட்டுகிறார் நூலா சிரியர்.

அதுவுமன்றி மதுரைக் கோவிலிலே கேட்கப்படும் இசைமுழக்கம் பற்றி ஒரு பாடலிலே குறிப்பிடப்பட்டுள்ளது:

"குழலும் தும்புரு நாரதர்
பாடலும் குனித்துச்
சுழலும் கொம்பனர் ஆடலும்
மூவர்வாய்த் துதியும்
விழவின் செவ்வமும் சுருதியும்
திசையெலாம் விளங்கும்
முழவும் கண்துயி லாதது
மன்னவன் கோயில்."

இசையின் எழுச்சியையும் சிற்பச் சிறப் பையும் இன்றும் எமக்குக் காட்டி நிற்கும் திருநகரம் மதுரை என்றால் அதில் மிகை ஒன்றுமில்லை.

பதினைறும் நூற்றாண்டிலே வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் இருமொழிகளையும் ஐயந்திரிபறக் கற்றவர். சங்க இலக்கியங் களிலும் திருமுறைகளிலும் நிறைந்த பயிற்சி மிக்கவர். எல்லாவற்றிலும் மேலா கச் செந்தமிழ்ப் பற்று மிகுதியும் வாய்க் கப் பெற்றவர். வடமொழியைப் போற்றாத புலவர்கள் வாழ முடியாத நிலை ஒன்று அக்காலத்தில் இருந்தது. ஆனால் வைராக்கிய சித்தத்தோடு தமிழைப் போற்ற வேண்டிய இடத்தில் போற்றிப் பாடி, நூலை அரங் கேற்றிய சிறப்பு இவருக்குண்டு. இறை வனே தமிழ்ப்பிரியன் என்பதற்கு ஒரு பாடல்;

"கடுக்கவின் பெறு கண்டனும்
தென்திசை நோக்கி
அடுக்க வந்துவந்து ஆடுவான்
ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால்திரு
முகத்திடை வீசி
மடுக்கவும் தமிழ் திருச்செவி
மாந்தவும் அன்றோ."

சிவபெருமானே தெற்குத் திசையை நோக்கித் திருக்கூத்தாடுகிறானாம். ஏனென் றால் இன்பத் தமிழை நுகர்ந்து திருச் செவியில் ஏற்றுவதற்காக அந்த ஆட்டம் தெற்கே மதுரையம் பதியை நோக்கி நடை பெறுவதாகக் காட்டுகின்றார். தமிழ்மொழி ஏனைய மொழிகளோடு சமமாக வைத்து எண்ணப்படுவதற்கு உரித்தன்று எனவும் அது எல்லா மொழிகளிலும் மேம்பாடு உடையது எனவும் விளக்குவது பின்வரும் பாடல்:

"கண்ணுதற் பெருங் கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப் படக் கிடந்ததாய்
எண்ணவும் படுமோ?"

தமிழின் ஒப்பற்ற பெருமையை மிகத் துணிவோடு எடுத்துக்காட்டிய பரஞ்சோதி யாரின் தமிழ்ப்பற்றுப் பெரிதும் போற்றுதற் குரியது. மூவர் தமிழையும் அவற்றின் அற் புதங்களையும் எடுத்துக்காட்டிய இடத்திலும் ஆசிரியரின் வீறுகொண்ட கருத்துத் தொனிக் கிறது. கன்னித்தமிழே எம் பெருமானையும் உருகவைத்து அற்புதங்களை உலகத்துக்குக் காட்டியது என்றும், வேறெந்த மொழிக்கும் இவ்வகை ஏற்றம் இருந்திருக்கவில்லை என்றும் பாடுகின்றார்.

இரவிலே பரவையாரிடம் தூது அனுப்பியது தமிழ்; முதலையால் விழுங்கப்பெற்ற பாலகனைத் திருப்பி அழைத்துத் தந்தது தமிழ்; எலும்பைப் பெண்வடிவாக்கியது தமிழ்; அடைக்கப்பட்ட கதவைத் திறக்க வைத்தது தமிழ். ஆ..........! எவ்வாறெல்லாம் ஏற்றமுறு தமிழைப் போற்றிப் பாடுகிறார்.

தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததும், முதலையுண்ட பாலனை அழைத்ததும், எலும்பு பெண் உருவாகக் கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும்,

"கன்னித் தண்டமிழ்ச் சொல்லோ
மறுபுறச் சொற்களோ சாற்றீர்."

என்ற பாடலில் இன்பத் தமிழின் பெருமை எத்துணை அழகாகக் காட்டப்பட்டுள்ளது.

பசு பதி ஆகிய இறைவன் எல்லா உயிர்களுக்கும் இரங்கி அருள் பாலிக்கிறான் என்பதைப் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த படலத்தில் தெளிவுபடுத்துகிறார். நம்பினோரைக் கைவிடார் எங்கள் பெருமான் என்பதைத் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம், மண் சுமந்த படலம், இசைவாது வென்ற படலம், விறகு விற்ற படலம், மாணிக்கம் விற்ற படலம் ஆகியவற்றில் மிக அழகாகக் காட்டியுள்ளார்.

"அன்புறு பத்தி வித்தி
ஆர்வநீர் பாய்ச்சும் தொண்டர்க்கு
இன்புரு வான ஈசன்
இன்னருள் விளையுமாப் போல்."

என்பதிலிருந்து அன்பும், பக்தியும், ஆர்வமும் கொண்ட அடியவர்க்கு இன்பத் திருவினளுகிய ஈசன் தனது இன்னருளை விளைவித்து நிற்றல் தெளிவாகிறது.

"என் சோதனைத்தோ நின்னியல்" என்று பாண்டியன் இரங்கி, ஏத்துமிடம் கன்னெஞ்சையும் கரைய வைக்கும். உருகி நிற்கும் அடியவரை இறைவன் எவ்வாறு தாங்குகிறான் என்பதைப் பல இடங்களில் திருவிளையாடற் புராணம் காட்டுகிறது.

"குடங்கை நீரும் பச்சிலையும்
இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் கையில் படுதலைகொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய்என்று
ஏசு வார்க்கென் பேசுவனே."

என்பது இசைவாது வென்ற படலத்தில் அமைந்த பாடலாகும்.

பரஞ்சோதியாரின் இறைபக்தி, தமிழ்ப் பற்று ஆகியவற்றை அறிந்ததுடன் இறைவனின் எளிவந்த கருணையையும் திருவிளையாடற் புராணம் காட்டும் திறன் அறிந்து போற்றி மகிழுதற்குரியது.

திருவிளையாடற் புராணத்திலே சைவ சித்தாந்த நுண்கருத்துகள் பல இடங்களில் விரவி வருவதைக் காணலாம். அரன்பூசை, அடியார் பூசை, குருபக்தி, சிவசின்னங்கள், திருவைந்தெழுத்து, சிவாலய வழிபாடு ஆகியவற்றைப் பற்றிய சித்தாந்தக் கருத்துக்கள் ஒவ்வொரு படலங்களிலும் இடம் பெறக் கூடியதாக ஆசிரியர் விளக்கியுள்ளார். இயற்கைக் காட்சியிலும் உபதேசங்களிலும் இவை தெளிவாக்கப்பட்டுள்ளன.

"ஈறி லாதவ ளொருத்தியே
ஐந்தொழி லியற்ற
வேறு வேறுபேர் பெற்றென
வேலைநீ ரொன்றே
ஆறு கால்குளங் கூவல்
குண்டுகள் கிடங்கெனப்பேர்
மாறி யீறில்வான் பயிரெலாம்
வளர்ப்பது மாதோ"

சமுத்திர நீர் ஒன்ருக இருந்தாலும் அவை ஆற்றுநீர், கால்வாய் நீர், கிணற்று நீர், குளத்து நீர், குண்டு நீர், கிடங்கு நீர் எனப் பல பெயர்களைப் பெற்றுப் பயிர்களை வளர்ப்பதற்கு உதவுவது போல ஈறில்லாத வளாகிய சக்தி ஒருத்தியே பல பெயர்களை எடுத்துக்கொண்டு பஞ்ச கிருத்தியங்களை

நடாத்தி உலகை உய்விக்கின்ருள் என்பதை இயற்கைக் காட்சியிலே இருந்து எடுத்துக் காட்டுகிருர். இதனையே மேற் காட்டிய பாடல் தெளிவுபடுத்துகிறது. மேலும் சைவ சித்தாந்த நூலாகிய திருவருட்பயன் சக்தியின் பங்கினை எடுத்துக் காட்டுமிடத்து:

'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்'

என்ற குறளாற் காட்டப்படுகிறது. மேலும் இந்நூலாசிரியராகிய பரஞ்சோதி முனிவர் மதுரையம்பதி சக்தி பீடமாய் அமைந்தது என்ற பெருமையை உள்ளத்திலே கொண்டு முதற் பாடலிலேயே ''சக்தியாய் சிவமாய்...... ......'' என்று தொடங்குகிருர்.

அங்கையற்கண்ணி மீனட்சி தன்னுடைய இரும்புபோன்ற மனதைக் குழையச் செய்து ஆட்கொண்டுவிட்டாள் என்பதையும் உருக்கமாகக் காட்டிப் பாடுகிருர். அம்மை, அப்பன் அருளிலே தோய்ந்த ஆசிரியருக்குக் காணும் காட்சிகளெல்லாம் கடவுட் காட்சிகளாகவே புலப்பட்டது. ''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்ற நன்மொழிக்கேற்ப பரஞ்சோதியாருடைய பாடல்கள் அனைத்தும் அவரின் உள்ளத்தில் அமைந்த திருவருட் சுரப்பையே காட்டி நிற்கின்றன. இதற்குச் சான்ருக ஒரு பாடலைக் காண்போம்:

'' தெய்வ நாயக னீறணி
மேனிபோற் சென்று
பௌவ மேய்ந்துமை மேனிபோல்
பரந்துபல் லுயிர்க்கும்
எவ்வ மாற்றுவான் சுரந்திடு
மின்னரு ளென்னக்
கௌவை நீர்சுரந் தெழுந்தன
கனைகுரன் மேகம்.''

இவ்வாறு திருவிளையாடற் புராணம் முழுவதும் அமைந்த பாடல்களில் ஆசிரியர் பரஞ்சோதியாரின் சைவத் தமிழ்ப்பற்றையும் சைவசித்தாந்த நெறியினைப் போற்றுந் திறனையும் நாம் காணமுடிகிறது. சைவ மக்களுக்குச் சிறந்த புண்ணிய சேத்திரமாக விளங்குவது காசி. இத்தலத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிக்கும் விஸ்வநாதப் பெருமானையும் விசாலாட்சி அம்பாளையும் வழிபடுவதில் இந்துக்களுக்குத் தனிப்பெருந் திருப்தி ஏற்படுகிறது. இங்கு மகிமையை ஏற்படுத்தும் புண்ணிய தீர்த்தம் கங்கை. இங்கு நீராடிப் புண்ணியப் பேற்றை எய்தவும் காசி லிங்க வழிபாட்டினுல் ஆத்ம திருப்தியைப் பெறவும் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தம்பிரான் அவர்கள் எமக்கு இந்த வாய்ப்பைத் தந்துள்ளார்கள். இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில் அவர்களுடைய திருவடிகளை வணங்கி, சென்னை சைவசித்தாந்த சமாசத்தினருக்கு மனமுவந்த நன்றியைக் கூறி அமர்கின்றேன்.

[வட இந்தியக் காசியில் 1982ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு.]

✻

'' தாய் ஒருத்தி ஒரு பொருளைத் தான் பெறும்போது அடையும் மகிழ்ச்சியை விடத் தனது பிள்ளை பெறும்போது அடையும் மகிழ்ச்சி அளப்பரியது. அதைப் போல் நாம் இறைவனுக்குக் கொடுக்க நினைப்பதையெல்லாம் இறைவன் உறையும் இதயங்களைக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு வழங்கினுல் அது இறைவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும்.''

* * *

'' சைவமும், வைணவமும் தமிழைத் தற்காத்து நின்றதைத் தமிழர்கள் தள்ளி விட இயலாது.''

# "தமிழோடிசை பாடல்"

"நாவுக்கரசு எனும் நாமம் இவ்வே முலகும் மன்னுக" என எம் பெருமானின் அருள் வாக்கு ஆகாயத்தில் எழுந்தது. அந் நாமத்துக்கு அரண் செய்வன அப்பரின் தீந்தமிழ் மாலைகளாகிய 4, 5, 6ஆந் திரு முறைகள். திருவாரூர் வீதியிலே அப்பரின் திருக்கோலத்தைக் காட்டுகின்றார் சேக்கி ழார்:

"மார்பாரப் பொழிகண் ணீர்
மழைவாருந் திருவடிவும்—மதுரவாக்கில்
சேர்வாருந் திருவாயில்
தீந்தமிழின் மாலைகளும் ........"

தீந்தமிழ் இனிய தமிழ். அது செவிக்கு மாத்திரம் இனிமை கொடுப்பதல்ல. உயிருக் கும் உணர்வூட்ட வல்லது. அப்பருக்கு அஞ் ஞான்று பயன் கொடுத்ததுபோல், கற் போர்க்கு எஞ்ஞான்றும் பயன் கொடுக்கும் தன்மை கொண்டது தீந்தமிழ். அப்பர், அல்லற்பட்ட நேரத்தில் இன்தமிழ் பாடி உய்தியடைந்தார். கடுமையாக வருத்திய சூலைநோயை நீக்கியது அவர் நினைத்த தமிழ். மத யானையை அடக்கியது அவர் பாடிய தமிழ். அவர் துன்புற்ற நேரத்திலே, அவர் தம் நெஞ்சத்தில் எழுந்த பாடல்களிலேயே தீந்தமிழின் இனிமையை நாம் காணலாம்.

"மணியிலே மாமறைக்
காட்டு மருந்தினை
வண்மொழியால் திணியனநீள்
கதவந் திறப்பித்தன
தெண்கடலில் பிணியனகல்
மிதப்பித்தன
சைவப் பெருநெறிக்கே
நாவுக்கரையர்தன் அருந்தமிழே."

திருத்தாண்டகம், திருநேரிசை, திருக் குறுந்தொகை போன்ற செய்யுளமைப்பில் பாடல்களைத் தந்தவர் அப்பரவர்களே. இதனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர் களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழுக்கு ஏற்றமளித்தவர் அப்பர் எனினும் அது மிகையாகாது.

"தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்" என முதற்பதிகத்திலேயே உணர்வு ததும்ப மொழிகின்றார்.

**அனுபவத் தமிழ் :**

நாயன்மார் வரிசையில் ஆண்டும், அனுபவமும், துன்பத் தோய்வும் மிக்கவர் அவர். அதனால் அவர் அமைத்த பாடல்கள் உறுதியளிப்பவை. அவர் பாடலைத் தண் டமிழ் எனவும் வழங்குவர், 'பிறவி வெப்பம் மாற்றும் ஔடதம்' போன்ற அறிவுரைகள் அங்குண்டு என்பதனால்.

ஒரு இடத்திலே பின்வருமாறு அருமை யாக மொழிகிறார். 'மானிடர்களே! ஒரு நாள் இரண்டு நாள்; ஒரு வாரம் இரண்டு வாரம்; அல்லது ஒரு மாதம் இரண்டு மாதம் கடவுளை வணங்கி விட்டு, அவனருள் கிடைக்கவில்லையே என்று சோர்ந்து விடா தீர்கள். இடைவிடாது அவன் நாமத்தை உச்சரித்தால் அவன் வராமல் இருக்க முடியாது.'

"பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து
பன்னாள் அழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி
யானென் றெதிர்ப்படுமே"

சம்பந்தருக்கு முன்பே திருநாவுக்கரசர் சைவராகப் பிறந்தவர். சமணசமயத்தில் பல ஆண்டுகள் இருந்தவர். மீண்டும் சைவராக மாறிச் சைவத்தை வளர்த்தவர். இங்ஙனம் இவர் கோவிற் பயணம் செய்து, சைவத்தை வளர்த்து வரும்போதுதான் சிறுபிள்ளையான சம்பந்தர் சந்தித்தார். சைவம் பரப்புவதில் தமக்கு வழிகாட்டியாய் இருந்ததை நோக்கி யும், தமக்கு முன் திருப்பதிகம் பாடி யிருத் தலை நோக்கியும் "அப்பரே" என்று அழைத் தார் சம்பந்தர். தேவாரத் திருமுறையை முதலில் நமக்குத் தந்தவர் அவர், கயிலைமலை வரை கோயிற் பயணம்செய்தவர். அத்தகைய அனுபவத்தின் பின் முன்னைய நிலை அவருக்கு நாணத்தைக் கொடுத்தது. இரண்டு நிலையை யும் அவர் ஒப்பு நோக்கினார். பிரபஞ்சச் சார் பில் தானறியாமல் நின்றான்; சிவச்சார்பில் தானறிய நின்றான் என்பதை உணர்ந்தார்:

''கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே ளுகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே.''

ஏழாம் நூற்றாண்டில் எழுந்த
புரட்சித் தமிழ்

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களாகிய பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்றவர்களின் உணர்ச்சிப் பாடல்களை நாமறிவோம். தமிழ்மொழி மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும், தமிழினத்தின் மீதும், தன்மானத்தின் மீதும் எழுந்தவை இந் நூற்றாண்டுக் கவிகள். இதற்கு ஓரளவு வழிகாட்டியவர் அப்பர் எனலாம். சரித்திரத்திலேயே புதுமைப்புரட்சி, சீர்திருத்தம் என்பவற்றை அறியாத காலத்தில், சமயவாழ்வு வாழ்ந்த அப்பர் இதனைச் செய்தார்.

பல்லவ மன்னவன் தூதுவரை விட்டு அழைத்தபோது,

'' நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்.................'' என்று

பாடி, வீரத்தை வெளிப்படுத்தியவர் இப் பெரியார்.

அதுமாத்திரமன்றிப் பட்டத்து யானையை ஏவிவிட்டபோது,

''அஞ்சுவதுமில்லை! அஞ்சவருவதுமில்லை''

என அஞ்சாது கருத்துக்களை முன் வைத்தார்.

மேலும் இவர் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துக்கள் மிகச் செறிந்தும் சிறந்தும் காணப்படுகின்றன.

சாத்திரமும் கோத்திரமும் பேசிப் போலி வாழ்க்கை வாழ்பவர்களை மிக நயமாகச் சாடுகிருர். பின்வரும் பாடல் இதனைக் காட்டுகிறது.

''சாத்தி ரம்பல பேசுஞ் சழக்ர்காள்
கோத்தி ரமும் குலமுங்கொண்டு என்செய்வீர்
பாத்தி ரம்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும்மாற் பேறரே''

எங்கும் இறைவன் உள்ளான் என்ற உண்மையை உணராவிட்டால் கங்கைத் தீர்த்தத்தில் அல்லது காவிரித் தீர்த்தத்தில் ஆடினலும் பயன் எதுவும் கிட்டாது என்பது அவர் கருத்து. பெண்களைப் போற்ருத எந்தச் சமயமும் முழுமையானதன்று என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இவருடைய பாடல்களில் அம்மை அப்பனுடைய இணைப்பு மிகுதியாகக் காணப்படுகின்றது. கயிலைக் காட்சியைத் திருவையாற்றிலே கண்ட அப்பரடிகள்:

''காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன் ''

என்ற அடியில் அவ்வுண்மையை வெளிப் படுத்துகின்ருர்.

''தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்''

என்ற வாக்கிற் கேற்ப பல பாடல்களில் சிறந்த உவமையும், நகைச் சுவையும், அகப் பொருட் செறிவும் நிறைந்து காணப்படுகின்றன.

''பாம்பின் வாய்த் தேரைபோல
பலபல நினைக்கின்றேன் '' என்றும்,

''திளைத்துநின் ருடுகின்ற ஆமைபோற்
தெளிவி லாதேன்''

என்றும்,

''ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனே டொக்குமே''

என்றும்,

''இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறே''

என்றும் உவமைகள் காட்டி, உலக வாழ்வின் சிறுமையை அருமையாகப் புலப்படுத்துகின்ருர். மற்ருேர் இடத்தில் நகைச் சுவை ஒன்றைக் காண்போம்.

திருவொற்றியூர் சிறந்த ஓர் திருத்தலம். இத்தகைய திருத்தலத்தை நீ ஒற்றியாக வாங்கிவிட்டாய். உனக்கு ஒற்றி தந்தவர்களது பரம்பரையில் இப்பொழுது ஒருவருமில்லை. இதை நினைத்து நீ அந்த ஊரை விற்று விடாதே. சுவாமீ! இப்படி ஒரு ஊர் உனக்குக் கிடையாது என்று நயமாக இறைவனேடு பேசுகின்ருர்.

"சுற்றி வண்டு யாழ்செயும்
சோலையும் காவும் துதைந்திலங்கு
பெற்றி கண்டார் மற்று
யாவருங் கொள்வர் பிறரிடை நீ
ஒற்றி கொண்டாய் ஒற்றியூரையும்
கைவிட்டு உறுமென் றெண்ணி
விற்றி கண்டால் மற்றிது
வொப்ப திவ்விடம் வேதியனே."

சுவாமிகளின் பாடல்களில் அகப்பொருட் சுவையையும் சிறப்பாகக் காணலாம். தமிழிலக்கியத்துக்கு வளமூட்டுவது அகப்பொருட் சுவையாகும். சங்க இலக்கியங்களில் இந்தச் சிறப்பைக் காணுகின்ற எமக்குத் திருமுறைகளுடன் இணைத்துக் காணும் பொழுது அவை அருட்சுவையையும் தமிழ்ச் சுவையையும் தருகின்றன. "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்ற பாடலில் பக்குவமுள்ள தலைவியாக ஆன்மாவை வைத்துப் பாடியுள்ள சிறப்பைக் காணுகின்றோம். மற்றொரு பாடலில் தலைவனிடத்தில் கொண்ட காதலால் தலைவியின் மெலிவும், கைவளையல்கள் கழன்று விடக் கூடியதான நலிவும் ஏற்படுகின்ற தென்பதை இறைவனுகிய தலைவனிடத்திலும் பக்குவமுள்ள ஆன்மாவாகிய தலைவியிடத்திலும் வைத்து அகப் பொருட் சுவை மிளிரப் பாடியுள்ளார்:

"வஞ்சித்தென் வளைகவர்ந்தான்
வாரானே ஆயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம்
பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய
அழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற
சேவடியாய் கோடியையே."

இவ்வாறு அப்பர் சுவாமிகளின் அருந்தமிழ்ப் பாடல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிச் சிறப்பைப் பெறுகின்றன என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

---

# நற்சிந்தனைகள்

## [இலங்கை வானொலியில் நிகழ்த்தியவை]

### நற்சிந்தனை I
### (யோகர்சுவாமிகள்)

பத்தினி, பத்தர்கள், தத்துவ ஞானிகளால் ஒரு நாட்டுக்குச் சுபீட்சமேற்படுகிறது என்பது திருமூல நாயனர் திருவாக்கு. நமது கண்முன்னே சீவன்முத்தராக விளங்கியவர் யோகர்சுவாமிகள். அவர்கள் இறைபதமடைந்து இருபது ஆண்டுகள் ஆகின்றன. ஆனல் அவர்கள் எம்மத்தியில் விதைத்துவிட்டுச் சென்ற ஞான வித்துகள் நன்முக முளைகொண்டு பூத்துக் காய்த்துக் கனிந்து நற்பயன் தருவதை நம்மால் உணரமுடிகிறது. ஞான ஒளி வீசும் திருமுகம்; கருணை அலை எறிந்தொழுகும் கண்கள்; பஞ்சென நரைத்துத் தொங்கும் தாடி; பாலென வெழுத்துக் கோதி முடியப்பெற்ற நரைமுடி; தூயவெள்ளை வேட்டி—இத்தனையும் நிறைந்த ஞான கிரியாக விளங்கியவர் சுவாமிகள்.

"கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்"

என்பர் மணிவாசகப் பெருமான். சுவாமிகள் திருமுன்னிலையில் பக்தர்களின் ஈடுபாட்டுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இவர்கள் ஒரு நடமாடுந் தெய்வம். தியானத்திலும் மௌனத்திலும், அறிவுரை பகர்தலிலும், நற்சிந்தனை படித்தலிலும் பொழுது கழிந்தது. அத்துடன் தம்மைத் தரிசிக்க வருவோரின் ஐயங்களைத் தாமாகவே உணர்ந்து தீர்த்துவைப்பதும் சுவாமிகளின் கடமையாக இருந்தது. மகா மந்திரங்கள் போன்று அவர்களுடைய திருவாயினின்றும் வரும் வாக்கியங்கள் பேருண்மைகளை உணர்த்துவன. "சும்மா இரு", "எப்பவோ முடிந்த காரியம்", "ஒரு பொல்லாப்புமில்லை" என்று

அடிக்கடி கூறுவார். தனது குருவினிடத்து தான் பெற்ற அனுபவத்தைத் தனது சிஷ்யர்களுக்குப் பகிர்ந்து வழங்கினுர்.

இவர்களிடம் தரிசனம் பெறச் சென்ற வர்கள் அனலிலே காய்ச்சப்பெற்ற பொன் போலப் புத்தொளி பெற்றே வீட்டுக்குத் திரும்பினர். மனிதனின் எண்ணங்களை ஊடுருவி அறிவதில் இவர் பேராற்றல் படைத்தவர். எத்தனையோ சித்துக்கள் கைவரப்பெற்றவராக இருந்த போதிலும் அவற்றையெல்லாம் வெளிக்காட்டவில்லை. ஒவ்வொருவருடைய வாழ்விலும் சுவாமிகள் ஒளியூட்டிநின்முர். நோய் நொடிகளுக்கெல் லாம் ஏற்ற மருந்து சொல்லிக்கொடுப்பார். வைத்தியர்களால் மாற்ற முடியாத கொடிய வியாதிகளை யெல்லாம் இவர் மாற்றியுள் ளார். உடல் நோய், உளநோய், உயிர்நோய் யாவையும் மாற்றிவிடும் பெருவைத்தியர் இவர். தன்னை ஆட்கொண்ட குருமூர்த்தி யின் கருணைத் திறத்தைக் காட்டிய இடத் தில் ''கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியன்'' எனப் பாடினுர் மணிவாசகப் பெருமான். ஆனுல் நாம் கண்ட குரு நாதரோ இரும்பு தரும் நெஞ்சங்களையும், பதவிமோகம் பிடித்த பேர்வழிகளையும், செல்வச் செருக்குக் கொண்ட சீமான்களை யும் திசைதிருப்பி திருவருள் வழியில் வாழ வைத்தவர். இந்தப் பேறு பெற்ற ஒரு திருக்கூட்டமே இன்று நம் மத்தியில் புனிதர் களாக வாழ்ந்துகொண்டிருக்கின்முர்கள்.

## நற்சிந்தனை II
## (புதுவருடப் பிறப்பு)

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'' என்பது எமது திஞந்தரப் பிரார்த்தனை. ''வையகமெல்லாம் துயர் தீர்கவே'' என்பது நாம் படிக்கும் திருமுறை. ''பெருகலாம் தவம் பேதைமை தீரலாம் திருகலாகிய சிந்தை திருத்தலாம்'' என்பது அப்பர் பெருமான் வாக்கு. இன்றைய தினத்தில் எமதுள்ளத்தில் இருத்தவேண்டிய வாசகங்கள் இவை. எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம், எதிலும் சிவ மயம் என்று எண்ணியெண்ணி இறும்பூது எய்தவேண்டுமாஞல் ஒவ்வொரு அடியும் திருவருளை நோக்கி வைக்கவேண்டுமென்ப தற்குப் பயின்று கொள்ள வேண்டும். காலத்தை அளந்து அளந்து வாழுகிறோம். அளவுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை. என்று லும் அது தாஞகவே இயற்கை நியதிப்படி அமைந்து எம்மை விழிப்படையச் செய்கிறது. கடந்த ஆண்டு நாமாற்றிய தரமான கரு மங்கள், தவறுன செயல்கள் புத்தாண்டில் நினைக்கப்பட்டு மேலும் தரமான பாதைக்கு வழிநடத்தத் தூண்டுகிறது. ஒழுக்கமும் தெய்வ நம்பிக்கையும் இணைந்து இடை விடாது முயற்சிசெய்து வாழ்வை வளமாக்க உறுதிபூண வேண்டும். தெய்வ நம்பிக்கை யுடையவர்களே நியாயத்துக்குக் கட்டுப்படு வார்கள். பிறர் துன்பங்கண்டு வருந்துவ தோடு அதனைப் போக்கிவிடவும் முன்வரு வார்கள். நமது சமயப் பெரியோர்கள் ஆத் மீகத்துறையில் எவ்வளவு உயர்ந்து நின்முர் களோ, அந்த அளவு மக்கள் தொண்டும் செய் திருக்கிறுர்கள். இதஞல் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரராஞர்கள். இந்த நிலை கைவருமாஞல் மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் எம்மை நலிவடையச் செய்ய மாட்டா. கோளறு பதிகம் இதனை அழ காகக் காட்டுகிறது.

''கோளரி யுழுவை யோடு கொலையானை கேளல்
கொடுநோய்க ளான பலவும்
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.''

என்பது ஞான வாக்கு. இவை எமது இல்லங்கள் தோறும் இடம்பெறவேண்டும். புதுவருடப்பிறப்பு என்முல் இறைவழிபாட் டுடன் பொங்கல் செய்து தாமுண்டு பிற ருக்கு வழங்கலும் பெரியவர்கள் கையினுல் பணம் பெற்று மகிழ்வதும் விருந்தயர்தலும் சுபநேரம் பார்த்துப் புதுக் கருமங்களை ஆரம்பிப்பதும் ஆலய வழிபாட்டைத் தவ றுது செய்தலும் எமது பண்டுதொட்ட மர பாகும். இவற்றை வெறுஞ்சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமை யுணர்வு ஓங்கி ''நானும் வாழ்ந்து மற்ற வர்களையும் வாழவைப்பேன்'' என்ற ஒரு திடசங்கற்பத்தை எடுத்துக்கொள்வது மேலா னது. சிந்தனையிலும் செயலிலும் புதுமை காணவேண்டும்.

"அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி, மனத்துளே பேதா பேதம் பொய்வஞ்சம் களவு சூது, சினத்தையும் தவிர்ப்பா ராகில் செய்தவம் வேறொன் றுண்டோ" என்றார் ஒரு பெரியார். சமய வாழ்வு என்பது தனக்குத் தானே நற்சான்று பகர்வதிலேதான் வெற்றி காண்கிறது. கல்வி என்பதும் நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளர வேண்டும். இன்று கற்றவர்கள் மத்தியிலே பல ஊழல்களைக் காணுகிறோம். கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் என்று சொல்ல நேரிடுகிறது. ஆகவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து தெய்வத்தை முன்வைத்து திருவருளைத் துணைகொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்புங் கொண்டு வாழ வழிகாண்போமாக.

## நற்சிந்தனை III
### (வைகாசி விசாகம்)

விசாக நட்சத்திரத்தினால் பெருமை பெற்றது வைகாசி. இம்மாதத்தை வைசாகி என்றும் கூறுவர். இதனை சோதிநாள் என்றும் போற்றுவர். சோதிப் பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட முருகப் பெருமான் அவதாரம் செய்த திருநாள். அவதாரம் என்பது கீழிறங்கி வருதல் என்ற பொருளில் வழங்குவது. என்றுமுள்ள, பிறப்பிறப்பற்ற ஒரு பொருள் உலகத்தை உய்விக்கும் பொருட்டு இறங்கி வருவதனையே அவதாரம் என்கிறோம். தேவர்களின் வேண்டுதலை ஏற்று சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணினின்றும் முருகனைத் தோற்றுவித்த சம்பவத்தையே கந்தபுராணம் காட்டுகிறது.

"காலமாய்க் கால மின்றி
கருமமாய்க் கரும மின்றி
கோலமாய்க் கோல மின்றி
குணங்களாய்க் குணங்க ளின்றி
ஞாலமாய் ஞால மின்றி
அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இளிந்த வள்ளல்
மூவிரு முகங்கொண் டுற்றான்."

என்பர் கச்சியப்பர்.

தக்கன் பல ஆண்டுகள் கடுந்தவம் செய்தவன். இறைவன் அருளால் வரங்கள் பல பெற்றான். பின்பு வரங்கொடுத்த இறைவனையே மறந்து யாகத்தைச் செய்தமையால் பெருந் தண்டனை யடைந்தான். சிந்திக்கும் ஆற்றல் இல்லாத ஆட்டின் தலையொன்றைத் தக்கனுக்குப் பொருத்தப்பட்டது. நன்றி மறந்தமையால் இந்நிலை கிடைத்தது. ஆனால் தேவர்களும் தமக்குத் தலைவன் சிவபெருமானே என்று தெரிந்தும் தட்சனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து யாகத்தில் கலந்துகொண்டமையால் பல துன்பங்கள் அடைந்தார்கள். இவர்கள் தெரிந்து கொண்டே இத்தவறினைச் செய்தமையால் இவர்களுக்குத் தண்டனையை அசுரர்களிடமிருந்து இறைவன் ஏற்படுத்தினான். சூரபன்மன் ஆதியோரால் துன்பப்பட்ட தேவர்கள் துன்பந் தொலையும் காலம் அண்மியதும் இறைவனிடமே சென்று முறையிட்டு இரந்து நின்றனர்.

"ஆதியும் நடுவும் ஈறும்
அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும்
இன்பமும் துன்ப மின்றி
வேதமுங் கடந்து நின்ற
விமலஒர் குமரன் றன்னை
நீதரல் வேண்டும் நின்பால்
நின்னையே நிகர்க்க என்றார்."

அவ்வாறே எம்பெருமான் முருகன் உதித்த நாள் இதுவேயாகும். இத்த நாளில் முருகப் பெருமானை வழிபாடு செய்து அவன் நாமத்தை ஆயிரம் முறை ஜெபித்து ஆனந்த மடைவது சைவமக்களின் இன்றியமையாத கடமையாகும். முருகப்பெருமானின் அவதாரத்தால் மகிழ்ந்த தேவர்கள் விசாகனைப் போற்றிய தினத்தை நாமும் இவ் விசாக தினத்தில் நினைவு கூருவோம்.

"கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு
கேசநம நங்கை உமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம
நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம
சோதிநம நற்பரம னும்
எந்தைநம என்றும்இளை யோய்நம
குமாரநம என்று தொழுதார்"

அருணகிரிநாதரும் எம்பெருமான் முருகனை வழிபடுவோர்க்கு ஒரு தாழ்வுமில்லையே என்று அழகாகப் பாடியுள்ளார். நாமும் பாடி அமைவோம்.

''சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாத
வர்க்கொரு தாழ்வில்லையே.''

## நற்சிந்தனை IV
### (சேக்கிழார் குருபூசை)

'' தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னாம்திருக் குன்றையூர்ச்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்.''

சிவ நெறியும் செந்தமிழ் நெறியும் தழைக்க அவதாரம் செய்தவர் சேக்கிழார் பெருமான். சிறந்த நூற் புலமையும் நுண்ணிய அறிவும் செய்யுள் இயற்றும் திறனும் இவருக்குக் கிடைத்த அருட் கொடைகளாகும். சோழ மன்னனுக்கு அமைச்சராந் தகுதி பெற்ற இவர் அறிவுரை பகரும் ஆசானாகவும் விளங்கினார். மன்னவனுக்கு அவ்வப்போது சைவசமய உண்மைகளை எடுத்துக் கூறுவதில் பேரானந்தமடைந்தார். மூவர் திருமுறைகளையும் சித்தாந்த உண்மைகளையும் சங்க இலக்கியங்களையும் திருக்குறளையும் நன்கு கற்றுத் தெளிந்தவர் சேக்கிழார். அநபாய மன்னன் உலகியல் இன்ப நூல்களில் நாட்டம் செலுத்திய சமயத்தில் நயமாகச் சாடி அருளியல் வழிக்கு இழுத்துச் சென்றார். இதன் காரணமாகவே எழுந்தது பெரிய புராணம். அவகதைகளை விட்டுச் சிவகதைகளைப் படியுங்கள் என்று கூறிய அமைச்சரை நோக்கி அக் கதைகளைக் காவியமாக ஆக்கித் தரும்படி மன்னவன் வேண்டினான். இவ் வேலைடுகோளை ஏற்றுத் தில்லையம்பலவனைத் தஞ்சமாக அடைந்து சிதம்பரத்திலே வழிபாடு செய்தார். வழிபாட்டை ஏற்ற நடராசப்பெருமான் ''உலகெலாம்'' என்று அடி எடுத்துக் கொடுத்தார். இந்த அடியை முதலாகக் கொண்டு பெரியபுராணம் பாடிமுடிக்கப்பட்டது. நடராசப்பெருமானருளிய திருவருள் ஓட்டம் நூல்முழுவதுமே செறிந்து காணப்படுகிறது. முதலும் முடிவும் உலகெலாம்; இடையில் உலகெலாம்; எங்கும் உலகெலாம். பக்திச்சுவை சொட்டச் சொட்ட பாடியருளிய பெரிய புராணம் சைவ மக்களின் சிறந்த பொக்கிஷம். சேக்கிழார் பெருமானின் குருபூசைத் தினத்தில் இந்த அற்புதக் காவியத்தைப் பற்றிச் சிந்திப்பது எமது தலையாய கடனாகும். இந்நூல் சிவபக்தியையும் சிவனடியார் பக்தியையும் வெளிப்படுத்தும் திறன் அற்புதமானது. அத்துடன் விபூதி, உருத்திராட்சம், திருவைந்தெழுத்து ஆகியவற்றின் பெருமைகளைக் காட்டிச் செல்கிறார். ''பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்'' என்று சிவனடியார்களை அறிமுகம் செய்யும் திறன் போற்றுதற்குரியது. சிவாலய வழிபாடு என்பது சீவன்முத்தராய் உள்ளோர்க்கும் இன்றியமையாதது என்ற சைவசித்தாந்தக் கருத்தை அழுத்தமாகக் காட்டிப் பாடியவர் சேக்கிழார். பெரிய புராணம் சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தில் அரங்கேறியது. மன்னவன் தன் அமைச்சருக்கு ''தொண்டர் சீர் பரவுவார்'' என்னும் பட்டம் சூட்டி பட்டத்துயானையில் பெரிய புராணத்தையும் சேக்கிழார் சுவாமிகளையும் ஏற்றி வலம்வரச் செய்து கவரி வீசிக் கௌரவம் செய்த சம்பவம் மெய் சிலிர்க்க வைக்கிறது. கூடி இருந்து அரங்கேற்றம் கண்டோர் பின்வருமாறு போற்றினர்.

''மதுர இராமா யணகதை உரைசெய்த
வான்மிக பகவனும் ஒப்பல்ல
விதிவழி பாரதம் உரைசெய்து கரைசெய்த
வேதவி யாசனும் ஒப்பல்ல
சுதைவற ஆயிரம் நாவுடை அறிவுள
சேடவி சேடனும் ஒப்பல்ல
பொதிய மலைக்குறு முனிவனும் ஒப்பல்ல
புகழ்புனை குன்றை முனிக்கென்பார்.''

குன்றைமுனி என்றும், அருள்மொழித் தேவர் என்றும், தொண்டர்சீர் பரவுவார் என்றும் போற்றப்படும் சேக்கிழார் சுவாமிகளின் திருவடிகளை இன்றைய தினத்தில் வழுத்தி வணங்குவோமாக.

# ஈழத்துப் பள்ளுப் பிரபந்தம்

பழந்தமிழிலக்கியங்கள் கல்வியறிவு மிக்கார்க்கே பயன்படக் கூடியன; உயர்ந்த மொழிநடையிலமைந்தன. கல்வியறிவு அதிகமில்லாத பாமரமக்க ளறிந்தனுபவிக்கத்தக்க பண்டை இலக்கியங்கள் மிகக்குறைவு. ஆனால் காலஞ்செல்லப் பாமரமக்கள் ஆடிப்பாடுவதற்கேற்ற பள்ளு, குறவஞ்சி, நொண்டி, நாடகம் முதலான சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின. இவை, தொடர்ந்து நிகழ்ச்சிகளைக் கதை போலக் கூறுவன. பதினேழாம் நூற்றாண்டு தொடக்கம் சிற்றிலக்கியங்கள் சிறப்புற்று எங்கும் பரவலாயின. உரையாடியும், விவரித்துக் கூறியும், புனைந்துரைத்தும், கட்டுரைத்துஞ் செய்யுள் வடிவத்திலே சிற்றிலக்கியங்கள் தோன்றின. இவற்றைப் பாமரமக்கள் பெரிதும் விரும்பி ஆடியும் பாடியும் கேட்டும் மகிழ்ந்தனர்.

இச் சிற்றிலக்கியங்களுள் உழத்திப்பாட்டு என்பதுமொன்று. இதனிலக்கணத்தைப் பன்னிருபாட்டியலிற் காணலாம்.

''புரவலர் கூறி
யவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை
யொருமை யுணர்ந்தன
னெனவரு மீரைந்
துழத்திப் பாட்டே''

என்பது அந்நூற்பா. இவ்வுழத்திப்பாட்டே பிற்காலத்திற் பள்ளு என்னும் பெயரால் வழங்கப்படலாயிற் றென்பது நவநீதப் பாட்டியலால் தெரியவருகின்றது. உழத்திப் பாட்டாகும்; பள்ளு மென்பர் என்று நவநீதப் பாட்டியல் கூறுவதாற் பள்ளும் உழத்திப் பாட்டும் ஒன்றே என்பது வெளிப்படை. பத்தொன்பதாம் நூற்றாண்டிறுதியிலெழுந்த செய்யுளிலக்கணம் என்ற நூல் உழத்திப் பாட்டிற்குரிய இலக்கணங்களைத் தொகுத்துக் கூறியுள்ளது. இன்று நாம் காணும் பள்ளுப் பிரபந்தங்களின் அமைப்பே ஆண்டுக் காணப் படுவதாலும் இவ்வுண்மை பெறப்படும்.

பள்ளரின் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுமிலக்கிய வகையே பள்ளு ஆகும். பள்ளரெனப்போர் பள்ளமான நிலத்திற் [மருதம்] பயிர்செய்து வாழ்வோராவர். இது 'பள்ளத்தி பள்ளன் எங்கேடி போட்டான்' என்ற ஆண்டையின் கேள்விக்குப் 'பள்ளம் பார்த்துப் பயிர்செய்யப் போட்டான்' என்று பள்ளி கூறியதனாற் புலனாகும். ஆகவே, பள்ளநிலத்திற் பயிரிடும் பள்ளரது வாழ்க்கையைச் சித்திரிக்கும் நூலுக்குப் பள்ளு என்ற பெயர் ஆகு பெயராய் வந்ததெனலாம்.

ஆரம்ப காலத்தில் மன்னர் அல்லது வள்ளல்கள் புகழ்பாடி ஊடே உழவின் பெருமையை எடுத்துக் கூறுவதே பள்ளுப் பாடல்களின் இயல்பாக இருந்திருக்க வேண்டுமென்பது மேற்போந்த ''புரவலர் கூறி..............'' என்ற நூற்பாவால் விளங்கும். பின் கடவுளரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவர்களின் அருட்டிறமையை எடுத்து ஓதும், தேவபாணியாய்த் தெய்வ வாழ்த்துக் கூறும் இலக்கியங்களாகவும் மலர்ந்தன எனலாம். இப் பிரபந்தம் சிந்தும், பல்வகை விருத்தங்களும் விரவிவரப் பாடப் படும் மரபினையுடையதென்பது,

''ஒவ்விய சிந்து விருத்தம்
விரவிவரத் தொடர்பு
செவ்விதிற் கிளந்து பாடுவ
துழத்திப் பாட்டாகும்.''

என்ற நவநீதப்பாட்டியற் பகுதியால் விளங்கும். கடவுள் வணக்கம், முறையே மூத்த பள்ளி, இளையபள்ளி, குடும்பன் [பள்ளன்] வரவு, அவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு கூறல், நாட்டுவளங் கூறல், குயிற்கூக் கேட்டல், மழை வேண்டிக் கடவுட் பரவல், ஆற்றுவரவு, அகப்பொருட்டுறை கூறல், பண்ணைத்தலைவன் வரவு, பள்ளிகள் இருவர் முறையீடு, இளையாளை யவனுரப் பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல் வினவல், அவனது நலம் கூறல், ஆயர் பெருமை கூறல், மூத்தபள்ளி முறையீடு, குடும்பனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி அடிசிற் கொடுவரல், அவன் அவளோடு கூறல், அவள் அவனை மீட்க வேண்டிப் பண்ணைத் தலைவனைப்

பரவல், உழவருழல், நாற்றுநடல், விளைந்த பின் செப்பம் செய்தல், நெல்லளத்தல் முதலிய உறுப்புக்கள் கொண்டதாகப் பள்ளு அமைந்திருப்பதை நாம் காணலாம்.

முக்கூடற்பள்ளு, மன்னர் மோகனப் பள்ளு, திருவாரூர்ப்பள்ளு, திருமலை முருகன் பள்ளு, வைசியப்பள்ளு, குருகூர்ப்பள்ளு, கண்ணுடைஅம்மை பள்ளு, வடகரைப் பள்ளு, வையாபுரிப்பள்ளு போன்ற பல பள்ளுப் பிரபந்தங்கள் தமிழ் நாட்டிற் தோன்றியுள்ளன. நம் ஈழமண்டலத்திலும் பலவகைப் பள்ளுகள் தோன்றியுள்ளன. கதிரைமலைப்பள்ளு, ஞானப்பள்ளு, பறாளைப் பள்ளு என்பன தேவபாணியாய் முறையே கதிர்காமமுருகன், ஏசுநாதர், பறாளை விநாயகர் ஆகிய கடவுளரைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது.

மேலே காட்டப்பட்ட பள்ளுகளிற் காலத்தால் முந்தியது கதிர்காமத்தி லுவந்துறையும் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட கதிரைமலைப் பள்ளேயாகும். முக்கூடற் பள்ளே முதலில் தோன்றியதென்றும் அது கிறீத்துவுக்குப்பின் ஆயிரத்தறுநூற் றெண்பதாம் ஆண்டிற் தோன்றியதென்றும் திரு. மு. அருணாசலம் கூறுகின்றார். ஆனால் மேலே கூறப்பட்ட ஞானப்பள்ளு ஆயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டாமாண்டளவில் தோன்றியதென அறிஞர் காலவரையறை செய்துள்ளனர். பன்மொழிப் புலவராய் விளங்கிய வண. ஞானப்பிரகாச அடிகளார், கதிரைமலைப் பள்ளிலுள்ள பல வடிகளை ஞானப்பள்ளு ஆசிரியர் எடுத்தாண்டுள்ளாரென்றும், கதிரைமலைப்பள்ளு அதற்கு மிகவும் முற்பட்டதென்றும் கூறுகிறார். மேலும் முக்கூடற்பள்ளை அடியொற்றியவையாக ஏனைய பள்ளுகளிற் பல காணப்படக் கதிரைமலைப்பள்ளில் அதனாட்சி காணப் படாமையாற் கதிரைமலைப்பள்ளு முந்தியது என்பது தெளிவு. கதிரைமலைப்பள்ளினை இயற்றினார் யாரென்பது இன்னமும் புலனாகவில்லை. கதிர்காமத்தலச் சிறப்பும், பாட்டுடைத் தலைவர் சிறப்பும், பள்ளுப் பிரபந்தத்திற்குரிய முத்தமிழ்ச் சிறப்பும் ஒருங்கமைய இந்நூல் இயற்றப்பெற்றுள்ளது. நூலியற்றியவர் எவராயினும் அன்னார் முருகவேள் மீது மிகுந்த பக்தி உடையவரென்பதற்குப் பல சான்றுகள் நூலிலே உண்டு. அன்றியும் கற்போருக்கு நகைப்பூட்டும் விகடக் கருத்துக்களையும் இச் சிற்றிலக்கியத்திற் பரக்கக் காணலாம்.

பள்ளனைப் பண்ணைத் தலைவன் மாட்டுத் தொழுவத்திற் கட்டிவைக்கின்றான். மூத்த பள்ளி அவ்விடத்துக்கு வருகின்றாள். தன் தலைவனைக் கட்டுண்டநிலையிற் காண்கின்றாள். பள்ளன் தன் மனையாளை ஆண்டையிடம் வேண்டித் தன் கட்டை அவிழ்த்து விடும்படி இரக்கின்றான்.

"கன்னி யாக வுனைக்கைப் பிடித்துநான்
கண்ணைப் போலக் கருதி நடந்தேன்
முன்னை வல்வினை யாலே யுனைவிட்டு
மோச மாக அவளிடம் சென்றேன்
அன்னை பின்மனை யாளென் றெவர்க்கும்
அவனியோர் சொல்லு மப்படிப் போல
என்னை நீருங்க ளாண்டைக்குச் சொல்லி
இருகை கூப்பி விடுவித்துக் கொள்ளும்"

என்று பள்ளன் இரந்து பாடுகிறான். தன்னைப் புறக்கணித்து இளைய பள்ளியோடு வதிகிறானே என்பதால் ஏற்பட்ட கோபம் மாறி அவனிடம் அன்பு படிப்படியாகத் தழைக்கின்றது. பண்ணைத் தலைவனிடம் ஓடுகின்றாள். தனது ஆண்டையை வணங்கி,

"கான வேடரைக்
கண்டுநின் றங்கே
கனகம் போல
வளர்ந்தொரு வேங்கை
தானதாய் நின்ற
தென்கதி ரைப்பதிச்
சண்மு கன்குகன்
தன்பண்ணை தன்னிற்
போன மாடுங்
கலப்பை நுகமும்
பொதுக்கில் லாமலே
நானொப்புத் தாறேன்
ஆன செந்நெற்
பயிர்செய்து தாறேன்
அடியேற் காக
விடும்பள்ள னை."

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார் செய்யுளுக்குரிய வனப்புகளிற் புலனும் ஒன்றெனப் பேசுகிறார்.

"சேரி மொழியாற்
செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது
குறித்தது தோன்றிற்
புலனென மொழிப
புலனுணர்ந் தோரே."

என்ற நூற்பாவிற் சேரிமக்கள் பேசும் வழக்குச் சொல்லினாலே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவதும் ஓரழகென்று விளக்குகின்றார். இத் தகைய அழகு கதிரைமலைப் பள்ளில் நிறைந் திருக்கக் காணலாம்.

"உப்பில்லாக் கஞ்சி
காய்ச்சச் சொன்னேனோடி
ஊரெல்லாங் கொண்டு
உலாத்தச் சொன்னேனோடி"

"இப்படிக் கொத்த
நாடகப் பள்ளனுக்(கு)
எப்படிக் கஞ்சி
காய்ச்சுவே னண்டே"

"சப்புச் சவரென்று
நினைத்தாயோ அல்லி
சாட்டு மூட்டுக்குச்
சாய்வேனோ பள்ளி"

என வருமடிகளில் பள்ளுக்குயிரான பள்ளர் பேச்சினைக் காண்கின்றோம். ஏனைய பள்ளு களிலும் இவ் வனப்பினை நாம் பரக்கக் காணலாம்.

இன்று நமக்குக் கிடைக்கும் பள்ளுக்களுட் கதிரைமலைப்பள்ளுக்கு அடுத்தபடியாகத் தோன்றியது ஞானப்பள்ளு ஆகும். இப் பள்ளு யாழ்ப்பாணத்திலே போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்திலே யாக்கப் பெற்றது. பாடியவர் பெயர் இதுவரை அறியப்பட வில்லை. இந்நூல் ஆயிரத்துத் தொளாயிரத்து நாலாம் ஆண்டில் முதன் முதலாக அச்சிற் பதிப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

"பொன்னு பரன்கொலுவும்
பூதலமு மாகிமுதற்
றன்னாலே தானாகுந் தற்பரற் —
கென்னாளுஞ்
செந்தமிழாற் பள்ளிசைத்
தேனுலகிற் பாடுதற்(கு)
அந்தமிலான் தானே யருள்".

என்ற கடவுள் வணக்கப் பாடலாற் பள்ளு என்பதே இச் சிற்றிலக்கிய வகையின் பெய ரென்பது புலனாகும். இப் பள்ளு ஏசுநாத ரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. கிறிஸ்துவப் பெருமை பேசுவது. கதிரைமலைப் பள்ளு, பறாளைப் பள்ளு என்பவற்றில் வரும் மூத்த இளைய பள்ளியர் முறையே ஈழ, பாரத நாட்டினராக இருக்க இப் பள்ளில் வரும் பள்ளியரோ செருசலை, உரோமானுபுரி நாட்டினராக இருப்பது கவனிக்கத்தக்கது.

"தேவ லோகந்
திறந்துமுன் காட்டுஞ்
செருச லைத்திரு
நாடெங்க ளுடே."

என்று செருசலைப் பள்ளியும்,

"..........................................
உண்டு நன்மையிங்
கேதானென் றோது
முரோமா னுபுரி
நாடெங்க ளுடே"

என்று உரோமானுபுரிப் பள்ளியுந் தம் நாட்டு வளங் கூறுவது காணலாம்.

இதனைத் தொடர்ந்து, ஆயிரத்து எழு நூற்றெண்பதாம் ஆண்டளவில் வாழ்ந்த கவிஞரான சின்னத்தம்பிப் புலவரால் பறாளை விநாயகர் பள்ளு இயற்றப் பெற்றது. யாழ்ப்பாணத்துள்ள சுழிபுரத்துப் பறாளை விநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது இந்நூல்.

இப்பள்ளுப் பிரபந்தத்தில் மீனின் வகை களும், மாட்டின் வகைகளும், நெல்லினங் களும், பள்ளியரின் பெயர்களும், ஆண்டை யைப் பள்ளிகள் சிறப்பித்துப் பேசும் முறை யும் படிப்போர்க்குச் சுவையூட்டுவன. "தூண்டிலிட்டார்க்குப் பாரமெல்லாம் மிதப் பிற்கண், அடாதன செய்தார் படாததெல் லாம் படுவார்கள், கண்ணிலே கரந்தீண்டி விட்டால் அந்தக் கைவிரல் தறிப்பார்களு முண்டோ, அடியாத மாடு படியாது" என்ற பழமொழிகளையும்,

"ஒறுத்த தாற்பய னென்பொறுத் தாருக்
குலக முள்ளள வும்புக ழென்றே
மறுத்த விர்ந்திடு வள்ளுவ னார்சொன்ன
மான வெள்ளைக் குறளறி யீரோ."

என்ற குறளினையும் பள்ளனும் பள்ளியுங் கூறும்போது யாழ்ப்பாண கிராம மொன்றில் அவர்களது உரையாடலைக் கேட்டுக்கொண் டிருப்பது போன்ற உணர்வேற்படுகின்றது.

பறுளைப் பள்ளைத் தொடர்ந்து ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூறில் எழுந்த மற் றோர் பள்ளுத் தண்டிகைக் கனகராயன் பள்ளு. இதனைப் பாடியவர் பரவைச் சின்னக் குட்டிப் புலவர். இந்நூலின் பாட்டுடைத் தலைவர் கனகநாயக முதலியார் ஆவார். எனினும் அவரின் சுற்றத்தார் எல்லோ ருக்கும் நூலை உரிமைப்படுத்துவதற்காக இவர்களின் முன்னோனும், கிறிஸ்துவுக்குப் பின் 13ஆம் நூற்றாண்டில் வசித்தவரு மான தண்டிகைக் கனகராயமுதலி என் பாரின் பெயரே இந்நூலுக்குப் பெய ராகச் சூட்டப்பட்டுள்ளது. கபிலர், பாரி குடும்பத்தில் அன்பு பாராட்டியது போலச் சின்னக்குட்டிப் புலவர் கனகநாயக முதலி குடும்பத்தில் அன்பு பாராட்டி வாழ்ந்தார். மழை பெய்தல், குயில் கூவுதல் என்ற பகுதிகளை இயற்கையோடு பின்னி அழகாகப் பாடியுள்ளார்.

"வெள்ளித் திரளிற் றுள்ளிக் குதித்து
வீங்கி ஓங்கித் தேங்கு நீர்
வேகத் துடனே நாகப் பொருப்பை
வெருட்டிச் சுருட்டி மருட்டியே"

என்னும் பாடலில் வெள்ளம் பாய்ந்து செல் லும் தன்மையைக் காட்டியுள்ளார். இந் நூலிற் சைவசித்தாந்தக் கருத்துக்களும் ஆங்காங்கு மிளிர்ந்து நூலுக்கு அழகு செய் கின்றன. இவற்றைவிடப் பன்றிப் பள்ளு, சாலிப்பள்ளு என்னும் பள்ளும் வன்னிநாட் டிலே வேளாண்மை செய்வோரால் இப்போ தும் பாடப்பட்டு வருகின்றது.

"மெல்ல மெல்ல நன்னி நன்னி
தின்னுங்கோ – மக்காள் மக்காள்
வெய்யில் அதிக மென்றுற்
கேளுங்கோ – மக்காள் மக்காள்
வேலிக் குப்புறத் தாலேநின்று
தூங்குங்கோ – மக்காள் மக்காள்."

என்ற பாடல் பன்றிப்பள்ளில் அமைந் துள்ளது.

பள்ளுக்களும், நாட்டுப் பாடல்களுமே கல்வி அறிவற்ற பாமர மக்களுக்குக் களிப் பூட்டுவனவாகும். எமது நாட்டின் பண் பாட்டை விளக்கும் இவ்வேடுகளை அச்சு வாகனம் ஏற்றி மக்களின் கரங்களிலும் நாவி லும் பயிலவைப்பது நமது தலையாய கடனாகும்.

---

# அடக்கமே பெண்மைப் பண்பு

பெண்கள் தம் வாழ்விலே சிறப்பாக அமைத்துக்கொள்ளவேண்டிய பெருங் குணங் கள் பலவுண்டு. அழகும் கற்பும் மாத்தி ரம் பெண்களை உயர்த்திவிட மாட்டாது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன பெண்களுக்குரிய போற்றுதற்கான பண்பு கள் எனினும் அடக்கம், தன்னம்பிக்கை, வீரம் போன்ற சிறந்த குணங்களும் பெண் களுக்கு இன்றியமையாதன. "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்று புகன்றார் வள்ளுவப் பெருந்தகை. அதுவே தேடற் கரிய செல்வமாகப் பேணப்பட வேண்டியது மாகும். அடக்கமுடையாரை நல்லார் போற் றுவர். அடங்கியிருப்போனை அறிவில்லா தவன் என்று கருதக்கூடாது. குளக்கரை யிலே கொக்கு அடங்கித் தூங்கி இருக்கிறது. சிறு மீன்களை எல்லாம் ஓடவிட்டுப் பார்த் துக்கொண்டிருக்கிறது. உறுமீன் வரும் பொழுது ஓடிப் பாய்ந்து கொத்துகிறது. இதுபோற்தான் அடக்கமுடையவர் செய லும். அவர்கள் வீணே தம் நாவையும், உடற் பலத்தையும் செலவு செய்யமாட்டார் கள். ஆனால் தக்கசமயம் வரும்பொழுது தமது அறிவையும் ஆற்றலையும் காட்டவும் தவறமாட்டார்கள்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து
மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

என்றார் வள்ளுவர்.

கலித்தொகையில் ஒரு காட்சி வருகின்றது. காட்டிலேயுள்ள மரங்களெல்லாம் தளிர்த்துப் பாரந் தாங்க மாட்டாது கொப்புகள் வளைந்து நிற்கின்றன. இதனை வர்ணிக்க வந்த புலவர்,

“ தம்புகழ் கேட்டார் போல்
தலை சாய்த்து மரம் துஞ்ச ”

என்று பாடுகிறார். சான்றோரவைக்கண் சிறந்தார் ஒருவரைப் பலர் கூடிப் பாராட்டுகின்றார்கள்; அப்பொழுது பாராட்டுப் பெற்றவர் புகழுரைகளைக் கேட்டுத் தலைசாய்த்து நிற்கிறார். இதுதான் அடக்கமுடையார் இயல்பு.

“ நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது ”

இல்வாழ்க்கை என்னும் நெறியில் இருந்து கொண்டு, அடங்கவேண்டியதற்கு அடங்கி வாழ்பவர்கள் மலையினும் மாண்பு உடையவர் என்று பாடுகிறார் வள்ளுவர்.

சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியை எடுத்துக்கொள்வோம். செல்வ வணிகன் மாநாய்கனுக்கு மகளாக அவதரித்து, அழகுச் செம்மல் கோவலனுக்கு மனைவியாக வாய்க்கப்பெற்றவள். செல்வவளமும், கலைவளமும் வாய்க்கப்பெற்றவனானபடியால் கோவலன், கணிகையர் குல மாதவியின் உறவுக்கு ஆளானான். அவளுமோ குலத்திற்கேற்ற கொள்கையை வெறுத்து, பெண்மைக் கேற்ற பண்பினை மிகுதியாக உடையவள். இந்த நிலையில் கண்ணகி அடங்குகின்றாள்; ஆறுகின்றாள். தன் கணவன் மாற்றாள் வசப்பட்டான் என்பது அவள் மனதை உறுத்தாமல் இருக்க முடியாது. ஆனால் பெற்றவர்க்கும், உற்றவர்க்கும், மற்றவர்க்கும் அவள் தனது கவலையைக் காட்டிக்கொள்ளவேயில்லை. ஆறிய கற்புடனும், அடங்கிய சாயலுடனும் மௌனமாக வீட்டிலிருந்தாள். தன்னுடைய இன்பப் பொழுதை இழந்துவிட்டதாக அவள் எண்ணவில்லை. ஆனால் இல்லறத்தாளுக்குரிய அன்புக் கடமைகளைக் கணவன் வீட்டில் இன்மையால் செய்யத் தவறுவதாகவே மனம் உருகினாள்.

ஒருநாள் மாலைநேரத்தில் மாதவியுடன் ஊடலுற்று, மனமுடைந்து கண்ணகியின் முன்னிலையில் வந்துநிற்கிறான் கோவலன். ஆ! கெட்டேன். மாயவாழ்க்கை நடத்தும் கபடி ஒருத்தியோடு ஒன்றுகூடி என் குடும்பப் பொருள்களனைத்தையும் இழந்துவிட்டேன் என்று புலம்பினான். அந்த இடத்தில் கண்ணகியின் அடக்கம் போற்றுதற்குரியது. எதுவித சலனமும் இன்றி, கவலை யடையற்க. எனது காற்சிலம்பு இருக்கின்றது. விற்றுப் பணம், பொருள் தேடலாம் என்கிறாள் களங்கமற்ற கண்ணகி. இதுவன்றோ மகளிர் அடங்கி நிற்கும் இடம்!

சிறையிலிருந்த செல்வி எனப் போற்றப்படும் சீதா பிராட்டி அசோக வனத்திலே இராவணனால் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். சீதையைத் தேடி அனுமன் வருகின்றான். வந்தவனின் நோக்கம் நிறைவேறுகின்றது. அவன் சீதையைக் காண்கிறான். இராமபிரான் கொடுத்த அடையாளத்தைக் காண்பித்து ஆறுதல் கூறுகின்றான். இறுதியில் தனது முதுகின்மேல் ஏறிக்கொள்ளும்படி வேண்டுகின்றான். மறுக்கிறாள் சீதை. ஏன்? அங்கே அடக்கம் தான் முன்னிற்கிறது. பொறுமையுடன் சொல்கிறாள்:

ஒருவரும் இல்லாத இடத்திலே நாய் சோற்றுப் பானையைக் காவிக்கொண்டு போனது போல் நீயும் வேறு எவருமில்லாத இடத்தில் என்னைக் காவி மறைத்துக்கொண்டு போக நினைக்கிறாய். இது உண்மையான வீரர்களின் செயலன்று. கோழைகள் மேற்கொள்ளும் இத்தகைய செயல்களுக்கு இடம் கொடுப்பது இகழ்ச்சியாகும். ஆகவே பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறி தன்னடக்கத்தையும் வெளிப்படுத்துகிறாள். ‘‘சொல்லினால் சுடுவேன். அது தூயவன் வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்’’ என்பது கம்பராமாயணம். இராமனுடைய வில்லினாலே இராவணனைக் கொல்ல வேண்டும் என்ற நியதியை மாற்ற சீதாபிராட்டிக்கு மனம் இசையவில்லை. எனவே பொறுத்து இருந்து பார்ப்பதற்கு எண்ணுகிறாள். இராவணனைக் கொல்ல ஒரு சொல் போதுமானதென்பது பிராட்டியின் நம்பிக்கை. ஆனாலும் இராமனுடைய வில்லுக்கு உரிய இடத்தைக் கொடுப்பதே தன் கடமை என்பதையும் அவள் மறக்கவில்லை. ஆகவே பிராட்டியின் அடக்கத்தை இத்தகைய இடங்களில் காணும்

போது பெண்மைப் பண்பு மிளிருவதையே உணர முடிகிறது.

தமயந்தியை நளமகாராசன் காட்டிலே விட்டுச் சென்றபோதும் அடக்கமாகத் தன் தந்தையின் அரண்மனைக்குச் சென்று, தனது புத்திசாதுரியத்தால் வெற்றியடைந்தாள்.

காரைக்கால் பதியில் அவதரித்த காரைக் காலம்மையாரும் தன் கணவனுன பரமதத் தன் தன்னைப் பிரிந்து சென்று, வேறு விவாகம் செய்து, பலகாலம் வீட்டுக்கு வராதிருந்த போதும் அயலார் அறியாமல் அடக்கத்துடன் வீட்டிலிருந்தாள்.

அடக்கங்களுள் மிக முக்கியமானது நாவடக்கம். இவ்வடக்கமானது குறிப்பாகப் பெண்களுக்கு அவசியமானதாகும். நாவினுற் சுட்ட வடுவுக்கு மருந்தில்லை. இதனையொட்டியே வள்ளுவரும்

''தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறும் ஆறுதே
நாவினுற் சுட்ட வடு.''

எனக் குறிப்பிட்டுள்ளார்.

கைகேயி தன் நாவினுல் உரைத்த உரை தசரதனைக் கொன்றது. அதனுல் அவள் மூவுலகும் பழிப்பதற்கு இடமானுள். தீர ஆலோசித்த பின்னரேயே நாவை உபயோகிக்க வேண்டும் என்பதன் உண்மையினை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணருகின்ருேம். தீர ஆலோசனை நடாத்தியபின் நாவை உபயோகிக்காது, மனதின் கண் எழுந்தவற்றையெல்லாம் பேசிவிட்டுப் பின்பு யோசித்துப் பயன் இல்லை.

'' யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''.

இதுவும் அடக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் உரைக்கும் வாசகங்களில் ஒன்று. இதினின்றும் அடக்கத்தினின்றும் வழுவுவதனுல் ஏற்படும் தீமையினைத் தெளிவாக விளக்குகின்ருர் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

பெரிய புராணத்துப் பெண்களை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் தாம் அடங்கி நின்று வேண்டிய பணிகள் அனைத்தையும் செய்து தமது கணவன்மாருக்கு முதன்மை கொடுத்து அவர்களின் பெருமையை விளங்க வைத்த பெருமையைக் காண்கிருேம். இதனுல்தான் மனைஅறத்தின் வேரனையர் என்று சேக்கிழார் போற்றுவர். வேரானது மண்ணுள் மறைந்து மரத்தை முழுவதாகத் தாங்கி நிற்பது போலப் பெண்களும் தமது பெருமையையும் புலமையையும் அடக்கிக் கொண்டு பாராட்டுக்குரிய பெரும் பணிகளை ஆற்றி வீட்டையும் நாட்டையும் பேணுவது இலக்கியங்களிலும் புராணங்களிலும் காட்டப்பட்ட சிறப்பாகும்.

இவ்வாறு அடக்கம் என்ற பண்பினுல் பெருமை பெற வேண்டியவர்கள் பெண்கள் என்பதைச் சங்க இலக்கியங்களும் புராணங்களும் சிறப்பாகக் காட்டுவதை அனைவரும் பின்பற்றி ஒழுக வேண்டும்.

*

'' சமூகத்தில் அமைதியும், ஒழுங்கும் நிலவ வேண்டுமானுல் மக்களிடையே இறை நம்பிக்கை ஸ்திரமாகப் பதியவேண்டும். வேடதாரிகளாக இல்லாமல் உண்மையான ஆசார சீலர்களாக நாம் ஒழுகினுல் நாட்டில் அமைதி நிரந்தரமாக நிலவ முடியும்.''

* * *

'' பள்ளிக்கூடங்களிற் சமயக்கல்வி அளிக்கப்படுகிறது. அது பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்கு மட்டுமேயன்றி, சமயப் பண்பு வாழ்க்கையில் உளம் பெறுவதற்குப் பயன்படவில்லை. தாய்மார்கள் வீட்டிற் சமய வாழ்வு வாழ்ந்து பிள்ளைகளுக்கு அப்பண்பை ஊட்ட வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் நல்வாழ்வு வாழவும், சைவம் தழைத்து ஓங்கவும் முடியும்.''

# கம்பன் கவிநயம்

அதர்மம் மேலோங்கித் தர்மம் அருகிக் கொண்டு போகும் இந்த நாட்களிலே, தர்ம நெறியை நிலைநாட்டுவான் பொருட்டு எழுந்த இராமாயண ஆசிரியன் கம்பனுக்கு விழா எடுத்தல் போற்றப்படத்தக்கதே. ''வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மை யால்'' என்றும் ''அறத்துக் கேடுண்டோ ?'' என்றும் ஆங்காங்கு அறத்துக்கு முக்கியத் துவம் அளித்துக் கம்பன் பாடியுள்ளான். எனவே இந்த விழா கம்பன் விழாவல்ல; நமது சமூகத்தின் அறநெறியைக் காட்டு கின்ற அறவிழா; தர்மவிழா; சமூகவிழா என்று நாம் கருதவேண்டும். அறமே வெல் லும் என்பதை இராமன் மூலமும், அறத்தை மறந்தாற் கேடு என்பதை இராவணன் மூல மும், பெண்ணறம் பெருமையுடையது என்ப தைச் சீதையின் மூலமும், சகோதர பாசத் தைக் கும்பகர்ணன் மூலமும், தூதின் மகத் துவத்தை அனுமன் மூலமும், நட்பின் தன்மையைக் குகன் மூலமும் கம்பன் காட் டிச் செல்வது வளர்ந்துவரும் சமுதாயத்துக் குச் சிறந்ததோர் படிப்பினையாகும்.

எண்ணத்தையும் சிந்தனையையும் ஒழுங்கு படுத்தி, அவற்றைச் சுவையூட்டத்தக்க வகை யில் சொல்லுவதுதான் இலக்கிய மரபு. சமுதாயத்தின் கருத்துப் புரட்சியை ஏற்படுத் திச் சிந்தையைத் தூண்டிவிடுவதுதான் இலக் கியத்தின் விழுமிய பயன். வெறும் புலமை யும், பக்தியும், கவிதை படைக்கும் தன்மை யும் இருந்துவிட்டால் மாத்திரம் இலக்கியம் தோன்றிவிட முடியாது. மற்றும், இலக்கிய கர்த்தா, தான் வாழ்ந்த காலச் சமுதாயத் தின் நடைமுறைகளை ஆழமாகப் புரிந்து கொண்டு, அவற்றை நிறைவுபடுத்தும் முக மாகப் பயன்படுத்தும் சாதனமாக இலக் கியத்தை அமைக்க வேண்டும். அப்படியான நிறைவான இலக்கியங்களையே எக்காலமும் வரவேற்கும். அப்படியானதொரு இலக் கியந்தான் இராமாயணம் என்பதற்கு ஐய மில்லை.

இங்கே, 'கம்பன் கண்ட கவிநயம்' என்ற விடயம் பற்றிப் பேசவேண்டியிருக் கிறது. ''கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்'' எனச் சாதாரணமாகவே கூறு வர். முதலில் 'கவி' என்றால் என்ன என் பதை அறிய வேண்டும். கருத்தைக் கவித் திருப்பதுதான் கவி. வெறும் சொல்லும் பொருளும் சேர்ந்தது கவியன்று. கவிஞ னுடைய மனக்கருத்தை அச் சொல்லிலும் பொருளினூடே அமைத்து விளக்குவது தான் கவி. கம்பனே கவியை விளக்கி,

''புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்''

சான்றோர் கவிக்கு விளக்கம் கூறிய கம் பன், தனது கவிகளையும் இத்தன்மை உடை யனவாகவே ஆக்கியமைத்துள்ளார். கவிஞன் தான் எடுத்துக்கொண்ட பொருளினை விளக்கு வதன்மூலம் தன்னையே விளக்குகின்றான் என்பது அறிஞர்கள் கருத்து.

முதலில் கம்பன் செய்த சில கருத்துப் புரட்சிகளைக் கவனிப்போம்.

தமிழ்ச் சமுதாயத்தில் கம்பன் காலம் வரை அரசனே சமுதாய வாழ்வின் உயிர். ''மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்'' என் பது புறநானூறு கூறும் கூற்றாகும். ஆனால், கம்பன் ''உயிரெலாம் உறையும் ஓர் உடம் பும் ஆயினன்'' என்று தசரத மன்னனை வருணிக்கின்றான். மக்களை உயிராகவும், மன்னனை உடம்பாகவும் ஆக்கித் தெள்ளத் தெளிவான கருத்துப் புரட்சி செய்கிறான். ''வையம் மன்னுயிராக அம் மன்னுயிர்..........'' இது வசிட்டன் கூற்று.

அதுவுமன்றி இன்றைய ஜனநாயகக் கருத்தை, ''உழுங்குலத்தில் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே'' என்று ஏரெழுப தில் பாடியுள்ளான்.

இன்னும் தசரதன் வாக்காகக் கைகேயி சொல்லியபோது இராமனின் நிலை,

"அன்றலர்ந்த செந்தாமரையினை வென்ற
தம்மா"

அதுமாத்திரமல்ல,

"மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ."

இன்னும், இராமன் காட்டுக்குப் புறப்பட்டான் என்ற செய்தி அறிந்ததும் வெகுண்டெழுந்த அயோத்தி மக்கள்,

"புற்றுடைய நாடெல்லாம் காடாகிப் போம்"

என்று வீரம் பேசினர் என்று கம்பன் பாடி, ஜனசக்தியால் உலகை ஆக்கவும், அழிக்கவும் முடியுமென்பதில் தனக்குள்ள அழுத்தமான நம்பிக்கையை உலகறியச் செய்கிறான்.

"எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும்
எய்தலாமே
இல்லாரு மில்லை உடையாருமில்லை மாதோ".

என்று கூறும் கருத்து புரட்சிக் கருத்து. இதனை யாரும் மறுக்கமுடியாது.

சமுதாயத்தில் இருக்கவேண்டிய சில அடிப்படைப் பண்பாட்டைக் காட்டுகின்றான்.

"கள்வா ரிலாமைப் பொருள்
காவலும் இல்லை யாரும்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களும்
இல்லை மன்னோ!"

எவ்வளவு அழகான கருத்து. அடுத்து, 'வண்மையில்லையோர் வறுமை இன்மையால்' இப்படியும் ஓர் நாடு இருந்ததா? என்று நீங்கள் கேட்கலாம். நாடு இருந்ததோ, இல்லையோ பரவாயில்லை. அப்படியான ஒரு நாடு வேண்டுமென்று கம்பன் விரும்பினானே; அந்தக் கருத்தைத்தான் நாம் போற்ற வேண்டும். அது மாத்திரமல்ல; மக்கள் தத்தமக்குரிய நெறியிலிருந்து நீங்கக்கூடாது. குறிக்கோளிலேயிருந்து நழுவக்கூடாது. இது கம்பனுடைய விருப்பம். கோசல நாட்டிலே நெறிகடந்து சென்றது வெள்ளம். குறி அழிந்து நின்றது தோள்கள் என்கிறான்.

"நெறி கடந்து பரந்தன நீத்தமே
குறி யழிந்தன குங்குமத் தோள்களே."

அடுத்து, பெண்களின் சார்பிலே கம்பன் காட்டிய சில நல்ல கருத்துக்களைக் கவனிப்போம்.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என வள்ளுவப் பெருந்தகை பெண்ணுக்கு இலக்கணம் வகுத்தார். அந்த இலக்கணத்துக்குரிய இலட்சியப் பெண்ணாகச் சீதை விளங்குகிறாள். இராவணன் சீதையின் உடலைத் தொட்டுத் தூக்கிச் சென்றதாக வான்மீகியின் இராமகாதை பேசும். கம்பனோ சீதையின் கற்புக்கு இழுக்கு வந்துவிடக் கூடாதே என்று கருதி, பர்ண சாலையோடு பெயர்த்துச் சென்றதாக மாற்றியிருக்கிறான்.

இராவணன் சீதையை அசோக வனத்தில் சிறைவைத்திருக்கிறான். அவனுடைய சீரும், செல்வாக்கும் அளவுகடந்தது. ஆனால் இராவணனின் எந்தச் சர்வாதிகார ஆட்சியும் அவளைத் தொட முடியவில்லை. "அருமையே அருமையே ஆரிதாற்றுவார்" என்று கூறுகிறான் அனுமன். ஆக்கத்துக்கு வழி பெண்களே; அழிவுக்கும் அவர்களே! சூர்ப்பனகை அழித்தாள். சீதை ஆக்கினாள்.

"நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

"உன்குலம் உன்னதாக்கி" என அனுமன் கூற்று அமைகிறது.

"இந்திரன் சசியைப் பெற்றான்" என்னும் பாடலின் நயத்தை ஆராயின் "அந்தரம் பார்க்கின்ற நன்மை அவர்க்கில்லை உனக்கே ஐயா" என்றறியலாம்:

சூர்ப்பனகையின் பேச்சில் கம்பன் ஒரு கருத்தை மறைத்து வைத்திருக்கிறான். இராவணன் சீதையால் அழிவான் என்ற குறிப்பு அங்கே தொனிக்கிறது. அனுமன் கடல் கடந்து இலங்கை வந்தான் என்பதைக் கம்பன் எவ்வாறு காட்டுகின்றான் என்பதைப் பாருங்கள்.

"புறத்துறல் அஞ்சி வேறோர்
ஆணைம்புக் குறைதல் போக்கி
மறத்தொழில் அரக்கர் வாழும்
மாநகர் மனுவின் வந்த

திறத்தகை பிராம னென்னும்
சேவகற் பற்றிச் செல்லும்
அறத்தகை யரசன் திண்பே
ராழியு மனைய ஞனன்.''

தருமதேவதை, இராவணனின் நாட்டை விட்டு விலகித் தனக்குத் தஞ்சமாகத் தக்கவர்கள் யாரென்று ஒவ்வொருவராக நாடினுள். யாவரும் இராவணனுக்கு அஞ்சுபவர்களாகவே காணப்பட்டார்கள். எனவே தர்மதேவதை இராமனை அடைந்து அவனைத் துணையாகக்கொண்டு, இலங்கையிலும் தனது ஆக்ஞா சக்கரத்தைச் செலுத்த வேண்டும் என்று வேண்டியபொழுது, அதனை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக ஆஞ்சநேயர் இலங்கைக்குச் சென்ருர். அவர் சென்றதே தர்மச் செயல். இலங்கையில் தோன்றுவதற்குத் தொடக்கச் செயலாக அமைந்தது. அறம்புகா மதில்களோடு விளங்கிய இராவணனின் நாடு ஆட்டம் காணத் தொடங்கியது. இராமபிரானின் ஆக்ஞா சக்கரமே தர்மதேவதையாகச் சென்றது என்று குறிப்பிடுகிருர் கம்பர். ஏன்? இராமனே அறத்தை நாட்டுபவன்.

''அரக்கர் கண்ணுறுவரா மென்றெழித்துப் பின்செல்லும் காலபாசத்தை ஒத்ததன்றே.'' என்பதால் இவ்வளவு காலமும் அரக்கருக்குப் பயந்து இயமன் கூட அங்கே தலைகாட்டுவதில்லை. ஆனால் இப்போது தரும ஆழிக்குப் பின்னல் இயமன் தன் காலபாசத்தை ஒழித்து அனுப்பினுன். எனவே அந்த வால் இலங்கையை எரியூட்டி அழிக்கப்போகிறதல்லவா?

இப்படியாகக் கம்பன் கவிகள் உயர்ந்த உட்பொருளை அடக்கியவை. உள்ளுக்கு அமைந்த கருத்து உயர்ந்த கருத்துள்ளதாயிருத்தலே சிறப்பாகும். [இரும்புப்பெட்டிக்குள் தங்கம்]. தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் உயர்ந்த மதிப்புக்கொடுத்தவன் கம்பன். தமிழ்ப்பண்பாடு இது என்பதை எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் காட்டிவைத்தவன் கம்பன். அத்தகைய கம்பனை நாம் விழா எடுத்துப் போற்றுதல் வரவேற்கத்தக்கதே.

[1963இல் மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் பேசப்பட்டது].

---

# புகழ்பரப்பும் தங்கம்மா அப்பாக்குட்டி

இலங்கை இந்திய உறவில் புது மாறுதல் ஏற்படத் தொடங்கியிருக்கும் காலம் இது. இந்நாள் வரை அறிஞர்களும், கலைஞர்களும் இங்கே வந்து திறமையைக் காட்டிப் புகழ்மாலை சூடிச் சென்றனர். ஆனல் இன்றே ஈழத்தவர்கள் தமிழ் நாட்டில் புகழ்மாலை சூடிவரத் தொடங்கியுள்ள மறுமலர்ச்சிக்காலம் ஆரம்பமாகிவிட்டது.

சைவத்தையும் தமிழ் மொழியையும் இன்று நாம் இவ்வளவு தூரம் மதிப்பதற்கும் பெருமை கொள்வதற்கும் காரணமாக இருந்தவர் நாவலர் பெருமான். அவரை திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் வழங்கிக் கௌரவித்த பின்புதான் அவரது பெருமை பாரெல்லாம் பரவியது. அது போல நாடறிந்த நற்றமிழ்ப் பெண்மணி, சொல்லின் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியையும் அதே ஆதீனம் கௌரவப்படுத்தியுள்ளது. ஆதீனம் நடத்திய திருமுறை விழாவுக்கு விசேஷ அழைப்பிற் சென்றது மன்றி மகளிர் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியும் பெருமை பெற்றுர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. அவரை நாவலர் என்று சொல்வதில் தவறு இல்லை.

அவர் மகாநாட்டிற் பங்கு கொண்டது பற்றியும் அங்கு தமக்குக் கிடைத்த அனுபவம் பற்றியும் சொல்லுகிருர் இங்கே.

தமிழக அறிஞர்கள் இலங்கைக்கு வந்து சொற்பெருக்காற்றிய போது அவர்களுடன் ஒரே மேடையில் உரையாற்றப் பல சந்தர்ப்பங்களில் வாய்ப்புக் கிடைத்தது. மெய்கண்டார் ஆதீன முதல்வர் ஆகியோர் தலைமையில் திருவாசக விழாவிலும், சேக்கிழார் விழாவிலும் உரையாற்றியுள்ளேன். இப்

பெருமக்கள் திருவாவடுதுறை ஆதீன முதல்வருக்கு என்னைப்பற்றிய அறிமுகத்தைச் செய்து வைத்திருக்கின்றனர் போலும். அதனுல் இவ்வருடம் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு அடியேன் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை திருவாவடுதுறை ஆதீனம் அளித்து பிரயாணச் செலவுகள், மற்றும் இதர செலவுகள் என்பவற்றையும் வழங்கி என்னைக் கௌரவித்தது.

ஈழத்து அறிஞர்கள் தமது பேச்சு வழக்கிலேயே மேடைப் பேச்சை நிகழ்த்துவதால் அவை தமக்குப் புரியக் கூடியதாக அமையவில்லை என்றும், ஒரு சிலர் மாத்திரம் செந்தமிழ் எழுத்து நடையிலே புரியக்கூடியதாக மேடைப் பேச்சை ஆற்றுகின்றனர் என்றும் எடுத்துக் கூறினர். அத்துடன் ஈழநாட்டவர்களுக்கு திருமுறைகளில் ஈடுபாடு அதிகம் என்பதையும் புராண படனங்கள் ஈழநாட்டைப்போல தமிழகத்தில் நடைபெறுவதில்லை என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

தமிழகத்தைப் பொறுத்தளவில் ஆதீனங்களுக்கும், அரசியலாருக்கும் இடையில் நீண்டதொரு இடைவெளி தோன்றுகிறது. சமய கலாச்சாரத்தைப் பேணுவதும், ஆலய திருப்பணிகளை ஆற்றுவதும், திருமுறை ஆய்வுகளை நடத்துவதும், நூல்களை வெளியிடுவதும் ஆதீனங்களின் பெரும்பணியாக உள்ளது. ஆதீனச் சூழலிலே மாத்திரம் சமய வளர்ச்சிகளைப் பிரதிபலிக்கின்ற காட்சிகள் தென்படுகின்றன. தமிழகத்தில் சென்னை, சேலம், மதுரை, சிதம்பரம், திருச்சி, கும்பகோணம் ஆகிய இடங்களில் வதிகின்ற பல சமயப் பேரறிஞர்களும், பக்தர்களும் இக் கருத்தரங்க விழாவில் பங்கு கொண்டனர். ஏறக்குறைய 2500 பேர் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பிரசன்னமாய் இருந்தனரென்று கூறலாம். பொதுவாக நோக்கினல் இளைஞர்கள் தொகை குறைவு. இன்னும் ஆண்கள் 75%மும், பெண்கள் 25%மும் பங்கு கொண்டனரென்று கூறலாம்.

தமிழகத்து ஆதீனங்கட்கும், ஈழச் சைவ ஸ்தாபனங்களுக்கும் இடையில் ஒரு தொடர்பு உண்டாக்கப்படல் வேண்டும். ஈழநாட்டு இசைவல்லார்களை ஆதீனங்களுக்கு அனுப்பி ஓதுவார் ஆக்கப் பயிற்சியை ஏற்படுத்த வேண்டும். ஈழத்துச் சிறந்த அறிஞர்களின் படைப்புகளாகிய நூல்களை ஆதீனங்களுக்குக் கையளித்து வெளியிடச் செய்ய வேண்டும். ஆதீன வித்துவான்களிடம் ஈழநாட்டு அறிஞர்கள் சென்று சைவசித்தாந்தப் பயிற்சிகளைப் பெற்றுவர வேண்டும். ஞானசம்பந்தம், திருக்கோயில், சைவசித்தாந்தம் போன்ற சமயப் பத்திரிகைகளுக்கு ஈழத்து அறிஞர்கள் விஷயதானம் செய்யவேண்டும்.

மூன்று வகையான அனுபவம் எனக்குக் கிடைத்தது. இளந்தமிழ் மன்றத்திலே இராமாயண விழாவிலே உரையாற்றிய போது இளைஞர்களின் எழுச்சியையும், இலக்கிய ஆர்வத்தையும் காண முடிந்தது. சக்தி மன்றத்திலே உரையாற்றிய போது பெண்களின் சமயப்பணியை அறியக்கூடியதாயிருந்தது. திருவிடை மருதூரிலே திருமுறைக் கருத்தரங்கிலே பங்கு கொண்டபோது திருவாளர்கள் சா. கணேசன், அ. ச. ஞானசம்பந்தன், கி. வா. ஜகந்நாதன், வச்சிரவேலு முதலியார், அழகரடிகள், மு. அருணசலம், சேலம் சகோதரிகள் என்பவர்களோடு கலந்துரையாடி திருமுறையின் நுட்பங்களை அறிய முடிந்தது. பஸ்பிரயாணம் செய்த பொழுது சுவர்களிலும், மதகுகளிலும் எழுதப்பட்டிருந்த சுலோகங்கள் மூலம் ஆரிய எதிர்ப்பை அறியக்கூடியதாக இருந்தது. எமது நாட்டிலும் பார்க்க சினிமா ரசிகர்கள் அங்கு அதிகமாக இருக்கிருர்கள் என்பதையும் கவனிக்க முடிந்தது. செப்டம்பர் மாதம் செய்த பிரயாணத்தில் திருநள்ளாறுத் தரிசனம், புரட்டாதிச் சனி வாரத்தில் கிடைத்தது. கலிநீங்கிய அந்த இடத்தில் பெருங் கூட்டத்தின் மத்தியில் இடிபட்டே தரிசனம் பெற்றேன். ஒக்டோபர் மாதம் செய்த பிரயாணத்தில் கந்தசஷ்டி விரத ஆரம்பதினத்தில் வயலூர் முருகனைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ''முத்தைத் தரு பத்தித் திருநகை'' என்ற முதற்பாடல் இங்கேயே அருணகிரிநாதரால் பாடப்பட்டது என்பதை அறியும் போது அத்தரிசனம் எனக்குக் கிடைத்தற்கரியது என்ற கருத்து உண்டானது.

அருளாசிரியர்களின் வாழ்க்கையைச் சைவ மக்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே இத்தகைய கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. பல்வேறு திக்குகளில் வாழுகின்ற தமிழறிஞர்களை ஒரு மூன்று நாட்களுக்காவது ஒன்று கூட்டுவதும், ஆதீனங்களின் பெருமையை அறிய வைப்பதும் மற்றொரு நோக்கமாகும். ஆதீனங்களுக்கும், அரசாங்கத்துக்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்தவும், ஆதீனங்களின் நிதியை இத்தகைய நல்வழியில் செலவு செய்யவும் இது ஒரு சந்தர்ப்பமாகிறது. மூன்று நாட்களும் 1500மக்களுக்கு மேற்பட்டோர் இலவச போசனம் பெற்றனர். இந்த வகையில் சமய சமுதாய நலனைப் பேணுவதற்காக இம் மகாநாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஆர். எஸ். சர்மா
(தினகரனில்)

# சக்தி சங்கத்தின் சேவை என்னைக் கவர்ந்தது

தமிழகத்தில் மாதர்கள் மன்றங்கள் அமைத்துச் சிறப்பாகச் சமயப் பணியும், சமூக சேவையும் ஆற்றி வருகின்றனர். திருச்சியில் 'சக்தி சங்கம்' செய்துவரும் பணிகள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பெரிதும் கவர்ந்த தென தமிழகம் சென்று திரும்பியபோது கூறினூர். திருவாவடுதுறை ஆதீன அழைப் பின் பேரில் திருவிடைமருதூர் மகாலிங்க தேவஸ்தான திருமுறை விழாவிற் கலந்து உரையாற்றுவதற்காக இவர் தமிழகம் சென் றிருந்தார்.

நான்கு தினங்கள் மட்டுமே தங்கியிருந்த தாம் மேற்படி தேவஸ்தானத்தில் நடை பெற்ற இராமாயண விழாவிலும் கலந்து கொண்டதுடன் பட்டாபிஷேக விழாவில் பூர்த்தி உரையாற்றும் வாய்ப்பும் கிடைத்த தாயும், அதைத் தாம் மிகப் பெருமையுடன் ஏற்றுக்கொண்டதாயும் தெரிவித்தார்.

தில்லைநகரில் 'மகளிர் வளர்த்த சமயம்' என்னும் பொருள்பற்றி உரையாற்றிய போது, சக்தி மன்றத்தின் சார்பில் திருமதி நடராசன் இவருக்குப் பொன்னுடை போர்த் திக் கௌரவித்தார்.

தருமபுர ஆதீனம் இவரை அழைத்துப் பண முடிப்பும், புத்தகப் பரிசுகளும் வழங் கின. திருவாவடுதுறை ஆதீனம் மேற்படி ஆதீன வெளியீடுகள் பலவற்றைப் பரிசாகக் கொடுத்தது.

தமிழக விஜயத்தின்போது, புரட்டாதிச் சனியன்று பாரத நாட்டின் ஒரேயொரு சனீஸ்வரன் ஆலயமான திருநல்லாறு சனீஸ் வரன் ஆலயத்துக்குச் சென்று வழிபடக் கிடைத்தது பெரும் பேருகத் தாம் கருதுவ தாகக் கூறினூர்.

வீட்டு வேலைகள் செய்வதற்கு வேலை யாட்கள் அமர்த்துவதை நிறுத்தித் தாமே தமது வேலைகளைச் செய்து வரவேண்டுமென் பதை அந்த மன்றம் வற்புறுத்துவதுடன் விசேட காலங்களில் தேவை நோக்கி உறுப் பினர் இல்லங்களுக்குச் சென்று சரீர உதவி முதலானவற்றைச் சேர்ந்து செய்து உதவி வருவதும் நடைமுறையில் கொண்டுள்ளன.

மேலும் சமய விழாக்களைச் சிக்கனமாக வும் சிறப்பாகவும் பக்திபூர்வமாகச் செய்வ துடன் கூட்டு வழிபாடு, பஜனை ஆகியவை களில் சேர்ந்து தொழிற்படுவதும் பாராட்டு தற்குரியன.

இலங்கையிலும் இத்தகைய மன்றங்கள் அமைக்கப்பட்டு சிந்தையில் தெளிவையும், சிக்கனத்தையும் ஏற்படுத்துவதுடன் சேர்ந்து செயற்படவும் வழிகாட்ட வேண்டுமென விரும்புவதாயும் கூறினூர்.

— வீரகேசரி நிருபர்


*

"நாவலர் தமிழையும், சைவத்தையும் பாதுகாக்க முழுமூச்சாகப் போராடினூர். ஆனல் அவர் பிறர் மதத்தை வெறுத்தவரல்லர். ஆனல் பிறமதங்களின் அடக்கு முறையையும், சமயத் திணிப்பு முறையையும் அவர் எதிர்த்தார்."

* * *

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்".

## தேவஸ்தான பரிபாலன சபை — 1982



இடமிருந்து வலம் – மேல்: திரு. ந. செல்வநாயகம், திரு. மு. அருளையா, திரு. வே. சின்னத்துரை, திரு. இ. முருகையா, திரு. ச. ஆறுமுகநாதன், திரு. நா. திருநாவுக்கரசு, திரு. சி. விஸ்வநாதன், திரு. நா. தவநாதன், திரு. பொ. செல்லப்பா, திரு. இ. இலட்சுமிநாதன்.

கீழ்: திரு. அ. சண்முகநாதன், திரு சு. சிவவாகீசர், திரு. க. தணிகாசலம், திரு. நம. சிவப்பிரகாசம், துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. த. பொன்னம்பலம், திரு. அ. க. கணேசரத்தினம், திருமதி. சிவா. பொன்னுத்துரை.



1983இல் மகா சண்டிஹோமம் நடைபெற்றபோது
பூரணாகுதி நிகழ்ச்சி.

## பகுதி II

# 1. வாழ்த்து மடல்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

செஞ்சொற் செம்மணி, சைவப் புலவர், பண்டிதை

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு

காரைநகர் மணிவாசகர் சபை

'சிவத்தமிழ்ச் செல்வி' என்னும் பட்டம் நல்கிய ஞான்று

அன்னாரைப் பாராட்டிப் பாடப்பெற்ற

# மங்கல வாழ்த்துப் பாக்கள்

### ஆசிரிய விருத்தம்

உவப்புடன் உலகோ ரெல்லாம் உளமகிழ்ந் தினிது வாழ்த்த
தவப்பயன் தலேசேர் நங்கை தங்கம்மா இற்றை நாளில்
சிவத்தமிழ்ச் செல்வி யென்னுஞ் சீரியல் பட்டம் சூடல்
நிவப்புறு மலேமேற் றீப நிறைசுடர் நிகர்க்கு மாலோ.

ஆண்டுபன் னிரண்டு மிங்கே யரியபே ருரைகள் நன்கு
காண்டகு சிறப்பிற் காரை நகர்மணி வாச கற்காய்
ஈண்டிய சபையி லாற்று மிவ்வம்மை தனக்கிந் நாளில்
பூண்டிட இந்தப் பட்டம் பொருந்தநாம் நல்கு வோமே;

பண்டித ருடனே மாண்பு பயில்சைவப் புலவர் மற்றும்
திண்டிறல் வாக்காற் செஞ்சொற் செம்மணி யெனவும் சீரார்
தண்டமிழ்க் குருவே என்றும் தரணியோர் புகழ்ந்து போற்றக்
கொண்டிடு பட்டஞ் சூடுங் குலமகள் குலவி வாழி.

சரதமும் நாவால் ஓதல் சங்கரன் சீரே யாக
விரதமார் பூசை மற்றும் வேண்டுபல் அனுட்டா னங்கள்
உரமியல் உளத்தால் ஏற்றிங் கோங்குமிவ் வம்மை நாளும்
வரதனின் அருளால் என்றும் மாண்பெலாம் மலர வாழி.

மலர்ந்திடு காஞ்சி தொண்டை மண்டலா தீனம் என்னும்
நலந்திகழ் அருள்சேர் சாமி ஞானப்ர காசன் மற்றும்
துலங்கிடு மதுரை சோம சுந்தர னிவர்கள் சூடும்
வலந்திகழ் பாராட் டெல்லாம் மருவுமிவ் வம்மை வாழி.

இருநிதி எனுஞ்சீர் மேவும் இலக்கண இலக்கி யங்கள்
கருவிடைத் திருவே யாகிக் கலந்திட உதித்துக் கல்வி
தருதொழிற் றொண்டு பூண்ட தங்கம்மா அப்பாக் குட்டி
திருவருள் சிவனுர் நல்கச் செகமிசைச் சிறந்து வாழி.

வாழிய ஈழம் செல்வம் மன்னுயாழ் நகரும் வாழ்க
வாழிய நாளும் காரை வளநகர் மலர்ந்து நீடு
வாழிஇச் சபையு மென்றும் வண்டமிழ் சைவம் வாழி
வாழிய மங்கை சீரார் தங்கம்மா மகிழ்ந்து நன்கே.

*காரைநகர்* **மணிவாசகர் சபையினர்**
*19-8-1970*

உ

சிவமயம்

பண்டிதை, சைவப்புலவர், சிவத்தமிழ்ச் செல்வி
சித்தாந்த ஞானகரம், செஞ்சொற் செம்மணி

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

மலேசியா நாட்டில்
சைவநெறிச் சொற்பொழிவுகள் ஆற்றி
எமக்கும் எம்நாட்டுக்கும் புகழ்நாட்டி மீண்ட ஞான்று எடுத்த
பாராட்டு விழாவில் வழங்கிய

# புகழ்ப் பனுவற் பாமலர்

### பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா

கங்கைபயில் சடிலமுடிக் கடவுளது திருநெறியும்
துங்கமிகு பசுந்தமிழின் சுவையமுதும் புவிக்குணர்த்தச்
சீர்த்தெல்லி நகர்மருங்கு திகழ்குளமண் காற்பதியில்
ஊர்ப்பெருமை தனதாக்கி உயர்வுறும்அப் பாக்குட்டி
தருதவத்தின் திருவுருவாய்த் தங்கம்மா எனும்பெயரை
மருவியொரு புதல்வியென வந்துதித்த மடமகளே.

நாணமச்சம் மடம்பயிர்ப்பா நவில்குணங்கள் வேர்களெனப்
பேணுநிறை ஒழுக்கமெலாம் பிறங்குகிளைக் கொடியாக
வாய்ந்ததமிழ்க் கலைப்பெருக்கு வளரிளமென் தளிராக
ஆய்ந்தசிவ நெறிமுறைகள் அணிமலரா மெனஅவற்றின்
தேனமுதாந் தமிழ்ப்பொழிவைத் திசைமுழுதுந் தரஎழுமோர்
ஞானவல்லி எனவுனைநாம் நயந்துரைக்க வளர்ந்தனை நீ.

ஆசிரியப் பணிபுரிதற் கமைந்துதமிழ்க் குலத்திளைஞர்
ஈசனருள் நெறிநிலைக்க இசைவித்த துன்திறமே

பவநெறியிற் பயிலாமற் பரமனருள் பரப்புதலாந்
தவநெறியிற் புகுந்திடுநின் சால்புடைமை பெரிதாமே

சுந்தரரைத் தடுத்தாண்ட துணைவர்குறிப் பஃதென்றே
பந்தநிலை தவிர்ந்துசிவப் பணிபுரிதல் தகவாமே

சயமகளாந் துர்க்கையினைத் தனித்துணையா யகத்திருத்திப்
பயமகன்று பணிபுரியும் நினைப்பரவல் பயனுமே

தூயவளின் தலந்திருத்தத் தருநினது பெருமுழைப்பே
சேயரெமக் கவளருளின் திறமளித்த தெனலாமே

அவையினர்கள் அகங்களிப்ப அறிஞரெலாம் தலையசைப்ப
நவநவமாம் பொருட்சுவையை நல்குதல்நின் புகழாமே

தேனொழுகத் தமிழ்குழைத்துத் திருமறையின் திறங்களெலாம்
ஊனுருகப் புகட்டுநினைக் குவமைசொலல் எளிதலவே



கோலாலம்பூர் மாதர்சங்கச் சார்பில்
1974இல் பொன்னுடை அணிவிக்கப்படுகிறது.



1970ஆம் ஆண்டு காரைநகர் மணிவாசகர் சபையில்
"சிவத்தமிழ்ச்செல்வி" என்ற பட்டம் வழங்கப்படுகிறது.

அமிழ்தென நின் தமிழ்ப்பொழிவை அகிலமுமே விழையுமெனில்
தமிழகமும் மலேயாவும் தமைமறத்தல் வியப்பன்றே

சொற்பெருக்கில் தமைமறந்து சுவைத்தவர்கள் நினைவிரும்பி
அற்புதநல் விருதுகளை அளித்தநிலை அதிசயமோ

ஈழமணித் திருநாட்டின் எழுச்சிமிகு பெண்குலத்தார்
வாழுகின்றார் எனும்புகழை வளர்த்ததுநின் மாண்பன்றே

பாராட்டும் பலபட்டப் பரிசுகளும் நினக்களித்துச்
சீராட்டும் திறமுணர்ந்து சிறந்தனநம் சிந்தையெலாம்

அரதனமாம் ஒளிமணிக்கோர் அணியுறுத்தல் நிகழ்வதென
விருதுபல பெறுநின்றன் விழுப்பநிலை மிகப்பெரிதே.

இவை தம்மால்,

ஏத்தரும் புகழ்நிலைக் கெய்திநிற் கின்ற
மாத்தவ மடந்தைநின் மாண்பினை வாழ்த்துதும்
ஈழத் திருநாட் டிடந்தொறும் படைத்த
நீள்புகழ் நினக்கென நிலைக்கநீ வாழ்ந்தனை
சீர்த்தமி ழகத்தும் திருநிறை மலேசியப்
பேர்ப்பதி யிடத்தும் பெயர்ந்துநீ நாட்டிய
நற்புகழ் தன்னைநின் நாட்டினுக் காக்கினை
அற்புதப் பெரியோர்க் கமைந்தநல் லியல்பிதே
சைவத் திருநெறி தழைக்க வாழ்தரும்
மெய்யுணர் அம்மையே வியன்பணி இயற்றிநின்
தெய்வமாஞ் சயமகள் திருவருள்
உய்திறம் நல்க உவந்துநீ வாழிய.

தெல்லிப்பழை
6-7-71

இங்ஙனம்
துர்க்காதேவி அடியார்கள்

※

"இன்றுள்ள எமது இளைஞர்கள், யுவதிகளின் விரக்தியைப் போக்க அவர்கள் சமய வாழ்வை மேற் கொள்வதே சிறந்தவழி."

* * *

"சைவத்தையும், தமிழ் மொழியையும் வளர்க்கச் சைவமகா சபைகள் கிராமங்கள் தோறும் அமைக்கப்படல் வேண்டும். அத்துடன் எமது சமய அநுட்டானங்களைக் கடைப்பிடித்து மனிதப் பிறவி எடுத்ததன் பயனையும் அடைய முயல வேண்டும்."

—சிவத்தமிழ்ச் செல்வி

உ

# பல்லாண்டு
# தமிழ்ச் சொல்லாண்டு வாழ்க!

கண்ணுக்குள் கண்ணாகச் சைவத்தைக் காத்திட்ட காரைக்கால் அம்மையாரா ?
காணாத பேணாத அப்பருக்(கு) ஆண்டவனைக் காட்டிய திலகவதியா ?
மண்ணுக்குள் கிடக்கின்ற வைரத்தை; ஒளிமுத்தை; வளர்க்கின்ற இறைபாதத்தை
மற்றோரும் பெற்றேத்த வகைசெய்த ஔவையா? மற்றந்தப் புனிதவதியா?
பெண்ணுக்குள் உன்பிறவி எப்பிறவி? யாமறியப் பெற்றிலோம்! பெற்றிலோமே!
பேச்சோடு பண்கூட்டி மூச்சோடு பணிகூட்டிப் பேராவல் தன்னைக்கொண்டு
பின்னுக்கும் பின்னான, முன்னுக்கும் முன்னான பெரும்பொருள் சைவங்காட்டும்
அன்னைதுர்க் காதேவி அருள்பெற்ற தங்கம்மை அம்மையே வாழ்கநீயே.

வெண்கலக் குரலெடுத்து வேதத்தை நீபாடி விளக்கியே பேசும்போது
மென்மலர்க் கலைவாணி வீணையை மீட்டிடும் மேலான காட்சிகண்டோம் !
தன்குல நாட்டார்தம் சைவத் திருப்பணிக்குச் சான்றாகத் தோன்றுமணியே
தமிழ்பேசும் உலகெலாம் சைவமே பேசிடத் தக்கபணி செய்தருளியே,
கண்கலக்கம் மாந்தர்பெறக் காரணம் ஒருநாளும் கண்கலங்கி இறையின்முன்னே
கையெடுக்க வில்லைஎன்ற மெய்புணர்த்திச் சிவத்தமிழ்ச் செல்வியே திரைவிலக்கு!
பெண்குலத்தின் சிவக்கொழுந்து! மண்குலத்தின் தவக்கொழுந்து சித்தாந்த ஞானாகரமே
பேரிலங்கை நாட்டிருந்து சைவமதச் சீரிலங்கப் பிறந்திலங்கும் சைவமறையே !

வாசகமா? மந்திரமா? புராணமா? அப்பர்தே வாரமா? காப்பு-தொகையா?
வருகின்ற தென்றலாய், வெள்ளமாய் அம்மை உன் வாய்வழி வருவதென்னே!
மாசகன்ற உள்ளத்தில் வீறொளிஉன் சைவமொழி வடிவழகைக் காணவிழிகள்
கூசுகின் றதேஅம்மா! திருவா சகக்கொண்டல்; குறுந்தீவு இலங்கைமகளே!
நீசத்தில் நிற்பாரை இறைஎன்னும் பாசத்தில் நிற்கவைக்கும் செல்வியே!
நீளாயுள் பெற்றந்தக் காலாடு நடராஜன் நெஞ்சத்தின் வாழ்த்தும்பெற்றுத்
தேசத்தில் பல்லாண்டு பைந்தமிழின் சொல்லாண்டு சிறந்துநீ வாழ்கவென்று
தேராத மழலையால் சீர்இந்து மாதரார், தேவிஉனை வாழ்த்தினோமே.

· பாதாசன்
கோலாலம்பூர்

✻

நெஞ்சம் தெய்வத்தைத் தொட்டாலன்றி
நீள்கரங்கள் கூம்புவதால் எவ்வித பயனுமில்லை.
மணிவாசகப் பெருமானும் 'அவனருளாலே அவன்தாள் வணங்கி,
என்றருளியதை நாம் சிந்தித்தல் வேண்டும்.
வேண்டத்தக்கது விமலனடி ஒன்றேயன்றி வேறன்று.

— சிவத்தமிழ்ச் செல்வி

உ
சிவமயம்

பண்டிதை, சைவப்புலவர், சிவத்தமிழ்ச்செல்வி, சித்தாந்த ஞானகரம்,
சைவதரிசினி, சிமயச் செல்வி, செஞ்சொற் செம்மணி,
திருவாசகக் கொண்டல், சிவஞான வித்தகர்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

மூன்றாவது முறையாக சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்க ஆதரவில்
மலேசிய நாட்டில் சைவநெறிச் சொற்பொழிவுகள் ஆற்றித்
தாய்த் திருநாடாம் ஈழம் மீளுங்கால்
சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தார் வழங்கிய

# பிரியாவிடை வாழ்த்து

---

உமையொரு பாகன் உவகையின் மொழியாம்
அமிழ்தத் தமிழெனும் ஆழியில் விளைந்த
முத்துக்கள் எத்தனை? அத்தனைக் குள்ளும்
அத்தனின் மார்பில் ஆடுவ தெத்தனை?
தோன்றிற் புகழொடு தோன்றுக வென்னும்
ஆன்ற மொழிக்குள் அமைந்தவர் சிலரே!
அத்தகு சிலரில் அரிதெனும் பெற்றிசேர்
வித்தகம் புரியும் விரிவுரைப் பெருங்கடல்
தங்கம் மாவெனும் தகைநிறை அம்மையே!
பொங்கு மாமதி புழுங்கிடப் புகழ்வளர்
சிவக்கனி! சொல்லின் செல்வி! பண்டிதை!
தவக்கனல்செறிந்த தமிழிசைப்பொய்கையே!
நால்வர் பாடலில் நடம்பயில் சைவம்
ஆல்போல் தழைக்க அருஞ்செயல் புரிவோய்!
துங்க மாமணிச் சுடரெனும் சொல்லிணுய்!
"தங்கம்மா" எனத் தமிழர்தம் நெஞ்சம்
இடந்தரத்தங்கும் இசைமிகக்கொண்டோய்!
தடந்தொடு இசைதொறும் தகைமை நிறைந்தோய்!
எங்கள் மலேசிய எழில்நிலப் பரப்பில்
மங்களச் சைவ மணிப்பயிர் விளைத்தோய்!
பாவலர் போற்றும் நாவலர் பிறந்த
மேவரும் இலங்கை விளங்கத் தோன்றி
சைவம் பிறந்த தமிழகம் தனிலே
எய்தரும் சைவ இளங்கதிர் பரப்பி
கலைவளம் கமழும் மலைநா டதனில்
தலைவா மாகச் சமயப் பெருமையை
ஒளியுறச்செய்தநின் உறுதகைபோற்றினோம்!
களியுறச் செய்தாய்! கருத்திற் கொண்டோம்!
மங்கையர்க் கரசியாம் மங்கையர்க்கரசியை
எங்கும் புகழ்ந்திடும் எழில்சிவச் செல்வியாம்
திலக வதியைஎம் சிந்தையிற் கொணரும்
நலமார் தோற்றமும் நாவன்மை ஆற்றலும்
தெளிந்த கருத்தும் சிவத்தில் 'நாட்டமும்
அளிசேர் கொற்றவை அடியினில் பற்றும்
பவத்தின் விளைவாம் அவத்தொண் டகற்றிச்
சிவத்தொண் டேநின் சிந்தைய தாக
நாயன் மாரென நானிலம் புகழ
தூயவ ராக வாழுநன் முறையும்
கண்டுகண் டுள்ளம் களிபே ருவகை
கொண்டனம்; இன்றுன் கொள்கையைப் போற்றி
பட்டங்கள் பல பார்புகழ் அறிஞர்
இட்டமாய்அளித்தனர்இவைபோல்இன்னும்
எத்தனை யோபுகழ் ஏற்றமாய்ப் பெற்று,
முத்தாம் தமிழில் முக்கண்ணன் புகழ்
பித்துற ஓதிப் பெருமை விளைத்து
வாழ்க! வாழ்க! வளமுற வாழ்க
சூழ்க நலமெலாம்! சூடு நின்புகழ்
ஆழிபோல் அகன்றும் ஆழ்ந்தும்
வாழிநூ றாண்டு வையத்துள் நலமே.

கோலாலம்பூர்
13-4-74

சிலாங்கூர் இலங்கைச்
சைவர் சங்கம்

தற்காலம் மலேசியா நாட்டுக்கு விஜயம் செய்துள்ள
செஞ்சொற் செம்மணி, சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானகரம்,
சைவப்புலவர், பண்டிதை, தமிழ்ப் பேராசிரியை

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தார் கூறும்

# வரவேற்பு வாழ்த்து

### விருத்தம்

பூவேந்து நான்முகனுர் ஆக்கியஇவ் வுலகில்எல்லாம்
பொலிவுற் றோங்கிப்
பாவேந்தர் பாவேய்ந்து பரவப் பெற்றோய் பரைதுர்க்கை அன்னை அருள்
படைக்கப் பெற்றோய்
நாவேந்தும், மறையோரும், நறுந்தமிழும், சைவமிளிர்
யாழ்நகர்த் தெல்லிப்பழைச்
சீரோங்கு சைவச் சிவத்தமிழ்ச் செல்வியாம் தங்கம்மா
அப்பாக்குட்டி வருக வருகவே!

தக்கதிரு வள்ளுவனர் "திருவேறு; தெள்ளியரா
தலும்வே" றென்ன
ஒக்கஉரைத் துளநல்லூழ் யாவுமொருங் குன்னிடமே
ஒளிரக் கண்டோம்
மிக்ககலா மதியுடன் சேர்ந்தொளிரும் பண்டித சங்குநீ
தோன்றக் கண்டோம்
தொக்க உளங்களித்தோம் உவப்புடனே வரவேற்கும் உறுசொல்
ஆற்ற வருக, வருகவே!

இயல், இசை, நாடகம் இவை முத்தமிழே "தமிழ்" என்ப
தினிமை யாகும்
செயிரறநீ இனிமையுறக் கலையனைத்தும் இனிதோதிச்
சீர்த்தி வாய்ந்து
பெயல்புரைய தமிழுலகம் குளிர்வித்தோய் ஆதலினல்
பெரியோய் நீஎம்
அயர்வறுத்து உயலளிக்கும் செஞ்சொற்செம் மணியாரண
மார்க்க வருக, வருகவே!

அந்தமிலாச் செந்தமிழும் அறுசமய நெறிமுறையும்
ஆய்பன் னூலும்
சந்தமிக விரித்துரை செய்குருவே! யூனியன்
கல்லூரிச் சுடர்
தந்தமது தரமறிந்து தகுகலைச்சீ ரூட்டுவிக்கும்
தாய்போல் வாய்எம்
கந்தனுறை சிலாங்கூர்க் கவினிலங்கைச் சைவர்சங்க
மன்றினிது வருக வருகவே!

காரிருளைக் கடிந்தோட்டும் "இரவி"யென மனஇருளைக்
கடிந்து யாண்டும்
சீரியமே தருஞான மிகமிளிர்ந்து செந்நாக் கரசியெனத்
திகழ்தலாலே
சூடிய சித்தாந்த ஞானகரம் எனுஞ் சிறப்போங்கி
நிலவப் பெற்றோய்
ஆசிரிய! நின்வர வெமக்கு நல்வரவாகுக நீபல்
லாண்டு வாழி!

கோலாலம்பூர்,
8-4-72

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம்

சிவமயம்

**மலாயன் சைவசித்தாந்த சங்கம், ஸ்ரீ ஆதீஸ்வரன் கோயில்**

பண்டிதர், சைவப்புலவர், செஞ்சொற் செம்மணி (மதுரை ஆதீனம்),
சிவத் தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானகரம் (காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம்)

**திருச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பேரில்**

'சிகநனி' இயற்றிய

# வாழ்த்துப்பா

---

திருக்கோ ணசலம் திருக்கே தீசுரம்
ஆகிய இரண்டையும் இருகண் ணுடை
இலங்கா புரியெனும் இனிய மடந்தையின்
சிரசே எனுஞ்சீர் தங்குயாழ்ப் பதியின்
சிந்தூரத் திலதஞ்சேர் சிறுநுத லேயெனத்
தெங்கும் மாவுந் தீங்கனி மிகச்சொரி
தெல்லிப் பழையெனுந் தொல்பதி யதனைப்
போற்றற் கரிய பிறப்பக மாய்க்கொள்
பெரியோய்! பெண்கள் நாயக மேநீ
தங்கம் மாவெனுந் தனிப்பெய ருடையாய்!
நாமத்திற் கேற்பநின் நற்பண் பதனால்
நாம்பர வுஞ்சீர் நற்றிரு வனையாய்!
உனைமக வாய்க்கொள உன்பிதா நோற்ற
தவந்தா னென்னே! தெய்வம் போற்றி
நின்தா யீட்டிய நற்றவ மென்னே!
மாதா மகிழ மழலைகள் மொழிந்துபின்
நன்னூல் முதல தொன்னூ லுடனே
தொல்காப் பியத்தொடு பல்காப் பியமும்
புராணந் திருமுறை புகல்சாத் திரமே
ஆன தெலாங்கற் றறிவுமிக் குளவாய்ப்
பேச்சு வன்மையும் பேறுய்ப் பெற்றேய்!
பாவலர் நாவலர் பேணி வந்துன்
பேருரை கேட்டுப் பெருமகிழ் வெய்துவர்.
சிறுவருஞ் சேர்ந்துநின் சீரிசை கேட்டுச்
செவிக்கமு தாமெனச் சிராய் மடுப்பர்,
தமிழை வளர்க்குந் தனிப்பணி பூண்டோய்!
சைவந் தழைக்கச் சேவகஞ் செய்வோய்!
கோவள முடைய கொழும்பெனு நகரில்
விவேகா னந்தப்பேர் வெல்லாச் சிரமதில்
நவராத் திரிநற் சரஸ்வதி நாளில்
நீசென் றுற்றிய நிறைமொழி தன்னை
நானில மெல்லாம் நன்றெனப் போற்றும்
அற்றை தொட்டுநீ அருந்தொண் டாற்றுதல்
அருமை அருமையென அகிலமு மறையும்
மதுரையாதீனத்தார் மாண்பாய் மதித்துன்னைச்
சிறப்பாஞ் "செஞ்சொற் செம்மணி" என்றனர்
காஞ்சியா தீனத்தாருன் கலைகளைக் கண்டு
"சித்தாந்த ஞானகர" மெனுங்கீர்த்தி யீய
ஈழத்துச் சிதம்பர முன்பணிக் கேற்பச்
"சிவத்தமிழ்ச் செல்வி" என்னுஞ் சீர்தனை
உள்ள முவந்து ஓதின ருனக்கே!
அருந்தமிழ் போற்று மண்ணு மலையிலும்
நாவலர்க் குப்பின் நம்புக ழோங்க
நாட்டினை நீயே; நாமக ளொப்பாய்
மலாயன் சைவசித் தாந்தராம் நாமும்
"சைவ வித்தகி" என்றுனைப் போற்றி
நீயும் நினது நற்பணி தானும்
நாளுந் தழைத்து நன்மைகள் பெருகுக!
மேன்மைகொள் சைவம் மேன்மே லோங்குக!
என்றெடுத் தெடுத்து ஏத்திடு வோமே!!!

மலாயன் சைவசித்தாந்த சங்கம்
கோலாலம்பூர்

20-4-1972

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்க அழைப்பிற் கிணங்கி இங்கு வந்துள்ள
எம்மூர்ப் பெண்மணி சைவப் புலமைத் தமிழ்ப்பண்டிதர்,
யூனியன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை

## தவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கு

தெல்லிப்பழை கிழாரும், மலாயன் அஞ்சற் துறையிற் பணியாற்றி ஓய்வுபெற்றவருமான
**முத்துக்குமாரு தனநாயகம் குடும்பத்தினர்**
16-4-1972இல் தம் இல்லத்தில் அளித்த

# உபசார மடல்

---

### நேரிசை ஆசிரியப்பா

முத்துயிர் இப்பி முழங்குவெண் பணிலம்
தத்துங் கலைகடற் சூழ்ச ழத்தலை
எழில்கோ ணுசலம் திருக்கே தீச்சரம்
பாலாவி யாறு படர்மா தோட்டப்
பொழில்வாய் மெளவல் புன்னை மாதவி
செழுங்கொடிமுல்லை செருந்திசண்பகங்கோங்
கிழுமென் ஞெலியரு விச்சுனை இலைமரை
அன்னந் துயிலவ ராலுகழ்ந் தெதிரனை
கருமே திப்பரு மடிமுட் டொழுகுபால்
ஆறுசென் மடவா ரடிவழுக் குநரன்றித்
தேறுநாற் குணம்வழுக் காவியன் மயிலின்
அரம்பையர் பழிச்சு மடவா ரரன்பணி
ஆலயந் தீர்த்தம் ஆடரங் கணிகலை
வாலியர் குழீஇமண் டபந்தொறும் ஆய்வு
சொற்பெருக் காகம புராணத் தொகைவிரி
எற்பகல் ஒலியிடத் தேழைதாட் பரிபுரம்
ஏங்கொலி யலாமற் றேக்கொலி யிசையாப்
பாங்கார்ப் பதியாழ்ப் பாணமல் லாகம்
தெல்லிப் பழைஞாப் பண்பண் டெரிகதத்
திடர்விளை மகிடா சுரனுருத் திரிதர
அரிபரி யுகைதிரி சூலினி அமைஇய
ஆலயம் பேணுறு மடியவர் வழிவரு
நல்லா சிரியத் தன்னடி மறவா
அப்பாக் குட்டி கோவிந்தர் பௌத்திரி
தையன் மகப்பெயர்த் தலைவிபாற் றந்த
செய்யாள் கலைதேர் புண்ணியஞ் சேர்தர
நாவலர் போற்றும் ஆறுமுக நாவலர்ப்
போன்ம்மய வீங்கிய துறவறப் பொதும்பர்
மையார் மிடற்றரன் பணியின் ஒருமைய
செம்மொழிச் செல்வி சித்தாந்த சாகரம்
சைவப் புலமைத் தலைவிபண் டிதைதமிழ்ப்
பேரா சிரியை யெனப்பெறும் பட்டம்
முப்பா னுண்டிடை இப்புவி புகழச்
சொற்பொழிவிசைப்பண் டொடர்புறுசீதை
கலைமணி! சிவமணி! தங்கம் மாமணி!
தலைமணி! மலையத் தார்பணி பணிமணி!
மாணிக்க வாசக மணி!தொண் டர்ப்பணி
சேக்கிழாருரைமணி! வள்ளுவர்ச் செறிமணி!
என்றெலாம் புறமதத் தவரும் இசைமணி!
நின்றமிழ்ச் சிவப்பணி நிலவுக
நன்றே பல்லாண் டெனவிழை குவமே.


''என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்''

திருச்சிற்றம்பலம்

ஆக்கியோன்:
ஏ. ஆறுமுகனார், கிள்ளான்



1976இல் பொன்விழாவுக்காக சிவத்தமிழ்ச்செல்வியை
கொழும்பு சரஸ்வதி மண்டபத்துக்கு அழைத்துச்செல்கிறார்கள்.



1972இல் கோலாலம்பூர் கலாமண்டபத்தில்
சிவத்தமிழ்ச்செல்வியின் சொற்பொழிவைக் கேட்கிறார்கள்.

உ

சிவமயம்

திருநிறை துர்க்கா தேவஸ்தான நிருவாகத் தலைவர்

# துர்க்கா துரந்தரி செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

பாரதநாட்டில் வாரணசியில் சைவசித்தாந்த மகாசமாசத்தின்
76ஆவது ஆண்டு நிறைவு விழாவில்
சைவ மங்கையர் மகாநாட்டில் சிறப்புச் சொற்பொழிவாற்றிக்
காசி முதலிய புண்ணிய க்ஷேத்திர யாத்திரை செய்து
துர்க்கா தேவஸ்தானத்திற்குச் சுபசோபனத்துடன் திரும்பித்
தேவிக்கு வணக்கம் செலுத்திய

துர்மதி வருடம் பங்குனி மாதம் 11ஆம் நாள் (24-3-82) புதன்கிழமை ஞான்று தேவஸ்தான சிவாச்சாரியர்கள், நிர்வாகிகள், தர்மகத்தாசபையினர், இந்து இளைஞர் சங்கத்தினர், பெண்கள் தொண்டர் சபையினர், மகளிர் இல்லத்தினர், குருகுல ஆசிரியர், மாணவர்கள், புராணபடனக் குழுவினர், மற்றும் அடியார்கள் மனமுவந்து அளித்த

## வாழ்த்து

### வெண்பா

துர்க்கை தொழுகைத் துரந்தரியாய்ச் சொற்பெருக்கும்
வர்க்க வளர்மதிபோல் மாநிலத்த — வர்க்கருள்
சார்சைவந் தாங்குசெல்வி தங்கம்மா தாயகத்திற்
பேர்சிறந்தார் பேசரிதிப் பேறு.

### கட்டளைக் கலித்துறை

சைவப் புலமை தமிழ்ப்பண் டிதைச்சீர்த் தகைமையிவை
தெய்வப் பணியாய்த் திகழக் கலாசாலைச் சீருரைகள்
செய்விற் பனமும் திருக்கோயில் சங்கம் சிறப்புமன்ற
உய்வுப் பரிவும் உழவாரத் தொண்டும் உயர்நெறியே.

தாரணிச் சைவத் தகைமைத் தவநெறிச் சால்புயர
ஆரணிச் சங்கத் தருந்தலை மையன் றமைந்ததுவும்
வாரணு சிச்சீர் மகளிர் மகிழநுண் மாண்புலச்சம்
பூரண தத்வப் பொருளின் பொழிவும் புலமையன்றே.

சிங்கை நகர்மலாய் தேசத் தியங்கு திருநெறிய
சங்க மியாவும் தமிழ்சான்ற மன்றமும் சற்பிரசங்
கங்கள் நயந்து கசிந்து மகிழ்ந்து கனிமொழிக்கோர்
தங்கம் எனவியத் தல்செய்தல் துர்க்கைத் தவப்பெருக்கே.

அன்னையின் ஆலயத் தன்புரு வாகி அவள்பணியே
சென்ம மிதிற்செய் தியாகமென் றென்றும் திகழுமைபோற்
கன்னியாய்க் காலை கடும்பகல் மாலை கருமநனி
உன்னியே ஓயா துழைக்கும் நினைவாழ்த்து முலகமே.

குருகுலம் நற்பெண் குலமணி கட்கவை கோயிலுள
கருமமே தொண்டாய்க் கருதும் இளைஞர்சங் கத்துயர்ச்சி
அருளன்ன பூரணி ஆம்தரு மச்சீர் அமைப்புடனே
திருவில ருக்கில்லச் சீரும் திகழ்த்தல் சிவப்பணியே.

சித்திரத் தேரும் திகழ்தேவ கோபுரச் சீரெழிலும்
சித்திக்குத் தீர்த்தத் திருக்குளச் செம்மைத் திருப்பணியும்
பத்திசெய் தன்பர் பரவத் திருமுறைப் பண்புமடம்
எத்திசை யும்பேர் இலங்கும் அமைப்பும் இணையிலவே.

## விருத்தம்

காசிதல யாத்திரை கங்கைசிவ தீர்த்தம் கைலைவார
ஞசிதரு சைவமகா நாடமைக்க நாடி நம்பனருள்
ஆசிதர ஆன்மநெறி ஆய்வுசெய் தங்கமே அன்னை துர்க்கைத்
தேசிதமாய்ச் சேர்தவத்தாய், சீரொடுபல் லாண்டு வாழியவே.

துர்க்கா தேவஸ்தானம்
பங்குனித் திங்கள் 11ஆம் நாள்
24-3-82

துர்க்கை அம்பாள் அடியார்கள்


✻

நினைப்பு என்றும் நல்லதாய் இருத்தல் வேண்டும். ஒருவர் தனித்திருக்கும் உன்னைப் பார்த்து நீ என்ன நினைக்கிறாய் என்று வினவினால் உடனே சொல்லக்கூடியதாக அமைதல் வேண்டும். நினைப்பு அகத்தில் நிகழ்வது, பிறரறியாதது. ஆனால் இறைவன் எம் அகத்தில் இருக்கிறான். நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை. அன்பனே! இதை நெஞ்சில் நினை.

— சிவத்தமிழ்ச் செல்வி



கோலாலம்பூர் பத்துமலை சிவானந்த ஆச்சிரமத்தில்
சுவாமி பிரணவானந்தா முன்னிலையில்
சிவத்தமிழ்ச்செல்வி (1974).



சிவத்தமிழ்ச் செல்வியின் பொன்விழாவை முன்னிட்டு
கொழும்பு வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலில்
காளாஞ்சி வழங்கப்படுகிறது. (1975ஆம் ஆண்டு)

உ
சிவமயம்

சிவத்தமிழ்ச்செல்வி, செஞ்சொற் செம்மணி
சித்தாந்த ஞானகரம், சைவப்புலவர், பண்டிதை
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு
மலேசியா சைவத் தமிழ் மங்கையர் வாசித்தளித்த

# பிரிவுபசார வாழ்த்துப்பா

சித்தி விநாயகனைச் செவ்வேளைச் சிற்சபையில்
நித்தம் நடனமிடும் நிர்மலனை — அத்தனுடற்
பாதியாய் ஆதியாய்ச் சோதியாய் நின்றவளை
ஓதி உணர்வோம் உளத்து.

தங்கமாய் எண்ணித் தமிழர் இனம்பேணும்
தங்கம்மா! உள்ளமெனும் தாமரையில் — தங்கம்மா
என்று தினமுன்னை எல்லாரும் போற்றுகிறோம்
நன்றே புரிவாய் நனி.

ஆழக் கருத்தை அகழ்ந்தெடுத்து வீசும்
ஈழத் தரசியே! இன்னமுதே — வாழத்
திருந்தும் கருத்தைச் செவிப்புலனில் ஏற்று
அருந்தி மகிழ்ந்தோம் அகம்.

வருக வருகவென வாழ்த்துரைத்தோம்; நெஞ்சம்
உருகச் சமய உணர்வு — பெருகவே
இன்பத் தமிழில் இசையும் கலந்தளித்தாய்
அன்புற் றுணர்ந்தோம் அறம்.

செந்தீயின் வண்ணச் சிவனார் திருவடியைச்
சிந்திப்போம்! நாம்செய்த தீவினைகள் — சிந்திப்போம்;
வந்திப்போம் என்று வாயூறச் சொன்னவுரை
சிந்தனையிற் கொள்வாம் தினம்.

பொன்னுரையை ஆற்றுவதால், புண்ணியர்கள் பூவிதயம்
தன்னில்நீ என்றுமே தங்குவதால் — அன்னையே!
பொன்னி எனவுரைப்போம்; பொன்மணியாய்ப் போற்றிடுவோம்
எண்ணி மகிழ்வில் இணைந்து.

அன்பை, அருளை, அளவில் தனிக்கருணை
இன்பை, இறவாத் தனிச்சுவையை — பண்பை
தமிழை, இசையைத் தரணி மகிழ
அமிழ்தாய் அளித்தாய் அகம்.

தேங்கி யிருந்த சமயச் சிறப்புணர்வை
நாங்கள் மிகப்பெறவே நற்றமிழ்ச்சொல் — பாங்கில்
பசியறவே கேட்டுப் பலகால் நினைந்தோம்
கசிந்துருகி நீர்வாரக் கண்.

விரும்பும் மணவாழ்வை வேண்டா தவன்றன்
திருப்பாதம் மனம்வைத் திருந்தாய் — கரும்பாய்ச்
சமயப் பணியில் தளரா துழைத்து
இமயம் எனநின்றாய் இன்று.

நெற்றிநிறை நீறும் நெஞ்சில்பஞ் சாட்சரமும்
முற்றும் பேரன்பும் முதல்வனிடம் — பற்றுடனே
நால்வர் தமிழுரைக்கும் நற்பண்பும் எந்நாளும்
ஆல்போல் தழைக்கும் அகத்து.

மேல்நாட்டுப் பண்பாடு மேவிவரும் இந்நாளில்
கால்நாட்டிப் பக்திக் கவின்கொடியை — மால்தங்கை
கொற்றவையின் தண்ணருளால் குற்றங் குறையின்றிக்
கற்றோர் மனங்களிக்கக் கா.

நீடுயர்ந்த வாழ்வளிக்க நின்றிலங்கும் சைவநெறிப்
பீடுயரப் பேசிவரும் பெண்குலத்தோய்! — ஈடில்லா
ஈழத் தவப்பயனே! ஈங்குனது பேருரைகள்
ஆழமனம் கொண்டோம் அறிந்து.

அறிந்த இறைநெறியை ஆங்குரைக்க நன்றாய்த்
தெரிந்த மனமுடையார்த் தேரின் — தெரிந்தவரை
எண்ணில் மிகச்சிலரே இன்றுள்ளார்; நீயெங்கள்
கண்ணின் மணியாகும் காண்.

பொற்புமலை நாட்டிலுன் பொன்னனை பேருரைகள்
கற்புநிலை, பக்திநிலை, காணவொணு — அற்புதத்த
முத்திநிலை, தத்துவத்தின் மோனநிலை, சித்தாந்த
நித்தியத்தைக் கூறிடுமே நின்று.

வாய்மூலம் வாய்க்கும், வளர்நெஞ்சின் நெஞ்சினுக்கும்
போய்ப்பரவ நின்னுரையைப் போற்றுவோம் — சேயகத்தில்
நீயுரைத்த நல்லுரைகள் நெஞ்சில் கலந்துள்ளே
போயுயிரில் ஒன்றாகிப் போம்.

துன்னும் தமிழ்பாடித் துர்க்கை அருள்போற்றி
மன்னும் புகழ்சால் மனிதகுலம் — அன்பருளாய்
நின்று நிலவ நீசெய் அருட்பணியை
என்றும் மறவோம் இனி.

செல்லும் நெறியெல்லாம் சேம நெறியாக!
வல்ல தமிழால் வளர்சமயப் — பல்கருத்தை
எல்லோரும் கேட்டுமிக இன்புறச்செய் நற்பணியில்
சொல்லித் திளேப்பாய் தொடர்ந்து.

நின்னுரையை யாம்போற்றி நெஞ்சில் நிறுத்துவோம்;
பொன்னுரையாய் எங்கும் பரப்புவோம் — நன்னெறியை
மங்கையராம் நாங்கள் வாழ்விற் கடைப்பிடிப்போம்
எங்களது கைம்மா றிது.

இறைவன் உனக்களித்த இந்தத் திறனல்
தரையில்நீ எங்கும் சமய — நிறைவினைப்
பீடுபெறச் செய்யப் பிரியா விடையளித்தோம்
நீடுபுகழ் பெற்றுயர்க நீ.

தங்கமே உன்வரவு தண்மலேசூழ் நாட்டினுக்குப்
பொங்கும் புதுவரவாய்ப் போற்றுகிறேம் — தங்கிப்
பிறவா நிலேயுணர்த்தும் பேருரைகள் ஆற்ற
மறவாது நீயிங்கு வா.

தங்கம்மா வாழ்க! தனித்தமிழ்நீ வாழ்ந்துயர்க!
எங்கம்மா வாழ்க இறையருளால் — எங்கெங்கும்
பொங்கும் புதுப்புனலாய்ப் புத்தம் புதுக்கருத்தாய்
மங்களமாய் வாழ்க மகிழ்ந்து!

இவ்வண்ணம்
கோலாலம்பூர் மலேசியா சைவத் தமிழ் மங்கையர்
25-4-1971

✳

மறைப்பொருளேத் தெளிந்தவர்களே முறைகேட்கத் தகைமை பெற்றவர்கள். இதனே உணர்த்தவே நமது சமயத்தில் திருமறைகளும், திருமுறைகளும் தோன்றின.

— சிவத்தமிழ்ச் செல்வி

உ

தென்னிந்தியா — திருவிடைமருதூரில்
திருமுறைக் கருத்தரங்கில் மாதர் பகுதித் தலைமையேற்றும்
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகளாற்-
பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றும் உயர்நிலை பெற்றிருக்கும்
சிவத்தமிழ்ச் செல்வி

## பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு
## தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையினர்
வாழ்த்தி வழங்கிய

# பாராட்டுப் பாமலர்

### வெண்பா

கங்கை புனைந்தசடைக் கண்ணுதலின் சீர்த்தியெலாம்
எங்கும் பரப்பி இசைபெருக்கும் — துங்கமிகு
தங்கம்மா நற்பெருமை தந்துரைத்து வாழ்த்துவாம்
நங்களிறை தாள்பணிந்து நாம்.

### விருத்தம்

சிவநெறியுஞ் செந்தமிழுஞ் சிறந்தோங்கு திருநகராம் தெல்லி மேவித்
தவநெறியிற் பயில்குலத்துத் தோன்றிவளர் தனிமகளாந் தகவு தாங்கி
உவமையில்மெய்க் கலைஞானம் உணர்ந்தரிய நாவன்மை உவப்ப வாய்ந்து
சபையினிலே தமிழ்பொழியுந் தங்கம்மா எனும்நாமத் தையலே நீ.

கோலமிகு கொற்றவையாய்த் தெல்லிநகர் வளம்பதியிற் கோயில் கொண்டு
காலமெலாம் அருள்சுரக்கும் அன்னைதிரு வடியிணையிற் காதல் சேர்த்திச்
சீலமிகுந் துறவுநெறி பூண்டுலகப் பற்றறுத்துத் திகழ்த லாலே
ஞாலமிசைக் கலைப்பயனை நாமெல்லாம் உணருநிலை நாட்டி னையே.

பூவலயத் துற்றமர்ந்து பொய்ம்மைநெறிப் படர்ந்துழல்வோர் புன்மை நீக்கித்
தாவிலருஞ் சிவநெறியிற் றலைப்படுத்தும் பெருங்கருணை தாங்கி யென்றும்
நாவலங்கொண் டரன்புகழை நாமுணர்ந்து நனிவியக்க நல்கி வாழும்
பாவையர்தங் குலமணியே நின்பணியின் பெருநிலையைப் பணிகின் றோம்யாம்.

தெய்வவுணர் வெனும்பசுமை தீய்ந்துமிக வரண்டெமது தேய மெல்லாம்
உய்யுநெறி தெளியாமல் உழல்கின்ற இந்நாளில் உவந்து நன்னீர்
பெய்யவந்த பெருமுகிலாய் மலாய்நாட்டும் பாரதத்தும் பெய்யச் சென்று
சைவமழைப் பொழிவுடனே தமிழ்மணமும் பெருக்கினைநீ தளிர்த்து வாழி.

திருவிடைநன் மருதூரிற் திருமுறையார் கழகத்துச் சேர்ந்து நுங்கள்
அருமறையின் தெளிவருள்க வெனவேண்டி அழைத்திருந்த அழைப்பை ஏற்றுப்
பெருமையுடன் நீசென்று பாராட்டுப் பெற்றநிலை பெரிதும் போற்றி
உரிமையுடன் வாழ்த்துகின்றோம் ஒளிபெறுநல் லொருமணியே உவந்து வாழி.

நற்றிருவா வடுதுறையில் நாவலர்க்கு விருதீந்து நயந்தார் முன்னாள்
இற்றைநாள் ஈழத்தின் திருமணியாய் நினைஏத்தி இனிது வாழ்த்திப்
பொற்றிருநல் லாடையினைத் தேசிகர்மெய் யன்புடனே போர்த்தி நின்றார்
உற்றிடுநின் புகழ்எல்லாம் நாம்பெற்ற பெரும்புகழாய் உவக்கின் றோமே.

சிறுபாலர் திகழ்ஞானோ தயசபைக்கோர் மண்டபத்தைச் செய்து நல்கிப்
பெறுநிதியம் சிவப்பணிக்கே அர்ப்பணிக்குந் தருமநிலை பேணு நின்றன்
அறிவுநிலை யாமுணர்ந்தோம் ஆருலகின் அறம்வளர்க்கும் அன்னை யாய்நீ
நிறைசிவனார் அருள்பெருக நீடுலகில் எஞ்ஞான்றும் நெடிது வாழி.

இங்ஙனம்
பாலர் ஞானோதய சபையினர்

தெல்லிப்பழை,
30-11-73

1976இல் நடைபெற்ற பொன் விழாவின்போது

**இரசிகமணி கனக. செந்திநாதன் வழங்கிய**

# வாழ்த்து மடல்

இந்நாட்டிற் சைவம் எழில்பெறவும் நம்தமிழ்த்தாய்
பெண்ணுக நன்கு பொலிவுறவும் — பன்ஞளாய்ச்
சொற்பொழிவால் நல்லெழுத்தால் தொண்டுசெயும் தங்கம்மா
சிற்பரனுய் வாழ்க சிறந்து.

கற்ருேர் பலபேர் சிலநாளிற் கல்விக் கரையைக் கண்டவர்போல்
நிற்பார் படிப்பை நிறுத்திவிட்டு நிதமும் வீடே கதியென்றும்
உற்ருர் மக்கள் உறுபொருளே உதவும் என்றும் நினைந்துள்ளே
அற்பா சையென அவற்றைவிட்டு அரும்பணி கொண்டாய் வாழியவே.

நாளும் பொழுதும் படித்தேநீர் நற்சங் கத்துப் பண்டிதராய்
வாழும் வகையை அறிந்தோயாய் வளரும் சைவப் புலவருமாய்
ஆழி தனிலே எழும்அலேபோல் அழகுத் தமிழ்ப்பேச் சாளருமாய்
ஈழம் உவக்கப் பெற்றுயர்ந்தாய் இனிமைத் தமிழ்போல் வாழியவே.

திருவா சகமாம் தேன்மழையும் தெவிட்டாக் கம்பன் தீந்தமிழும்
உருகா மனமும் உருகச்செய் உண்மைத் தொண்டர் உள்ளொளியும்
இருளாம் மனத்து விளக்கேற்றும் இணையில் குறளும் பாரதியும்
பெருகார் வத்தோ டுரைசெயுமெம் பீடார் தங்கம் வாழியவே.

நாமென் செய்வோம் பெண்களென்றும் நமக்கேன் சைவப் பணிஎன்றும்
ஊமை போலப் படித்தபெண்கள் உளரே இந்த நாட்டிலம்மா
சேமம் பெருகத் தமிழ்பெருக திகழும் சைவ நெறிபெருக
நாமம் சிவமே யெனப்பெருக நாளும் உழைத்தாய் வாழியவே.

கருதரிய உமதுசைவத் தொண்டு போற்றிக்
 காரைநகர் மணிவாச கத்தார் மன்றம்
பெருமைகொளப் பொன்னுடை போர்த்தி யுன்றன்
 பேர்சிறக்க வைக்கின்ருர் வாழ்த்து கின்றேன்
அருமைபெறு காஞ்சிநகர் மெய்கண் டார்தம்
 ஆதீன வாழ்த்ததும் பெற்ருய் நீயே
திருநிறைந்த தெல்லிநகர்த் துர்க்கா தேவி
 சீர்பெறவே காத்திடுவாள் நீடு வாழி.

19-8-70

உ

சிவமயம்

சிவஞான வித்தகர்

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பாராட்டுவிழாவில்

சிவத் தொண்டுகளைப் போற்றி

துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையினர்

தேவியின் அடியார்கள் சார்பாக

04-05-1974இல் வழங்கிய

# வாழ்த்துப் பாக்கள்

உன்னுவான் தெய்வ நீதி ஊன்றிய செல்வ நாடு
மன்னுயாழ்ப் பாண நங்கை மாறிலாத் தவத்தாற் பெற்ற
தன்னிலே நிறைந்த செல்வி தங்கம்மா தன்னைத் துர்க்கை
யன்னையை யாமும் வேண்டி அன்புடன் வாழ்த்து வாமே.

நிதிமிகு கருத்தால் நெஞ்சு நெகிழ்விரி வுரையால் விஞ்சு
மதிநல வளத்தாற் கொஞ்சு மணிக்குரல் திறந்தாற் செஞ்சொல்
அதிமது ரமதால் பக்தி விளைத்திடு மழகால் அம்ம
புதுநலம் தருவாய் உண்மைப் பொருளறி திருவே வாழி.

ஐவரை அடக்க வல்ல ஆற்றலைத் தரும்நின் பேச்சுப்
பொய்வகை போக்க வல்ல புத்தியைத் தரும்நின் பேச்சு
செய்வகை தெளிய வல்ல செம்மனம் தரும்நின் பேச்சு
தெய்வநல் வாழ்வை ஏற்றும் செல்விதங் கம்மா வாழி.

தேனமு தென்பர் ஊறும் செழுங்கனி யமுத மென்பர்
வானமு தென்பர் நன்கு வடித்தசெங் கரும்பென் றுரப்பர்
வானவர் தாமுந் துள்ளி வருவர்நின் மதுரத் தீஞ்சொல்
லானநல் லமுத முண்ண அருந்தமிழ்ச் செல்வி வாழி.


தேவர்கள் களிக்கச் சொல்வாய் சிவனுளம் மகிழச் சொல்வாய்
நாவலர் வியக்கச் சொல்வாய் நால்வரும் உவக்கச் சொல்வாய்
பாவலர் பாடச் சொல்வாய் பக்தர்கள் ஆடச் சொல்வாய்
ஆவியும் குளிரச் சொல்வாய் ஆகமச் செல்வி வாழி.

சின்னமே ஏங்கள் வேண்டாம் சிறுகளி யாட்டம் வேண்டாம்
வன்னவான் சிகரம் வேண்டாம் வாணவே டிக்கை வேண்டாம்
மன்னுமோர் தங்கம் மாவை வரவழைத் திடுக வென்பர்
இன்னதோர் மாற்றம் நேர எழுந்தனை இனிது வாழி.

மருத்துவ நிபுண ருக்குப் பொறியியல் வல்லு நர்க்குக்
குருத்தொழி லாள ருக்குக் குறித்துயர் படிப்புக் காண்பார்
சரித்திரம் இன்று மாறித் தங்கம்மா வுக்குக் கற்க
வரித்தெழும் பலரைக் கண்டோம் வளர்கலை வல்லி வாழி.



1977ஆம் ஆண்டு, சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயத்தில்
சிவத்தமிழ்ச் செல்விக்கு திருமதி சுந்தரமுர்த்தி
பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கிறார்.



1975இல் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில், ஆலயச் சார்பாக, திருமதி தியாகராசா பொன்னுடை போர்த்தி துர்க்கா துரந்தரியைக் கௌரவிக்கிறார்.

தங்கம்மா என்றால் தொண்டு தங்கம்மா என்றாற் பண்பு
தங்கம்மா என்றாற் சக்தி தங்கம்மா என்றாற் பக்தி
தங்கம்மா என்றாற் சைவம் என்றெல்லாந் தரணி காணும்
தங்கம்மா தமிழர் பெற்ற தனிப்பெருஞ் செல்வி வாழி;

நேரமும் நோக்க லின்றி யுடல்நிலை பேண லின்றித்
தூரமுந் தூக்க லின்றிச் சூழலை யாய்த லின்றி
ஈரநன் னெஞ்ச முந்த இறைவனின் தொண்டு செய்யும்
வீரமிங் கெம்ம னோரால் விளம்புதற் கெளிதோ வாழி.

திருமுறை மடம மைத்துத் திகழ்மறை யாக மத்துப்
பொருள்நனி விரித்து ரைத்துப் புதுப்பரம் பரைவ ளர்த்து
வரும்பணி யுரத்தில் வாழ்வு வளந்தரப் பெறுசை வத்துத்
திருநலம் செழிக்கச் செய்யும் திருப்பெருந் தேவி வாழி.

இன்றமிழ் நாடு தோறும் எழில்மலா யாசிங் கப்பூர்
சென்றுசென் றெங்கள் சைவத் திறனுரைத் தவரை யெல்லாம்
வென்றுவென் றிலங்கும் வல்ல வித்தகி இன்று சைவ
மன்றுறைக் குறுபே ராசி ரியையும்நீ யானாய் வாழி.

நாவலர் மரபில் வந்த நாநலச் செல்வி சைவக்
காவல ராக நின்று காண்கின்றோம் நின்னை உண்மைப்
பாவலர் பாட வல்ல பணிபல புரிந்த தாலே
மேவுயர் நலங்கள் பெற்று மிகுநெடுங் காலம் வாழி.

செந்தமிழ்ச் செல்வி வல்ல திருமுறைச் செல்வி நல்ல
சிந்தனைச் செல்வி துர்க்கை தெரிந்தருள் பொழியும் செல்வி
மந்திர சக்தி வாய்ந்த மங்கையர் திலகம் எங்கள்
வந்தனைக் குரிய தேவி யருண்மொழி அரசி வாழி.

மனநலம் படைத்தாய் வாழி மதிநலம் படைத்தாய் வாழி
இனநல முடையாய் வாழி இறையருட் கொடையே வாழி
தனியொரு மகளாய்ச் சைவத் தமிழ்வளர்க் கின்றாய் வாழி
அனைவரும் வாழ்த்த வாழி ஆண்டவன் அருளால் வாழி;

பாடியவர் :
கவிஞர் வி. கந்தவனம்
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

சிவமயம்

அண்மையில் மலேசியா வாழ் சைவத்தமிழ் மக்களின்
அழைப்பினை ஏற்று அங்குச் சென்று
சைவச் சொற்பொழிவுகள் பலவற்றை நிகழ்த்தி
ஈழத்திற்குப் பெயரும் புகழும் ஈந்த
சிவத்தமிழ்ச் செல்வி, சைவப் புலவர், பண்டிதை

**தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு**

**வட்டுக்கோட்டைச் சைவ இளைஞர் சிவநெறிச் சங்கம் அளித்த**

# வாழ்த்துப் பா

## வெண்பா

சிவநெறியைப் போற்றித் தெளிதமிழிற் றேய்ந்தே
அவநெறியி னகற்றும் அம்மை — தவநெறியைச்
செந்நாப் புலத்தோடுஞ் செப்புஞ் சிவச்செல்வி
எந்நாக் கடங்கா திசை.

## எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மல்லாகுஞ் செய்தவப் பயனுய்த் தோன்றி
மாணபுடனே தமிழோடு சைவங் கற்றே
எல்லாரும் போற்றநிதம் மேடை ஏறி
எழிலார்ந்த தமிழினிலே சைவம் பேசி
அல்லாகும் அறியாமை களைந்தே உண்மை
அறிவுணர்த்தி வாழ்வாங்கு வாழச் செய்யுஞ்
சொல்லாருந் தங்கம்மா அப்பாக் குட்டி
சோதிவளர் விளக்காக நிதமும் வாழி!

## கட்டளைக் கலிப்பா

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையர்
செகத்தில் யார்க்குமஞ் சாதநன் னேர்மையர்
நிமிர்ந்த ஞானச்சி றப்புமஅ மைந்தவர்
செந்தமிழ்த் திறம் நன்கனம் வாய்த்தவர்
அமர்ந்த சத்திக் கருந்தொண்டு பூண்டவர்
அல்லொ டும்பகல் ஓய்வில் உழைப்பினர்
நமர்க்கு வாய்த்திடு நல்லொளி மாமணி
நங்கை தங்கம்மா என்றென்றும் வாழ்கவே.

## அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

தங்கம்மா அப்பாக் குட்டி தவத்திரு வனையார் வாழி!
தங்கம்போ லுளமும் நல்ல தமிழறி புலமும் வாழி;
வங்கத்தின் கடலே போல வளர்சைவ உணர்வு வாழி!
எங்கெங்கும் புகழை வீசி இருந்திவர் நெடுநாள் வாழி!

## கலிவிருத்தம்

வாழி சைவ மணங்கமழ் வாழ்வினர்
வாழி நம்மவர் வாழஉ ழைப்பவர்
வாழி ஈசனின் இன்னருள் வாய்த்தவர்
வாழி வாழிபல் லாண்டுகள் வாழியே!

வட்டுக்கோட்டை
15-1-72

சைவ இளைஞர்-சிவநெறிச் சங்கம்

யாத்தவர்: க. சொக்கலிங்கம் (சொக்கன்), M. A., யாழ்ப்பாணம்

உ
சிவமயம்

# ஓம் நமோ சிவானந்தாய

அம்பொன்மணி நூல்தாங்கா(து) அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்த திலகவதியார் திருக்கதைதான்
எம்பொன்மணித் திருநாட்டில் இறந்தொழியா வகைவாழும்
செம்பொன்னனை தங்கம்மா சிவக்கொழுந்தே வருகவே!

தம்பியார் உளராகத் தாம்வாழ்ந்த தகைமையினல்
எம்பிரா னடிவழுத்தும் இன்சைவம் வாழவைத்த
உம்பரார் தொழுதேத்தும் உயர் நங்கை வாழ்வுதனை
எம்மனேர் மனத்திருத்தும் எழிலுருவே வருகவே!

திருவதிகைத் திருப்பதிபால் திருத்தொண்டு புரிந்ததிறம்
பெருவழக்கிற் பொறித்துவைத்தார் சேக்கிழார் பெருந்தகையார்
திருபெருகு தெல்லிநகர்த் துர்க்கையம்மன் திருத்தொண்டில்
அருள்பெருகும் அழகுகதை ஆரம்மா உரைத்திடுவார்!

உழவாரப் படைகொண்டு உயிர்வாழும் தொண்டேற்ற
அருளாளன் அப்பர்பணி அருகாமற் காக்கநிற்கும்
பெருவாழ்வு தேர்ந்தெடுத்த பெண்ணரசே தங்கம்மா
திருவாளன் திருவருளே திருவாகத் துலங்குதியே!

ஐந்தெழுத்தின் அருமைதனை அவனியெங்கும் அறிவுறுத்திப்
பைந்தமிழின் பெருமையினைப் பரப்புமுந்தன் பெரும்பணிக்கு
எந்தமது பேரன்பும் சிவானந்தர் திருவருளும்
தந்தும்மை வரவேற்கும் தபோவன வாழ்த்திதுவே!

திருமதி செல்வம் கல்யாணசுந்தரம்

சிவானந்த தபோவனம்,
திருகோணமலை,
18-01-1974.

உ

சிவமயம்

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

சேவையைப் பாராட்டி

பிரமாதீசஹூ தைமீ 13ஆம் நாள் (26-1-1974) சனிக்கிழமை


கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில்

அகில இலங்கை இந்து மாமன்ற அங்கத்துவ சங்கங்களும்
இன்னும் பல இலக்கிய, கலாசார, சமய தாபனங்களும் ஒருங்கிணைந்து
எடுத்த விழாவின்போது அன்னாருக்கு வாசித்தளிக்கப்பட்ட


# வாழ்த்து மடல்

தங்கமும் பொன்னும் பொங்குநல் வளமெலாம்
மங்களத் தொடுவளர் துங்கமல் லாகத்து
அப்பாக் குட்டி அருந்தவப் புதல்வி
இப்பார் வாழ்வெலாம் இயற்றமிழ் வாழ்வெனக்
கொண்டுசெந்தமிழும் குணத்திருமுறையுடன்
பண்டுறு சைவமும் பாங்கொடு வளர்க்கும்
செறிதமக்குரித்தென நினைந்து முனைந்துசெய்
பொறிதழு வியவுயர் புனித வதியெனப்
பாவலர் நாவலர் பண்பினர் அன்பினர்
யாவரும் வாழ்த்தும் யானுடைத் தவத்தினர்
அமிழ்தினும் இனிய தமிழும்ஆங் கிலமும்
இமிழ்திரை நாப்பண் இருப்பவர்க் குரைக்க
வல்லவர் ஆகி மாட்சியா சிரியர்
எல்லவர்க் கும்பயிற் றியல்புறு கல்லூரித்
தேர்வடைந் திறைவியாய்த் திகழ்பவர் பண்டிதர்
தேர்விலும்வென்றவர் சிவநெறிப்புலமையும்
எய்தினர்சித்திநன் றிலங்கைக்கொழும்பொடு
பைதிரத் தெல்லிப் பழைப்பெரு மக்கள்
கல்லூரித் தமிழ்க் கணக்காய் வாளராய்
நல்லூ ரினர்புகழ் நவிலப் போதக
காரியத் தினராக் கண்ணியம் சான்ற
சீரிய தவத்தார் சித்தாந்தப் பெரு
நூலறி வுடையார் நுண்மாண் நுழைபுலம்
சாலவு குளத்தினர் சைவமே உயிரா
வாழ்வினர் தாழ்விலா வண்மையார் பேச்சால்
வாழ்வினை விழையா மாட்சியார் மலேயா
தமிழகம் எங்கும் சைவத் தமிழ்ச்சொற்
பொழிவுசெய் தெவரும் போற்றத் திகழ்பவர்
ஒழிவற நிறைந்தசை வொழிந்துறை சிவனடி
வழிபடும் கரத்தர் மனத்தர் சிரத்தர்
வெற்றித் திருநிலை விளங்குநற் பணியெலாம்
முற்றித் திகழ்வுற முடித்துக் களிப்புறும்
பெற்றியர் தருமம் பெருமையிற் புரிந்தூர்
சுற்றிலும் உவர்மிகத் தொழுதுநன் றெய்தப்
பொருளும் மொழியும் பொழிந்துணர் வகல
அருளும் அன்பும் அமைதியும் அடையத்
திருமுறை மடம்எனத் தெளிவகம் சோற்றினர்
பெருநெறி தழுவிய நூலு முதவினர் பால
ஞானே தயமெனும் நற்சபா மண்டபம்
தானே கட்டுவித் தவர்தமக் கிணையில்
சித்தாந்த ஞானகரம் செஞ்சொற் செம்மணி
சிவத்தமிழ்ச் செல்வி சீர்ச்சைவ தரிசினி
திருமுறைச் செல்வி திருவாசகக் கொண்டல்
வருமிவற் றொடுபிற வழங்குபல் பட்டம்
மருவிய தமிழ்த்திரு வடிவாய் ஒளிர்பவர்
மண்புகழ் அண்ணா மலைப்பல் கழகமும்
பண்புகழ் ஈழத்துப் பரசிவ னடியார்
திருக்கூட்டமும்நல்லூர்த் திருஞானசம்பந்தர்
பெருக்கூட் டணிமடம் பெம்மான் மதுரை
ஆவணி மடம்ஆ வடுதுறைத் திருமடம்
மேவரும் மலேசியா வீளைபல சங்கமம்
பாராட் டியபெரும் பாக்கிய வதியாம்
கராட் டியவன் கரமலர்த் திருமகள்
சொற்பொருட் பொழிவுத் தொகைபல பெருது
நற்பெரும் புகழெனும் நன்மகட் பெற்றுங்
கன்னியா மன்னிப் பொன்னியை வென்றவர்
முன்னிய கருணையால் முழுதுணர் ஞான
கச்சியன் மேயமெய் கண்டார்சந் தானம்
இச்சகம் போற்ற எழில்சிவ நூற்பொருள்
விரித்துரை செய்வுழி மெய்யுணர் சீடருட்
பிரித்துவே றுரையிசை பெற்றசீர் மிக்கவர்
அந்தமில் புகழுடை அகில இலங்கை
இந்துமா மன்றமும் ஏனைப்பல சபைகளும்
தாபனம் பலவுடன் தனிப்பெரி யார்களும்
சோபனம் எடுக்கும் யாவரும் வாழ்த்தும்
வாழ்கதங் கம்மையார் வாழ்க
சூழ்கதிர் மதிவாழ் துணையும்நன் கினிதே.

"சிவம்"



1975இல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில்
அகில இலங்கை இந்துமா மன்றத்தினர்
பொன்னுடை அணிவிக்கின்றனர்.



ஹரிதாஸ் சுவாமிகளுடன் சிவத்தமிழ்ச்செல்வி.

சிவமயம்

பண்டிதை, சைவப்புலவர்,

சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானகரம், செஞ்சொற் செம்மணி

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்க ஆதரவில் மாண்புமிகு மலேசியா நாட்டில் சைவநெறிச் சொற்பொழிவுகள் ஆற்றித் தாய்த்திரு நாடாம் ஈழம் மீளுங்கால் சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தார் வழங்கிய

# பிரியாவிடை வாழ்த்து

### ஆசிரியப்பா

பூந்தண் சலதி புடைசூ ழுலகிற்
றீந்தண் புனலும் செய்சால் வளனும்
ஏய்ந்தெங் கெவனு மெய்தற் கரியநல்
லாய்ந்த வின்ப மடைதற்கோ ரிடமாய்
வாய்ந்த வீழ வளநா டதனில்!

நகுல கிரியனும் நல்மா விட்டனும்
அரிமர்த் தனியி னருளும் நிலவச்
சீர்சால் சிறப்பும் ஏர்சால் வளனும்
தெய்வப் புலமையோர் சேர்தற் கியைந்த
வரமலி யாழ்நகர்க் குளமண் காவில்!

அமிழ்தினு மினிய தமிழ்செய் தவமும்
அப்பாக் குட்டியும் தையற் பிள்ளையும்
பண்ணிய புண்ணிய பயனுஞ் சேர்ந்து
கருவிற் கலையி னுருவா யுதித்த
திருமிகு செல்வி தங்கம் மாநீ

இளமையிற் கல்லெனு மின்னெறி போற்றிக்
கற்கக் கசடற வெனும்பெருங் கவிக்கோ
ருத்தம விலக்கா யுற்ற பாங்கும்
தென்தமிழ்ப் பரப்பும் வடநூற் கருத்தும்
நன்குணர்ந் தோங்கிய நவையில் புலவ!

இளைஞர்க டமக்குக் கலையமு தாக
நன்னூ லாய நன்னூல் பலவும்
தொன்னூல் முதல தொன்னூ லனைத்தும்
திருக்குறள் முதலாஞ் சிறப்பு நூல்க
ளுரைத்துநன் மாணவர்க் குவக்கும் ஆசிரிய!

பசுமரத் தாணி பதிந்தது அன்னச்
சொல்லும் பொருளும் உவமமுஞ் சேரக்
கண்டுணர் பொருளெலாம் கண்டென விளிக்கக்
கடன்மடை திறந்தென முகின்மழை பொழிந்தெனத்
தடைபடா துரைக்குந் தனித்தமிழ் நாவல!

ஆன்றோ ராதி சான்றோ ரவையில்
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனருள்
தொல்காப் பியமும் தொல்காப் பியங்களும்
பல்காற் பயின்ற சொல்லே ருழவர்
நல்பேர் விருதுகள் நல்கிப் போற்றினம்!

நின்பல சீரும் நிலத்தினி லாரும்
அன்புட னுரைத்தல் கேட்டின்புற் றனமால்
தேனைப் பழிக்குந் தமிழ்க்கடற் குளித்த
ஏனைப் புலவரு மித்திறம் புரியின்
வானைப் பழித்திவண் மன்பதை மகிழ்மே!

சைவம் வளர்த்திடு சிலாங்கூ ரிலங்கைச்
சைவர் சங்க அழைப்பிற் கியைந்து
எங்கட் கெல்லா மிரும்பய னளிக்கத்
துங்கப் புலமைச் சொற்பெருக் காற்றி
நீர்நிறை புலமென யாமுளந் தழைத்தோம்!

தமிழி ணர்வந் தழைத்திடு சான்றோய்!
''உவப்பக் கூடி உள்ளப் பிரிதல்''
அனைத்தே புலவ ராய கடமால்
சென்றுநீ வருக! சீர்பெற் றுயர்க!
இன்னிசை சிவமணி இனிதே வாழி!
வாழிய நாளும்! வாழிய நீடென!
வல்லான் சரணம்! வழுத்துவா! மாதோ!

### விருத்தம்

சீரார் கலைஞர் திருமதியோ தெளிதீந் தமிழின் பொருட்டுறையோ
சீரார் புவிமங் கலந்தானோ நினைந்து புரிந்த பெருந்தவத்தால்
தேரார் பணியப் பார்களிக்க நிறையுஞ் சைவ நெறிதழைக்க
பாரார் பரவுந் துர்க்கையன்னை அருள்பெய் திடநீ வாழியவே.

### நேரிசை வெண்பா

செல்வத்தாற் கல்வியினாற் செந்தமிழ்போற் றுந்திறனால்
மல்குபுகழ் வாய்ந்தநின் மாண்மதியால் — தொல்லை
அணிகிலாச் சீர்த்தி அணிந்து பயவம்ச
மணிவிளக்காய் வாழ்க மகிழ்ந்து.

இங்ஙனம்

கோலாலம்பூர், 21-4-72

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம்

உ
சிவமயம்

தெல்லிப்பழை, யூனியன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியை
பண்டிதர், சிவத்தமிழ்ச் செல்வி

# தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

7-1-77 இல் இளைப்பாறியதை முன்னிட்டு
அன்னாரின் சேவை நலம் பாராட்டி வழங்கிய

# வாழ்த்து மடல்

---

## வெண்பா

அன்புநிறை தங்கம்மா அம்மை அருவுயிர்கள்
இன்பமுறத் தொண்டுநலம் ஏற்றமுற — மன்புவியில்
ஓங்கிப் புகழ்வளரப் பல்லாண்டு பண்புயரும்
பாங்குடனே வாழ்க பரிந்து.

## அகவல்

திகிரிசூழ் உலகில் உடலுயிர் உறுபயன்
நுவலும் நூலுரை நுட்பம் ஓர்ந்து
ஞானம் பெற்று ஊனம் ஒருவுதல்
எனுமுறைக் கெடுத்துக் காட்டாய் என்றும்
தேங்கமழ் சோலைத் தெல்லி நகர்சார்
வந்தவ தரித்த நந்தா விளக்கே
தங்கம் மாவெனும் தங்கப் பெயரொடு
அங்கணன் புகழ்விரி அருளொளி அம்மையே!
மலரடி துர்க்கை மனமல ரிருத்திப்
பல்புகழ் பூணும் நாவலச் செல்வீ!
தொல்புகழ் தெல்லி யூனியன் கல்லூரி
நலமுறப் பன்னி ராண்டுப் பதவியில்
நிகரிற் தமிழுயர் சைவா சிரியத்
தகவிற் றிகழ்ந்து தகைமை மாணவர்
பெற்றுயர் வெய்தப் பொற்புற நின்றனை!
ஈண்டெம் தவத்தால் எம்முடன் பயின்ற
திண்டரும் திறத்தையும் நெஞ்சிற் குறித்தனம்!
சீலம் நோன்பு செறிவு அறிவில்
ஞாலம் நின்புகழ் ஓதலும் குறித்தனம்!
கலையமு தளிக்க அலைகடல் கடந்ததும்
நிலைபெறு பட்டம் பற்பல பெற்றதும்
தமிழக மாதர் சைவப் பேரவை
அமையத் தலைமை தாங்கி நின்றதும்
எம்கல் லூரியின் எழிற்பெரும் பேறும்!
காதலுய கருத்தும் கடவு ளிடமே
பொருந்த வைத்துப் பொலிதலும் கண்டனம்!
நலம்மலி பொதுநலப் பணியும் பண்பும்
அருளுடன் போற்றி ஒவ்வொரு மூச்சையும்
செவ்விய வேளையில் உய்க்குந் திறனும்
உட்புறத் தூய்மையும் கொண்டநின் வாழ்வை
நட்புறக் குறிக்கும் நற்பத வேளை
சமய நற்பணி உன்னினை போலும்
அண்மையில் ஓய்வினை விளைந்தனை! எனினும்
நீதான்,
ஞால முய்ய நற்றமிழ் வாழச்
சைவந் தழைக்குறத் தவநிலை உயர்வுற
ஆசிசெய் தருண்மதி! ஆசிசெய் தருண்மதி
மன்ற நாதன் மன்னிய அருளொடு
என்று மெழில்பெற் றுயர வையம்
வாழி! யூழி வாழிபல் லாண்டே.

மங்களம்.

இங்ஙனம்
ஆசிரியர்களும், அலுவலகப் பணியாளரும்

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை,
18-2-1977.

உ

குகமயம்

மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்கம்

நுணசை முருகமூர்த்தி கோவில் உற்சவ காலங்களில்
சமயச் சொற்பொழிவு நிகழ்த்திய

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப்

பாராட்டு முகமாக எடுத்த விழாவில்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
சங்கத்தின் சார்பில்
''செஞ்சொற் கொண்டல்'' என்ற பட்டத்தை நல்கி வழங்கிய

# வாழ்த்துரை

---

'கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு' என்ற வாக்குக் கிலக்கியமாய்த் திகழ்பவர்கள், செந்தமிழ்ச் செல்வி பண்டிதை திரு. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

தாய்நாட்டிலும், சேய்நாட்டிலும், மலேசியா முதலிய தமிழ் நிலங்களிலும் உள்ள சைவசமய ஸ்தாபனங்களிலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் பண்டிதை அவர்கள் செய்த சைவப் பிரசங்கங்கள் பல ஆயிரக் கணக்கான வைகள். ஆங்காங்கு அவர்களுக்கு வழங்கிய பட்டங்களும் பாராட்டுக்களும் பிரசித்தமான வை.

பண்டிதை அவர்களின் புகழைக் கேட்குந்தோறும் கேட்குந்தோறும் யாழ்ப்பாணம் ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பதொரு நிலையில் பூரிப்பதை ஒரு அளவுக்கு வெளிப்படுத்தும் முகமாக,

மாதகல் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் பெருவிழா எடுத்து, இதுவரை பண்டிதை அவர்களுக்குச் சைவ உலகு வழங்கிய பட்டங்கள் அனைத்தையும் ஞாபகப்படுத்தி அவற்றின் ஏகப் பிரதிநிதியாகி விளங்குவதாக என்று

''செஞ்சொற் கொண்டல்''

என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டுவதைப் பாராட்டி வாழ்த்துவோமாக.

திருநெல்வேலி
19-4-1978

சி. கணபதிப்பிள்ளை

உ

சிவமயம்

# "நித்திய செல்வி தங்கம்மா"

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

திருமுறை மடாதீன சிவத்தமிழ்ச் செல்வியே!
பெருமைசேர் மணிவிழா போற்றிநாம் வாழ்த்துவமே (திரு)

அநுபல்லவி

தூயசெந்தமிழ் ப்ரசங்க துர்க்கா துரந்தரியே!
ஆய சைவதத்துவங்கள் அனைத்து மளிப்பவளே (திரு)

சரணங்கள்

தனக்குத்தன் னிகரற்ற தனிப்பாணியை வகுத்தே
வனப்பு மிக்கநடையில் வண்டமிழ் பொழிப்பாயே!
அனைத்து தமிழ்கூறும் அன்புல கெங்கணுமே
நினைப்பரு நிலைபெற்ற நித்தியசெல்வி தங்கம்மா! (திரு)

ஆளுமே பெண்மை அரசெனப் புகன்றவண்ணம்
நாளுந் துர்க்காசபையின் நடுநாயகியாய் நிலைத்தே
நீளவே சுகபெலமாய் நீணிலத்தில் வாழ்ந்திடவே
ஆளுந் துர்க்காதேவியை அனுதினமும் துதித்தே. (திரு)

கட்டுவன்
1-9-1984

வி. ரி. வீ. சுப்பிரமணியம்
ஓதுவார்மூர்த்தி

# 2. வாழ்த்துரைகள்

உ

# தங்கம்மா தந்த தமிழ்

அன்பு நிறைந்த அருமைப் பண்டித இரத்தினம் அவர்களே,

வணக்கம். நீங்கள் எம்பால் விடுத்த சொற்பொழிவு நூல் கிடைத்தது. அமுதனைய கருத்துக்களை ஆரத் துய்த்தோம். சைவத்திற்குப் பல துறையில் விளக்கங் கொடுக்கின்றது. மாணுக்கரிடத்தும் பெரியோரிடத்தும் இருக்கும் தகுதி வாய்ந்தது. இந்நூல் போலப் பல நூல்களை எழுதி வெளியிட்டுச் சைவத்தை விளக்கி யருள்க.

நந்தாச் சுவையமுது நாணித் தலைவணங்கச்
சிந்தா மணிபோற் திகழுமாற் — சிந்துலகிற்
பொங்குஞ் சிவநெறிக்குப் புத்துயிர்ப்பு நல்கிவரும்
தங்கம்மா தந்த தமிழ்.

*1974 தைமீ* நவாலியூர், பண்டிதர் சோ. இளமுருகனார்

---

உ

# நாவலருக்குப்பின் சிவத்தமிழ்ச் செல்வி

... ......நல்லைநகர் நாவலர் பெருமான் அன்று சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இலங்கையில் மட்டுமல்லாமல் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அத்தொண்டைத் தொடர்ந்து செய்வதற்குத் தமிழ் அன்னை இன்று சிவத்தமிழ்ச் செல்வியை அருளியிருக்கிறுள் ...............

தினபதி நிருபர்

---

உ

# அகில இலங்கை இந்துமாமன்றப் பெருவிழாவில் ........

## சரீர சம்பத்தும் சாரீர சம்பத்தும் வாய்க்கப்பெற்றவர்

## சிவத்தமிழ்ச் செல்வி

சைவத்திற்கும் தமிழுக்கும் பாராட்டு விழா நடைபெறும் இவ்வேளையில் அவை இரண்டிலும் இன்று பற்று ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் சிவமயச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் கதாகாலட்சேபந்தான். உள்ளத்தில் தூய்மை இருப்பின் எல்லாவற்றிலும் வெற்றியீட்டுவது நிச்சயம். இதற்குத் தங்கம்மா எடுத்துக்காட்டாக விளங்குகிறுர். சைவம் மேன்மேலும் வளர இவ்விழா ஒரு அறிகுறியாகும். சங்ககாலத்தில் பெண்களின் தொண்டு அளப்பரியதாக இருந்தது. சமயத் தொண்டிலே பெண்களின் பணிக்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டார் செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா. சரீர சம்பத்துடன் சாரீர சம்பத்தும் உடையவர் இவர். இன்னும் பல்லாண்டுகள் வாழ வேண்டும். சிவத் தொண்டு செய்யவேண்டும்.

நல்லை ஞானசம்பந்த ஆதீன குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள்

---

உ

## ஈழத்து மக்களை மதுர ஓசையாற் கவர்ந்தவர்

## சிவமயச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

—..........சைவத்துக்கும் தமிழுக்கும் உறவு ஏற்படுத்தியவர் தங்கம்மா அப்பாக்குட்டி. சைவ மதத்தவர் அனைவருக்கும் பெருமை வாங்கித் தந்த அவர் ஈழத்து மக்களைத் தமது மதுர ஓசை நயத்தாற் கவர்ந்திருக்கிறுர்.................

நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம்

சிவமயம்

# சைவ சமயம் பரப்பும் செஞ்சொற் செம்மணி

பக்திரசம் சொட்டும் தமது சமயச் சொற்பொழிவுகளால் மக்களின் மனதை வெகுவாகக் கவர்ந்து வரும் செஞ்சொற் செம்மணி, சிவசெந்தமிழ்ச் செல்வி, பண்டிதர், சைவப் புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மறுபடியும் சிங்கப்பூருக்கு வருகையளித்திருக்கிறார்.

குடியரசில் வாழும் சைவ மெய்யன்பர்களின் சார்பில் சைவ நெறியாளர் திரு. ப. சுந்தரமூர்த்தி அவர்களின் அழைப்பின் பேரில் இம்மாதம் 8ஆந் திகதி இங்கு வருகையளித்திருக்கும் சிவசெந்தமிழ்ச் செல்வி அவர்கள் இம்மாதம் முழுவதும் குடியரசிலுள்ள பல்வேறு கோவில்களில் சமய இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்த உள்ளார்கள்.

ஆண்களுக்கே உரிய தனித்துறையாக விளங்கும் சமயச் சொற்பொழிவுத் துறையில் சிவசெந்தமிழ்ச் செல்வி அவர்கள் எவ்வாறு முன்னணியில் நின்று பிரகாசிக்க முடிகிறது? இக் கேள்விக்குப் பதில் கூறிய அவர் சமயத் திருத்தொண்டு என்பது ஆண்களுக்கு மட்டுமுள்ள துறையாகும் என்பதை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். ஆனால் இத்துறையில் தமக்கு எழுச்சியும், உணர்ச்சியும், ஆர்வமும் பிறந்ததற்கான காரணத்தை அவர் விளக்கினர்.

ஸ்ரீ துர்க்கையை உபாசனா மூர்த்தியாகக் கொண்ட அம்பாள் கோவில் ஒன்றின் நிர்வாகக் குழுவின் தலைவி. அவர் சமய உணர்வுக்கு அடித்தளமிட்டு சான்றோர் பலரை உருவாக்கித் தந்த பெருமை கொண்ட யாழ்நகரிலுள்ள இராமநாதன் கல்லூரி அவர் கல்வி பயின்ற இடம்.

ஐம்பத்துமூன்று வயதினரான சிவசெந்தமிழ்ச் செல்விக்கு சைவ சமயம் வளர்க்கும் பீடங்களாக விளங்கும் தமிழகத்திலுள்ள தருமபுரம் திருவாவடுதுறை ஆதீனங்களோடு இருபது வயது முதலே ஆழமான தொடர்பிருந்திருக்கிறது. பெரிய பெரிய சமய வல்லுநர்கள் மட்டுமே சொற்பொழிவு ஆற்ற அனுமதிக்கப்படும் இந்த ஆதீனங்களிற் சொற்பொழிவுகள் நிகழ்த்தி தமது செஞ்சொல் வன்மையால் சமய அறிஞர்களின் மனதைக் கவர்ந்து ஆதீனக் குரவர்களின் பாராட்டுதலைப் பெற்றவர் சிவசெந்தமிழ்ச் செல்வி.

உலகத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் நிலைக்களனாக விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் பேராசிரியர்கள் இலக்கிய ஆராய்ச்சி மாணவர்களுக்கு மத்தியில் தமது 30ஆவது வயதிலேயே சிலப்பதிகாரத்தைப் பற்றிய ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தி அறிஞர்கள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியவர் அவர்.

சென்னை சைவ சித்தாந்த சமாஜம் 1973ஆம் ஆண்டில் ராமநாதபுர மாவட்டம் சிவகெங்கை நகரில் நடத்திய சமய மாநாட்டின் மாதர் பிரிவுக்கு நமது சிவசெந்தமிழ்ச் செல்வி தலைமை வகித்தும் இருக்கிறார். இதோடு அரசாங்கப் பள்ளி ஒன்றில் மூத்த ஆசிரியராகவும் இருக்கிறார். முப்பதாண்டு சொற்பொழிவு ஆற்றிய பழுத்த அனுபவமும் கூட.

இத்தகைய ஆழமும் வலுவான அனுபவமும் கொண்ட பின்னணியுடைய அவர் சைவசமய நெறி பரப்பும் மங்கையர்த் திலகமாகத் திகழ்வதில் வியப்பில்லைத்தான்.

சிவசெந்தமிழ்ச் செல்வியின் சிறப்பான சொற்பொழிவுகள் நான்கு தொகுதிகளாய் நூல் வடிவம் பெற்றிருக்கின்றன.



1974ல் கோலாலம்பூர் கலாமண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி
எழுதிய பத்துச் சொற்பொழிவுகள் வெளியீட்டு விழாவில்.



மலேசியாவில் "திருவாசகக் கொண்டல்"
பட்டம்பெற்ற காட்சி

இச் சமய பண்டிதையின் இதயத்தில் மும்மணிகளான மூன்று நூல்கள் இடம்பெற்றிருக்கின்றன. பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம் ஆகியவை அவை.

இதற்கான காரணம் என்ன? அவர் பதில் கூறினார்.

''சைவ சமயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் — அதன் வழி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டுமானால் பெரிய புராணத்திற் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ள திருத்தொண்டர்களின் வாழ்க்கைதான் நமக்கு உரிய வழிகாட்டியாக விளங்கும்.''

''கம்பராமாயணம் மிகப் பெரிய இலக்கிய கருவூலம். வாழ்க்கையில் ஏற்படும் துன்பம், துயரம், அவலம் அகற்றும் அருமருந்து கந்தபுராணம்.''

இதோடு சிவசெந்தமிழ்ச் செல்வி சிங்கைக்கு வருவது நான்காவது தடவையாகும். இந்த நான்குமுறை வருகையிலும் அவர் நமது குடியரசிலுள்ள தமிழர்களைப்பற்றி என்ன நினைக்கிறார்?

மிகவும் நாகரீக வளர்ச்சி பெற்ற சிங்கப்பூரில் வாழும் நமது மக்கள் தங்களின் சமயப் பண்பாட்டைக் காத்து வருகிறார்கள். கூடுமானவரை சமயநெறி வழுவாது நடக்கிறார்கள். கோவில் வழிபாடும், கோவில் நிர்வாகமும் சிறப்பாக நடைபெறுகிறது. சமய உண்மைகளை அறிவதிலும் சொற்பொழிவுகளைக் கேட்பதிலும் மக்கள் ஆர்வமுடன் இருக்கிறார்கள். சமய அனுஷ்டானங்களையும் விரதங்களையும் அனுஷ்டித்து வருகிறார்கள்.

சிங்கப்பூர் ஒரு சமயச் சார்பற்ற நாடாக இருந்த போதிலும் சமய வளர்ச்சிக்கு அரசாங்கம் ஆதரவளித்து வருவதையும் என்னால் உணர முடிகிறது என்று அவர் கூறினார்.

முரசின் வழியாக இங்குள்ள தமிழர்களுக்கு வேண்டுகோள் ஒன்றையும் அவர் விடுத்தார்.

பெற்றோர்களுக்கு அவர் சொன்னார்: 'பெரும்பாலும் தெய்வ நம்பிக்கையும் சமயப் பற்றும் வீட்டிலேதான் உருவாக்கப்படுகிறது. உங்கள் பிள்ளைகள் நமது சமய பண்பாடு, கலாசாரத்தை மறக்காது கடைப்பிடித்தொழுகி நடப்பதற்கு நீங்கள்தான் பாதையமைத்துத் தரவேண்டும். உங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் ஆத்திகர்களாகவோ நாத்திகர்களாகவோ மாறுவது உங்கள் கரங்களில்தான் இருக்கிறது. ஆகவே பெரியவர்களாகிய நாம் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும்.'

பிள்ளைகளுக்கு அவர் பின்வருமாறு கூறினார்:

''நீங்கள் மிகவும் நாகரிகமான நாட்டில் நாகரீகமான சூழ்நிலையில் வாழ்கிறீர்கள். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதை உணர்ந்து உங்கள் பெற்றோரின் சொற் கேட்டு ஒழுக்கப் பண்பாட்டைக் காத்து நின்று நாட்டின் நல்ல குடிமக்களாக நீங்கள் விளங்க வேண்டும். இதுதான் நமது சமுதாயத்துக்குப் பெருமைதரும்.''

1977 ஒக்ரோபர் — எப். எம். (தமிழ் முரசில்)

# சைவத்தொண்டுக்கு நாவலருக்குப்பின் சிவத்தமிழ்ச் செல்வி

"நல்லை நகர் நாவலர் பெருமான் அன்று சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இலங்கையில் மட்டுமல்லாமல் தமிழ்கூறும் நல்லுலகு எங்கும் அந்தத் தொண்டைத் தொடர்ந்து செய்வதற்குத் தமிழ் அன்னை இன்று சிவத்தமிழ்ச் செல்வியை அருளியிருக்கிறாள்." மேற்கண்டவாறு கூறிச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவையைச் சைவப் பிரமுகர்கள் பலர் மனதாரப் பாராட்டினார்கள்.

அகில இலங்கை இந்துமாமன்றமும், அதன் அங்கத்துவச் சங்கங்களும் பல்வேறு இலக்கிய கலாசார நிறுவனங்களும் தனிப்பட்ட பெரியார்களும் ஒருங்கிணைந்து நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு "சிவஞான வித்தகர்" என்று பட்டமளித்தும் பொன்னாடை போர்த்தும் அவரைக் கௌரவித்தனர்.

விழா கடந்த சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் வித்தியாதிபதி திரு. கி. லக்ஷ்மணன் மலர் ஒன்றை வெளியிட்டார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் உட்படப் பலர் விழாவில் உரை நிகழ்த்தினார்கள்.

விழாவிற்கு முன்னதாகப் பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்தில் விசேஷ வழிபாடு நடைபெற்றது. இந்த வழிபாட்டின் பின்னர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆலயத்திலிருந்து விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். விழாவில் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

"சைவத்திற்கும் தமிழுக்கும் உறவை ஏற்படுத்தியவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. சைவ மதத்தவர்கள் அனைவருக்கும் பெருமை வாங்கித்தந்த அவர், ஈழத்து மக்களைத் தமது மதுர ஓசை நயத்தால் கவர்ந்திருக்கிறார்." இப்படி அவர் கூறினார்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் பாராட்டு


ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் பேசுகையில், "இந்த விழா சைவத்திற்கும் தமிழுக்குமான பாராட்டு விழாவாகும். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் கதாகாலட்சேபங்களால் தமிழுக்கு ஒரு ஏற்றம் ஏற்பட்டது. இந்த விழா, சைவம் வாழப் போகிறது என்பதற்கு ஒரு அறிகுறியாகவும் அமைந்துள்ளது. இவரைப்போலவே ஏனைய பெண்களும் சமய விஷயத்திற் பங்குகொள்ள முன்வரவேண்டும்." என்று கூறினார்.

திரு. வே. க. கந்தசாமி பேசுகையில், "18 வயதில் தமது தொண்டினை ஆரம்பித்த இவர், தமது 50ஆவது ஆண்டுவரை அதைத் தொடர்ந்து செய்துவருகிறார், தமிழகம், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்குச் சென்று ஈழத்துக்கு மட்டுமன்றிப் பெண் இனத்திற்கே பெருமை தேடித்தந்துள்ளார் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி" என்று கூறினார்.

1974ஆம் ஆண்டு — எஸ். அருளானந்தம் (தினபதியில்)



கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபத்தில்
நடைபெற்ற "கந்தபுராணச் சொற்பொழிவு"
நூல் வெளியீட்டு விழாவுக்கு
அழைத்துச்செல்லப்படுகிறர்.



திருமுருக கிருபானந்தவாரியாருடைய தலைமையில் உரையாற்றுகிறார்.

உ
சிவமயம்

# மல்லாகம் தந்த 'தங்கம்'

அடக்கமும், பொறுமையும், சகிப்புத் நன்மையும், தியாக சிந்தையும் இயற்கையாகவே பெற்ற மகளிர் தம் அறிவாற்றலையும் நேரத்தையும் சேவை மனப்பான்மையோடு சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தினர்களானல் அவர்களது தொண்டின் பெருமை நாட்டிற்கும் வீட்டிற்கும் அளப்பரியதாகும்.

### சிந்தையிற் சிறப்புக் கொண்டார்

இந்த உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு மல்லாகம் தந்த 'தங்கம்' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மகாத்மாகாந்தி, விவேகானந்தர் போன்ற பெரியார்கள். மகளிர் சிலர் தம் நலத்தையும் தம் வாழ்க்கையையும் நாட்டின் நலனுக்காக நாட்டுக்கு நன்மை செய்யத் தியாகம் செய்ய வேண்டுமெனக் கூறினர். அப்பெரியோர் வாக்குகளைத் தன் சிந்தையிற் சிறப்புறக் கொண்டதுறை போலும் செஞ்சொற் செம்மணி, சைவப்புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தன்னலத்தைக் கவனியாது சமுதாயம் கருதிச் சைவத் துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வருகிறார்.

### பெரிய புராணத்தைச் சிக்கெனப் பற்றியவர்

அன்று தொட்டு இன்றுவரை காலத்துக்குக் காலம் சைவமும் தமிழும் சிறிது தள் ளாட ஆரம்பித்த வேளையில் சமணம் போன்ற பிறமதம் சைவத்தை ஆக்கிரமித்து அதை அழித்தொழிக்கக் கங்கணங்கட்டிய தருணத்தில் மகளிர் சிலர் தோன்றித் தள்ளாடிய சைவத் தைத் தூக்கி நிறுத்தி மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் பரவச் செய்தனர். இவர் களைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிந்தையிலும் செய்கையிலும் சிக்கெனப் பற்றிக் கொண்டிருக்கும் பெரிய புராணத்தில் நாங்கள் சந்திக்கலாம்.

### அன்றைய மகளிர்

வளவர் கோன் பாவை, பாண்டிமாதேவி, மங்கையர்க்கரசியார், பிற சமயத்தைத் தழுவிய தம்பி திருநாவுக்கரசரைத் தடுத்து நிறுத்திச் சைவநீதி தழைத்தோங்கப் பணி யாற்ற வழிகாட்டிய திலகவதியார், சிவபக்தியிற் சிறந்த சைவம் உலகுள்ளளவும் வாழ மூத்த திருப்பதிகங்கள் எனப் புகழ் பெற்ற திருப்பதிகங்களைத் திருவாய் மலர்ந்தருளிய காரைக்காலம்மையார் போன்றோரும் மற்றும் பெரிய புராணங்காட்டும் நாயன்மார்களின் பத்தினிகள் சிலரும் சைவம் வாழத் தொண்டாற்றியவர்கள் ஆவர். தன் பர்த்தாவாகிய பாண்டியமன்னனே சமணத்தைத் தழுவி விடுகிறான்; சைவமும் தமிழும் நாட்டில் வலிவு குன்றுகின்றன; இவற்றைக் காணப்பெறாத பாண்டிமாதேவியார் பதற்றமுறுகிறார். பாலறு வாயராம் திருஞானசம்பந்தப்பிள்ளையை வரவழைத்து நாட்டில் சமணத்தை யொழித்து சைவத்துக்கு வாழ்வளிக்கிறார். சைவம் வாழத் தமிழும் அதனுடன் எழுச்சியுறுகிறது.

### இளைஞர் சமுதாயத்தை நல்வழிப்படுத்த

நாமும் பிறசமயத்தால் தாக்குப்படாத காலத்தில் இருக்கிறோமானலும் விஞ்ஞானம் சந்திர மண்டலத்தில் குடியேறுமளவுக்கு வளர்ச்சியடைந்து சுக்கிர, செவ்வாய் மண்டலங் களை நாடும் வேளையிலும் மொழிப் பிரச்சினை தலைதூக்கியிருக்கும் தருணத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் இளைஞர் பலரிடையே இதன் காரணமாக வரட்டு வேதாந்தமும் நாத்திகமும் வளர்ந்துள்ளது. இந்த வேளையில்தான் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்களும் இளைஞர் சமுதாயம் தவறான வழியில் செல்லாது சமய அடிப்படையில்

தம் வாழ்வை அமைத்துக் கொள்ளவும் தம் மொழியைப் பேணவும் அவர்களை வழி நடத்தத் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய தொண்டர்களைப் பாராட்டுவதும் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துவதும் சாலப் பொருத்தமேயாகும். இதனால் இவர்களைப் போன்று மற்ற மகளிரும் நாட்டு நலனுக்காகத் தாம் சிறிதளவாவது பாடுபட வேண்டும் எனச் சிந்தித்துச் செயல்படுவார்கள்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வருங்காலச் சந்ததியினரான மாணவர்களுக்குத் தமிழையும் சைவத்தையும் போதித்து அவர்களை நற்பிரஜைகளாக ஆக்கும் அரிய பணியோடு நில்லாமல் அதாவது தனது சேவைக்கு ஒரு எல்லைக்கோடு ஒரு வரையறை வைக்காது பாடசாலைக்குமப்பால் சமயச் சொற்பொழிவுகளை வாரி வழங்கி மக்களைச் சைவத்தின்பால் தளராப் பற்றுடையவராக்குகிறார்.

சொற்பொழிவிற் காணும் சிறப்பு

பண்டிதையல்லவா, செந்தமிழில் பேசவேண்டும், பாமரர் என்னவென்று விளங்காது திக்குமுக்காடவேண்டும். பாலகர்கள் எளிதாக எதையோ கண்டுவிட்டது போன்று திருதிருவென விழிக்கவேண்டும். இந்த நோக்குக்கு அவரது பேச்சிற் கடுகளவேனும் இடமில்லை. அவரது எளிமையான புறத்தோற்றம் போன்றதே அவரது எளிய வசனநடை. மக்கள்பால் சமய அறிவைப் பதிய வைக்க வேண்டும் என்ற தனது நோக்கு நிறைவேறப் பச்சிளம் பாலர் தொடங்கிப் பண்டு கிழவர்கள் வரை எளிதாகப் புரிந்து கொள்ளத்தக்க எளிய இனிய நடையில் தனது சொற்பொழிவுகளை நடத்துகிறார். சுருங்கக் கூறி விளங்க வைப்பதும் சொற்பொழிவுகளிடையே பாடல்களைக் கணீரெனும் குரலில் இனிமையாகப் பாடுவதும் அவரது சொற்பொழிவின் தனிச் சிறப்பாகும். ஈழத்து மக்களை மட்டுமன்றி தமிழகத்துப் பெரியார்கள் பலரின் உள்ளத்தையும் கவர்ந்த பெருமை இவரது சொற்பொழிவுகளுக்கு உண்டு.

*1970ஆம் ஆண்டு* கே. ஜி. மணி *(ஈழநாட்டில்)*

✻

ஆத்மனே,

தெய்வத்தின் அடிச்சுவட்டை நீ பின்பற்று. நடக்கும் உரிமை மட்டுந்தான் உனக்குண்டு. நடத்துமுரிமை அவன் கையில் என்பதை நெஞ்சில் இருத்து. ''தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்.''

சிவமயம்

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன மடாலய ஞானபீட

**குருமகாசந்நிதானம்**

## சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் அருளியது

சைவத் திருவாளர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், யாழ்ப்பாணப் பெண்கள் பண்டித பரீட்சையிலும், சென்னை சைவசித்தாந்த சமாசத்துச் சைவப்புலவர் தேர்விலும் வெற்றி பெற்றவர்கள். புலவர், நாவலர், பாவலராய்ப் புகழ்விளங்குபவர்கள். நுண்மாண் நுழைபுலம் மிக்கவர் என்பதையும் நாநலம் மிக்கவர் என்பதையும் நன்குணர்ந்தோம்.

எம்மிடத்திற் சிவஞானசித்தியாருக்குப் பொருள் விளக்கம் கேட்டறிந்த மாணவர் பலருள் இவர் சிறந்து விளங்கினர். இவ்வம்மையார் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையார். கேளாரும் வேட்ப மொழியும் திறனும் எளிய பொருளாக்கிச் சொல்லி மிக மகிழ்விக்கும் ஆற்றலும் நூலறிவில் முதிர்ச்சியும் இவருக்குண்டு. திருக்கேதீஸ்வரத்தில் திரு அம்மையார் வரும்போது அவர் புனிதத்தன்மையைப் பார்த்துப் பயபக்தியுடன் எவரும் ஒதுங்கிச் செல்வர். காரைக்கால் அம்மையாரை நினைவூட்டுஞ் சீலம் இவ்வம்மையாரிடமும் அமைந்திருந்தது. திருவாசக விழாவில் எந்தலைமையில் திருக்கோவையார் என்னும் பொருள்குறித்துச் சொற்பொழிவாற்றக் கேட்டோம். அப்பொழுது இவர்தம் பேச்சாற்றலை நாம் வியந்து நயந்து இவர்முன் நாம் பேசுவதற்கியலுமா எனப் பயந்துவிட்டதுமுண்டு.

சிவபக்தியில் காரைக்கால் அம்மையையும், சகோதர வாஞ்சையில் திலகவதியாரையும், சைவத்தை வளர்க்கும் பெரும் பணியில் மங்கையர்க்கரசியாரையும், தாம் கற்பிக்கும் கல்லூரியில் மாணவர்களைத் தமிழ்ச் சைவத்திற்குப் பெற்றளித்து வருகையில் இசைஞானியாரையும், தம் சொற்பொழிவைக் கேட்கும் நன்மக்கட்கெல்லாம் ஞானசம்பந்தர் தோன்றுதவில் பகவதியாரையும், மாதாவுக்கு நன்னெறி காட்டி இனியவராய் மாதினியாரையும் வழிபடுமாட்சி இவ்வம்மையாருக்கு மிக்குரியது. வாழ்க புலவர், நிறைஞான செல்வர் தங்கம்மா அப்பாக்குட்டி. வளர்க இவரது நலம்.

சிவமயம்

# சைவமுந் தமிழுந் தழைக்கத் தளராப் பணியாற்றும் தங்கம்மா அப்பாக்குட்டி

''எவ்வெப்போது உலகில் தர்மந் தாழ்ந்து, அதர்மம் தலை தூக்குகிறதோ, அவ்வப்போதெல்லாம் நான் பூமியில் அவதாரம் செய்வேன்'' எனத் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் ஸ்ரீ கண்ண பரமாத்மா, பார்த்தனுக்குக் கூறியதாகக் கீதை சொல்கிறது. உலகை இரட்சிப்பதற்காகப் பகவான் அவதரிக்கிறாரோ இல்லையோ அதை அறிய அஞ்ஞானிகளான எமக்கு அநேக சந்தர்ப்பங்களில் முடிவதில்லை. எனினும், பகவான் நோக்கத்தை நிறைவேற்றுமுகமாகச் சில தூய ஆத்மாக்கள் நம்மிடையே உலவுவதை நம்மால் எப்போதும் உணரமுடிகிறது. இப்படியான நன்னோக்கம் மிக்கவர்களில் ஒருவர்தான் ஈழத்தில் பிறந்த செல்வி (பண்டிதை) தங்கம்மா அப்பாக்குட்டி.

## சிறுவயதில் குடும்பச் சுமை

'சிறுவயதிலே பெற்றோரை இழந்து, குடும்பச் சுமையைத் தன்னந்தனியாக ஏற்க நேர்ந்தமையால்தான் ஈடுசெய்ய முடியாத வேதனையாலும், வெறுப்பாலும் எனது உள்ளம் சமய, இலக்கியத்துறைகளை நாடிற்று. இல்லையேல் எல்லோரையும்போல எங்கோ ஒரு குடும்பத்தில் புகுந்து இன்று சாதாரணமாக இல்லறம் நடாத்திக்கொண்டிருப்பேன். இவ்வளவு புகழும் பெருமையும் ஒருவேளை என்னைத் தழுவாமலும் இருந்திருக்கக்கூடும்' என மனம்விட்டு அழகாகச் சிரித்தபடியே கூறுகிறார் செல்வி தங்கம்மா.

தனது முழுவாழ்க்கையையும் சமய, இலக்கியப் பணிக்கு அர்ப்பணித்துள்ள பண்டிதை தங்கம்மா, காலை ஐந்து மணிக்கெல்லாம் துயில்நீங்கி எழுந்து குளித்து முழுகி வெண்ணீறணிந்து நெற்றியில் குங்குமம் துலங்க தெய்வ வழிபாடு செய்வதைக் காணும்போது, அன்று மதுரையம்பதியிலே சைவம் வளர்த்த பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரின் நினைவுதான் நமக்கு நிச்சயம் வரும்.


மத்திமமான உயரம், பருமன், குமுதம் போன்ற அடக்கமும் தேஜசும் மிக்க சிவந்த முகம், சதா கருணை சுரக்கும் கண்கள், எவரையும் கவரும் திவ்விய வசீகரப் புன்னகை, வாய் திறந்தால் முத்தெனச் சிதறும் செந்தமிழ் அழகு, அனைத்திற்கும் மேலாகப் பண்பும், அன்பும், எளிமையும் மிக்க இதயம், இவற்றின் கூட்டுக்கலவைக்குப் பெயர்தான் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி;

## தனி அழகு தரும் அடக்கம்

தங்கம்மாவின் இலக்கிய சைவப் பணியைப் பாராட்டி மதுரை ஆதீனம் 'செஞ்சொற் செம்மணி' என்ற பட்டத்தையும், 'சிவத் தமிழ்ச் செல்வி' என்ற பட்டத்தை ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர் சிவன்கோவில் ஆதீனமும், 'சித்தாந்த ஞானகரம்', எனும் விருதைக் காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனமும் வழங்கிக் கௌரவித்துள்ளன.



1977ல் சிங்கப்பூரில் பேராசிரியர் இ. கனகசுந்தரம் அவர்கள் சிவத்தமிழ்ச் செல்விக்குப் பொற்பதக்கம் வழங்குகிறுர்.



1975இல் அகில இலங்கை இந்துமா மன்றத்தினரால் "சிவஞான வித்தகர்" பட்டம் சிவத்தமிழ்ச் செல்விக்கு வழங்கப்படுகிறது.

தமிழ்ப் பண்டிதையான செல்வி தங்கம்மா, பயிற்றப்பட்ட முதலாந்தர ஆசிரியை என்பதோடு, சென்னை சைவசித்தாந்த சமாஜத்தின் சைவப் புலவர் பரீட்சையிலும் திறம் படச் சித்தி எய்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தனை பட்டங்களையும் சுமந்துள்ளதாலோ என்னவோ தங்கம்மா டீச்சர் எப்போதும் குனிந்த தலையோடு அடக்கமாகத்தான் நடப்பார். அதுவும் ஒரு தனி அழகுதான்.

பழுத்த சைவப் பழம்போலச் சமயப்பணியில் ஈடுபட்டிருப்பவர். ஆகவே முற்றும் துறந்த சந்நியாசினி போலத்தான் இருப்பார் என்று நீங்கள் நினைத்தால் நிச்சயம் ஏமாந்து போவீர்கள்! கலையழகு மிளிர தங்கம்மா அழகாக ஆடை அணிவார். காஞ்சிபுரம் பட்டைக் கச்சிதமாக அணிந்து புறப்பட்டாராஞல் செல்வச் சீமாட்டிபோலத் தோன்றும். அவர் நெற்றியில் துலங்கும் நீறு என்றுமே அழியாத சிவசின்னம். தான் முக ஒப்பனை எதுவும் செய்யாவிட்டாலும், ஒப்பனைக் கலையை இலாவகமாகக் கையாளுவோரைக் கண்டு எப்போதும் இரசித்துப் பாராட்டுவதை நான் கண்டிருக்கிறேன்.

'1953ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்த மண்டபத்தில் விஜயதசமி விழாவில் பேச ஆரம்பித்த நான், தொடர்ந்து பதினெட்டு வருடங்களாகப் பேசிக்கொண்டே இருக்கிறேன். ஆனால் அரசியல் மேடைகளில் ஏறியதேயில்லை. தற்சமயம் எனது கட்டுரைத் தொகுதி ஒன்றைப் புத்தகமாக வெளியிடுவது பற்றி யோசித்துவருகிறேன்' என்று கூறும் இவர் மனம்வைத்தால் எண்ணற்ற நூல்களை நிச்சயம் படைக்கலாம். இப்படிச் செய்வாராஞல் நாளைய நமது சந்ததியினர், நமது நாட்டுக்கு இலக்கிய வளத்திற் சுவை அறிந்து பயனுற நிச்சயம் வழிபிறக்கும்.

'இன்றைய இளம் சமுதாயத்தினரின் விபரீதமான போக்கையிட்டு என்ன நினைக்கிறீர்கள்?' என்று நான் கேட்டபோது அந்தத் தங்கத்தின் முகம் மங்கியது. 'ஆம், மிகவும் விபரீதமாகத்தான் இருக்கிறது. இந்த நிலைமைக்குக் காரணம் நோக்கமற்ற கல்வி, இளம் உள்ளங்களை வசிகரிக்கும் தீய சக்திகளின் பெருக்கம், சமயத்துறையில் மக்களுக்கு நாட்டமின்மை, எல்லாவற்றுக்கும் மேலாக வேலையில்லாத்திண்டாட்டம் இந்தக் குறைகள் நீக்கப்பட்டால்தான், எங்கள் மாணவர் உலகம் திருந்தி நடக்க வழிபிறக்கும்.'

சமூக சீர்திருத்தவாதி

'இதற்கெல்லாம் விடிவு பிறக்கவேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையாலும் பண்பினாலும் மனிதன் உயர்வடைய முடியும். இது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. நம்மிடையே நிலவும் சாதிப் பிரச்சனை ஒரு பெரும் சாபக்கேடு. இது எமது சமுதாய உயிர்ப்புக்கு எதிரான பெருந்தடை. இதை நீக்க நம்மில் நல்லவர்களும், வல்லவர்களும் பாடுபடவேண்டும் என்பது எனது பேராசை' என உணர்ச்சி பிரவகிக்க, தனது இலட்சியக் கனவை விபரித்தார் செல்வி தங்கம்மா.

அப்போது அவரில் நான் கண்டது புரட்சிகரமான ஒரு சமூகச் சீர்திருத்தவாதியை. அவரது கனவை நனவாக்க அவரது செந்தமிழ்ச் சொற்பொழிவு ஒன்றே போதுமே! தேனினுமினிய இசையோடு எங்கள் 'தங்க'க் குயில் சமய மறைகளைப் பாட ஆரம்பித்தால், திறந்த வாய்கள் மூட மறுக்குமே!

யோகா பாலச்சந்திரன் (தமிழ்நேசனில்)

சிவமயம்

சைவத் தொண்டினால் வளர்ந்துவரும் தலைசிறந்த பேச்சாளர்

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

புலோலியில் சைவ மாணவர்கள் ஆங்கிலம் கற்பதற்குட்பட்ட அல்லலை நோக்கி அன்னாருக்கு உதவிசெய்யத் தமது இல்லத்தையே பாடசாலை ஆக்கிய பெருமை மகான் வேலாயுதம்பிள்ளைக்கு உண்டு. உயர்ந்த தோற்றம் வாய்ந்த தன்மைபோல் அவரது இதயமும் மிகப் பெரியது. அவரினத்தவர் பலர் சைவப் பண்பாட்டிலும், கல்வியறிவிலும் மேம்பட்டவர். அவர்களிடையே தமிழ்க் கல்வியிலும், சைவ சீலத்திலும் மேம்பட்ட அம்மையார் ஒருவர் வாழ்ந்தார். இல்லறத்திற் புகாது புலோலி பசுபதீச்சுரர் வழிபாட்டிலேயே தம்மை அர்ப்பணித்தவர் இவ்வம்மையார். கொதிக்கும் வெயிலில் ஈரம் புலராத் தலையுடன் ஆபரணம் எதுவுமின்றிச் சைவச் சின்னங்களோடு கோயிலுக்கு இவ்வம்மையார் வரும்போது அவர் புனிதத்தன்மையைப் பார்த்துப் பயபக்தியுடன் எவரும் ஒதுங்கிச் செல்வர். காரைக்காலம்மையாரை நினைவூட்டும் சீலம் இவ்வம்மையாரிடம் அமைந்திருந்தது. இவ்வம்மையார் சமஸ்கிருத விற்பன்னர் வ. கணபதிப்பிள்ளை, இலக்கணப்புலி வ. குமாரசாமிப் புலவர் இருவருக்கும் சகோதரியார். சைவப்பெரியார் சிவபாதசுந்தரனுக்கு மாமியார். இவ்வம்மையார் அக்காலத்தில் இரு இளம் பெண்களை (பத்மாசனி, வாலாம்பிகை) மதுரைத் தமிழ்ப் பண்டிதர்களாக்கிவிட்டார். ஆண்களுக்குள்ளேயே பண்டிதர்கள் குறைவாயிருந்த அக்காலத்தில் இரு இளம் பெண்கள் பண்டித பரீட்சை சித்தியெய்தியது போற்றற்குரிய நிகழ்ச்சியாகும். அக்காலத்தில் நாங்கள் அறிந்தளவில் பின்பு விபுலானந்த சுவாமிகளாகிய மட்டக்களப்பு மயில்வாகனனார் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகவும், விஞ்ஞான ஆசிரியராகவும் இருந்ததோடு மதுரைத் தமிழ்ப் பண்டிதராகவும் பெருமதிப்பும் பெற்றிருந்தார். பெண்மணிகள் இருவர் ஒரு தபஸ்வினியிடம் கற்று மதுரைத் தமிழ்ப் பண்டிதைகளானது பெரும் போற்றுதலுக்கும், பிறருக்கு வழிகாட்டுதற்கு முரியதாயிருந்தது.

## வாழ்வே சைவத்திற்காக

ஆண்பாலாரிடையே பல பண்டிதர்கள், அமரர் பிரம்மஸ்ரீ கணேசையர், அமரர் நவநீத கிருஷ்ண பாரதியார், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, வித்துவான் கார்த்திகேசு போன்றோரிடங் கற்றமையாற் சிறப்புறத் தோன்றினர். இக்காலத்திலே வேதவல்லி போன்ற சிறுதொகையினராகிய பெண்பாலாரும் பண்டிதைகளாயினர். இவர்களுக்குள்ளே சிறப்பாகச் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிக்கொண்டு வருகின்ற இருவரைப்பற்றித் தமிழுலகமே பெருமைப்படக்கூடியதாக இருக்கின்றது. அவர்களே சத்தியதேவி துரைசிங்கம், அண்மையில் நமது பாராட்டுக்குரிய தங்கம்மா அம்மையார் ஆவார்கள். எந்த விசேட இலக்கிய, சமூக, சைவ நிகழ்ச்சிகளிலும் இருவரில் ஒருவராவது இலங்கையில் பங்குபற்றாத கூட்டம் இல்லை எனலாம். அதுவும் அண்மைக் காலத்தில் தங்கம்மா அம்மையார் அவர்கள் தம் வாழ்க்கையையே சைவத் தமிழ்த் தொண்டிற்கே முழுவதாக அர்ப்பணித்துவிட்டார் எனலாம்.

இனிமைச் சொற்பொழிவாளர்

இவ்வம்மையாருடைய பேச்சு எவர்தம் உள்ளத்தையும் கவரவல்லது. கேளாரும் வேட்ப மொழிவதில் இவ்வம்மையார் தலைசிறந்து இருப்பதால் தென்னிந்திய ஆதீனம் இவரைச் சொற்பொழிவுகளுக்கு உவந்து அழைத்தது. குன்றக்குடி அடிகளார், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் போன்ற ஆதீனகர்த்தர்களும் தென்னிந்திய (இங்கு வருகை தந்த) பேரறிஞர் பலரும் இவர்தம் சமயச் சொற்பொழிவுகளாற் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். திருவாசகம், பெரியபுராணம் இவ்வம்மையாருக்குக் கைவந்த திருமுறைகளாகும். நன் வினிமையுடன் இவர் தேவாரங்களைச் சொற்பொழிவினிடையே பாடும்போது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போலிருக்கும்.

இராமாயணம், கந்தபுராணம் ஆகியபற்றிய சொற்பொழிவுகளிலும் இவர் வேறெவருக்கும் சளைக்காதவர். சைவத்தொண்டு இவரை வளர்த்துவருகிறதென்றே கூறலாம். தெல்லிப்பழையிலுள்ள பெரிய ஆங்கிலக் (யூனியன்) கல்லூரியில் இவர் தமிழுக்குப் பொறுப்பாளராய் இருந்துகொண்டு பல நல்ல மாணவ மாணவிகளைத் தந்துள்ளார்.

இம் மெல்லியல் நல்லாரை அன்னை துர்க்கை ஆசிர்வதிக்க பாரி வள்ளலின் இயல் புக்கு அவன் இணைபிரியா நண்பர் கபிலர் என்னும் புலவர்பிரான்,

" மாண்புடை நெடுவரைக் கோடுதொ றிழிதரும்
நீரினும் இனிய சாயல் பாரிவேள் "

என்று அவன் மலைச் சிகரங்களிலிருந்து வழிந்தோடும் நீரையே இனிய அரிய உவமை யாக்குகிறார். தங்கம்மா அம்மையார் பண்பின் சிகரமாயுள்ளவர்; அவரின் சால்புக்கும் அவர் வாய்ப் பிறக்கும் தமிழையே உவமையாக எடுத்துக்கூறலாம். எல்லார் போற்றுத லுக்கும் உரிய இவ்வம்மையாரைக் காரைநகர் மணிவாசகர் சபையார் பொன்னாடை போர்த்தலும் இவருக்குப் பாராட்டுவிழா எடுத்தலும் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் செயல்களாகும். அம்மையார் நீடூழி வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் நற்றொண் டாற்ற அவர் பெருந் தொண்டை ஏற்றுள்ள தெல்லிப்பழை துர்க்காதேவி அன்னை பேரருள் புரிக.

பொன். கிருஷ்ணபிள்ளை (ஈழநாட்டில்)

உ

சிவமயம்

சைவப் பணிபுரியச் சைவ மங்கையர்களை உருவாக்கித் தருவாராக

# சைவப்புலவர், பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் கௌரவிக்கும்போது நல்கிய

## ஆசியுரை

நால்வர் காட்டிய வழியினில் நாவலர் பெருமான் சைவத்தைப் பேணி வந்தார்கள். அவர்கள் பிரமச்சரியம் காத்துச் சைவத்தமிழை வளர்த்து வந்தனர். நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே? என்ற வினாக்களை இன்றும் நம்மத்தியில் எழுந்தவண்ணம் இருந்திருக்கும். அக்குறையை நிறைசெய்த பெருமானைப் போற்றி, அன்னார் அடிச்சுவட்டைப் பின்பற்றி பல சைவ நிறுவனங்கள் சைவச்சேவை புரிந்து வருகின்றன. இவ்வழியில் காரைநகர் மணிவாசகர் சபையும் ஒன்றென மிளிர் வதை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

இத்திருச் சபையார் சைவப் புலவர், பண்டிதர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆற்றிய அரும்பெருஞ் சைவச் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்க முன்வந் தமை போற்றக் கூடியதே. ஈழத்தில் சைவ மங்கையர்கள் சைவப் பணி புரிய முன் நிற்பது கண்ணுற் காண முடியாத விடயம். கருத்தால் எண்ணவும் முடியாத ஒன்று மாகும். தமிழ் நாட்டில் பெரியபுராணக் காலத்திருந்தே சைவ மங்கையர் பணி சமூகத் திற்குக் கிடைத்து வருகின்றது. ஈழத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி காலத்திலிருந்து தான் அந்தச் சகாப்தம் ஆரம்பமாகிறது என்பதில் மிகையொன்றுமில்லை.

புனித மங்கையராகத் துலங்கி வாழும் செல்வி அவர்களைப் பெரியபுராணத்துப் பெண்கள் திலகங்களோடுதான் வைத்தெண்ண வேண்டியது. உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியராக அம்மையார் விளங்குகின்றார். அவர் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் சைவச் சான்றோராற் போற்றப்படுகின்றவராவர்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தை உருவாக்கியவர் அவரே. அச் சங்கத்தின் அன்னையாரும் அவரேதான். பத்தாண்டு சேவையை அதற்காக ஆற்றிச் சங்கத்தின் பொரு ளாளராகவும் இருந்து ஈழத்துச் சைவ நிறுவனங்களில் முதன்மை பெற்று விளங்க உழைத்து வருகிறார்கள். 1964ஆம் ஆண்டு சைவப்புலவர் சங்கக் குழுவினரில் தாமும் ஒருவராக இருந்து சென்னைச் சைவசித்தாந்த சமாசத்தினரின் வைர விழாவிற் கலந்து சிறப்புச் சொற் பொழிவு ஆற்றித் தமிழ் நாட்டுப் பேரறிஞர்களாற் பாராட்டுதலும் பெற்றவர் செல்வி அவர்களேயாவர். அண்ணாமலைச் சர்வகலாசாலை தமிழ் மன்றத்திலும் அவ்வேளை சிறப்புச் சொற்பொழிவாற்றி ஈழத்திற்குப் பெருமை தேடித்தந்தவர் செல்வி அவர்களேயாவர்.

செல்வி அவர்கள் தூய உள்ளம் படைத்தவர். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கை இப்புவியில் யாரும் மெய்ப்பியாது போக தான் ஒருவரே தனித் தூய்மையுடன் மெய்ப்பித்து வாழ்ந்துகாட்டிய பெருமையைத் தேடிக் கொண்டவர். அவர்களின் நாநலப் பேச்சு, ''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் கேட்ப........''த் திகழும் அருமை உடையதாகும்..........

**வ. செல்லையா**

(தலைவர், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம்)

# தவச்செல்வியின் தமிழ் சைவத் தொண்டு

"மன்னற்குத் தன் நாட்டில் மட்டும் சிறப்பு, கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு".

தன் தாய் நாட்டில் மட்டுமல்லாது, மலேசியா, சிங்கப்பூர் ஆதியாம் நாடுகட்கும் சென்று "தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும்" என்ற பெரு நோக்குடன் சமயச் சொற்பொழிவுகள் பல ஆற்றி, எமது நாட்டிலும் இந்து சமயத்தவர்கள் மட்டுமல்லாது ஏனைய சமயத்தவர்கள் மத்தியிலும் நன்மதிப்புக்குள்ளான சிவத்தமிழ்ச் செல்வியாரவர்கள் பேச்சுத்துறையில் இருபத்துஐந்து ஆண்டுகளைக் கடந்து இன்று வெள்ளி விழாக் கோலம் காண்கின்றார் என்றால் கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய் கேளாதாரும் வேட்ப மொழிவதில் அவருக்குள்ள வல்லமையும் தனிச் சிறப்பும் எத்துணை என்பதில் மிகையொன்றுமில்லை.

"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர் வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்பதற்கொப்ப கேடில் விழுச் செல்வமான கல்வியைப் பெரும் பேறுகப் பெற்ற அம்மையார் அவர்களின் நுண்மாண் நுழைபுலத் திறமையையுங் கற்றாங்கு ஒழுகுதலையும் மற்றோரைப் பேணலையுங் கண்டு "செஞ்சொற் செம்மணி" என்ற பட்டத்தை மதுரை ஆதீனமும், "சித்தாந்த ஞானாகரம்" என்பதை மெய்கண்டார் ஆதீனமும், "சிவத்தமிழ்ச் செல்வி" என்பதை காரைநகர் மணிவாசகர் சபையும், "சைவதரிசினி" என்பதைத் திருநெல்வேலி இராஜேஸ்வரி பீடமும், "திருவாசகக் கொண்டல்" என்பதை மலேசியா சிலாங்கூர் சைவர் சங்கமும், "திருமுறைச் செல்வி" என்ற பட்டத்தை வண்ணை வைத்தீஸ்வர ஆதீனமுமான நற்பெரு மன்றுகள் நல்கின வென்றால், அவர்தம் ஆற்றலை யிங்கு செப்புதற்கு அறிவிலும், ஆற்றலிலும் சிறியோனான என்னால் முடியுமளவினதன்று.

அம்மையார் அவர்கள் பதினாறு வயதில் மாணவியாக சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிற் கல்விகற்று வருங்காலையிலேயே, "அப்பூதியடிகள்" என்ற அகரவுயிரில் முதலாவது பிரசங்கத்தைத் தொடங்கி இன்றளவில் (மலேசியாவில் மாத்திரம் 67 பிரசங்கங்கள் உட்பட) இரண்டாயிரத்துக்கும் அதிகமான சமய இலக்கியப் பேச்சுக்களைப் பேசிவிட்டார் என்றால் அவர்தம் பெருமை அளவிடற்கரிதே.

அதுமட்டுமல்லாது எம் அண்மை நாடான இந்திய நாட்டின் ஈடிணையற்ற பெரும் அறிஞர்களான "சொற்கொண்டல்" சிங்காரவேலன், கி. வா. ஜெகந்நாதன், அ. ச. ஞானசம்பந்தன், ஒளவை துரைசாமி, புரிசை நல்முருகேச முதலியார், "திருவாசகமணி" பாலசுப்பிரமணிய முதலியார் என்பவர்களுடன் ஒரே மேடையில் வீற்றிருந்து விழுமிய வித்தகப் பேச்சுக்களைப் பேசினாரென்றால் அவரின் தகைமையைப் புலப்படுத்த இது வொன்றே எடுத்துக்காட்டாகும்.

பெருந்தகையவர்கள் சமயத்திற்குச் செய்த தொண்டுகள் அளப்பரியன. "ஜீவசேவையே சிவசேவை" என்னும் வழி ஒழுகுதலே அன்னாரின் தலையாய இலட்சியம் என்பது அம்மையார் அவர்கள் பேசிய பேச்சுக்களிலிருந்து எமக்குப் புலப்படுகின்றது. "பூசுவதற்கும் பிரசாதம் உண்பதற்கும் தான் சமயம் என்ற நோக்கத்தை நாம் விட்டுவிட வேண்டும்; கோவிலிற் கும்பிடுவது சமயமல்ல; அன்புள்ளமும் தொண்டுமே சமயமாகின்றன" என்ற சமய அடிப்படைக் கருத்துக்கள் அவர்கள் சொற்பெருக்கில் அமிழ்தமாக ஊறுவதை எவரும் மறுக்க மாட்டார்கள். சொல்லும்வண்ணம் செயல் அமைதல் வேண்டும் என்பதற்கொப்ப அவர் சமயத்துக்கு ஆற்றிய தொண்டு 1946ஆம் ஆண்டே ஆரம்பமானது. அந்நாளில் அவர் சமயத்துக்கு, மட்டக்களப்பு இராமகிருஷ்ண சபையில் ஊதியம் பெறாது சமய வகுப்புகளை நடாத்தி வந்தார். இதனால் மட்டக்களப்புச் சுற்றாடலில் உள்ள மக்கள் அநேகர் சமய அறிவு பெற்று வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொண்டனர்.

இவை மட்டுமல்லாது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயப் பொருளாளராகத் தொடர்ந்து பத்து வருடங்கள் கடமை புரிந்து வருவதுடன் இன்றும் அவருடைய ஒத்துழைப்பின் பேரிலேயே அவ்வாலயம் சிறப்புற நடைபெற்று வருகின்றது. மற்றும்

அவ்வாலயத்தில் ''திருமுறை மடம்'' என்னும் ஒரு திருமடத்தைத் தனது சொந்தச் செலவிலேயே அமைத்து ஆங்கு பல பெரியார்கட்கும் அரசாங்க சேவைகளில் இருந்து ஓய்வு பெற்றவர்கட்கும் சைவசமய வகுப்புக்களை நடாத்தி வருவதுடன் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலிலும் பல மாதங்கள் சமய வகுப்புக்களைத் தொடர்ந்து நடாத்தி வந்தமையை நாம் காணும்போது, சேவையின் மூலம் அவர் செய்யும் சிவபூசை எத்தகையது என்பதை நன்கு உணரக்கூடியதாக உள்ளது.

பேச்சுத் துறையில் வெள்ளி விழா காண்கின்றார் என்று நாம் கருதும் போது கடந்த இருபத்தைந்து ஆண்டு காலம் அவருடைய சேவையை நாம் புரட்டிப் பார்த்தால் அவ சமயச் சொற்பொழிவுகளை மட்டுமல்ல எத்தனையோ இலக்கிய சமூகவிடயங்களை அடிப் படையாகக் கொண்ட பேச்சுக்களையும், எழுதிய கவிதை, கட்டுரைகளையும் காணமல் இருக்க முடியாது.

1954ஆம் ஆண்டு செல்வியவர்கள் பண்டிதைப் பரீட்சைக்காக எழுதிய ''இலங்கையில் பிரபந்தங்கள்'' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை மிகவும் ஆழமான கருத்துக்கள் கொண்ட ஆராய்ச்சித் திறமை மிக்க தொன்றாகும். அடுத்து அவர்களால் 1956ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட 'இராமாயணம்', 'சங்க இலக்கியங்கள்' என்ற கட்டுரைகள் வாசகர் உள்ளத்தினின்றும் நீங்காத நினைவுச் சின்னங்களாக நிலைபெற்று நிற்கின்றன. இராம நாதன் கல்லூரியில் மாணவியாக இருந்த வேளையில் அவர் எழுதிய கவிதைகள் அன்று மட்டுமல்ல இன்றும் கேட்போர் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு மிளிர்கின்றன.

கடந்த இருபது வருடங்களுக்கு முன்பு பாக்குநீரிணையைத் திரு. நவரத்தினசாமி நீந்திக் கடந்தமையைப் பாராட்டிக் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்திற் பெரு விழா நடைபெற்றபோது அம்மையார் கவிதைகளால் அன்னாருக்குப் பாராட்டு வழங்கினார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் செல்வியவர்கள் நிகழ்த்திய சிலப்பதிகார விரிவுரையும், சிதம்பரத்தில் நிகழ்த்திய திருவாசக விரிவுரையும் கேட்டோர் நெஞ்சை விட்டு அகன்றிருக்காதவை. அம்மையார் அவர்கள் திருவாசகத்தைப் பற்றிப் பேசும் போது கண்களில் கண்ணீர் மல்க, உள்ளம் இறைவனை நினைந்து, நினைந்து நெக்குருக, கேட்போர் கண்களாலும் கண்ணீர் மல்கும் வண்ணம் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்று சொல்லும் அளவிற்கு அவருடைய உள்ளமும் உணர்வும் ஒரு தலைப் பட்ட நிலையிற் சொற்பொழிவுகள் ஆற்றுவதை நாம் இன்றும் காணலாம்.

அம்மையார் அவர்கள் ஒரு சிறந்த பேச்சாளர் என்ற எண்ணம்தான் சிலர் உள்ளங்க ளில் நிறைந்திருக்கலாம். ஆனால் அவர் சிறந்த ஒரு ஆசிரியருங்கூட என்பதைக் கடந்த கால கல்லூரிப் பரீட்சைப் பெறுபேறுகள் எமக்குக் காட்டி நிற்பதை நாம் உணரவேண்டும். க. பொ. த. உயர்தர வகுப்பிற்கு ஆசிரியர் அவர்களாற் கற்பிக்கப்படும் தமிழ், சமயம், இந்துநாகரீகம் ஆகிய பாடங்கள் இதுவரைகாலமும் நூற்றுக்குநூறு வீத சித்திகளைக் கொடுத்துவந்துள்ளன.

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் ஆண்டுதோறும் நடாத்தும் பரீட்சைப் போட்டி யில் அகில இலங்கை ரீதியில் யூனியன் கல்லூரி 1968ஆம் ஆண்டு இரண்டு தங்கப் பதக் கங்களையும், 1969ஆம் ஆண்டு மூன்று தங்கப் பதக்கங்களையும், 1973ஆம் ஆண்டு கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடத்தையும், பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் சுவீ கரித்துக் கொண்டதுமான பெருமைக்குரிய வகையில் மாணவர்களுக்கு ஊக்கமளித்து மாண வர்களைத் திறமையாகப் பயிற்றுவித்த பெருமை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களையே சேரும். மாணவர்களுக்கு விளங்கக்கூடிய முறையிலும் சலிப்பு ஏற்படாமலும் எந்த விடயத்தையும் நகைச்சுவையுடனும், கவர்ச்சியாகவும், இலகுவாகவும் மாணவர்களுக்குப் புகுத்துவதிலிருந்து ஆசிரியத் தொழிலுக்கு அவருக்கு அவரே நிகர் எனக் கூறலாம்.

க. செகராசசிங்கம் (ஈழநாட்டுப் பத்திரிகையில்)

சிவமயம்

# 'சிவத்தமிழ்ச்செல்வி'யின் அரிய சேவை

இன்று சைவ உலகில் அதாவது ஈழம், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளில் தங்கம்மா அப்பாக்குட்டியின் சைவத்தொண்டை அறியாதவர் இல்லை. இவரின் சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்காத சைவமக்கள் இன்றில்லை. இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் புகழ்பெற்ற இராமநாதன் கல்லூரியில் ஆசிரிய மாணவியாகப் படிக்கும்பொழுது கதாப்பிரசங்கம் கல்லூரியின் மேடையிலே செய்து பலரின் பாராட்டையும் ஆசியையும் பெற்றுள்ளார். கல்வியிலும் சங்கீதத்திலும் சிறந்து விளங்கிய அம்மையார் 1945இல் ஆசிரியராகத் தொழில் புரிய ஆரம்பித்தார். ஆசிரியராகக் கடமை ஏற்ற காலம் தொட்டு, ஆலயங்களிலும் விழாக்களிலும் சொற்பொழிவுகள் செய்துவந்தார். அம்மையார் பண்டிதர் பரீட்சையிலும் சைவப்புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்,

இவரின் பேச்சுத் திறமையை அறிந்து கொழும்பு விவேகானந்த சபையினர் 1953 விஜயதசமி தினத்தில் இவரைச் சொற்பொழிவு ஆற்ற அழைத்தனர். அன்றைய தினம் சபையினரின் அன்பையும் பாராட்டையும் பெற்றார். இதுகாறும் நற்பணிகள் பல செய்து வரும் அம்மையாருக்கு இப்பொழுது வயது 49. பேச்சுத்துறையில் 30 வருட அனுபவமும் ஆசிரியத் தொழிலில் 28 வருட அனுபவமும் அடைந்துள்ளார்,

1965ஆம் ஆண்டு சைவ சித்தாந்த சமாஜ வைர விழாவிலே பங்குபற்றிச் சிதம்பரத்தில் உரையாற்றிப் பெரும் பாராட்டைப் பெற்றார். அதே ஆண்டு பல்கலைக்கழக இலக்கிய விழாவிலே ''சிலம்பு'' பற்றிப் பேசிப் பாராட்டைப் பெற்றுள்ளார்.

அம்மையார் தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயத்தைப் புதிதாக அமைக்கப் பரிபாலனசபை உருவாக்கியபோது அன்றுதொட்டு இன்றுவரை தருமகர்த்தாவாக நற்பணி புரிந்துவருகிறார். இச் சிவ கைங்கரியத்தில் அம்மையார் அடைந்த புகழும், பெருமையும் அதிகம். ஆசிரியத் தொழிலில் இருந்துகொண்டு தன் சொந்தப் பணத்தில் திருமுறை மடத்தைத் துர்க்கை அம்பாள் ஆலயத்திற் சிறந்த முறையிற் கவர்ச்சிகரமாக எழுப்பியுள்ளார். எப்பொழுதும் தன் கண்ணிலும் கருத்திலும் தெல்லிப்பழை துர்க்கை அம்பாளே காட்சி தருகிறார் என்று அடிக்கடி கூறுவார். தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் இசை வளர்ச்சிக்கான நிலையமாக ஒரு புதிய மண்டபம் ஒன்றைத் தனது சொந்தப் பணத்திற் கட்டிக் கொடுத்துள்ளார்.

அம்மையாரின் சமயச் சொற்பொழிவுகள் 17 ஆண்டுகளாக ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை உற்சவ காலங்களில் நடைபெற்று வருகிறது. மணிவாசகர் விழாவில் இவரின் பேச்சைக் கேட்பதற்கு வருடாவருடம் அடியார்கள் பலர் கூடியிருப்பார்கள். இவருக்குக் கிடைத்துள்ள பட்டங்கள் : செஞ்சொற்செம்மணி, சித்தாந்த ஞானகரம், சிவத்தமிழ்ச்செல்வி, சைவதரிசினி, திருவாசகக் கொண்டல், திருமுறைச்செல்வி.

நம்நாட்டில் சைவஸ்தாபனங்கள் அனைத்துமடங்கிய மாபெரும் மன்றமான அகில இலங்கை இந்துமாமன்றம் அம்மையாரின் சேவையைப் பாராட்டி வெள்ளிவிழா எடுக்கவிருக்கிறது. சிறந்த மலர் ஒன்றும் வெளியிட இருக்கிறது. சைவ மக்களாகிய நாம் இச் சிவதொண்டின் மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்கச் செய்யும் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பல்லாண்டு வாழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்போமாக !

க. க. சுப்பிரமணியம் (வீரகேசரியில்)

சிவமயம்

# தங்கத் தமிழ்ப் பேச்சால் தங்கமாகத் திகழ்கின்றார்

# பண்டிதைக்குப் பாராட்டு விழா

ஈழத்தின் தலைசிறந்த பெண் பேச்சாளராகத் திகழுபவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி. தித்திப்பாக அவர் சிந்தும் தங்கத் தமிழ்ப் பேச்சால் இந் நாட்டின் பேச்சுத்துறை வரலாற்றில் ஒரு "தங்கமாகத்" திகழுகிறார். எடுத்துக்கொண்ட எப் பொருளையும் நுனிப்புல் மேயாது ஆழமாக ஆய்ந்து அறிவுக்கு விருந்து வைக்கும் தனியாற்றல் தங்கம்மா அப்பாக்குட்டியிடம் அமைந்துள்ள சிறப்பாகும். சைவ சித்தாந்தம் நன்கு கைவரப் பெற்ற இவர் பட்டமும் பெற்றவர். இரசிகமணி கனக. செந்திநாதன் "தங்கம்மா ஆடுகள் குழை தின்பது போல் எல்லாவற்றையும் மேலோட்டமாகப் படியாது தருந்த நூல்களை ஆழமாகக் கற்றவர். பெரிய புராணமும், திருக்குறளும் இவரின் உயிர்மூச்சுக்கள். திருவாசகமும், கம்பராமாயணமும் இவருக்குத் தண்ணீர் பட்ட பாடு. இவர் சொற்பொழிவில் எடுத்தாளும் பாடல்களைக் கேட்போர் விளங்கும் வண்ணம் பாடுகிறார்" என்று போற்றுகிறார்.

கடல் கடந்த தமிழகத்தில் தங்கம்மாவின் பேச்சு பல அறிஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது. சைவநெறியில் நின்று திகழும் சைவ ஒளி இவர். பேச்சு, எழுத்து, கற்பித்தல் துறைகளில் தனக்கெனத் தனியிடம் வகுத்துக்கொண்டவரென்று வாழ்த்துகிறார் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள். சைவத் தமிழ்த் தொண்டுக்கே முழுவதாகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அம்மையார் பேச்சு எவர்தம் உள்ளத்தையும் கவர வல்லது. இனிமைச் சொற்பொழிவாளர். சைவத்தொண்டு இவரை வளர்த்து வருகிறது என்று வாழ்த்தியிருக்கிறார் பொன். கிருஷ்ணபிள்ளை.

இத்தகு சிறப்புக்குச் சொந்தமான ஈழத்தின் பெருமையை உணர்த்தும் செஞ்சொற் செம்மணி, சைவப் புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தொண்டினைப் பாராட்டி மதித்துக் கௌரவிக்கக் காரைநகர் மணிவாசகர் சபையினர் முன் வந்துள்ள நல்ல செயலும் பாராட்டுக்குரியது. விழா 19ஆம் திகதி மாலை 6 மணிக்கு ஈழத்துச்சிதம்பரம் காரைநகர் சிவன்கோவில் வசந்த மண்டபத்தில் நடைபெறுகிறது. வட்டுக்கோட்டை எம். பி., ஆ. தியாகராசா தலைமை வகிக்கிறார். பல பெரியார்கள் பாராட்டுரை வழங்குவர். சைவத்தினதும், தமிழினதும் பெருமையினைத் தண்டமிழில் தரணி மெச்சச் சொல்லும் சொற்செல்வி ஆற்றட்டும் தொண்டு பல தொடர்ந்து.

செழியன் பேரின்பநாயகம் (தினகரனில்)

உ

சிவமயம்

# சைவப் பணிபுரியும் அம்மையார்

நமது நாட்டிற் சைவசமய வளர்ச்சிக்கும் தமிழ் மொழி ஆக்கத்திற்கும் அயராது உழைத்து வருகின்ற செஞ்சொற் செம்மணி, சைவப்புலவர், பண்டிதை, செல்வி தங்கம்மா அவர்கள் ஆற்றிவருகின்ற அரிய தொண்டைக் காரைநகர் மணிவாசக சபையார் 19-8-70 புதன்கிழமையன்று பாராட்டிப் பட்டமளித்துப் பொன்னுடை போர்த்துக் கௌரவித்தார்களென்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். அம்மையார், கேட்பார்கள் மகிழ்ச்சியுறும்வகையிற் சொற்சோர்வின்றி இன்சுவை ததும்பும் சொற்களை உபயோகித்துப் பொருளமைதியுள்ள விரிவுரைகளாற்றும் தகுதியுடையவர். அவருடைய சொன்வன்மையையும் சமயவறிவையும், இலக்கியவறிவையும் அறிந்து சொற்பொழிவாற்றுவதற்கு அவரை அழையாத சபையில்லை. எங்கள் சைவபரிபாலன சபை நடத்திவரும் சைவ மகாநாடுகளில் அம்மையார் மனமுவந்து சொற்பொழிவாற்றுவார்கள்.

தமிழ்நாட்டிலும் சென்னை சைவசித்தாந்த சமாஜம் நடத்துகின்ற சைவ மகாநாட்டிலும் சைவசமயச் சொற்பொழிவாற்றியுள்ளார்கள்.

சைவசமயம் தவத்திற் சிறந்த பெண்களாற் பேணப்பட்டதென்பதை யாவருமறிவர். திலகவதியாருடைய தவம் திருநாவுக்கரசு நாயனாரைச் சைவ உலகுக்குத் தந்தது. காரைக்கால் அம்மையார் தமது சிவபக்தியினாலும் கற்பின் திறமையினாலும் சைவ நெறியைப் போற்றினார். மங்கையர்க்கரசியார் சைவசாதனங்களைத் தமிழ்நாட்டில் பரப்புதற்குத் துணையாக விருந்தார். திருநீற்றினொளியைத் தமிழ் நாட்டில் பரப்பினார். பகவதியார் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை ஈன்றெடுத்தார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் இங்கு காட்டிய பெண் குலப் பெருந்தகையாருடைய அடிச் சுவட்டைப் பின்பற்றி சைவநெறி வளரத் தொண்டு செய்கின்றார்கள். அவரைப் பாராட்டுதல் சைவசமயம் தமிழ்மொழி எழுச்சிக்கு உறுதுணையாக விருக்கும். தில்லை நடராஜப் பெருமான் அம்மையாருக்கு நீண்டாயுளையும், ஆரோக்கியத்தையும், சைவத்தொண்டு புரிதற்குரிய சௌகரியங்களையும் குறைவின்றி நல்குவாராக.

ஓர் அன்பர்

சிவமயம்

### சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பாடுபடுபவர் :

## செல்வி தங்கம்மாவுக்குப் பாராட்டு

நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும் பணியாற்றுபவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. அவரது தன்னலமற்ற பணி போற்றிப் பாராட்ட வேண்டியதாகுமென்று அரசியல் அமைப்புச் சட்ட நீதிமன்ற உறுப்பினர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மாவின் 'கந்தபுராண சொற்பொழிவு' நூல் வெளியீட்டு விழாவில் தலைமைவகித்து உரையாற்றுகையிற் கூறினர்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இவ் விழா இடம்பெற்றது.

இராமகான சபாவில் நடைபெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து நூலாசிரியை நூல் பிரதிகளுடன் ஊர்வலமாக மேள வாத்தியங்களுடன் அழைத்துச்செல்லப்பட்டார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்தினர்.

'கந்தபுராணம் பொருத்தமான காலகட்டத்தில் வெளியிடப்படுகிறது. நாவலர் காலத்தில் மதம், மொழி ஆகியவற்றுக்கு ஏற்பட்ட நெருக்கடி இன்றும் உள்ளது. அரசியல், கல்வி, பிரதேசம் பறிபோதல் முதலானவற்றில் இருந்து கந்தப்பெருமானே எம்மவரைக் காக்கவேண்டும். அதற்குக் கந்தபுராணத்தை நம்பிக்கையுடன் ஓதுவதால் இது சாத்தியமாகும்' என அவர் தமது உரையில் கூறினர்.

நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் உரையாற்றுகையில் கந்தபுராணம் தமிழகத்திலே பிறந்தாலும் புகுந்த இடமான யாழ்ப்பாணத்திலேயே பெருமை பெற்றது என்றார்.

திருமதி பாலம் இலட்சுமணன் உரையாற்றுகையில் தங்கம்மாவின் படைப்பை 'கந்தபுராண நவநீதம்' எனப் பாராட்டினர்.

நூலின் முதல் பிரதியைத் தலைவரிடமிருந்து திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளையும், பேராசிரியர் வித்தியானந்தனிடம் இருந்து திரு. கே. எம். காளியப்பாபிள்ளையும் பெற்றனர்.

கொம்பனித்தெரு அருள் மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தாசபையினர் நூலாசிரியருக்குப் பொற்கிழி வழங்கியதைத் தொடர்ந்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பதிலுரை வழங்கினர்.

### செயலாளர் நன்றி

கந்தபுராண சொற்பொழிவு நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெறும் வகையில் ஒத்துழைத்த சகலருக்கும் குழுச் செயலாளர் திரு. கே. கே. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துள்ளார்.

—வீரகேசரி நிருபர்

உ
சிவமயம்

# சிவநெறிச் செல்வியின் சமயப்பணி

இன்று நம் நாட்டில் எந்த ஒரு சைவசமய உரையரங்கும், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி இல்லாமற் பூரணப் பொலிவு எய்த முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது. செல்வி தங்கம்மா அவர்களின் சொற்பொழிவு கேட்பவரின் ஆவலைத் தூண்டி, ஆசங்கையை நீக்கி, மனத்தைத் தூய்மையடையச் செய்யுந் தன்மை வாய்ந்தது. அவர் பேச்சில், சொல்லும் வளமும் அளவாய், சுவையும் பொருளும் புதிதாய் அமைவது சிறந்ததோர் அம்சம். இனிய எளிய பண்பும், செந்தமிழ்ப் புலமையும், ஆங்கில அறிவும், சிவநெறிப்பற்றும் உடைய அம்மையார், 25 வருடங்களாகச் செய்துவரும் சமயப் பணி மிகவும் போற்றத்தக்கது. இன்னும் பல்லாண்டு பல்லாண்டு பணி செய்துவர, அவருக்கு அருள் பாலிக்கவேண்டுமென திருக்கேதீச்சரநாதனை இறைஞ்சுகிறேன்.

இரா. சபாநாயகம்
தலைவர்
விவேகானந்தசபை, கொழும்பு.

---

உ
சிவமயம்

# இந்து இளைஞரின் வழிகாட்டி

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சென்ற இருபத்தைந்து வருடங்களாகத் தமிழுக்கும் சைவத்திற்கும் செய்துவரும் தொண்டு மிகவும் போற்றத்தக்கது. இத்தகைய சேவையைப் பாராட்டுமுகமாகத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மேல் வகுப்பு மாணவர்கள் எடுக்கும் விழா சைவ மாணவ உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

நான் அதிபராகப் பணியாற்றிய ஒன்பது வருடங்களிலும் இப் பெரியார் மேல் வகுப்புகளில் சைவமும் தமிழும் போதித்துவந்தார்கள். பரீட்சைச் சித்தி ஒரு புறமிருக்க, சைவ இளைஞர்களுக்கிடையே ஒரு மறுமலர்ச்சியை, புதுப் பாரம்பரியத்தைத் தோற்றுவிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். இவர்கள், இலங்கையிலும், மலாயாவிலும் செய்துவருகின்ற சைவத் தொண்டு யாவருமறிந்ததே.

பொதுவாகத் தமிழ் உலகிலும் சிறப்பாக வலிகாமம் வடக்கிலும் இளம் சைவத் தொண்டர்களைப் பயிற்றுதலே பயனுடைத்து. அகில இலங்கைச் சேக்கிழார் மன்றப் போட்டிகளில் இக் கல்லூரி மாணவர்கள் பெற்ற தங்கப் பதக்கங்கள் இவ்வாசிரியரின் சேவைக்கு ஒரு அணிகலன். இப் பெரியார் இன்னும் அனேக ஆண்டுகள் சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டு செய்வார்களென்பது திண்ணம்.

க. கிருஷ்ணபிள்ளை
முன்னைநாள் அதிபர்,
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

உ

சிவமயம்

# வாழ்க்கையின் குறிக்கோளை வகுத்துக் காட்டியவர்

எமது பண்டைத்தமிழ்க் கருவூலங்களாகிய சமய உண்மைகளை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்து, தெளிந்தவாறு பிறர்க்கு எடுத்து விளக்குவதும், தெளிந்த நெறிநின் றொழுகுவதும், அதன் பயனைப் பரம்பொருளின் திருப்பதங்கள் பெறுவதுமே வாழ்க்கையின் முடிவான இலட்சியம். ஆயின் நம்மவருள் சமய சாத்திரங்களைக் கற்பவர்கள் ஆயிரத்தில் ஒருவர். தெளிந்ததைத் தெளிந்தவாறு பிறர்க்கு விளங்க இனிமை பயக்குமாறு மொழிபவர் தெளிந்தோருள்ளும் ஆயிரத்தில் ஒருவர். தெளிந்த நெறிநின்று ஒழுகுவோர் பற்றிக் கூறவே வேண்டியதில்லை.

நமது ஈழவள நாட்டில் பண்டிதை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தான் தெளிந்த உண்மைகளைத் தனது வாக்குச் சாதுரியத்தாலும், இசை வளத்தாலும் இனிமை பெருகச் சொற்பெருக்காற்றும் பெண்மணிகளுள் முதலிடத்தை வகிக்கிறார்கள். அவரின் சொற்பெருக்கைக் கேட்டு மகிழ்வோர் நம் ஈழநாட்டில் மட்டுமன்றி தென்னிந்தியா, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளிலும் பலருண்டு. அவர் பல்லாண்டுகள் வாழ்ந்து, பலரும் சமயநெறி நின்றொழுகும் வகையில் தாம் கற்ற உண்மைகளைப் பிறர்க்கெடுத்து மொழிந்து தாமும் பிறரும் பெரும் பயனடைய இறையருள் துணைபுரிய வேண்டி, அவனடி பணிந்து எமது நல்லாசிகளையும் ஈந்து மகிழ்கிறோம்.

சுவாமி பிரேமாத்மானந்தா<br>
தலைவர்<br>
இராமக் கிருஷ்ண மிஷன் (ஸ்ரீலங்கா கிளை)<br>
கொழும்பு.

---

உ


# தமிழ்ப்பணிக்கொரு தங்கம்

சிவத்தமிழ்ச் செல்வி, செஞ்சொற் செம்மணி, பண்டிதை (செல்வி) தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சொற்பொழிவுப் பணியைக் குறித்து யூனியன் கல்லூரித் தமிழ் மன்றம் வெள்ளிவிழாக் கொண்டாட முடிவு செய்தமைபற்றிப் பெரிதும் மகிழ்கின்றோம். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைசிறந்த தமிழ்ப்பணியையும், சைவப் பணியையுஞ் செய்து வருகிறார்கள். ஈழத்தில் மட்டுமல்ல, மலேசியாவுக்குஞ் சென்று அரிய பணி புரிந்து வந்திருக்கின்றார்கள். அயராத உழைப்போடு இப்பணிக்குத் தம்மை அர்ப்பணஞ் செய்துகொண்டார்கள் என்பதை நாம் கண்டு மகிழக் கூடியதாயிருக்கின்றது. சிறுவர், முதியோர், கற்றோர், மற்றோர் ஆகிய அனைவரும் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையிலும் இளஞ் சமுதாயத்தினர் மனதைக் கவரக்கூடிய முறையிலும் இவர்களது சொற்பொழிவுகள் அமைந்திருக்கின்றன. அதனால் சமயப்பற்றை இளம் மாணவர்களிடத்து வளர்க்கும் பெருந் தொண்டை இவர்கள் செய்து வருகின்றார்கள். நாவலர்சபை, அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் ஆகியவற்றிற்கு இவர்கள் ஆற்றிவருந் தொண்டையும் யாம் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

இவர்கள் செய்துவருந் தொண்டு வளர்வதற்குச் சிறப்பான காரணமாக விளங்குவது இவர்களது ஆழ்ந்த கடவுட் பக்தியேயாகும்.

இவர்கள் மேன்மேலும் இப் பணியைச் செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் இவர்களுக்குச் சீரான திடகாத்திரத்தையும் நீண்ட ஆயுளையும் அளிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ம. ஸ்ரீகாந்தா<br>
தலைவர்<br>
(அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம்)



1981இல் மகாகும்பாபிஷேகத்தில்
சிவாச்சாரியர்களுக்கு சம்பாவனை நடைபெறுகிறது.



துர்க்காதேவி ஆலய முன்னைநாள் தலைவர்
திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களால்
" துர்க்கா துரந்தரி" என்ற பட்டம்
வழங்கப்படுகிறது.

உ
சிவமயம்

# எம்பிராட்டி ஈந்தருளிய அன்பளிப்பு

பைந்தமிழை வளர்க்கவும் மிகு சைவத்துறையைப் பேணிக் காக்கவும் சென்ற இரு பத்தைந்து ஆண்டுகளாக இனிய சொற்பொழிவுகள் மூலம் அருந் தொண்டாற்றி வரும் எங்கள் தவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களின் வெள்ளிவிழாவைச் சைவத் தமிழ் மக்கள் வதியுமிடங்களிலெல்லாம் கோலாகலமாகக் கொண்டாட ஒழுங்குகள் நடைபெறு கின்றனவென்று அறிந்து பெருமிதங் கொள்ளுகிறேன். இவ்விழாவின் தொடர்பாகத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரித் தமிழ் மன்றம் வெளியிடவிருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தியொன்று அனுப்புவதிற் பெருமையடைகிறேன்.

தெல்லிப்பழை உழுகுடைப்பதி ஸ்ரீ துர்க்காதேவியின் உன்னத அரவணைப்பில் வளர்ந்து கல்வி பயின்று பணிபுரிந்து வரும் பண்டிதை அவர்களைச் சைவத் தமிழுல குக்கு எம்பிராட்டி ஈந்தருளிய தலைசிறந்த அன்பளிப்பு என்றே கூறிவிடலாம். சிறுபராயந் தொடக்கம் தேவியே தமது உறுதுணையென்றும் பிராட்டியின் திவ்விய கடாட்சமே தாம் வேண்டும் பெரும் பேறெனவும் வாழ்ந்துவந்த செல்வியவர்கள் இன்று ஆலய நிர்வாக சபையின் பொருளாளராகவும், கோவிலில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அச்சாணி யாகவும் விளங்குகின்றார்கள். தேவியின் அருந்திறனை உலகறியச் செய்ததிலும் அவர்க ளுக்குப் பெரும் பங்கு உண்டு. இன்று ஈழத்தின் எல்லாப் பகுதிகளிலும், மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாடு ஆகிய இடங்களிலும் சிவத்தமிழ்ச் செல்வியவர்கள் தமது அரிய சொற்பொழிவுகள்மூலம் மக்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்டிருப்பது நாம் நன்கறிந்த உண்மையே. பிரசங்க மேடைகளில் அவர்களை நேரிற் கண்டும் கேட்டும் பரவசமடைந்த பல்லாயிரக் கணக்கான சைவத் தமிழ் மக்களும் இத்துணைத் திறன்களனைத்தையும் அவர்க ளுக்கு ஒருமித்து வழங்கிய எம்பிராட்டியின் பேரருட் சிறப்பினை அறியாமலும் பேசாம லும் இருக்க முடியாது.

பன்னூறு மைல்களுக்கு அப்பாலிருக்கும் அன்பர் பலரும் செல்வியின் இனிய பிரசங் கங்களை ஓரிரு மணித்தியாலங்களுக்காவது கேட்டுப் பயனடைவதற்காக அழைப்புகள் அனுப்பிக்கொண்டிருக்க, அவரது அறிவுரைகளைத் தினந்தோறும் தாம் கேட்டு இன்புறும் வாய்ப்பு யூனியன் கல்லூரி மாணவர்களுக்குக் கிட்டியிருப்பது அவர்கள் செய்த பூர்வ புண்ணியமே! அம் மாணவ குழுவினரிற் சிலர் செல்வி அவர்களின் சகவாசத்தாலும் உதவியாலும் வசீகரமான பேச்சாளர்களாக உருவாகி வருவது எமக்கும் பெரு மகிழ்ச்சி யையும், பெருமையையும் கொடுக்கிறது.

தமது சக்தியுள்ளவரை பிரசங்கப் பணியை அயராது செய்யவேண்டுமென்னும் பிர திக்கினையுடையவராய் விளங்கும் பண்டிதை அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் அப் புனித மான தொண்டினைத் தொடர்ந்து செய்து பொலிவுகண்டின்புற எல்லாம்வல்ல எம் பிராட்டி அவர்களுக்குக் ''கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழிபிணியில்லாத உடலும்'' கொடுத்தருளுவாராக.

தெ. து. ஐயரத்தினம்
தலைவர்
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நிர்வாகசபை

உ
சிவமயம்

## சிவத்தமிழ்ச் செல்வியின்
# தொண்டுக்குப் பாராட்டு

தொண்டை மண்டல ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாச்சாரியர், கொழும்பு இரத்தினக்காரர் இடத்தில் நடந்த விருந்துபசாரத்தில் அருளிய ஆசிர்வாதம் :

சிவத்தொண்டு செய்யும் பாக்கியம் எல்லோருக்கும் கிடையாது. இப்பெரும் பாக்கியத்தைச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றிருக்கிறுர். தமிழ்மக்கள் வாழ்கின்ற இடங்களுக்கெல்லாம் சைவ நற்றெண்டு ஆற்றவேண்டுமென ஆசீர்வதிக்கின்றேன்.

ஈழத்துச் சைவத் தமிழ் அறிஞர்கள் தமிழர் வாழ்கின்ற பகுதிகளுக்கெல்லாம் சென்று தாம் அறிந்ததை அனைவருக்கும் பகிர்ந்து கொடுப்பது கண்டு உள்ளம் பூரிப்படைகின்றேன். நாம் அறிந்ததை மற்றோரும் அறிந்து பயன்பெறக்கூடியதாகப் பகிர்ந்துகொள்ளும் பண்பினை நாம் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

---

உ
சிவமயம்

# தேனினும் இனியது தீஞ்சுவை மிக்கது

பி. கோவிந்தசாமி பாராட்டு

சிராங்கூன்ரோடு ஸ்ரீ சீனிவாசப் பெருமான் ஆலயத்தில் 1974 ஏப்ரல் 16இல் ஆழ்வார் பெருமை என்பது குறித்து நிகழ்த்திய சொற்பொழிவிற் பாராட்டியது,

"நமது சமயம், மொழி இரண்டையும் காக்க நாம் தவறிவிட்டால் நமக்கு ஏற்படும் இழப்பு என்ன என்பதைக் கருத்திற்கொண்டு தமிழர்களாகிய நாம் செயலாற்றிச் செல்லவேண்டும். நமது கலாசாரம், பண்பாடு தழைக்கவேண்டும் என்றுல் சமயமும் மொழியும் காக்கப்பட வேண்டும்.

நேற்றிரவு தங்கம்மா அப்பாக்குட்டி ஆற்றிய சொற்பொழிவுக்குத் தலைமைதாங்கிய ஆன்சன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி. கோவிந்தசாமி மேற்கண்டவாறு கூறினுர்.

தங்கம்மாவின் சொல்வன்மை இசைவன்மையைப் பெரிதும் பாராட்டிய திரு. கோவிந்தசாமி, நம்மையே நாம் மறக்கும் அளவிற்கு அவரது சொற்பொழிவு அமைந்திருந்தது என்றுர், தேனினும் இனியது; தீஞ்சுவை மிக்கது என்று தங்கம்மாவின் சமய உழைப்பாற்றலைப் புகழ்ந்து பேசிய அவர், தமக்கும் திவ்வியப் பிரபந்தப் பாக்கள் சில தெரியும் எனினும், தங்கம்மாவின் இனிய குரல்வளம் தன்னை இன்பக் கடலில் மிதக்கவிட்டது என்று பெருமைப்பட்டார்.



சுவாமி தனிநாயக அடிகளுடன்
திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில்
நடைபெற்ற தமிழ்விழாவிலே.



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில்
1983இல் நடைபெற்ற சண்டிஹோமத்தில்
ஆசிபெறுகிருர்.

# 3. மணிமலர் மாலை

(மணிவிழாவிற்கென வழங்கப்பெற்றவை)

உ

சிவமயம்

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி செல்லுமிடமெல்லாம் சீர்பெற்று வாழ்க

அவ்வையின் அருந்தமிழ் தன்னை
அகிலமும் பரப்பும் அம்மை
செவ்விய பேச்சுத் திறத்தால்
செந்தமிழ் பரப்பும் செல்வி
தங்கநல் லறிஞ ரோடு
சந்ததம் பணியே செய்யும்
தங்கம்மா அம்மை யாரே
தரைதனில் நீடு வாழி!

நா. முத்தையா
ஆத்மஜோதி ஆசிரியர்

---

உ

# தங்கம்மா ஆற்றும் பணியே அறம்

பண்ணார் தமிழும் பழுதிலாச் சைவமும்
மண்ணார் அறிந்து மகிழ்வுறவே—விண்ணோரும்
போற்றும் விதமாய் விரித்துரைக்கும் தங்கம்மா
ஆற்றும் பணியே அறம்.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் மண்டபம்,
59, மூர் வீதி, வெள்ளவத்தை

நா. மகேசன்

---

உ

நாநலம் படைத்தவர்

# தங்கம்மா அப்பாக்குட்டி

தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் தமது இரு கண்களாகப் பெற்றிருக்கின்றவர் பண்டிதை, சைவப்புலவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவரது பரந்த அறிவியலும் ஆழ்ந்த சமயப்பற்றும் அரிய சொல்வன்மையும் அவரை மதிக்கத் தக்க மாண்புடையவராக ஆக்கிவிட்டன.

நுண்ணிய நூலறிவாலும், விரிந்த பொது அறிவாலும் பெற்ற சீரிய பயனுடைய கருத்துக்களை வழுவின்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சிந்தையைக் கவரும்வண்ணம் அவையின் குறிப்பறிந்து அஞ்சாது எடுத்துரைக்கும் நாநலம் படைத்தவர் இப் பெண் திலகம்.

பேச்சு, மூச்சு, வாழ்வு, வளம் அனைத்தும் தமிழும் சைவமுமாக மிளிரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சைவசேவை மேன்மேலும் நமக்கு நிறைவாகக் கிடைக்க இறைவன் அருள் செய்வாராக.

சு. வித்தியானந்தன்
('ஈழநாடு' பத்திரிகையிலிருந்து)

உ
சிவமயம்

## தலைசிறந்த பேச்சாளர்

# தங்கம்மா அப்பாக்குட்டி

ஈழநாட்டிலே பெண் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் மிகமிகக் குறைவாயிருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் தற்போது அந்த நிலை மாறி ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகப் போட்டி போடாவிட்டாலும் குறிப்பிடக்கூடிய அளவு பெரிய பேச்சாளர் ஈழத்தில் இருக்கிறார்கள். இவர்களுள் தலைசிறந்த பேச்சாளராகத் தற்காலத்தில் திகழ்பவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களாவர். சைவசித்தாந்தம் நன்கு கைவரப் பெற்று அதிலும் பட்டம் பெற்றுள்ளார். தங்கம்மா அவர்கள் ஆடுகள் குழை தின்பதுபோல் எல்லாவற்றையும் மேலோட்டமாகப் படியாது தகுந்த நூல்களை ஆழமாகக் கற்றுள்ளார். பெரிய புராணமும் திருக்குறளும் அவரின் உயிர் மூச்சுக்கள். திருவாசகமும் கம்பராமாயணமும் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. அவர் சொற்பொழி வாற்றுகையில் தட்டுத் தடங்கலின்றி ஆற்றொழுக்குப் போன்ற நடையில் பேசுவார். சொற்பொழிவினிடையே வரும் பாடல்களை அவர் நல்ல முறையில், கேட்போருக்கு விளங்கும் வண்ணம் பாடுகிறார். இது அவர் சொற்பொழிவிற்கு மெருகூட்டுகிறது.

இரசிகமணி கனக. செந்திநாதன்
(ஈழநாட்டு பத்திரிகையிலிருந்து)

---

உ
சிவமயம்

# இன்பத் தமிழர்க்கொரு செல்வி

அன்பை வளர்க்கப் பொழிகின்ற
ஆற்றல் வாய்ந்த அருஞ்செல்வி
இன்பத் தமிழர்க் கொருசெல்வி
எங்கும் விளங்கும் தங்கம்மா.

கல்விச் செல்வி தொடர்கின்ற
கருத்துச் செல்வி கவர்கின்ற
சொல்லின் செல்வி தமிழ்ப்பண்பைத்
துலக்கும் செல்வி தங்கம்மா.


கச்சி யப்பர் கருத்துரைகள்
கம்பர் கவிதை நயவுரைகள்
உச்சி குளிர எடுத்துரைக்க
உதித்த செல்வி தங்கம்மா.

பணியும் உள்ள பகையெல்லாம்
பாறை நெகிழும் பஞ்சுறும்
தணியும் நெருப்பும் மணியான
தங்கம் மாவின் பேச்சாலே.

போகும் வழிகள் புரியாது
வேகுந் தமிழர் விழிப்பெய்த
வாகும் நெறியை அறிவித்தே
அருந்தொண் டாற்றும் தங்கம்மா.

என்றும் வழிவழி யாகவே
இன்சொற் பொழிவா ருலகமெலாம்
வென்றே வாழி செந்தமிழின்
மேன்மைத் திறத்தால் வாழியவே.

கவிஞர் கந்தவனம்



தமிழ்நாடு திருக்கோவிலூரில் நடைபெற்ற
ஸ்ரீ ஞானனந்த சுவாமிகளின் ஆராதனை விழாவில் (1976 மார்கழி)
உரையாற்றுகிறர்.



1983இல் கொழும்பு செட்டியார்தெருப் பிள்ளையார் கோவிலில் பொன்னாடை அணிவிக்கப்படுகிறது.

உ

சிவமயம்

# ஈழத்தின் சைவ ஒளி

இக்காலத்தில் மக்கள் மனப்போக்கு இருக்கின்ற நிலையிற் சமயத்தொண்டு புரிவ தென்பது இலகுவான காரியமன்று; சிக்கலானது; எதிர் நீச்சல் போன்றது. அத்தகைய கடினமான கைங்கரியத்தை மிகச் சிறந்த முறையில் ஆற்றிவருகின்ற சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவப் பேருலகின் பாராட்டுக்கு உரியவர்கள்.

உள்ளத்தை உருக்கும் அம்மையாரின் பேச்சுக்களாற் கடைத்தேறியவர்கள் பலர். அம்மையார் தெளிந்த சிந்தனையாளர்; பேச்சுத்துறையில் தமக்கென ஒரு தனியிடத்தை வகுத்துக்கொண்டவர். அவரது பேச்சு ஈழத்து அறிஞர்கள் மாத்திரமன்று, இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் என்னும் நாடுகளிலுள்ள சைவப் பெருமக்களையும் கவர்ந்துள்ளது. இதனுலேயே திருவாவடுதுறை ஆதீனம், அண்ணுமலைப் பல்கலைக்கழகம், சைவசித்தாந்த மகாசமாஜம் முதலியன சொற்பொழிவு ஆற்றுவிப்பதற்கென அம்மையாரை அழைத்தன. நாவலர்பெருமானுக்குப் பின்னர், சைவப் பேருலகில் எல்லோரதும் ஏகோபித்த பாராட்டைப் பெருமளவிற் பெற்ற ஒரேயொரு ஈழத்துப் பெரியார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியே என்பது முடிந்த முடிபாகும்.

திருவாசகம், பெரியபுராணம் என்பன இவ்வம்மையாருக்குக் கைவந்த திருமுறைகளாகும். நல்லினிமையுடன் இவர் தேவாரங்களைச் சொற்பொழிவினிடையே பாடும்போது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோலிருக்கும். கந்தபுராணம், இராமாயணம் ஆதியன பற்றிய சொற்பொழிவுகளிலும் இவர் வேறெவருக்கும் சளைத்தவரல்லர்.

கார்த்தியாயினி என்னும் பெண்மணி வேதங்கள் உபநிஷதங்கள் என்பவற்றை நன்கு அறிந்த ஞானியாக விளங்கினுரென்று யசுர் வேதம் மூலமாக அறிகின்ருேம். யாக்ஞவல்கியரின் மனைவியாகிய மைத்திரேயி, உபநிஷதங்களைக் கற்றுக்கொண்டபின்னர் 'மைத்திரேயி குருகுலம்' என்ற பெயருடன் ஒரு குருகுலம் அமைத்ததைப் பார்க்கிருேம். மங்கையர்க்கரசியாரும் திலகவதியாரும் சமயம் வளர்த்ததைக் காண்கிருேம். இந்தவகையில் அம்மையார் இன்று சைவம் வளர்த்து ஈழத்துச் சைவ ஒளியாக விளங்குகிருர் என்ருல் அது ஒரு சிறிதும் மிகையாகாது.

அம்மையார் நீடூழி வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்ற, அவர் பெருந்தொண்டை ஏற்றுள்ள தெல்லிப்பழைத் துர்க்காதேவி பேரருள்புரியவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

க. வைத்தீசுவரக்குருக்கள்,
தலைவர்,
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
காரைநகர்.

சிவமயம்

# சைவ உலகிற்குப் புகழ் தந்தவர்

இப்பரந்த பூவுலகில் பலவகையான சமயங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகமிகப் பழமையும் பெருமையும் வாய்ந்து விளங்குவது சைவ சமயமாகும். எத்தனை ஆண்டுகள் சென்றாலும் பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் நிலைபெற்று வருவது சைவசமயமாகும். பல்லாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் முன்னோர்கள் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை உணர்த்தினர். இதனை அறுதியிட்டுக் கூறுவது நமது சமயமாகும். சைவசமயம் வேத நெறியை அடிப்படையாகக் கொண்டது. வேதம் ஒரு ஆறெனக் கொண்டால் சைவம் அந்த ஆற்றின் ஒரு துறையாக விளங்குகின்றது. ஆகவே தான் "வேதநெறி தழைத் தோங்க, மிகுசைவத் துறை விளங்க" என்று சேக்கிழார் பெருமான் கூறுகிறார். "தனியனேன் உள்ளம் கோயில்கொண்டருளும் சைவனே" என்று ஒரு அன்பர் இறைவனைப் பாடுகின்றார். அவ்வாறு சைவனை – சைவத்தின் முதல்வனை – சிவபரம்பொருளாய் இருந்து உயிர்களுக்கருளும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். இப்படியான பெருமைகளைக்கொண்ட நமது சமயத்தை வளர்த்த நாயன்மார்கள் அநேகர். சமயத்திற்குச் சோதனைவரும் காலமெல்லாம் அவ்வப்போது பெரியார்கள் தோன்றிச் சமய உண்மைகளைக் காத்து நிலைநாட்டினார்கள்.

காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் போன்ற சமயம் வளர்த்த பெண் அடியார்கள் வரிசையிலே இன்று நமது சைவசமயத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றி உலகெல்லாம் பரப்பி ஒளிபெறச் செய்பவர் நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அம்மையார் அவர்கள் சைவ உலகிற்குப் பல வருஷங்களாக ஆற்றிவரும் தொண்டினைப்பற்றி அறியாதவர்கள் இல்லையென்றே கூறலாம். தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைபணிக்காகவும் சமய வளர்ச்சிக்காகவும் அர்ப்பணித்து மகிழ்ச்சி காண்பவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவர்களது அரிய பெரிய தொண்டின்மூலமும் அடியவர்களின் பேருதவி மூலமும் இன்று கெம்பீரமாகக் காட்சி தருவது தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயமாகும். அம்மையார் அவர்கள் இலங்கையில் உள்ள ஆலயங்கள், மன்றங்கள், சபைகளில் மட்டுமன்றி அயல் நாடுகளிலும் தமது சமயப்பணிகளை ஆற்றி வருகின்றார். தமிழ்மக்கள் மிகுந்து வாழும் மலேசியா நாட்டிற்கும் அம்மையார் இரண்டு தடவைகள் விஜயம் செய்துள்ளார்கள். மலேசியா – கோலாலம்பூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் அமைந்துள்ள இலங்கைச் சைவர் சங்கத்தின் அழைப்பை ஏற்றுக் கலா மண்டபத்திற் சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றி அனைவரதும் பெருமதிப்புக்கு ஆளானார்கள்.

இலங்கைச் சைவர் சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க சமயசம்பந்தமான சந்தேகங்களைப்பற்றிய விளக்கங்களை அவ்வப்போது தந்து இந் நாட்டிற் சைவம் வளரப் பேருதவி புரிந்து வருகிறார்கள். அம்மையாரது சமயத் தொண்டினைப் பற்றி எழுதுவதானால் உரை நீண்டோடிவிடும். அன்னாரது பணிகளை முன்னிட்டு அவருக்கு அநேக பட்டங்கள் விருதுகள் வழங்கிச் சைவ உலகம் புகழ்பெற்றிருக்கிறது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்வும் பெற்று ஆற்றிவரும் தெய்வப் பணி மேன்மேலும் வளர்ச்சியுறத் திருவருள் கடாட்சம் பாலித்தருள வேண்டுமெனக் கலியுக வரதனும் கந்தப் பெருமானது திருவடித் தாமரைகளைப் பணிந்து அம்மையாருக்கு எமது நல்லாசிகளைக் கூறுவோமாக.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"
"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம்

ச. பேரம்பலம், பி ஜே கே
தலைவர்

சிவமயம்

### மலாயா அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர் சித்தாந்தக் கலாநிதி, சைவபூஷணம்

### இ. வே. கந்தையா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

ஈழத்தாய் ஈன்றெடுத்த நன்மக்களுள் பல்லோர் சிவம் பெருக்கும் சீலர்களாய்த் திகழ்ந் துள்ளனர். தொன்மை வாய்ந்த சைவசமயத்தை அந்நியர் ஆட்சியிலும் ஈழத்தின் சைவத் தோன்றல்கள் கட்டிக் காத்த பெருமை சொல்லொணாதது. அத்தகு வாழையடி வாழை யென வந்த திருக்கூட்டத்தில் சைவசித்தாந்த உண்மைகளைப் பிழிந்துதரும் சாத்திர, தோத்திர நூற்களை ஓரளவேனும் ஐயந்திரிபறக் கற்று, கற்றதன் வழி பேச்சாலும் எழுத் தாலும் மக்களுய்யப் பணிபுரிந்தவர்கள் மிகச் சிலரே. அவர்களுள்ளும் இவ்விருபதாம் நூற்றாண்டில் சிவம் பெருக்கி வாழ்ந்த, வாழ்கின்ற பெண்மணிகள் அரிதினுமரிதாம்.

இவற்றிற்கெல்லாம் ஈடுகொடுக்கும் வகையில் உலகெங்கும் வாழும் தமிழ்க்குலமும் தாய்க்குலமும் சைவசமயத் தோன்றல்களும் இறும்பூதெய்தும் வகையில் தமிழும் சைவமும் இணைந்த பண்பாட்டுக்கு வழிவகுத்த முதற் பெண்மணி, ஈழத்தாய் ஈன்றெடுத்து சைவ வுலகிற்கு நல்கிய நன்மணி திருச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார்.

அறுபான்மும்மை நாயன்மார் வரலாற்றிற் சைவம் நிலைக்கச் செய்த பெண்மணிகள் மும்மணிகள் நம் நினைவில் நிற்பதுபோல் ஈழத்தை நினையும்போதும் தமிழும் சைவமும் வளரத் தொண்டாற்றும் பெருந்தகைகளை உன்னும்போதும் மலேசியர்கள் நெஞ்சில், குறிப் பாக மலாயா அருள்நெறித் திருக்கூட்டத்தவர் உள்ளங்களிலும் சைவமக்கள் இதயங்களி லும் நீங்காத ஓரிடத்தைப் பெறுபவர் பண்டிதர், சைவப்புலவர், சித்தாந்த ஞானாகரம் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களேயாவார்.

செஞ்சொற் செம்மணி, திருவாசகக் கொண்டல் எங்கள் தங்கம்மாவின் சொன் மழை கருமேகம் வழங்கும் நன்மழை போன்றது. அத்தகு தெளிந்த குளிர்ந்த அருவிப் பேச்சு. நூற்களோ கருத்துக் களஞ்சியங்கள் எனலாம். பேச்சும் எழுத்தும் சிவமணம் பெருக்குவன.

பெண்களுள் தனிமணியாய்த் தலைமணியாய் இலங்கும் அவர்பால் நான் பெரிதும் போற்றுந் தகைமை இளமைமுதல் இற்றைவரை தம் வாழ்க்கையைச் சைவத்திற்கும் தமிழுக்கும் அர்ப்பணித்து ஆற்றிவரும் அரும்பெரும் திருத்தொண்டாகும்.

அன்னார் மலேசியம் இருமுறை ஏகி சொன்மழை பொழிந்தகாலை மண்டபங்களில் மக்கள்திரள் பெருகி வாயில்வரை சூழ்ந்திருக்கும் மலேசியாவாழ் சிலாங்கூர் சங்க சபை யினர் அன்னாருக்குப் பாராட்டு விழா நடாத்திப் பட்டம் வழங்கியதைத் தமிழுலகறியும்.

இத்தகு விழுமிய கேண்மையர் அறுபத்தகவையை எய்தி மணிவிழா காணுதல் மகிழ்ச்சிக்குரியது. புனிதமும் பொற்பும் வாய்ந்த சைவதர்சினி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அவர்கள் மேன்மேலும் பல்லாண்டுகள் பன்னலத்துடன் வாழ்ந்து சைவம் வளர்க்க தில்லைச் சிற்றம்பலவன் திருவருளைப் பொழிவானாக! என ம. அ. தி. சார்பில் வாழ்த்துவதில் மனம் குளிர்கின்றேன்.

உ

சிவமயம்

# "பொன்மலர் என்னப் பொலிக"

திங்களங் கண்ணிச் சிவனே ஆதி
யென்றறை கின்ற நன்றறி சைவமும்
அச்சிவன் தந்த அமிழ்தெனும் தமிழும்
இன்றும் பண்டென இயல்வழா திலங்கும்
தான மாகித் தனிப்புக முற்ற
யாழொடு பெயரிய எழிற்பதி யாங்கட்
பன்னலங் கெழுமிய தொன்னக ராய
தெல்லியில் துர்க்கா தேவிக் காலயம்
வானுற எடுத்தம் மாலுக் கிளையாள்
கண்ணருள் எண்டிசைக் கண்ணும் பரந்தே
உலகு புரத்தற் குற்றன புரியும்
பணியே தனக்குப் பணியெனக் கொண்டும்
செந்தமிழ் வழங்கும் தேயம் எங்கும்
சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கச்
சொன்மழை பொழியும் தொண்டிற் சிறந்தும்
இசைதிசை நிறைத்த குசைநுதி நுண்மதி
அப்பாக் குட்டி தங்கம் மாவின்
அறுபதாம் வயது நிறைவுறு போதில்
எடுத்த மணிவிழா ஞாபக மென்றும்
நிலைத்து நற்பயன் விளைக்க மலர்ந்த
சிவத்தமி ழின்பத் தேமலர் சுகந்தப்
பொன்மலர் என்னப் பொலிகபல் லாண்டே.

இலக்கண வித்தகர்
பண்டிதர் இ. நமசிவாயதேசிகர் ஜே. பி.

உ
சிவமயம்

# பெண்ணினத்தின் பெருந்தலைவி

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத் தமிழ் உலகில் இன்று மிகவும் புகழ்பெற்ற ஒருவர். தமிழைத் தெளிவுறக் கற்று, பண்டிதப் பரீட்சையிலும் பட்டம்பெற்றவர். சைவநூற் பயிற்சியும், தமிழ் இலக்கிய இலக்கண அறிவும் நிரம்பப்பெற்ற இவர் ஆசிரியப்பணியில் ஈடுபட்டு இருந்தபோது, கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சைவத் தமிழ் மாணவர்களுக்கு நல்லதோர் ஆசிரியராக விளங்கி அருந்தொண்டாற்றினர்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கொழும்பில் கடமையாற்றிய காலத்தில் எமது சபை நிகழ்ச்சிகளில் அடிக்கடி கலந்துகொள்ளுவதோடு சிறப்புரைகள் வழங்கியும் பெருமைப்படுத்தி உள்ளார். அந்நாளில் சமய இலக்கியங்களில் அவருக்கு இருந்த ஆர்வத்தைத் தலைநகரிலுள்ள பலரும் பாராட்டினர்.

இவரது சொற்பொழிவு ஈழத்தில் மாத்திரமன்றி தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இடம்பெற்று வருவதை அனைவரும் அறிவர். பெண்ணினத்தின் முன்னேடியாக சைவர் பணிக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ள இவரை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

இவரின் சேவைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இவருக்கு ஒரு மணிவிழா எடுப்பது அறிந்து சைவத் தமிழ் உலகம் பெருமகிழ்வு எய்தும் என்பதில் ஐயமில்லை. கொழும்பு விவேகானந்த சபையின் கௌரவ உறுப்பினர்களுள் ஒருவராக இருந்து சிறப்பிக்கும் துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத் தமிழ் உலகிலே '' மங்கையருள் தனி அரசி '' ஆகத் திகழ்ந்து மேலும் பல தொண்டுகள் ஆற்ற நீடிய ஆயுளும் நல்ல உடல்நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழ எமது நல்வாழ்த்துக்கள்.

ஆ. செ. நடராசா,
தலைவர்,
விவேகானந்த சபை.
கொழும்பு.

உ
சிவமயம்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

இன்று மணிவிழாக் காணும் சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சென்ற முப்பது ஆண்டுகள் வரை சைவத்துக்கும் தமிழுக்கும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துத் தம் சேவைகள் மூலம் தமிழ் கூறும் சைவ உல கெங்கணும் நன்றியையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். சான்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு; சைவச் சான்றோராகிய செல்வியாருக்குச் சிறப்பில் ஒரு படி ஏற்றம்! சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனப் போற்றிப் பேணும் ஆதீனங்கள்முதல், சாதாரண கிராம வாசிகள் வரை, இச் சொல்லின்செல்வியின் கருத்துப் பொதிந்த செஞ்சொற் செம்மணிகளையும் இடையிட்டு எடுத்தாளும் திருமுறைச் செல்வங்களையும், கொண்டலென வீசும் திருவாசகங்களையும், ஆழ்ந்த சிவஞானக் கருத்துக்களை எளிமையாக எடுத்துரைக்கும் வித்தகத்தையும் பரவசத்துடன் கேட்டுப் பயன் பெறுகின்றனர். நன்றிக் கடன் செலுத்த விருதுகள் வழங்குகின்றனர். தமிழ்நாடு, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் சைவத் தமிழ் மக்களும் இதில் அடங்குவர். நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், என்ற பாங்கில், செல்வி அப்பாக்குட்டி அவர்களை எமது நாட்டுச் சைவத் தமிழ்த் தூதுவராக இதர தமிழ்கூறும் நாடுகளுக்கும் அனுப்பிவைத்து அம்மக்கள் பய னடையச் செய்தல் எங்கள் கடன். எனது தமயனார் தெ. து. ஜயரத்தினம் அவர்கள் செல்வி யாருக்குக் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் எடுத்த நகரப்பிரவேச விழாவிற் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இக்கருத்தைக் கூறியதை இங்கு நினைவு கூருகிறேன். மானசிக தவக்கோலம் ஏற்றுச் செயற்படும் சிவத்தமிழ்ச் செல்வி, தெல்லிப்பழையில் தம தில்லத்துக்கண்மையில் உள்ள துர்க்கா தேவியைச் சரணடைந்து அவ்வாலயத்தின் மகத் தான புனருத்தாரணப் பணிகளில் அச்சாணியாக இயங்கினர். ஒழுங்குமுறையான திருக் கோவிற் கருமங்களையும், கோவிலை மருவி நிற்கும் திருமடம், தெய்வீகச் சமூக சேவைப் பணிகள் முதலியவைகளை இயக்குவிக்கும் சிறந்த நிர்வாகத் தலைவியாகவும் செயற்படு கின்றார். சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் தேகாரோக்கியம், மனத்திடகாத்திரம் பணி செய்து கிடக்கும் பாங்குகளுடன் கூடிப் பல்லாண்டு, பல்லாண்டு காலம் வாழ, அருள்மிகு துர்க்காதேவியின் அனுக்கிரகம் கிடைப்பதாக!

து. தர்மராஜா
கொழும்பு.

சிவமயம்

யாழ்ப்பாண சைவபரிபாலன சபைத் தலைவர்

## திரு. சிவ இராசேந்திரன், J. P.

சட்டத்தரணி அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மணிவிழா எடுக்கத் தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். சைவத்துக்கும், தமிழுக்கும் தேசத்துக்கும் அளப்பரிய சேவை செய்யும் ஒருவரை அவர் வாழும் பொழுது பாராட்டுவதே முறை. இந்தப் பாராட்டு விழாவைச் சைவ உலகம் முழுமனதுடன் வரவேற்கும் என்பதற்கு ஐயமில்லை. எனவே செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது தன்னலமற்ற பணியைச் சைவ மக்கள் எப்படி மதிக்கின்றார்கள் என்பதை அறிவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதையும் மனமார விரும்புகின்றேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு மானிப்பாய்க் கோவிற்பற்று முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக நான் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலைக்கு உரையாற்ற அழைத்தேன். சந்தோஷமாக அழைப்பை ஏற்று அங்கு வந்து சொற்பொழிவு ஆற்றினர். அந்தச் சொற்பொழிவைக் கேட்ட எல்லோரும் ஆனந்த பரவசத்தில் மூழ்கினர்கள். அவர்களின் ஓசைத் தொனியும், ஆழ்ந்த கருத்துக்களும், எடுத்துரைக்கும் பாணியும், எடுத்துரைப்பதை மக்களின் மனதில் பதிய வைக்கும் திறமையும், உரையில் இடைஇடையே வரும் பாக்களும் உதாரணங்களும் அவர்களின் சொற்பொழிவுக்கு ஒரு தனிப்பெரும் சிறப்பை அளிக்கின்றது. மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வருகை என்றால் பெரும் திரளான மக்கள் கூடுவார்கள். அப்படியே பல இடங்களிலும் கவனித்திருக்கிறேன்

யாழ்ப்பாண சைவபரிபாலன சபைக் கைங்கரியங்களில் பங்கு பற்றுவதற்கு மகிழ்ச்சியுடன் வருபவர்களில் செல்வி துர்க்கா துரந்தரியும் ஒருவர். போக்கு வரத்து வில்லங்கங்களையும் பொருட்படுத்தாது அந்தந்த இடங்களில் அந்தந்த நேரங்களில் நிற்பது அவர்களின் கடமை உணர்ச்சியைப் பளிங்கு போல் எடுத்துக் காட்டுகிறது. தொடங்கிய சைவத் தொண்டை இறுதி வரைக்கும் அயராது ஆற்ற எல்லாம் வல்ல மானிப்பாய் வேலக்கை முருகன் அருள் புரிய வேண்டுமென்று வாழ்த்துவதுடன், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு நோயற்ற வாழ்வும், மன உற்சாகமும், நீண்ட ஆயுளும் அளிக்க வேண்டுமென்றும், மேலும் நடக்க இருக்கும் மணிவிழா பொலிவுடன் காட்சியளித்து பயன் நல்கவும், மணி விழா மலர் மலர்ந்து இனிய மணம் பரப்பவும், இந்த நற்பணியில் பங்கு பற்றிய பெரியோர்களுக்குப் பலன்கள் பல பெருகவும் பிரார்த்திக்கின்றேன்.

சிவமயம்

# சிவம் பெருக்கும் அம்மையார்

சிவத் தமிழ்ச் செல்வி என்னும்போதே உளம் இனிக்க, நா இனிக்க, வாயும் இனிக்கிறது. சிவமும் தமிழும் சேர்ந்த பெருஞ் செல்வம் மானுட உருப்பெற்று எம்முன் பணி செய்து நிற்பது எமது தவப்பேறு. " பெண்ணின் நல்லாள் " என்றும், " பெருந்தவக் கொழுந்து " என்றும் உமையம்மையாருக்கு அளிக்கப்பெற்ற பெயர்களை எம்மளவில் அம்மையாருக்கும் சூட்டவே எமது மனம் விழைகின்றது. எமது சைவமோ மிகமிகத் தொன்மையானது, சிறப்பானது. எனினும் ஏன் இது இக்காலத்தில் சிறிது கீழ்நிலையை அடைந்துள்ளது? எமது சமயத்தின் தனிப் பெருமையை எடுத்து விளக்கிச் சமயத் தொண்டு செய்யும் அம்மையார் போன்ற அர்ப்பணிப்பாளர் இல்லாத காரணமேயாகும்.

அம்மையார் மனையறம் புகுந்திருப்பின், அவரை யார் அறிந்திருப்பார்? இப்பொழுதோ அவரது புகழ் ஈழம் மட்டுமல்ல, மலேசியா, தமிழகம் முதலிய இடங்களையும் கடந்துவிட்டது. ஈழத்திற்குப் புகழ் தேடித் தந்த அருந்தவப் புதல்வியார்!

திருமுறைக் கருத்தும், சாத்திரநுட்பமும், புராண நயமும், இலக்கியச் சுவையும் தவழ்ந்துவரும் அம்மையாரின் சொற்பொழிவுகள், முத்தும் மணியும் பொன்னும் பவளமும் உந்தப்பெற்று வரும் தெள்ளத் தெளிந்த ஆற்றொழுக்குப்போல நுகர்வோரைப் பேரின்ப சுகத்தில் ஆழ்த்தி விடுகின்றன. அவரது ஆழ்ந்த அறிவுச் சிந்தனையும் அழகிய சொற் பெருக்கும் சைவத்தையும் தமிழையும் தழைக்க வைக்கின்றன.

அம்மையாரின் சமயத்தொண்டு, தமிழ்த்தொண்டு, சமூகத் தொண்டு புதுநோக்குடையனவாய் மற்றையோர்க்கு வழிகாட்டியாக அமைகின்றன. அண்மையில் அம்மையார் ஆற்றிய சொற்பொழிவொன்று அவரது குறிக்கோளைப் பிரதிபலிக்கின்றது:

> " ஆலயங்கள் வழிபாட்டிற்குரிய இடங்களாக மட்டும் அமையாது. அவை அறச்சாலைகளாக விளங்கவேண்டும். அனாதைகளை ஆதரித்தல், சமூக நலனைப் பேணுதல், கல்வி, சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளுதல் முதலானவற்றிலும் தேவஸ்தானங்கள் ஈடுபடுதல் வேண்டும்."

இவற்றுடன் அச்சகப் பணியும் சேருமாயின், இக்கால எமது சமயத்தின் மந்த நிலைக்கு இவையே பரிகாரமாகும். மதமாற்றத்தையும் முறியடிக்கும்.

அம்மையாருக்கு நற்சுகமும் நல்லாயுளும் எய்துவதாக! அம்மையாரின் சிவத் தமிழ்ப்பணி என்றென்றும் பொலிவதாக! ஸ்ரீ துர்க்காதேவி அம்மையாரின் திருவருட் டுணை என்றென்றும் நிலைபெறுவதாக!

வாழிய நலனே! வாழிய நலனே!

ஆ. குணநாயகம்
தலைவர்,
ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்

உ

சிவமயம்

# தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிதனை உலகு தவமிருந்து பெற்றதம்மா

மட்டுவில் ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தினரால் வழங்கப்பெற்ற

## வாழ்த்துப்பா

அன்னையருள் சொரிதுர்க்கை அம்பாள் என்றும்
அமர்தெல்லிப் பழைமேவும் அடியார் ஏத்த
முன்னைவினை மூளாமே மோகம் நீக்கி
முழுவாழ்வாய்த் தன்பாதம் மூழ்கி வாழப்
பின்னையுந்தான் பிறவாமல் பேணி அன்பால்
பேரின்பப் பெருவாழ்வும் பெரிது மீவாள்;
தன்னைமுழு தர்ப்பணித்த தங்கம் மாவாந்
தவச்செல்வி தளராமல் தாங்கி நின்றே.

தமிழ்விட்டுத் தொழில்விட்டுத் தன்னை விட்டுத்
தானவளாந் தன்மையையுந் தானே காணுர்
அமிழ்தான அன்னையவள் அருட்பா தங்கள்
அல்லாமல் அயலொன்றும் அறியா ராகி
உமிழ்கின்ற அருள்காலும் ஒப்பில் துர்க்கை
உலகத்து நாயகிபூங் கோயில் ஓங்க,
தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி
தனையுலகு தவமிருந்து பெற்ற தம்மா!

அன்பென்ருல் அன்னையவள் பாதம் அன்றி
ஆருயிர்கள் அத்தனையும் அவளே என்று
துன்பங்கள் போக்குதற்குத் துணையே யாகத்
தூமகளிர்க் கில்லங்கள் துலங்க வைத்து
என்பெல்லாம் உருகஉடை இருக்கை உண்டி
இனிதுதவி அவர்கள்முகம் மலரும் போது
முன்பெல்லாம் செய்ததவம் முழுதும் வந்து
முன்னிற்கத் தங்கம்மா முழுமை பெற்ருர்!

* * *

தெய்வக் களைமுகமுந் தீந்தமிழ்பா டும்வாயும்
மெய்ம்மைத் திருப்பணிசெய் மென்கரமும் — உய்நெறிக்கு
உள்ளம் உருகும் உயர்செல்வி தங்கம்மா
வெள்ளம் பெருக்கும் விழி.

விரிவுரைகள் நூற்பதிப்பு வேண்டும் பணிகள்
உரியமுறை யால்சைவம் ஓங்க — அரியசெயல்
நேர்செய்தா ராரே! நிறைசெல்வி தங்கம்மா
ஊர்வாழ வாழ்க! உவந்து.

ஆக்கம்; இ. சிதம்பரப்பிள்ளை
நீர்வேலி

உ

சிவமயம்

# திருப்பொலியும் திருச்செல்வி

மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள் தெய்வம் எனச் சேக்கிழார் பெருமானல் போற்றப் பட்ட பாண்டிமாதேவியைப் போல ஈழம்வாழ் சைவத் தமிழ் மக்களாற் போற்றப்பட வேண்டியவர் நமது மதிப்புக்குரிய துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி சிவமயச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களேயாவார். நாம் செய்த தவப் பயனின் பேறே, அவர்கள் நம்மிடை அவதாரஞ் செய்து சைவமும் தமிழும் வளரவும் துர்க்கா தேவியின் ஆலயம் சிறக்கவும் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். அவர்கள் தாம் பிறந்த ஈழ நாட்டில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் முதலாம் நாடுகளுக்கும் சென்று சைவத்தைப் பரப்பினார்கள். இந்தியாவில் உள்ள சைவ ஆதீனங்களில் அவர்களின் புகழ் ஓங்கி நிற்கிறது. எல்லாவற்றிலும் விசேடமாக திருக்கேதீஸ்வரம் திருவாசகமடத்தில் நடக்கும் திருவாசக விழாவிற் பெரும் பங்குகொண்டு விழாவை நடாத்த ஆசியும் ஆதரவும் நல்குவதுடன் விழாவிற் கலந்து தலைமை தாங்கியும் பேருரை நிகழ்த்தியும் எம்மை எல்லாம் ஆனந்தத்தில் ஆழ்த்தும் பெருமை சொல்லும் தரமன்று. அவர்களுக்கு மணிவிழா எடுப்பதால் நாம் பெரும்பேறுபெற்றவர்களாவோம். அவர்கள் இன்னும் பலகாலம் எல்லா நலன்களும் பெற்று நலிவடைந்து போகும் நமது தமிழ் சமூகத்தையும் சைவ சமயத்தையும் சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் நின்று நிலவ எல்லாம் வல்ல கேதீஸ்வரப்பெருமான் திருவருள் பெருக வேண்டுமெனப் பிரார்த்தித்து எனது ஆசியையும் வாழ்த்தையும் உரித்தாக்குகின்றேன்.

சி. சரவணமுத்து
திருவாசகமடம்
திருக்கேதீஸ்வரம்

உ

சிவமயம்

# அறப்பணி புரியும் அறங்காவலர்

சைவசமயம் மிகத் தொன்மையான தமிழர் சமயமாகும். உலகத்திலுள்ள பல சமயங்கட்கும் வழிகாட்டியான முதற் சமயம். சமயம், பாஷை விருத்தியின் பொருட்டு பல்லாண்டு பல பெரியார்கள் தொண்டாற்றியுள்ளார்கள். சென்ற நூற்றூண்டுகளில் தமிழ்க் கவிதைகள், கட்டுரைகள், நூல்கள் பலபல திறத்தில் ஆக்கி சமயத்தை வளர்த்தவர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான், விபுலானந்த அடிகள் மரபு வழியில் தொண்டாற்றி வரும் பெருமை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கே அமையும்.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற திருநாவுக்கரசர் திருவாக்குப்படி தனது வாழ்வையே தமிழும் சைவமும் நிலை ஓங்கச் செய்துள்ளார். உலக அரங்கில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா முதலிய தேசங்களில் தமிழும் சைவமும் அபிவிருத்தியடைந்து வருதல் வேண்டும் என்ற உயர்ந்த கருத்துடன் அறப்பணி பல புரிந்து வருகின்றார்கள்.

ஸ்ரீ துர்க்கையம்பாள் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தில் வேண்டிய வேண்டிய திருப்ப பணிகளைக் காலந்தோறும் புரிந்து அம்பாளுக்கு ஆகமவிதி தவறாது நித்திய நைமித்திக பூசைகள் நடைபெற ஏற்பாடு செய்து ஷெ ஆலயத்தின் அறங்காவலராகப் பணிபுரிகின்றார்.

அதனால் அம்பாள் தரிசனத்துக்குப் போய்த் தாம்தாம் விரும்பிய இஷ்டசித்திகளைப் பெற்றுக்கொள்ளும் பக்தர் கூட்டம் அதிகரித்து வருகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அம்மையார் அவர்கள் ஷெ ஆலயப்பணி செய்து வரவும் தமிழ், சைவம் இவைகளின் விருத்திக்காகப் பணிசெய்து வரவும் அதற்கேற்ற நற்சுகவாழ்வு, ஐஸ்வரியம், தீர்க்காயுள் என்பவைகளையும் பெற்றுப் பல்லாண்டு நீடுவாழத் திருவருள்செய்து பாதுகாக்கும்படி ஸ்ரீமதி கௌரியம்பாள் சமேத ஸ்ரீ கேதீஸ்வரப் பெருமானை அன்புடனும் சித்தசுத்தியுடனும் வேண்டுதல் செய்து பிரார்த்திக்கின்றேன்.

அத்துடன் எனது நல்லாசியையும், வாழ்த்தையும் தெரிவிக்கின்றேன்.

வாழ்க தமிழ் வாழ்க சைவம்
அறப்பணி வாழ்க திருமுறை வாழ்க
வாழ்க உலகெலாம்.

**அடியார் அருளும் அரன்பணியில் அன்பும்**
**கடியாத இன்சொற் கவினும் — கடியர்**
**மலராள் அருளும் வடிவாகப் பெற்று**
**நிலமீது வாழ்க நிறைந்து.**

அடியார்க் கடியன்
கு. அருளம்பலம்
(முன்னாள் பொன்னாவெளி உடையார்)

# எங்கள் அன்பு ஆசிரியை

கொழும்பு தட்டாரத் தெருவில் சேர் ரூஸிக் பரீத் அவர்களின் முகாமைத்துவத்தில் பாத்திமா முஸ்லிம் பெண்கள் பாடசாலை இயங்கிக் கொண்டிருந்த காலமது.

முஸ்லிம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டப் பல தமிழ் ஆசிரியர்கள் சேவையாற்றிக் கொண்டிருந்தபோதுதான், இன்று மணிவிழா தரும் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நான்காம் வகுப்புக்கு புது ஆசிரியையாக வந்தார்கள். அன்றைய இளஞ்சிறுர்களான எங்கள் பிஞ்சு உள்ளங்களில், தமிழ்ச் செல்வியின் அழகிய எளிமையான தோற்றமும், கணீரென்ற இனிமையான பேச்சுவன்மையும் அழியாத இடத்தைப் பெற்றுக் கொண்டன.

''கற்பித்தல்'' என்பது புனிதமான தொழில். அத்தொழிலுக்குத் தன்னையே அர்ப்பணித்து, மாணவரைக் கவர்ந்து, கவனத்தை ஈர்த்து, திறமையாகச் சேவையாற்றியவர் எமது சிவத்தமிழ்ச் செல்வி. ''சாதிமத பேதமின்றி சேவைமனப்பான்மையுடனும், கடமையுணர்வுடனும் கற்பிக்கும் கல்வி என்றும் பலன் தரக் கூடியது'' என்பதை நிரூபித்துக் காட்டியவர் எங்கள் அன்பு ஆசிரியை.

காலையிலிருந்து மாலைவரை மாணவரது உலகம்தான் அவரது உலகம். பாடங்களைத் தயாரித்தல் குறிப்புகள் எழுதல், தையல், விளையாட்டு, நாடக நடனப் பயிற்சிகள் அளித்தல், என்பவற்றில் தமது நேரத்தின் பெரும் பகுதியைக் கழித்து அயராது உழைத்ததைக் குறிப்பாக அவரது மாணவர்கள் என்றுமே மறக்க மாட்டார்கள்.

பகற்போசன வேளையில் வகுப்பு மாணவர்களைத் தன்னுடன் அமர்த்தி, தனது உணவைத் தன் கையாலேயே குழைத்து உருண்டைகளாக்கி உண்ணக் கொடுத்து, கழுவிய கை உலருமுன் கரும்பலகையில் பாடம் எழுதி அறிவூட்டிய அந்த அன்னையை, சம்பந்தப்பட்ட மாணவர்கள் என்றுமே நன்றிப் பெருக்குடன் நினைவுகூரக் கடமைப்பட்டவர்கள். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்டவர், கொழும்புக்கு வந்து, முஸ்லிம் இளஞ்சிறுருக்கு ஆழமான அசையாத அடித்தளமிட்டுக் கல்வியூட்டிய அந்த அளப்பரிய சேவை பாராட்டுக்குரியதே. தமிழை வளர்த்துவரும் திறமை மிக்க நல்லாசிரியரின் மாணவர்கள் என்பதில் எமக்கும் பெருமையே.

எங்கள் ஆசிரியை எம்மை அணுகிய விதம், கற்பித்த முறை தனித்துவமானவை. இலக்கியப் பாட வேளையில் நாம் அவரை வண்டுகளைப் போல் மொய்த்துக் கொள்வோம். இனிமையான குரலில் நளவெண்பாக்களைப் பாடி விளக்கம் தந்தமுறை தெவிட்டாதது. இளமையில் எம் உள்ளங்களிற் பதித்த உதாரணங்களையும், விளக்கங்களையும் இன்றைய மாணவர் உலகுக்கும் சங்கிலித் தொடராகப் பதித்து வருவதில் நாம் பெருமையடைகிறோம்.

கட்டுரைகளைத் தொகுக்க அவர் தந்த விளக்கம் புவியியலைப் புகட்டிய விதம், குடியியலை உணரச் செய்த முறை, சுகாதாரத்தைப் பேண விளக்கிய வழிவகை, சரித்திரத்தைச் சித்தரித்த பாங்கு, கணித சிக்கலை அவிழ்க்கக் காட்டிய திறமை, எல்லாவற்றிற்கும் மேலாக தெளிவான உச்சரிப்புடன் தீந்தமிழை எங்கள் நாவிலே பிழையற விளையாட விட்ட நளினம் என்பவற்றை அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் மாணவர்களாக இருந்து ஆசிரியர்களாக அதிபர்களாக மாறி சேவை செய்யும் முஸ்லிம் ஆசிரியர்கள் என்றும் மறக்க முடியாதவர்கள். பத்திரிகைகளில் வெளிவரும் அவரது கட்டுரைகளும் வானொலிப் பேச்சுக்களும் இன்றும் எமக்கு உறுதுணையாகவே இருக்கின்றன.

ஐந்து ஆண்டுகளையே எம்மோடு ஆசிரியை கழித்த போதும் சமுதாயத்தில் சிறந்த ஆசிரியர்களாக, எழுத்தாளர்களாக, வானொலிக்கலைஞர்களாக, பேச்சாளர்களாக, கல்வி ஆலோசகர்களாக நாம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு, அவர் தந்த அடிப்படை அறிவும், செயற்திறனும் ஆதாரமாக அமைந்தன.

சைவத்துக்கும் தமிழுக்கும் தியாக சிந்தையுடன் தொண்டு செய்து, பொன்னென மின்னும் தங்கத் தமிழ்ச் செல்வி அப்பாக்குட்டி அவர்களுக்கு எமது உளம் நிறைந்த நன்றியும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

திருமதி லத்திபா காசிம்
இளைப்பாறிய அதிபர்
நுககொடை.

சிவமயம்

# இருபத்திரண்டு 'காரட்' ஈழத்துத் தங்கம்

புதுமையும் புரட்சியும் உலகில் ஒவ்வொரு நாட்டிலும்; ஒவ்வொரு துறையிலும் உருவாகி வியப்பும் மகிழ்வும் தந்துகொண்டிருக்கின்றன. பண்பும் பயனும் இல்லாத புதுமையோ புரட்சியோ போற்றப்படுவதில்லை; வளர்க்கப்படுவதில்லை. அவை தோன்றிய உடனேயே மறைந்தும் விடுகின்றன. பண்பான பயனுள்ள புதுமைகளும் புரட்சிகளும் புனித உணர்வுகளுடன் போற்றிவளர்க்கப்படுகின்றன.

தமிழ்ப் புலமை உலகமும், சைவச்சீல உலகமும் கண்ட புதுமைகளும் புரட்சிகளும் பயன்பாட்டுப் பட்டியலில் நீளமாகிக்கொண்டு வருகின்றன. சுந்தரர் திருத்தொண்டத் தொகையின் முன்னோட்டம் பல தொடர் தொகை நிலைகளை உண்டாக்கி சேக்கிழார் பெரியபுராணத்திற்கு உறவு கூறும் புதிய பெரிய புராணம் தோன்றி நவீன நாயன்மார் களை நமக்குக் காட்டும் புதிய புரட்சிக்கு ஏற்ற சூழ்நிலை அமைந்துகொண்டு வருகிறது.

தமிழும் சைவமும் வாழ்க்கையோடு இணைந்து; வாழ்க்கைக்குப் பயன்பட்டு; வாழ்க் கைக்குப் பங்களிப்புச் செய்த வரலாறு உலக சரித்திரத்தில் புரட்சிப் போக்காய்ப் புகழப் படும் சாதனங்களாகிவிட்டன. சம்பந்தர் எலும்பைப் பூம்பாவையாக்கியும், சுந்தரர் முதலை உண்ட மகவை அழைத்தும், அப்பர் நீற்றறையைக் குளிர்வித்தும், மாணிக்கவா சகர் பவுத்தர் வாயடைத்து; ஊமை மகளை உரை பகர்வித்தும் காட்டிய பயன்மிகு புரட்சிகள் கவனத்தைக் கவர்வதாகும். சரித்திர நிகழ்வின் இச் சான்றுகள் தமிழுக்கும் சைவத்திற்கும் ஏற்றம் கொடுப்பனவாய் அமைந்துள்ளன.

என்றோ நடந்த இந்த ஏற்றங்களுக்குப் பின்பு இம்மாற்றமாம் வையகத்தில் வெவ் வேறாய் வந்துகாட்டும் புதுமைகளும் புரட்சிகளும் சைவத்தையும் தமிழையும் புதுக்கிப் பின்னைப் புது உலகில் பிரகாசிக்கவைத்துள்ளன. தமிழ்ப்புலமையோடு சகோதர உறவு கொண்டதே சைவசமயப் புலமையும், தமிழோடு இசைக்கு எவ்வளவு இணைவு உண்டோ அவ்வளவு இணைவு சைவசமயத்திற்கும் உண்டு. தமிழ்ப் புலமையை தெய்வப் புலமை யாக்கிய பெருமை சைவத்திற்கு உண்டு. தமிழோடு கலந்தவர்கள் சைவத்தோடு கலப்பது இயல்பேயாகியது. இவையிரண்டும் காலப்போக்கில் ஒருவருக்குக் கண்களாகவும் அமைந்தன. உலகியலிலும் ஆன்மீகத்திலும் புதுமைகள் தோன்ற இக் கண்மணிகளே காரணமாகி நின்றன. தமிழ்ப் புலமை என்பது இல்லறத்தையும் தழுவி துறவறத்தையும் மேவிநிற் பது. இதனாலே தமிழியம் இல்லறநிலை துறவறநிலை யென இருவகையாக மதிக்கப்பட்டது. இதுகுறித்துப் பண்டிவமணி மு. கதிரேசன் செட்டியார் கூறியது குறிக்கத்தக்கது.

" உலகவாழ்க்கையே போலப் புலமை வாழ்க்கையும் இல்நிலை, துறவு நிலையென இரு திறப்பட்டு நிகழுமாறு " —கல்வியே கற்புடை மனைவியாகவும், செல்வப் புதல்வரே செழும் பாடலாகவும், கற்றதுணர விரித்துரைத்தல் ஆகிய சொல்வளனே இந்நிலைக்கு வேண்டிய பொன்நிலையாகவும் கொண்டு இல்லறப்புலமை வாழ்க்கையைச் செவ்வனே நடத்திய செம்புலச் செல்வனொருவன், முடிவில் மெய்யுணர்வு கைவரப்பெற்று அதுவாயிலாகத் திரு வருள் நிலையுணர்ந்து அவ்வருள்நிலை இன்பத்தில் நிலைப்பின் அந்நிலையே துறவறப் புலமை வாழ்க்கையாகும். உண்மைப் புலமையின் சிறந்த குறிக்கோள் இதுவேயாம். முடிந்த பயனும் இதுவேயாகும்."

இக் கோட்பாட்டு நெறியில் நம்மிடையெ இல்லறப் புலமையும் துறவறப் புலமை யும் நிறைந்த புலமைத் துறவியாய்த் திகழ்பவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். துறவு என்பதற்குப் புதியதோர் விளக்கமாய் விளங்கிவரும் இவர் தமிழாலும்

சைவத்தாலும் ஒரு திருமடத்தை உருவாக்காமலும்; திருமடத்திற்குச் செல்லாமலும் ஒரு தேவஸ்தானத்தைப் பொலிவடையச்செய்து அதன்வழி ஆக்கப்பணிகளையும் ஆற்றிவருகின்றார்கள். தங்கம்மா அடிகளாகி ஒரு வட்டத்திற்குள் குறுகிவிடாமல் தங்கம்மா அப்பாக் குட்டியாகி (அப்பா—சிவன், குட்டி—குழந்தை; சிவச்செல்வி) தமிழ் உலகை வலம்வந்து வாழவைக்கும் இவர்களது புரட்சி புதுமைப் பெண்குலத்தின் போக்குகளிற் குறிப்பிடத் தக்கதோர் அம்சமாகும். தெல்லிப்பழையின் பெயரைத் தமிழுலகெங்கும் பரப்பியவர். துர்க்கை அம்மனின் அருட்டிறனை விளங்கவைத்து; அவளின் திருவருள் வெள்ளத்துள் ஆயிரக்கணக்கான அடியார்களைத் திளைக்கவைத்தவர். தெள்ளுதமிழ்ச் சொற்பொழிவுகளால் நெஞ்சங்களை அள்ளிச் சைவக்கடலில் அமிழ்த்தியவர். நடமாடும் சைவப் பல்கலைக்கழகமாய் வாழ்பவர். வழுக்கியும் வன்சொல் பேசா நாவினர். கற்றதனால் ஆய பயனும் வாலறிவன் நற்றாள் தொழுது வாழ்பவர்.

பேரறிஞர் பேரவையிலும் பொதுமக்கள் மன்றங்களிலும் பேருரைகளும் சிறப்புரைகளும் ஆற்றி ஆன்ற தமிழ்ப் புலமையால் அறிவும் அருளும் வளர்ப்பவர். அருள்நெறிப் பார்வையில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பயணம் செய்து பயன்பட வாழ்பவர். 1965ஆம் ஆண்டு மார்கழிமாதத்தில் பண்டிதை அவர்கள் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாச வைரவிழாவிலே உரையாற்ற வந்திருந்தார்கள். நான் அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் படித்துக்கொண்டிருந்தேன். சிதம்பரத்தில் மாதர் அரங்கிலே பண்டிதை அவர்கள் ஆற்றிய சிவத்தமிழ் உரை கற்றோரையும் மற்றோரையும் களிபேருவகையில் ஆழ்த்தியது. மாதர் அரங்கத் தலைவி இவர்களை உச்சிமேல் வைத்து மெச்சிப் பாராட்டினார்கள். ஈழத்தின் சைவத் தமிழ்ப் பெருமைக்கு அப்பொழுது ஒரு வைரம் பதிக்கப்பட்டது. அன்றைய சொற்பொழிவைக் கேட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை மாணவர்கள் பண்டிதை அவர்களை அண்ணாமலை நகருக்கு அழைத்தனர். கோகலே மண்டபத்தில் பேராசிரியர் கோ. சுப்பிரமணியபிள்ளையின் தலைமையில் ''சிலம்பு'' என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்தனர். அன்றயதினம் அம்மையார் அவர்கள் வார்த்தை பதினாயிரத் தொருவராய் வெல்லும் சொல் விளம்பி விரிவுரையாளர்களையும், மணவர்களையும் வியக்கவைத்தார்கள். இந்த வியப்பைக் கவனித்த தலைவர் கோ. சு. பிள்ளை அவர்கள் அம்மையார் கூறிய கருத்தொன்றை மறுத்து தலைமைப் பின்னுரை நிகழ்த்தினார். உடனே அம்மையார் எழுந்து மேடை நாகரிகத்துடன் அவர் மறுப்புக்கு மறுப்புக் கூறி மடக்கினார்.

பேராசிரியர் மலைத்துப்போனார். எதிர்பாராத மறுப்பு அவரைத் திகைக்கவைத்துவிட்டது. அவர் நிறைந்த புலமையாளர்; நுண்மாண் நுழைபுலத்தினர்; சட்டவல்லுனர்; தமிழ் அரங்கிலே எதிர்வழக்காடி எவராலும் வெல்லமுடியாதவர்.

கோ. சு. பிள்ளையின் தலைமையிலே பேசப் பயந்து ஒதுங்கிய தமிழறிஞர்களை நான் அறிவேன். அத்தகைய பேரறிஞர் மண்டபமே ஆரவாரித்து கையொலி செய்யச் சிரித்து மழுப்பி தனது உரையைத் திசைதிருப்பி அம்மையாருக்குத் தமிழால் முடிசூட்டினார்.

'' இங்கே பேசியவர் ஈழத்துத் தங்கம், ஈழத்துத் தங்கமென்றால் மிகுந்த மதிப்புடையது; இருபத்திரண்டு கரட் பெறுமதியுடையது; நம்பிக்கைக்குரியது. இந்தத் தங்கத்தின் விளக்கத்தை நீங்களும் கண்டீர்கள். ஈழத்துத் தங்கம்மா '' சொலல் வல்லள் சோர்விலள் அஞ்சாள் இவளை இகல்வெல்லல் எனக்கும் அரிது'' என்று பாராட்டினார்கள். பல்கலைக்கழக கோகலே மண்டபம் ஐந்து நிமிடங்கள் மாணவர் கைதட்டலால் தடம் புரண்டுவிடுமோ எனத் தடதடத்தது.

ஈழத்துச் சிவானந்தன்
புங்குடுதீவு.

# எங்கள் ஆசிரியை

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று''

என்பது தமிழ்மறைக் கூற்ருகும். இக்குறளுக்கமைய சீர்நிறைச் செல்வக்குடியின் சிறப்புக்கும், வியப்புக்கும் ஏற்றவிதமாய் வளமார் பெருமகளாய், அனைவர்க்கும் திருமகளாய்க் காண்போர் நெஞ்சினிலே நிறைமகளாய்ப் பிறந்த செம்மலர்ச் செல்வியே என் மதிப்புக்கும், எதிர்கால ஒளிமயமான என் எதிர்கால வாழ்வுக்கும் வழிகாட்டும் மங்கையர்த் திலகமாய் விளங்கினுர். இப்பேரம்மையாரே சிவச்செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியாவார்கள்.

நான் இளம் மாணவியாக இவ்வம்மையாரிடம் கல்வி கற்று வருங்காலை இவர்களைப் பற்றிப் பலரின் வாய்க்கூற்றுக்கள் மூலம் அறிந்தவற்றையும் இவ்விடம் விபரிப்பது நலம் என எண்ணுகிறேன். இவர்கள் தங்களுடைய இளம் பருவத்திலே துடிதுடிப்பும், யாவர் உள்ளங்களையும் கவர்ந்த குறுநகையும், தெளிந்த பண்பான வாக்குவன்மையும், யாவரிடமும் அன்புள்ளத்துடன் பழகும் உயர்தகைமையும் கொண்டவராக, ''விளையும் பயிர் முளையிலே சிறந்திருந்ததை'' இதன் மூலம் அறிந்து என் எண்ணத்தடாகத்திலே உவகை மலர் விரித்துநின்றேன்.

'' கசடறக் கல்வி கற்க வைத்து
கணமே வெல்லும் நிலைக் குயர்த்தி
திடமே எமக்குத் திறனை ஈந்த
புடமே இட்ட தங்கம் போன்று
இருள்சேர் உலகின் ஒளியைக் காணு
இன்னல் தன்னில் இடறி விழும்போது
இன்முக மாய்என் னெதிரில் தோன்றி
இனிதாய்த் துணையென எழுந்து வந்தார் ''

அவரே சிறப்புறு சிவச்செல்வியாவார்.

யாழ்ப்பாணத்திலே தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட எங்கள் ஆசிரியை தமது பிறப்பிடத்தை, ஏன் தமது மாகாணத்தையே கடந்து புதியதோர் சூழலுக்குப் புது முகத்தின் அறிமுகமாய்க் கொழும்பு மத்திய தொகுதியின் பண்டாரநாயக்க மாவத்த என்ற இடத்திலே அமைந்திருக்கும் பாத்திமா முஸ்லீம் பெண்கள் பாடசாலைக்கு 1945ஆம் ஆண்டிலே வருகை தந்தார்கள். அத்தருணம் எமது பாடசாலை அதிபர் திருமதி எம். எம். பர்ஞுந்து அவர்கள் மகிழ்வுடன் வரவேற்றுப் பாடசாலையின் பெரும் பொறுப்புகளைச் சிறுகச் சிறுக ஒப்படைத்தார்கள்.

எதையும் தாங்கும் இதயம் படைத்த எங்கள் ஆசிரியை அவர்கள் தம் இன மக்கள் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் ஏற்ற வகையிற் கல்வி எழுச்சிக்காக உழைத்துள்ளார்கள் என்பது வெறும் பாராட்டுக்குரியதன்று, வியப்புக்குரியதே! ''காவல்தானே பாவையர்க்கழகு'' என்பதற்கிணங்கப் பெண்கள் சிறை காப்பதில் பயனில்லை. காவலென்னும் நிறைவான கல்வியை விசேடமாக முஸ்லீம் குழந்தைகளுக்குப் புகட்ட அரும் பாடுபட்டார்கள். இவர்களின் அரும்பெரும் முயற்சியாலன்ருே அன்று ஐந்தாந்தரப் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையை ஒரு உயர்தரப் பாடசாலையாக மிளிரவைத்தார்கள்.

தகுதியான தராதரம் பெற்ற இவர்கள் உயர்தரவகுப்பை எட்டு மாணவிகளை உள்ளடக்கியவாறு தமது கல்விச்சேவையை ஆரம்பித்தார்கள்.

துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது கருமமே கண்ணுயிருந்து அறிவின் அரசியாய்த் தம்மை நம்பிய மாணவியரை உயர்நிலைக்கு ஆளாக்கிய பெருமையும் இவர்களையே சாரும். கணித பாடமும் பெரும்பாலும் மாணவர்களுக்குக் கசப்பான பாடமாக இருந்தபோதிலும், அவரது கற்பித்தற் திறமையினுல் அது எமக்கு இனிமையாகவே இருந்தது. இவர்கள் பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் எமக்குக் கற்பித்துத் தருவார்கள். இலக்கியப் பாடம் கற்பிக்கும்போதுகூட தன்னை ஒரு புலவியாகக் கருதி அறிவையூட்டுவார்கள். அதேபோன்றுதான் ஏனைய பாடங்களிலும் வியத்தகுமுறையிற் பயிற்சி அளிப்பார்கள்.

விசேடமாக முஸ்லீம் பெண்பிள்ளைகள் மங்கைப் பருவமடைந்துவிட்டால் பாடசாலைக்குச் சென்று படிக்க அனுமதிக்காத காலமது. உடனே என்போன்ற மாணவியரது இல்லம் ஏகிப் பெற்ருேரிடம் பல அறிவுரை கூறி மீண்டும் பாடசாலைக்கு வரவழைத்துத் தொடர்ந்து படிக்க உறுதுணையாக நின்ற தியாகியாவார்கள். இக்கால கட்டத்திலே இப்பாடசாலையிலே எனக்கு ஆரம்பக் கல்வி புகட்டி உயர்தரவகுப்பிலே சித்தியடையவைத்து இப்பாடசாலையிலே தொழில்புரியவைத்துப் பின் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைவரை செல்ல அருகதையுடைய ஒரு மாணவியாக்கிய பெருமை சிவச்செல்விக்கே சாரும். இதன்பின் என்போன்ற எத்தனையோ உயிர்களுக்கு ஒளி வழங்கிய தியாகியாவார்கள்.

ஆயகலைகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவ்வம்மையார் அவர்கள் மாணவியருக்கு ஊக்கங்கொடுத்துப் பல நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறவைத்துப் பலரின் பாராட்டுக்களையும் பெற்ருர்கள், விசேடமாக மாணவியருக்குத் தங்கப்பதக்கங்களையும் தட்டிக் கொடுக்க உதவியளித்த மேதையாவார்கள். என்னை ஒரு முன்னேடி யாசிரியையாக வர உறுதுணையாக நின்ற உத்தமியாவார்கள். இவர்களிடம் நாம் கற்ற கல்வி கையளவுக்கல்ல. உலகளவுக்கு என்ருலும் அது மிகப் பொருந்தும்.

இவ்வம்மையாரின் பெருஞ் சேவையால் இன்று எத்தனையோ வீடுகளிலே விளக்குகள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. எத்தனையோ ஆசிரிய உள்ளங்கள் சிவச் செல்விக்காக ஆசீர்வதிக்கின்றன.

மனுக்குலத்தின் மாண்புறு சின்னமென அனைவர் உள்ளங்களிலே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் உதயதாரகை அகிலம் உள்ளளவும் தன் நாமம் பரப்பிநிற்கும் தவ மங்கையே! துர்க்காதுரந்தரியே! சத்திய சீலியே! என்றும் நின் புகழ் வளர்க! நீடு வாழ்க!

நன்றி !

சிவச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாவின் போது பாராட்டு மலரில் அன்னுரைப் பற்றிச் சிலவசனங்கள் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த விழாக் குழுவினருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அல்ஹம்ரு வித்தியாலயம்,<br>தர்ஹா நகர்<br>*15-08-1984*

திருமதி பாரி முலாபர்<br>முன்னேடி ஆசிரியை



1982இல் காசியாத்திரை முடித்துத் திரும்பியவுடன்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில்
ஆசி வழங்கப்படுகிறது.



ஸ்ரீ துர்க்காதேவி ஆலய கோபுரம்.

உ

சிவமயம்

# பேரும் பொருத்தமும்

இயற்பெயராயினுஞ் சரி, சிறப்புப் பெயராயினுஞ் சரி சம்பந்தப்பட்டோரின் ஆத்ம குணநல விலாசங்களுக்கு அநுகுணமாக வாய்த்துவிடுதல் அருமை. ஆத்மீக ஒளிபெற்ற உத்தமர்கள் வாய்மொழியாக அமையும் பெயர்களில் மட்டும் இச்சிறப்பு அமைந்திருத்தல் பிரசித்தம்.

காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனத் தலைவர் சீலத்திரு ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் வாய்மொழியாக அமைந்ததோர் சிறப்புப் பெயர் சிவத்தமிழ்ச் செல்வி.

சிவத்துக்குந் தமிழுக்கும் இருக்கும் தொடர்பு போல் அதி அன்னியோன்யமான ஒரு தொடர்பு வேறெத் தெய்வப் பெயர்க்கும் வேறெம் மொழிக்கும் இருக்கக் காணப்பட்டது மில்லை; கேட்கப்பட்டதுமில்லை.

அங்ஙனமே சிவத்தமிழ் என்ற தொடர்க்கும் அதிற் சம்பந்தமுற்ற அம்மையார்க்கும் உள்ள பொருத்தமும் மற்றோர் தொடர்க்கும் நம்மவரில் மற்றுமொருவர்க்கும் உள்ளதாக அறியப்படுதற்கில்லை.

அகில தமிழ்ச் சமூகமும் ஏகோபித் தொருகுரலாய் அநுவதிக்க வேண்டிய யதார்த்த மான ஓர் உண்மை இது. இன்றைய தெல்லி உழுகொடைத் துர்க்கா தேவாலயத்தில் நிதர்சனமாகி அறியப்படும் உண்மையும் இது.

எக்கச்சக்கமான சனக்கூட்டம்; எங்கெங்கெல்லாமோ இருந்து திரள்கிறார்கள். நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் நிறைய நிறையப் பிரசன்னமாயிருக்கிறார்கள். எவரும் எதிர்பார்க்கத் தக்கவாறான சத்தம், சந்தடி, நெரிசல், இடிபாடு எதுவுங் கிடையாது. அதற்கெதிர் ஊசி விழும் அரவமும் கேட்கக் கூடிய அளவிலான அமைதி ஒழுங்கும் கட்டுப்பாடும் பயபக்தியும் அச்சனக்கூட்டத்திடை உணர்வோடுணர்வாய் ஊறிப்போய் விட்டவை. இத்தனைக்கும் பிரதம நிர்வாகி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தமிழ். நிகழ்ச்சி ஒவ்வொன்றிற்கும் முன்னோடியாக ஐந்து பத்து நிமிஷம் ஆலய மண்டபத்தில் அடக்கமாகக் கிளம்பி அலையலையாக உயர்ந்து, ஆவலுற்றுச் செவிமடுக்கும் அச்சனக்கூட்டம் முழுவதையும் அலையடங்கின சமுத்திரம் போலாக்கி ஆராமை தோன்ற அமைதியுறுந் தமிழ், வெண்சொற் பயிலாது வீண்சொல் விரவாது வேண்டியது வேண்டியவாறமையச் செய்யும் விந்தைத் தமிழ். அதிற் கால்கொண்டிருக்கும் விந்தையான அம்சம் சிவம். சிவம் — நன்மை, இன்பம், மங்கலம், தூய்மை; இத்தனைக்கும் இடங்கொடுக்கும் செல்வி தமிழ் சிவத்தமிழ்.

அதிக அளவிலான அர்ச்சகர்கள், தொண்டர்கள், ஆலய சேவையாளர், சிப்பந்திகள் ஒருவர் போல் மற்றவர் சூரிய சந்திரர் நியதிபோலப் பயபக்தி பூர்வமாகத் தத்தம் நியதியில் நிற்க நிறுத்துவதும் அதே தமிழாகிய சிவத்தமிழ். அத்தமிழில் லயங்கொண்டிருக்கும் ஆணைவலு எது அது சிவம்.

பாரிய திருப்பணி வேலைகள், விரிவாக்கத் திட்டங்கள், சண்டிஹோமம் போன்ற தனிப்பெரு வேள்விகள், சைவ நிழலிற் சமூகதர்மங்கள், சைவ நூல் வெளியீடுகள், கலைஞர் சன்மானங்கள் எத்தனையோ அத்தனைக்கும் வேண்டுவதும் வேண்டியோரும் விரும்பி வந்தணைய வசீகரிப்பது செல்வியின் வாய்மொழியாகிய சிவத்தமிழ். அதிற் காணும் அதிசய வசீகரம் சிவம்.

தெல்லி உழுகொடையம்மை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக உருவேறத் திருவேற, தினம் தினம் அவள் சீலப்புகழைத் தித்திக்கத் தித்திக்க வசனிப்பது செல்வியின் செந்தமிழ். அது விளைவிக்குந் தெய்வீகத் திருப்தி எது அது சிவம்.

அளப்பரும் அருளார் செல்வி அன்னை துர்க்கா தேவியின் ஆணை தாங்கியாய் உருத்தரித்து ஆலயத்தின் அகத்திலும் புறத்திலும் அவளருள் விலாசமே விலாசமாக விளங்க வைக்கும் அம்மை தங்கம்மையின் தமிழ் சிவத்தமிழ். அன்னையின் ஆணைவைப்புக்குப் பாத்திரமாய் அத்தமிழில் மிளிர்வதெது அது சிவம்.

பேரும் பொருத்தமும் இருந்தவாறு!

அவதானி

# எனது ஆசிரியை

எனது ஆசிரியை என்று இங்கு நான் குறிப்பிடும்போது மற்ற எல்லோரையும்விட எனது மனக்கண்முன்னே முதலில் நிற்பவர் தான், ''சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசிரியை அவர்கள்!

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'' என்ற முதுமொழியையும் உண்மையாக்கியவர் அவர்கள்தான் என்ருல் அது மிகையாகாது.

நான் பிறந்து வளர்ந்த வட்டாரமாகிய கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்து இருப்பதுதான் பாத்திமா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம். அதில் ஆரம்பக் கல்வி கற்பதற்காகச் சேர்க்கப்பட்ட நான் பாலர் வகுப்பிலிருந்து 3ஆம் வகுப்பு வரை பல ஆசிரியர்களிடம் கல்வி கற்றேன்: தொடர்ந்து 4ஆம் வகுப்பிலிருந்துதான் நான் உண்மையாகக் கல்வி கற்றேன் என்று கூறலாம். ஏனெனில் பல பாடங்களையும் பல ஆசிரியர்கள் மூலம் கற்ற நான், தமிழ் மொழிமூலம் படிக்கும் எல்லாப் பாடங்களையும் ஒரே ஆசிரியர்மூலம் கற்றதே காரணமாகும். அந்த ஒரே ஆசிரியர்தான் சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

தற்போது ''பாத்திமா முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயம்'' எனப்படும் எங்கள் பாடசாலை ஆரம்பத்தில் பாத்திமா தமிழ்க் கலவன் பாடசாலையாக இருந்தது. பாடசாலையும் மிகப் பெரிதல்ல. கட்டிடமும் மிகப் பழையதுதான். பாடசாலை சிறிதாகவும், கட்டிடம் பழையதாகவும் இருந்தாலும், அதில் ஆரம்ப வகுப்புமுதல் 10ஆம் வகுப்பு வரை வகுப்புகள் இருந்தன. ஆண் பெண் இருபாலாரும் சேர்ந்தே படித்தோம். ஒரு சில தமிழ்ப் பிள்ளைகளோடு, முஸ்லிம் பிள்ளைகள் அதிகமாக இருந்த அப் பாடசாலையில், கல்வி கற்பித்தவர்கள் பெரும்பாலும் தமிழ் ஆசிரியர்கள்தான். பாடசாலைத் தலைமை ஆசிரியராக இருந்தவரும் ஒரு தமிழ்க் கிறிஸ்தவப் பெண்மணிதான்.

தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியர்களும் பெரும்பாலும் பெண்களாக இருந்ததினுலும், அவர்கள் அதே பாடசாலையில் தங்கி இருந்ததினுலும், பாடசாலையின் ஒழுக்கம், கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்பனவும் மிகச் சிறந்தமுறையில் அமைந்திருந்தன.

எனது ஆசிரியர் என்று இங்கு கூறும்போது தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அழகிய இளமைத் தோற்றந்தான் இப்போதும் என் கண்ணெதிரே நிழலாடுகின்றது. அழகிய சிவந்த முகமும், கடல் அலை போன்ற நெளி நெளியான கூந்தலும், உடலுக்கேற்ற அளவான உயரமும் கொண்ட ஒரு இளவயது ஆசிரியை. அவர்களின் செந்தாமரை போன்ற சிவந்த முகத்திலே நடு நாயகமாக அமைந்திருக்கும் வாள்போன்ற கூரிய மூக்கு, அதிலே நட்சத்திரம்போல் பளபளக்கும் வெள்ளைக்கற்கள் பதித்த அழகிய மூக்குத்தி, நெற்றியிலே பளிச்சிடும் திலகம், இவை எல்லாம் சேர்ந்து அவர்களின் அழகிய வதனத்தை இன்னும் அழகுபடுத்திக் காட்டும்.

மேலும் அவர்களின் ஆடையும் அதற்கு ஏற்றாற்போலவே அமைந்திருக்கும். மற்றவர்கள் கண்களைக் கவரக்கூடிய கடுமையான நிறங்களில் ஆடை அணிந்ததை நாம் ஒருநாளும் கண்டதில்லை. எப்போதும் மடிப்புக் கலையாத இளம் நிறத்திலே பருத்தி ஆடைகளைத்தான் அதிகமாக அணிவார்கள். அதுவே அவர்களுக்கு ஒரு தனித் தோற்றத்தைக் காட்டும். அவர்களின் குரலும் அதே போன்றதுதான். ஆசிரியருக்கு இருக்கவேண்டிய அடக்கமான கேட்டு இரசிக்கக்கூடிய குரல்தான்.

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசிரியர் அவர்களின் சேவை முதன்முதலில் முஸ்லிம்களின் மத்தியில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அன்னர் சாதிமதபேதமின்றி, முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியிலே மிகமிக அக்கறை எடுத்து, முஸ்லிம் சமுதாயத்தின் ஒரு வழி

காட்டியாய் இருந்தார்கள் என்றால் அது மிகையாகாது.

கடமையுணர்வுடனும், சமுதாய உணர்வுடனும் அவர்கள் கடமையாற்றியதினால் தான் அவர்களிடம் படித்த என்னைப்போன்ற எத்தனையோ மாணவர்கள் இலங்கையின் நாலாபக்கங்களிலும் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றார்கள் என நான் மிகப் பெருமையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அன்னாரிடம் நாம் படித்த எல்லாப் பாடங்களிலுமே, ஒரு இலகுவான எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு படிப்பினையைப் பெற்றோம். நாம் அவர்களிடம் கல்வி கற்கும் நேரம்தான் ஆசிரியரும் மாணவரும். மற்றைய நேரங்களில் அவர்கள் எங்களோடு ஒரு தாயைப்போலவும், உற்ற நண்பரைப் போலவும் மிக மிக அன்பாகப் பழகினார்கள்.

10 வருடங்களாகத் தொடர்ந்து நாம் அவர்களிடமே கல்வி கற்றதினால் எமது அறிவு பலவழிகளிலும் விருத்தியடைந்தது என்று கூறலாம். படிப்பித்தலில் மாத்திரமல்ல விளையாட்டுத்துறையிலும் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். அதுமாத்திரமல்ல மனையியலிலும் கூட அவர்கள் திறமைமிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். ஒவ்வொரு வாரமும் நாம் ஒவ்வொருவிதமான தின் பண்டங்கள் செய்யும்போதும் அதற்கென ஒரு அலாதி ருசியிருக்கும். பலவிதமான தையல்களைத் தைக்கும்போதும் கூட அதிலும் ஒரு தனிக் கவர்ச்சி அமைந்திருக்கும்.

பாடசாலையில் நடைபெறும் மாணவ சங்கமாயிருந்தாலென்ன, பெற்றார் தினமாய் இருந்தாலென்ன, கலைவிழாக்கள் என்றால் என்ன ஒவ்வொன்றிலும் அவர்களின் தலைமையின் கீழ் எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறும் போதும் எல்லாவற்றிலும் தனிச் சிறப்பு அமைந்திருக்கும். அவர்களின் எந்த ஒரு செயலிலும்கூட ஒரு குற்றம் குறை காணவும் முடியாது: கூறவும் மாட்டார்கள்.

நாம் அவர்களிடம் கல்வி கற்கற்கத் தொடங்கி, எம்மையும் அவர்களைப்போன்ற ஒரு ஆசிரியர் என்ற பட்டத்தையும் எடுத்துத் தந்துவிட்டுத்தான், எமது பாடசாலையை விட்டுத் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்றார்கள். அந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் அவர்களின் படிப்பித்தலிற்கூட ஒருவரும் ஒரு கடுகளவு கூடக் குறை சொல்வதற்கு அவர்கள் இடம் வைக்கவில்லை. இப்போதுள்ள ஒருசில ஆசிரியர்களைப் போன்று ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை, பாடம் படிப்பிக்கவில்லை, பாடக் குறிப்பு எழுதவில்லை என்று ஒரு நாளாவது தலைமையாசிரியர் அவர்களைப்பற்றிக் குறை கூறியதை நாம் காதாற் கேட்டதேயில்லை. அந்த அளவுக்கு தங்கம்மா அப்பாக்குட்டி ஆசிரியர் அவர்கள் படிப்பித்தலிலே மிகமிக ஆர்வங் காட்டினார்கள்.

பாடசாலை நாட்களைத் தவிர்ந்த சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிற் கூட நாங்கள் பாடசாலைக்குச் செல்வதுண்டு. நாம் படிக்கச் சென்றாலும் 2, 3 மணித்தியாலங்கள் படித்துவிட்டு, தங்கம்மா அப்பாக்குட்டி ஆசிரியர் அவர்களும், அவர்களது சக ஆசிரியர்கள் இரண்டு பேரும், நாங்கள் 4, 5 மாணவிகளும், சேர்ந்து சமையல் வேலையில் ஈடுபடுவோம். அப்போது நாங்கள் ஒரு தாயோடு சேர்ந்து அவருக்கு உதவியாக வேலை செய்வது போல இருக்கும். சமையல் வேலை முடிந்ததும் ஒரு தாய் தனது பிள்ளைகளுக்குப் பரிமாறுவதைப் போல எங்களுக்குச் சாப்பாடு பரிமாறுவார்கள். பின்னர் அவர்களும் எங்களோடு ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவார்கள். இந்தக் காட்சி பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும்.

நாம் அவர்களோடு பழகிய அந்தப் பத்து வருட பாடசாலை வாழ்க்கையிலே எங்களுக்குத் தேவையான எல்லாவற்றையுமே படித்தோம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஒழுக்கம், வாழ்க்கைமுறை, அன்பு, பண்பு, பாசம், நேசம் எல்லாவற்றையுமே இன்னின்னதெனப் புரிந்து கொண்டோம்.

இன்று நான் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியையாகக் கடமையாற்றுவதற்கு முக்கியகாரணமே தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பெரு முயற்சிதான். அவர்கள் எந்த முறையில் எம்மோடு பழகி எப்படிப் படிப்பித்தார்களோ அதேமுறையைத்தான் இன்று நான் மாணவிகள் மத்தியிற் கடைப் பிடித்து வருகிறேன்.

எனது படிப்பிலும் எனது வாழ்க்கையி லும் மிக மிக அக்கறை எடுத்துப் படிப்பித்து, என்னைத் தரணியில் தலைநிமிர்ந்து நடக்கக் கூடிய ஒரு வாழ்க்கையை அமைத்துத்தந்த ஆசிரியை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், எமது பாட சாலையை விட்டுச் சென்று பல வருடங்கள் ஆகின்றன. என்றாலும் அவர்கள் எனக்கும், முஸ்லிம் சமூகத்துக்கும் செய்த சேவை என் றும் எம் மனதை விட்டு அகலாது.

தோன்றிற் புகழொடு தோன்றியே அவர் புகழ்பெற்றுவிட்டார். அப்படிப்பட்ட ஒரு ஆசிரியைதான் இன்று மாந்தருள் மாணிக்கமாகவும், ஆசிரியர்களுள் ஒரு திலகமாகவும், பெண்குலத்தின் பொன் விளக்காகவும், பார்முழுதும் புகழப்படுகின்ற சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவர் களுக்கு இதுமாத்திரமல்ல இதேபோன்ற எத்தனை மணிவிழாக்கள் எடுத்தாலும் ஈடா காது.

உலகம் புகழும் உத்தமர்களுள் ஒருவரா கத் திகழும் ஆசிரியை தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள் ஆசிரியத் தொழில் மூலம் மாத்திரம் அல்ல, பல கதாப்பிரசங்கங்கள் மூலமும் பலபேச்சுக்கள் மூலமும் கட்டுரைகள் மூலமும் தான் பிறந்த பொன்னாட்டுக்கும், தேனினும் இனிய தாய் மொழியாம் தமிழுக் கும், தனது சமயமாகிய சைவமதத்திற்கும் ஆற்றிவரும் தொண்டு மிகவும் பாராட்டக் கூடியது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியாய் இருந்து பின்னர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி என்ற பெயர் எடுத்து இப் போது ''சிவத் தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி, தங்கம்மா அப்பாக்குட்டி'' என்ற நீண்ட பெயரோடு பார் புகழும் பெண்ணா கத் திகழும் ஆசிரியை அவர்களின் சேவை நாட்டுக்கு மேன்மேலும் தேவை. எனவே இறைவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து நாட்டுக்குத் தொண்டு செய்யக் கூடிய சத்தியையும், ஆற்றலையும் கொடுத்து மேலும் மேலும் புகழ்பெற வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். அவர்களின் பெயரைப் போலவே அவர்களின் புகழும் நீண்டு கொண்டே போவதற்கு இறைவன் அருள் பாலிப்பானாக!

வாழ்க சிவத் தமிழ்ச் செல்வி
வளர்க அவர்களின் சேவை


இவ்வண்ணம்
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
மாணவி
திருமதி எஸ். என். எம். பதுர்டீன்
இளைப்பாறிய அதிபர்

✻

அறத்தின் விளைநிலம் பெண்மை.
ஆக்கத்தின் விளைநிலமும் பெண்மையே.



தென் இந்தியா வட ஆற்காடு ஆரணியில் நடைபெற்ற
74ஆவது சைவசித்தாந்த மகாநாட்டில்
சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் தலைமைதாங்கி
உரைநிகழ்த்துகிறார் (17-5-80).



துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையுடன்
சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் 1982 மார்கழியில்
மதுரை மீனாட்சி தரிசனம்.

உ
சிவமயம்

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு
# ஓர் ஒளிமயமான காலத்தை உருவாக்கியவர்

சென்ற நூற்றாண்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் சைவத்துக்கும், தமிழுக்கும் தம்மை அர்ப்பணித்து அரும்பெரும் தொண்டாற்றியவர். அவர்களைத் தொடர்ந்து வரும் சைவப் பெரியார்கள் வரிசையில் முக்கிய இடத்தை வகிப்பவர் எங்கள் தேவஸ்தானத் தலைவி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள். இது எமது நாடு செய்த தவப்பயனாகும். அம்மையார் அவர்களுக்கு அறுபது ஆண்டு நிறைவுறுவதை முன்னிட்டு மணிவிழாக் கொண்டாடும் இவ்வரிய சந்தர்ப்பத்தில், அவர்கள் ஆற்றிய சைவத் திருப்பணித் தொண்டுகளை நினைவுகூர்ந்து ஆசீர்வதித்தல் எமது தலையாய கடனுமாகும்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையும், ஸ்ரீ காசியில் இருந்து கொண்டுவந்த துர்க்கா யந்திரத்தைப் பெற்ற பெருமையும் கொண்டது. ஆயினும் இவ்வாலயம் பலகாலமாகப் புனருத்தாரணமின்றிக் கிலமடைந்து காணப்பட்டது. இவற்றைக்கண்டு கவலைகொண்ட தர்மசிந்தனையாளரும், பரோபகாரருமான ஆலய தர்மகர்த்தர் திரு. க. நாகநாதன் என்பவர் ஒரு தர்மகர்த்தா சபையிடம் இப்பணியை ஒப்புக் கொடுத்தார். பின்பு இச்சபையினர் ஊர்ப் பொதுமக்களை அழைத்து ஒரு நிர்வாக சபையை 1964ஆம் ஆண்டளவில் உருவாக்கிக்கொண்டனர். அந்தச் சபையிலே ஸ்ரீ துர்க்கா தேவியைத் தம் குலதெய்வமாக வழிபட்டுவரும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்களும் ஒரு சாதாரண அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அம்மையார் ஆற்றிவரும் தொண்டும், அவர்களின் சமயச் சொற்பொழிவுகளும் ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாயின. இதனைப்போலும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் வாழும் தமிழ் மக்களும் அம்மையாரை அழைத்துச் சமயச் சொற்பொழிவுகளையும் தலைமையுரைகளையும் ஆற்ற ஒழுங்குகள் மேற்கொண்டனர். அங்கே ஆற்றிய சொற்பொழிவுகள் யாவும் நூல் வடிவம்பெற்றன. நூல்கள் விற்பனைமூலம் பெறப்பட்ட பணம் திருமுறை மடத் திருப்பணியாக அமைந்தது. திருமுறை மடத்தில், நால்வர் குருபூசை, திருமுறை வகுப்புக்கள், பெரியபுராண படனம் நடைபெற உறுதுணை செய்தார்கள். அம்மையார் அவர்களின் பணியைப் பாராட்டுமுகமாக, ஏலவே துர்க்காதுரந்தரி என்ற கௌரவ விருதினை வழங்கி எமது தேவஸ்தானம் பெருமையைத் தேடிக்கொண்டது.

1965ஆம் ஆண்டளவில் அம்மையார் அவர்கள் திருப்பணிச்சபையிற் தனாதிகாரியாகத் தெரிவுசெய்யப்பெற்றுத் தொண்டாற்றி வந்தார். ஆரம்பகாலத்தில் திரு. செ. தியாகராசா அவர்களும் பின்னர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களும் நிர்வாகசபைக்குத் தலைவராக இருந்தனர். பெரியார் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களின் மறைவுக்குப்பின், 1977ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி அம்மையார் அவர்கள், நிர்வாக சபையின் ஏகமனதான தீர்மானத்தின்படி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அம்மையார் காலத்துக்குக் காலம் புத்தம் புதிய திருப்பணித் தொண்டுபற்றிய சிந்தனைகளை நிர்வாகசபைக் கூட்டங்களிற் சமர்ப்பிப்பார். அவைகள் யாவும் அம்பாள் திருவருளினால் பூரணத்துவம் பெற்றுவிடுவதுதான் வழக்கம்.

1965இல் நிகழ்ந்த மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 1968இல் கொடியேற்றி மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. இத்துடன் ஆரம்பித்த தொண்டுகளின் வளர்ச்சி முதிர்வினால், 1978 ஆவணியில் புதிதாக உருவாக்கப்பெற்ற அழகிய சித்திரத் தேர், தேர் விழாவைச் சிறப்புறச் செய்தது. தேர்முட்டி மண்டபமும் புதுப்பொலிவைக் கொடுத்தது.

அம்மையார் அவர்கள் இராஜகோபுரம் அமைக்கும் நோக்குடன் இந்தியா சென்று ஸ்வாமி ஹரிதாஸ் கிரி அவர்களின் ஆசியுடன் தமிழ்நாடு வளவனூர் ஸ்தபதியையும், சிற்பக் கலைஞர்களையும் வரவழைத்துக் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மிகவும் துரிதமாகத் திருப்பணிகள் நடந்து 17-4-1981 இல் துர்க்கை அம்பாளுக்கும் பரிவாரத் தெய்வ கோயில் களுக்கும்வானளாவும் இராஜ கோபுரத்துக்கும் சைவாகம முறைப்படி மிகவும் பக்தி சிரத்தை யுடன் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவின் பின்னணியாக சைவசித் தாந்த பவளவிழா மகாநாடு அதே ஆண்டு மே மாதம் 8, 9, 10 ஆகிய திகதிகளில் இடம் பெற்றது. தமிழ் நாட்டுப் பேரறிஞர்களும், இந்நாட்டுப் பேரறிஞர்களும் வருகை தந்து மகாநாட்டைச் சிறப்புறச் செய்தனர். இதனால் எமது தேவஸ்தானத்தையும், நாட்டையும் பிறநாட்டாரும் அறியும் வண்ணம் செய்தார்கள்

மகாநாட்டிலே உருவாய சிந்தனையினால் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு ஓர் மகளிர் இல்லமும், அந்தணச் சிறுவர்களுக்கு சமயக் கல்விபயிலுவதற்கு ஓர் வேதாகம பாடசாலையும் நிறுவப்பட்டன. இக்காலகட்டத்திலேயே துர்க்காபுஷ்கரணி தீர்த்தத் தடாகமும் உருப்பெற்றது. இவையாவும் இவர்களின் இருதயத் தூய்மைக்குச் சான்று பகருவன.

அம்மையார் அவர்களின் நூல் வெளியீட்டுப் பணி மிகவும் போற்றுதற்குரியது. நாவலர் பெருமானின் பெரிய புராண வசன 18ஆம் பதிப்பை பேராசிரியர் சு. வித்தி யானந்தன் அவர்கள் வெளியிட்டுவைத்தார்கள். அதன் பெறுபேறாக சைவப் பெரியாரின் சைவபோதம் முதலாம் புத்தகம், அரியவும் பெரியவும் (பெரிய புராணச் சிந்தனை நூல்) போன்ற நூல்கள் நூற்பதிப்புச் செய்து தமிழ்ப்பணியாற்றி எமது தேவஸ்தானப் பணிகளை அறிஞர் குழாம் கண்முன் வைக்கின்றார்கள்.

இந்தியாவில் உள்ள ஆதீனங்களைப் போன்று எமது தேவஸ்தானத்தையும் அம்மையார் பொதுப் பணிகளில் ஈடுபடச் செய்துள்ளார். யாழ் அரசாங்க வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு ரூபா ஐம்பதினாயிரம் வழங்கிப் பெருமையைத் தேடித்தந்தார். (இதனை "ஈழநாடு" "மருந்துக்கு உதவும் மரம்" என்று தமது ஆசிரியத் தலையங்கத்தில் தேவஸ் தானப் பணிகள் பற்றி விமர்சித்தது.) தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, தெல் லிப்பழைக் கூட்டுறவு வைத்தியமனை, யாழ் பல்கலைக்கழக சைவசித்தாந்த பீடம் ஆகிய வற்றிற்கெல்லாம் பொது நிதியை ஒதுக்கி அன்பளிப்புக்களை வழங்கிப் பொதுப் பணியை மேற்கொண்டமை தேவஸ்தானத்துக்குப் பெருமையைத் தந்துள்ளது.

இவை யாவற்றிற்கும் காரணம் அம்மையார் அவர்கள் அல்லும் பகலும் ஆற்றிவரும் திருத்தொண்டும் அயரா முயற்சியுமாம். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பக்தர் கூட் டத்துக்கும் பிரதம குருக்கள் தொட்டுச் சிறிய பணியாளர்கள் வரை பலருக்கும் நல்வழி காட்டி முன்மாதிரியாக வாழ்ந்து வருகின்றார்கள். அம்மையாரை எமது தேவஸ்தானச் சகல அங்கத்தவர்கள் சார்பாகவும், எல்லாம்வல்ல துர்க்கை அம்பாளின் திருவருளைப் பிரார்த்தித்து நலத்துடன் நீடு வாழ வாழ்த்தி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

இங்ஙனம்
சு. சிவவாகீசர்
க. தணிகாசலம்
இணைச் செயலாளர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
9-12-84

உ

அம்பாள் துணை

# தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

எமது சங்கக் காப்பாளர்களில் ஒருவரும், எமது பேரன்பிற்குப் பாத்திரமானவருமான துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு எடுக்கவிருக்கும் மணிவிழாவையொட்டி வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியும், பெருமையுமடைகின்றோம்.

அம்மையார் அவர்களுக்கும் எமக்குமிடையேயுள்ள உறவு, தாய் - பிள்ளைகள் உறவைப் போன்றதாகும். எமது செயற்பாடுகள் அனைத்திற்கும், ஒரு தாயின் நிலையில் இருந்து ஆலோசனைகளும், ஆசீர்வாதமும் வழங்கிவரும் அம்மையார் அவர்களை வாழ்த்துவதற்கு நாம் தகுதியுடையோமல்லோம்.

அம்மா,

தாங்கள் சைவத்திற்கும், தமிழிற்கும் தொடர்ந்து தொண்டாற்றி மேலும் பல விழாக்கள் காணவும், தங்களது அன்பும் ஆசியும் எமக்கு என்றென்றுங் கிடைக்கவும் எல்லாம் வல்ல இறைவி அன்னை துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர்

தெல்லிப்பழை
20-12-84

உ
சிவமயம்

# நல்லருண் மலர்பொலி ஞானவல்லி

சிவப்பணியிற் பன்முகத் தொண்டாற்றித் தம் வாழ்வை அதற்கே அர்ப்பணித்து வாழ்ந்துகொண்டிருக்கும் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அறுபதாண்டு பூர்த்தியாகிய மணிவிழாக் காணும் நிகழ்ச்சி கேட்டு மனப்பூரிப்போடு சிவநெறிக் கழகத்தினராகிய நாம் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

இளமையிலே நன்கு கலை கற்றுப் பண்டிதையாகி ஆசிரியப் பணி பூண்டு வாழ்ந்த செல்வி அவர்கள் அப்பணியைத் தொடங்கிய காலத்திலிருந்தே சிவப்பணியும் செய்யத் தொடங்கியவரானார். அரிய செந்தமிழும் அழகிய சிவநெறியும் அவையோர் அகம் குளிர, இடங்கள் தோறும் சென்று சொற்பொழிவால் உணர்த்திய செல்வியவர்கள் சிவத்தமிழ்ச் செல்வி என்ற விருதுக்கு உரியவரானார்.

சிவநெறியைப் பரப்ப விரும்பித் தொடங்கிய இத்தொண்டு செல்வியவர்களை மேலும் மேலும் ஊக்குவித்த காரணத்தினால் அவர்கள் நாடுகள்தோறும் சென்று சிவநெறி பரப்புவார் ஆயினார்கள். இவற்றால் உள்ளத் தெளிவும் இனிய சைவ உணர்வும் தூண்டப்பெற்ற சைவ மக்கள் செல்வி அவர்களுக்குப் பற்பல விருதுகளைக் கொடுத்துக் கௌரவம் செய்தார்கள். செஞ்சொற் செம்மணி, சித்தாந்த ஞானகரம், சைவ தரிசினி, திருவாசகக் கொண்டல், திருமுறைச் செல்வி, சிவஞானவித்தகர், திருமொழி அரசி, சிவமயச்செல்வி, செஞ்சொற் கொண்டல் என்னும் பட்டங்கள் செல்வி அவர்களின் பெயருக்கு முன்னே விரிவுபெறலாயின. சைவ உலகில் இவ்வளவுகாலமும் யாரும் பெறாத மதிப்புக்களை இவ்வாறு பெற்றுக்கொண்டிருக்கும் செல்வி அவர்கள் தம் வாழ்விலே உலகப்பற்றைத் துறந்து தெய்வ நெறியிலே ஊக்கங்கொள்ளலானார்.

செல்வியவர்களின் மனைக்கு அயலிலே அமர்ந்து அருளொளி வீசும் துர்க்காதேவி ஆலயம் புனருத்தாரணம் வேண்டி நின்றது. துர்க்கை அன்னையிடம் தம்மை அர்ப்பணித்துக்கொண்டு அவ்வாலய புனருத்தாரண வேலையை, தனித்த ஒரு பெண்மணியாய் நின்று, புரியத் தலைப்பட்டார். அவர்களுடைய சேவையாலும் அம்பாளின் அருளாலும் அவ்வாலயம் அழகொழுக எழுந்து விளங்குவதாயிற்று. சுற்றுமதிலும் சுடர்ஒளிக் கோபுரமும், உள்ளே மண்டபங்களும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிச் சிறந்த அமைப்பைப் பெறலாயின.

செல்வியவர்களது தன்னலமற்ற திருப்பணிச் சேவையையும் துர்க்காதேவியின்பால் அவர்கள் கொண்டுள்ள ஆரா அன்பையும் கண்டு வியந்து ஆலய நிர்வாகத்தினர் செல்வி அவர்களைத் துர்க்காதுரந்தரி என்ற சிறப்பு விருதளித்துப் பாராட்டிக் கௌரவித்தனர்.

இன்று மணிவிழாக் காணுகின்ற செல்வி அவர்கள் தம்மைக் கௌரவித்துக் கொடுக்கப்பெற்ற பொருட்குவை எல்லாவற்றையும் துர்க்காதேவி ஆலயத் திருப்பணிக்கு மட்டுமன்றி நாட்டிலே சைவம் வளரத் தொண்டுபுரிந்துவரும் நிறுவனங்கள் பலவற்றுக்கும் கொடுத்து அவற்றை ஆதரித்து வருகின்றார்கள். எமது சிவநெறிக் கழகத்தின் சேவையை வியந்து கழகம் எடுக்கும் விழாக்களிலெல்லாம் கலந்துகொண்டு அதற்குப் பெருமதிப்புச் செய்து வருகின்றார்கள். செம்மனச் செல்வியாய் வாழ்கின்ற இப் பெருமாட்டியார் கழகத்தினர் கேளாமலே அதன் ஆக்கத்திற்கு வைப்பு நிதியாக ஒருதொகைப் பணத்தை உதவி, அதன் வளர்ச்சியை ஆதரித்து நின்றார்கள். இங்ஙனம் பற்பல நிறுவனங்களும் அம்மையாருடைய ஆதரவைப் பெற்று வளரலாயின. அரிய சேவையை ஆற்றிய அருள்நிறை நல்லருண் மலர்பொலி ஞானவல்லியாகிய செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை, மணிவிழாக்காணும் இவ் வேளையில் சிவநெறிக் கழகத்தாராகிய நாம் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திப் பாராட்டுவதோடு மேலும் மேலும் அவர்கள் தன்னலமற்ற சேவை உலகில் விரிந்து சிறந்து ஓங்குக வென இறைவன் திருவருள் வேண்டி நிற்கின்றோம்.

கீரிமலை,
காங்கேசன்துறை, 1985-1-7.

சிவநெறிக் கழகத்தினர்

சிவமயம்

# சைவ உலகிற்கொரு செல்வி

உலகில் தமக்காக வாழ்கிறுர்கள் பலர். தமக்கும் பிறருக்குமாக வாழ்கிறுர்கள் சிலர். பிறருக்காகவே வாழ்கிறுர்கள் மிக மிகச் சிலர். முதற்தரத்தினர் விலங்கு வாழ்க்கை வாழ்பவர்கள். நடுத்தரத்தினர் மனித வாழ்வு வாழ்பவர்கள். கடைத்தரத்தினர் தெய்வீக வாழ்வு வாழ்பவர்கள். அவர்கள் என்றும் வாழ்பவர்; எங்கும் வாழ்பவர்; எல்லோருள்ளத்திலும் உறைபவர். வரலாற்றில் அவர்கள் அவதார புருடர்கள் எனப் போற்றப்படுபவர். இத்தரத்தினரே நம் பெருமதிப்பிற்குரிய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவர் உலகு இன்புறக் கண்டு தாமின்புறும் பெற்றியர். தம் உடல் பொருளாவி அனைத்தும் சைவத்திற்கென வாழ்பவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவத்திற்காக வாழ்ந்தார். அதற்காகப் பிரமச்சரியம் மேற்கொண்டார். ஆசிரியத் தொழிலைச் துறந்தார். உடல் பொருள் ஆவி யனைத்தையும் அர்ப்பணித்தாரெனப் படிக்கும் பொழுது முற்றுக எம்மால் நம்ப முடிவதில்லை. இன்று அதனை மெய்ப்பிக்க உயிருள்ள உதாரணமாக நம்முன் வாழ்ந்து காட்டுகின்றுர் அம்மை அவர்கள். அவர் சைவ உலகிற்கொரு செல்வியெனத் திகழ்கின்றுர்.

ஒருவர் பெருமைக்கும் சிறுமைக்கும் அவர்தம் கருமமே கட்டளைக்கல். இன்று தெல்லிநகரின் ஆத்மீக நிலையமாக விளங்கும் துர்க்காபுரமும், வானளாவ உயர்ந்த கோபுர அமைப்பு, மண்டபப் பொலிவு, சித்திரத் தேர் வனப்பு, தீர்த்தக்கேணி சிறப்பு ஆகியன ஒருங்கமையப் பெற்ற அருள்மிகு துர்க்கா தேவி ஆலயமும் அவர் பணியின் பெருமையைப் பேசுகின்றன. அன்றியும் அன்னை இல்லம், மகளிர் இல்லம் ஆகியன அறச்சிந்தையைத் துலக்குகின்றன.

ஏழாம் நூற்றுண்டில் சமண பௌத்த எழுச்சியினுல் சைவ மதம் நலிவுற்றது. அக்காலகட்டத்தில் திலகவதியாரும் மங்கையர்க்கரசியாரும் தோன்றித் தம் உள்ள உரத்தினுல் மீண்டும் சைவத்திற்கு வாழ்வளிக்க வகை செய்தனர். அவ்வாறே இன்றைய நவநாகரீக உலகத்தில் மக்கள், வாழும் வகையறியாது தடுமாறி நிற்கின்றனர்; துன்பச் சுழியில் அகப்பட்டு துடிதுடிக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் வாழும்வகை இதுவெனக் காட்டித் தம் வாக்கு வல்லமையால் வழிப் படுத்திவருவது போற்றற்குரியது. இன்று பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் ஆலயம்நோக்கி வருவதனையும், விரதங்கள், வழிபாடுகள், நேர்த்திகள் நிறைவேற்றி வாழ்வதனையும் நாம் காண்கின்றேம். அன்றியும் வேலைவாய்ப்புப் பெற்று நம் இளைஞர்கள் உலகெங்கணும் பரந்து வாழ்ந்தாலும் தெய்வீகச் சிந்தனையுடன் வாழ்வதையும், ஆலயப் பணிக்குத் தம் உழைப்பில் ஒரு பங்கினைச் செலுத்திவருவதனையும் அறிகின்றேம். இங்கு வாழும் இளைஞர்களும் தமக்கென ஓர் அமைப்பை நிறுவி ஆத்மீகத் தொண்டில் தலைப்பட்டு வாழ்வதற்கும் வழிகாட்டியாக விளங்கியவர் அம்மையார் அவர்களேயாம். அவர் நாவசைந்தால் நாடசையும். பணத்தால், பட்டத்தால் சாதிக்கமுடியாதவற்றைத் தம் பேச்சுவன்மையாற் சாதித்திருக்கிறுர். நாவிற்கொரு நாவலர் என்பதுபோல் சொல்லிற்கொரு செல்வியாக ஈழத்தில் மட்டுமன்றி பாரதம், மலேசியா ஆகிய புண்ணிய பூமிகளிலும் போற்றப்பட்டுள்ளார்.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பெரு நோக்கோடு, இவ்வாலயச் சூழலில் வாழும் பெண்களும் தொண்டு வாழ்வில் தலைப்பட ஒரு மாதர் தொண்டர் சபையினை நிறுவித் தம் தலைமையிற் செயற் படுத்தி வருகின்றுர். அதனுல் சரியை நெறி நின்று இன்பங் காணும் வாய்ப்பை நம் பெண்கள் பலர் பெற்றுள்ளனர்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

என்றபடி அவரின் பெருமைக்குக் காரணமாக அமைந்தது உயர்ந்த உளளமாகும். உள்ளுவது யாவும் உயர்வுள்ளலேயாம். அதனுல் தானும் உயர்ந்து மற்றவர்களையும் உயர்த்தும் சிறப்பைப் பெற்றுர். மணிவிழாக் காணும் இந் நன்னுளில் அவரின் உள்ளத்தை, உயர்வை, உத்தமப்பணியைப் பாராட்டுவதுடன் இன்னும் நூற்றுண்டு வரை வாழ்ந்து பணிகள் பலபுரிந்து மேன் மேலும் சைவ உலகை வாழ்விக்க நல்லருள் புரியுமாறு அருள்மிகு துர்க்காதேவியை இறைஞ்சுவோமாக.

மாதர் தொண்டர் சபை
துர்க்காதேவி ஆலயம்

உ

சிவமயம்

# அறிவுரை

ஏ மனமே! நீ முன் ஜன்மத்தில் புண்ணியம் செய்துள்ளதினால் அதுவே இப்பொழுதும் உன்னை மேலும் மேலும் புண்ணியம் செய்யத் தூண்டுகிறது. புண்ணியமொன்றே நிற்கிறது. புண்ணியத்தைச் செய்; புனிதனாவாய். புனிதன் என்பவன் யார் என நினைத்தாய்? அவர்தான் ஜீவன்முக்தன். ஜீவன்முக்தன் செய்வன அனைத்தும் புனிதத் தன்மை வாய்ந்தவையாய்த்தான் இருக்கும். மனமே! முதலில் உன்னைப் புனிதப்படுத்திக் கொள். பிறகு உலகை நீ புனிதப்படுத்திவிடலாம். முதலில் உலகைப் புனிதப்படுத்துவதாக உன்னை நீயே கெடுத்துக் கொள்ளாதே. நீ புனிதனாக முதலில் உன்னிடம் நல்லொழுக்கம் வேண்டும். இரண்டாவது, மெய்யான குறைவற்ற அன்பிருத்தல் வேண்டும். மூன்றாவது உன்னிடம் தர்ம சிந்தனை இருத்தல் வேண்டும். அழகாகப் பேசினால் போதாது. நீ அமைதியாக இருக்கவேண்டுமானால் ஒருவருக்கும் தீங்கு நினைக்காதே. அதுவே பெரிய தர்மமாகும். உன்னாலான வகையில் பிறருக்கு சரீரத்தாலோ, பணத்தாலோ, புத்தியினாலோ உதவி செய்துகொண்டேயிரு. உனக்குச் செல்வாக்கு இருக்கும்போது பிறருக்கு உதவவில்லையென்றால் நீ மிகப் பெரிய குற்றவாளியாவாய். சேவைசெய்ய வாய்ப்பிருக்கும் போது முழுமனதோடு பணிசெய்ய முன்வரவேண்டும். அத்துடன் தெய்வ நம்பிக்கைதான் உண்மையான மகிழ்ச்சியைத் தரும். பகுத்தறிவுடன் கூடிய மனிதப்பிறவியில் கடவுளை மறவாதிருப்பதே படைத்தவனுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வேதநெறி தழைத்தோங்க
　　மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப்
　　புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலி
　　திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
　　திருத்தொண்டு பரவுவாம்.

— சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்

இம்மலர், சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று, தெல்லிப்பழை, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபையினரின் சார்பில், திரு. ச. விநாயகரத்தினம் அவர்களால் வெளியிடப்பெற்றது. —6776/11-84.